வெளியீடு 8-5-2004 Issued 8-5-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, பிப்ரவரி 10, 2004—தொகுதி 56—எண் 2**

**Tuesday the 10th February, 2004 —Volume 56—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

've Assembly Secretariat, Chennai - 600 009

[2004 பிப்ரவரி 10

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் மான்களை வளர்க்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான்புகழ் வள்ளுவர் மான உணர்வினைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது மான்களில் ஒரு வகையான கவரி மானைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்கள்.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்

உயிர்நீப்பர் மானம் வரின்"

என்று சொல்லியிருக்கின்றார்கள். அத்தகைய கவரி மானை நானும் பார்த்ததில்லை. கேட்பவர்களும் பார்த்ததில்லை என்று சொல்லுகின்றார்கள். இன்றைய சூழ்நிலையில் நமக்குரிய காவிரி நீரைப் பெறுவதிலும், தமிழைச் செம்மொழி ஆக்குவதிலும் நாம் சந்திக்கும் சங்கடங்களை நினைக்கின்றபொழுது ஒட்டுமொத்த தமிழர்களின் தன்மான உணர்வு உரசிப் பார்க்கப்படுவதாக நான் கருதுகின்றேன். இந்நிலையில் தமிழர்களின் உணர்வுகளை உயர்த்திக் காட்டுகின்ற வகையில் எங்கேனும் இருந்து ஒரு கவரி மானைப் பிடித்து வந்தாகிலும் அதைக் காட்சிக்கு வைக்கின்ற முயற்சியில் அரசு முன் வருமா என்று தங்கள் மூலமாக கேட்டு அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வெளி மான், புள்ளி மான், கவரி மான் என்று கணக்கெடுப்பின்படி 17,217 மான்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவரி மான் பற்றிச் சொன்னார்கள். அவருடைய எண்ணங்கள் ஈடேற வனத் துறையின் மூலமாக கவரி மான் என்று ஒன்று இருந்தால் அவருக்குக் காட்டுவதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்[illegible]உடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக் [illegible]கின்றேன். தமிழ்ப் [illegible]ஞராகிய தாங்களாகிலும் அந்தக் கவரி

22/0 58
சென்னை-600 008



2004 பிப்ரவரி 10]

மானைப் பார்த்திருக்கின்றீர்களா என்பது எனக்குத் தெரியவில்லை. மற்றுமொன்று, பொதுவாக மான்களின் கணக்கைச் சொன்னார்கள். நம்முடைய இலக்கியங்களிலும், புராண இதிகாசங்களிலும் எல்லாம் பெண்களுடைய இயல்புகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது மானைத்தான் ஒப்பிட்டுப் பேசியிருக்கின்றார்கள். பெண்களுக்குக் குறிப்பாக மான்களின்மீது அதிக நாட்டம் என்பதுகூட சில இடங்களிலே சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, சீதாபிராட்டி ஒரு மானின்மேல் வைத்த விபரீத ஆசையின் காரணமாகத்தான் இராமாயணமே நீண்டு வளர்ந்தது என்று இதிகாசம் சொல்கின்றது.

அதைப்போலவே, முனிபுங்கவர்களெல்லாம் சேர்ந்து சிவபெருமானுடைய ஆணவத்தை அழிக்க வேண்டுமென்று முயற்சி செய்தபோது, யாகத்தின் மூலமாக அவர்கள் முதலில் ஏவியது மான் என்று புராணம் சொல்கின்றது. எதிர்க்க வந்த அந்த மானையே ஆபரணமாக அரவணைத்து ஏந்திக் கொண்டார் சிவபெருமான். சிவபெருமான் கைகளிலே மான் இருப்பது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, தனி இலக்கிய நிகழ்ச்சி ஒன்று வைத்துக்கொள்வோமா? (சிரிப்பு) கவரி மானைக் காட்டுவதற்கு ஏற்பாடு பண்ணுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** அதனால் இந்த மான் இன்றைக்கு அரிதாகிக் கொண்டு வருவதாகச் சொல்லப்படுகின்றது. யானைகளின் மீது அக்கறை காட்டுகின்ற இந்த அரசு, ஆடு கோழிகளின்மீது அக்கறை காட்டுகின்ற இந்த அரசு, இந்த மான் இனத்தை வளர்ப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு வன உயிரின பாதுகாப்புச் சட்டத்தின்படி இப்பொழுது வேட்டையாடுதல் அறவே ஒழிக்கப்பட்டு விட்டது. 2000-த்திற்கு முன்னால் 8,295 மான்கள்தான் இருந்தன. இப்பொழுது எடுத்த கணக்கின்படி 8,922 மான்கள் அதிகரித்துள்ளன. தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வன விலங்குகள் வறட்சிக் காலங்களில் கஷ்டப்படக் கூடாது என்று

[2004 பிப்ரவரி 10

அதனுடைய நலன் கருதி 76 இலட்சம் ரூபாயை தடுப்பு அணைகள் கட்டவும், கசிவு நீர்க் குட்டைக்கும், ஆழ்குழாய் கிணறுகளுக்கும், வன உயிரினங்களைப் பாதுகாக்கவும் நிதி ஒதுக்கியிருக்கின்றார். இதன் மூலமாக வன உயிரினங்கள் குறிப்பாக மான்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மான்களை வளர்க்கும் திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருந்தாலும், புதிதாக வளர்க்கும் திட்டம் ஏதும் இல்லை என்ற போதிலும், கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில், வனப் பகுதியில் ஏராளமான மான்கள் உள்ளன. இப்படி தமிழ்நாட்டில் நிறைய பகுதிகளில் மான்கள் சரணாலயங்கள் உள்ளன. அவற்றைப் பாதுகாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கையை தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக வளர்க்கத்தான் திட்டம் இல்லை என்று சொன்னேன். இருக்கின்ற வன உயிரின சரணாலயங்களில் மான்கள் அதிகமாக இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க, அதனுடைய இனப் பெருக்கத்தை அதிகரிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிக்குள்ளே இருக்கின்ற மான்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தகவலைத் தந்திருக்கின்றார்கள். ஆனால், பாதுகாப்பு என்ற அடிப்படையிலே சில ஏற்பாடுகளை நாம் செய்திருந்தாலும், கண்டறியப்படாமல் ஒரு ஜாதி மான் இருக்கின்றது. அதனுடைய பெயர் சாதாரணமாகச் சொல்வது சருகு மான் என்று சொல்கின்றார்கள். ஒரு ஆடு எந்த அளவிற்கு உயரம் இருக்குமோ அந்த அளவை விட



2004 பிப்ரவரி 10]

இருக்கக்கூடிய மான்கள். இந்த மான்களைக் கண்டறிந்து, இவற்றை நாம் வைத்துள்ள பூங்காக்களிலே வளர்த்து வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதன்கூட தனக்கு இழுக்கு ஏற்படாமல் வாழ வேண்டும் என்பதற்காக மானை உதாரணமாகச் சொல்கிறார்கள். 'மயிர் நீப்பின் உயிர் வாழா கவரி மான்' என்று சொல்கிறார்கள். அந்தக் கவரி மான் தன்னுடைய உடம்பிலே இருந்து ஒரு முடி உதிர்ந்து விட்டாலும்கூட தனக்கு இழுக்கு ஏற்பட்டுவிட்டது என்று சொல்லி, உயிர் துறப்பதாகச் சொல்லக்கூடிய வகையிலே மான் இனத்தை உயர்வாகச் சொல்கிறார்கள். அப்படி கவரி மான் இருக்கிறது. பொய் மான் பற்றிச் சொல்கிறார்கள். புள்ளி மான்—இப்பொழுது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சருகு மான் பற்றிச் சொன்னார்கள். இதைப்போல மான் இனத்திலே எத்தனை வகை மான்கள் இருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மான், புள்ளி மான், கட மான், குரைக்கும் மான், சருகு மான் என்று பலவகையான மான்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, வனத் துறையின் சார்பாக கொடுத்த மான்களின் வகைகள் இவை. மேலும், இன்னும் வேறு மான்கள் என்ன இருக்கின்றன என்பதைத் தெரிந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, திருமதி நளினி மனோகரன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

[2004 பிப்ரவரி 10

22—

## பால் குளிரூட்டும் நிலையம்

***33757—திருமதி நளினி மனோகரன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி, களம்பூர் தேர்வு நிலை பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போளூர் தொகுதி, களம்பூர் தேர்வு நிலை பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை.

*முற்பகல் 10-10*

**திருமதி நளினி மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது போளூர் தொகுதியில் போளூர் வட்டத்தை உள்ளடக்கி 500-க்கும் மேற்பட்ட கிராமப் பகுதிகளில் சுமார் 50,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் தொழிலோடு கால்நடைகளையும் பராமரித்து வருகின்றனர். இதனால், நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் தனியார் மற்றும் அரசு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக, களம்பூர் பேரூராட்சி மற்றும் அதன் சுற்று வட்டார கிராமப் பகுதிகளில் மட்டும் நாள் ஒன்றுக்கு 7,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இதுபோன்று கொள்முதல் செய்யப்படும் பால் வேலூர் பால் ஒன்றியத்திற்கு மட்டும் அனுப்பப்பட்டு வருவதால், பால் வண்டியில் செல்லும்போது, பால் கேன்களிலிருந்து சிந்தி, சிதறி வீணாகிறது. இதனால் பால் கொள்முதல் குறையவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. ஏற்கெனவே 8-9-2001-ல் சட்டமன்றக் கூட்டத் தொடரில் கேட்டுள்ளேன். எனவே, பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி, மாந்தர்தம் மாணிக்கமாய், மக்களின் மா-சக்தியாய், கேட்டதை வழங்கிடும் வள்ளலாய், தேவையைச் சேவையாய் தரும் தாயே! மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அடுத்த நிதியாண்டிலாவது களம்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மாவை வணங்கி, வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.



2004 பிப்ரவரி 10]

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பால் தேவைப்படும். ஆனால், களம்பூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் நாளொன்றுக்கு உள்ளூர் தேவை போக, மீதி 3,150 லிட்டர் பால் மட்டுமே ஒன்றியத்திற்கு அனுப்புகிறது. ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க ரூபாய் 3 கோடி தேவைப்படும். மேலும் களம்பூர் பகுதியில் ஒன்றியத்திற்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லை. களம்பூர் பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டாலும், போதுமான பால் கிடைக்காது. எனவே, களம்பூர் பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் வாய்ப்பு இல்லை. இருந்தபோதிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, தற்போது செயல்பட்டு வரும் களம்பூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் இயந்திரம் "Bulk Cooler" விரைவில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. கோவை தங்கம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

23—

## நெசவாளர்களுக்குக் கடன்

***22840—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவுத் தொழிலை மேலும் ஊக்குவிக்க வட்டியில்லாக் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2004 பிப்ரவரி 10

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நெசவுத் தொழிலை ஊக்குவிக்க அரசு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நபார்டு வங்கி மூலம் சலுகை வட்டியில் மூலதனக் கடன் வழங்கி வருவதால், வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதியின் கீழ்ப்பகுதியிலுள்ள இரமணிமுதலிபுதூர், கம்பாளப்பட்டி, தெங்கம்பாளையம், அரசூர், சித்தூர் போன்ற கிராமங்களிலுள்ள நெசவாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை சமீபத்திலே சந்தித்துக் கேட்கின்றபோது, நெசவாளர்களுடைய குடும்பம் மிகவும் கஷ்டத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். பட்டினியால் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். குழந்தைகளைப் படிக்க வைக்க வசதியில்லாமல், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வயதுவந்த பெண்களைக்கூட, திருமணம் செய்து வைக்க முடியாமல், மீட்டர் வட்டிக்குக் கடனை வாங்கி, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கடுமையான உழைப்பாளிகளாகிய நெசவாளர்கள் நாள்தோறும் இரத்தக் கண்ணீரை வடித்துக் கொண்டிருக்கின்றார்கள். முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் காலத்தில் அறிவித்ததைபோல, 36 இன்ச் அகலத்திற்கு மேல் விசைத்தறிகள் வைத்திருப்பவர்கள், புதிய இரக டிசைன்களை தயார் செய்து வைத்து, விற்பனை செய்யக்கூடாது என்று தடை செய்வதைப் போல, இந்த அரசும் தடை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 40 இன்ச், 48 இன்ச், 55 இன்ச் போன்ற அகலம் உள்ள துணிகளை விசைத்தறி தயாரிப்பாளர்கள் தயார் செய்து சந்தையில் விற்பதின் மூலம் நெசவாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் சந்தையிலே போட்டிபோட்டு, விற்பனை செய்ய முடியவில்லை. கைத்தறிக்குத் தேவையான மூலப் பொருட்கள், சில்க் நூல், காட்டன் நூல், ஜரிகை போன்றவைகளின் விலை அடிக்கடி உயர்கிறது. ஆனாலும் தயாரிக்கப்பட்ட கைத்தறித் துணிகளுக்கு *(மணியடிக்கப்பெற்றது)* ஒரேயொரு நிமிடம். பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். கைத்தறித் துணிகளுக்கு விலை உயர்வு கிடைப்பதில்லை.



2004 பிப்ரவரி 10]

ஆகையால் இதற்கு அரசு மானியம் வழங்க முன்வர வேண்டும். நெசவாளர்கள் குடும்பங்களின் கஷ்டத்தைப் போக்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். பேசி முடித்துவிடுகிறேன். நெசவாளர்கள் குடும்பங்களின் கஷ்டத்தைப் போக்க, அவர்களுடைய கைத்தறித் துணியை அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்கள் கைத்தறி கொள்முதலுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இது மானியக் கோரிக்கை மீதான விவாதமல்ல.*(குறுக்கீடு)* மானியக் கோரிக்கை மீதான விவாதமல்ல.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை மீதான விவாதமல்ல.

**திரு. கோவை தங்கம்:** கைத்தறி நெசவாளர்களின் குடும்பப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு நீண்டகாலக் கடன் உதவி வழங்குவதற்கு அரசு முன் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக் கூடிய நெசவாளர்கள் எல்லாம், இப்போது கஷ்ட நிலையில் இருந்து மாறி, புது தெம்புடன் இருக்கின்றார்கள். இதற்குக் காரணம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நெசவாளர்களுடைய துயர் துடைப்பதற்காக நல்ல பல

[2004 பிப்ரவரி 10

திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இந்த நெசவாளர்களுக்கு நபார்டு வங்கியின் மூலம் கொடுக்கக்கூடிய கடன்களுக்கு வட்டி சதவீதத்தைக்கூட வெகுவாகக் குறைத்து இப்பொழுது அம்மா அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், நெசவாளர்களுக்கு வட்டி வீதத்தை இன்னும் குறைக்க வேண்டும் என்று சொல்லி நபார்டு வங்கியினுடைய அதிகாரிகளிடம், இப்பொழுது எங்களது துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், நாங்களும் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் தலைமையிலே கமிட்டி ஒன்று போடப்பட்டிருக்கிறது. இந்த கமிட்டியின் மூலமாக பல்வேறு நெசவாளர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, இன்றைக்கு நல்ல முறையில் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. ஆனால், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வங்கிகளிலே கடன் கிடைப்பதில் மிகவும் சிரமமாக இருக்கிறது. கூட்டுறவு வங்கிகள், வங்கிகள் மூலமாக கைத்தறி நெசவாளர்கள் கடன் பெற முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு தலையிட்டு, நெசவாளர் குடும்பங்களுக்கு உடனடியாக கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய கூட்டுறவு வங்கி அனைத்து நெசவாளர் சங்கங்களுக்கும் காசுக் கடன் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எந்தெந்தக் கூட்டுறவு சங்கங்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னால் அது உடனடியாக நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.



2004 பிப்ரவரி 10]

**24—**

### ஒளிரும் மிதவைகள் நிறுவுதல்

***33957—திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களுக்கு கடலில் இரவும், பகலும் எல்லை தெரியும் வகையில் வழிகாட்டும் விளக்குடன் கூடிய மிதவைகளை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தின் பாக் விரிகுடா மற்றும் மன்னார் வளைகுடா கடல் பகுதியை ஒட்டி அமைந்துள்ள நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் வரையிலான கடல் பகுதியில், மீனவர்கள் மீன் பிடிக்கும்போது கண்ணுக்குத் தெரியாத, இலங்கை மற்றும் இந்திய கடல் பகுதியிலான சர்வதேச எல்லைக் கோட்டினைக் கடந்து விடுகின்றனர். இதனால் இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியும், கைது செய்யப்பட்டும், இன்னலுறுகின்றனர். இதனைத் தவிர்க்கும் பொருட்டு, தமிழகம் மற்றும் இலங்கைக்கு இடைப்பட்ட 250 கிலோ மீட்டர் கடல் பகுதியில், சர்வதேச எல்லைக் கோட்டினை வரையறை செய்து, ஒவ்வொரு 5 கிலோ மீட்டர் தூரத்திற்கும் ஒன்று வீதம், 50 எண்ணிக்கையிலான சூரிய சக்தியினால் ஒளிரும் மிதவைகள் அமைக்க மத்திய அரசின் ஒப்புதல் பெற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. அடிக்கடி நாகை கடலோரப் பகுதியிலே மீனவர்களை இலங்கைக் கடற்படையினரும், விடுதலைப் புலிகளும்கூட கடத்திச் சென்று, படகுகளை உடைத்து விடுகின்றனர். உடனடியாக கைது செய்வது

[2004 பிப்ரவரி 10

மட்டுமல்லாமல், படகுகளை சேதப்படுத்தி விடுகிறார்கள். எனவே, அவசர முக்கியத்துவம் கருதி, தமிழக அரசு இந்த மிதவை விளக்கை ஒளிரச் செய்யுமா, மிதக்க விடுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், மீனவர்கள் புயல் நேரங்களிலே புயலில் சிக்காமல் இருப்பதற்காக பாதுகாப்பு உடையை தமிழக அரசு வழங்குவதாக அறிவித்திருந்தது. நாகை கடலோரப் பகுதி புயல் முதலிலே நாகப்பட்டினத்தில்தான் மையம் கொள்கிறது. ஆகையால் நாகப்பட்டினம் கடலோரப் பகுதி மீனவ மக்களுக்கு மிதவை உடையை தமிழக அரசு வழங்குமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய இலங்கைக் கடல் பகுதியின் சர்வதேச எல்லைக் கோட்டினை 250 கிலோ மீட்டர் கடல் பகுதியில் ஒளிரும் மிதவைகள் நிறுவுவதற்கான திட்டம் மற்றும் செயல்படுத்தத்தக்க அறிக்கை Project and Feasibility Report ஆகியவை தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் National Institute of Ocean Technology, Chennai மூலம் தயாரிக்கப்பட்டு பெறப்பட்டது. இத்திட்டத்திற்கு ஆகும் முதலாம் ஆண்டு மூலதனச் செலவினம் ரூ.340 இலட்சம் ஆகும். ஆண்டு தொடர் செலவினம் ரூ.140 இலட்சம் ஆகும். இத்திட்டம் பாதுகாப்புத் துறை, வெளி விவகாரத் துறை, முதன்மை நீரியல் வரைவாளர், கலங்கரை விளக்கம் மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை தலைமை இயக்குநர், புது டில்லி மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறைத் தலைவர் ஆகியோரின் ஒப்புதல் மற்றும் கடல் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வரும் கடலோரக் காவல் படை, கடற்படை ஆகியோரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட வேண்டியதாகும். இத்திட்டத்திற்கான நிதி மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் ஒத்திசைவைப் பெறுவதற்கான செயற்குறிப்பு மத்திய அரசுக்கு ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்டு, இத்திட்டம் தொடர்பான அறிக்கைமீது சில விவரங்கள் பரிசீலனையில் உள்ளன. எனவே, மத்திய அரசின் ஒப்புதலுக்குப்பின் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Life Jacket என்று சொல்லப்படும் மீனவர்களுக்கான பாதுகாப்பு உடை சம்பந்தமாகக் கூறினார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மீனவர்களுடைய உயிர்களைப் பாதுகாக்கிற விதத்திலே, மொத்தம் 1,000 ரூபாய் மதிப்புள்ள அந்த உடைக்கு 100 ரூபாய் பங்குத் தொகையாகச் செலுத்தினால் போதும்; மீதி 900 ரூபாயை அரசே செலுத்தும் என்று அறிவித்திருக்கின்றார்கள். அந்தந்த மாவட்டத்திலுள்ள மக்கள்



2004 பிப்ரவரி 10]

தொகையினுடைய அடிப்படையிலே, அந்த ratio-விலே, இந்த உடைகள் எல்லாம் கொடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,000 ரூபாய் மதிப்பிலான மீனவர்களுடைய உயிர்காக்கும் கவசங்களை 10 ஆயிரம் மீனவர்களுக்கு வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு குமரி மாவட்ட மீனவர்கள் சார்பிலே என்னுடைய நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். ஆழ்கடலிலே மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கின்றபோது படகு கவிழ்கின்ற காரணத்தால், அவர்கள் உயிரிழக்கக்கூடிய நிலை அடிக்கடி ஏற்பட்டுவிடுகின்றது. குறிப்பாக, என்னுடைய பகுதிக்குட்பட்ட மேலமணக்குடி மீனவ கிராமத்தில்கூட சமீபத்திலே 4 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றவர்கள் படகு கவிழ்ந்த காரணத்தால், அவர்கள் கரை சேர முடியாத நிலையிலே, அரசு பல்வேறு துரித நடவடிக்கைகளை எடுத்து, ஹெலிகாப்டர் மூலம் தேடிய பிறகும்கூட, அவர்களைக் கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. எனவே, இதைப் போக்குகின்ற வகையிலே, ஆழ்கடலிலே படகுகள் கவிழ்கின்றபோது அவர்களை உயிர்காக்கும் வகையிலே Life-buoys என்று சொல்லக்கூடிய பாதுகாப்பு மிதவைகள் அவர்களிடத்திலே இருக்கும் என்று சொன்னால், 2, 3 நாட்கள் அவர்கள் கடலிலே தாக்கு பிடிக்க முடியும். எனவே, அப்படிப்பட்ட Life-buoys என்று சொல்லக்கூடிய பாதுகாப்பு மிதவைகளை மானிய விலையிலே மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வழங்குவதற்கு அரசு முன் வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் சொல்கின்ற அந்தக் கருத்து குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் மத்திய அரசுக்கு அதற்கென்று ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டு இருக்கிறது. மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்று, அந்த நிதி

பெறப்பட்டவுடன் 50:50 என்ற சதவிகிதத்திலே மத்திய அரசு கொடுக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் சொல்கின்ற அந்த Life-Buoys திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் பல்வேறு புரட்சிகள் நடந்து வருகின்றன. பெண்களுக்கென்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற சுயஉதவிக் குழுக்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே--இந்தியாவில் எங்கும் கண்டிராத விதத்தில் முதன்முதலாக ஆழ்கடலிலே சென்று மீன் பிடிக்கின்ற ஒரு சூழ்நிலையை கன்னியாகுமரி மாவட்ட பெண்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கின்ற பெண்களுக்கு boat, வலை மற்றும் டீசல் போன்ற இப்படிப்பட்ட உபகரணப் பொருட்களை மானிய விலையிலே வழங்குவதற்கு அரசு முன்வருமா? ஆயிரக்கணக்கான பெண்கள்கூட ஆழ்கடலுக்குச் சென்று, மீன் பிடிக்கின்ற ஒரு அற்புதமான நிகழ்ச்சியை தமிழகத்திலே முதன்முதலாக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நிலை நாட்டியதை நாட்டிற்கு எடுத்துக்காட்டும் முகத்தான், இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் சொல்லிய கருத்து நல்ல கருத்து. இந்தத் திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் ஆலோசனை பெற்று, அதை எந்தவிதத்திலே செயல்படுத்துவது என்பதை இந்த அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் எல்லைகளை வரையறுக்கக்கூடிய விளக்குகள் பொருத்துகின்ற திட்டம் மத்திய அரசாலே அனுமதிக்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். கடல் எல்லை தெரியாத காரணத்தாலேதான் மீனவர்கள் பல தொல்லைகளுக்கு





ஆளாக்கப்படுகிறார்கள். குறிப்பாக, இதை உடனடியாகப் பொருத்தி இந்த எல்லைகளை வரையறை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசு துரித நடவடிக்கை என்ன எடுத்திருக்கிறது? அதோடு மீனவர்கள் பலவகைகளிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இலங்கை இராணுவத்தாலும், மற்றவர்களாலும் கடத்தப்பட்டு உயிர் பலிக்கு ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள். கடத்தப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றாலும், இதுபோன்ற நிகழ்வுகளுக்கு உள்ளானவர்கள் இன்னும் நமது நாட்டிற்கு திரும்ப வேண்டியவர்கள் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்து, நம்முடைய அரசு மட்டும் செய்கின்ற காரியம் அல்ல. நான் முதலில் சொல்லியவாறு பாதுகாப்புத் துறை, வெளிவிவகாரத் துறை, முதன்மை நீரியல் வரைவாளர், கலங்கரை விளக்கம் மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை தலைமை இயக்குநர், புது டில்லி மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறைத் தலைவர் ஆகியோரது ஒப்புதலுடன் மற்றும் கடல் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வரும் கடலோரக் காவல் படை ஆகியோரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டமாகும். அதனால்தான் அவர்களுடைய ஒப்புதல் கிடைப்பதற்குத் தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்பதை கேட்டார்கள். கரெக்டான அந்த நம்பர் இப்போது என்னிடம் இல்லை. அதற்கென்று தனிக் கேள்வி தொடுத்தால் விவரத்தை நான் சொல்வேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கின்ற நேரத்தில் பல்வேறு முறையில், விசைப் படகுகள் மூலமாக, வல்லம் மூலமாக, கட்டுமரங்கள் மூலமாக சென்று மீன் பிடித்து வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அரசின் மூலமாக ஒரு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நேரத்திலே கட்டுமரங்கள், வல்லம் போன்றவைகளில் சாதாரண மீனவர்கள் சென்று மீன் பிடிக்கின்ற நேரத்தில், அந்த உரிய நேரத்தில் போதுமான மீன்

பிடிக்க முடியவில்லை என்கிற கோரிக்கை கடலோரப் பகுதியிலே இருக்கின்ற அத்தனை மீனவர்களிடமிருந்து வைக்கப்பட்டிருக்கிறது. அரசு சார்பிலே அந்த நேரத்தை—அவர்கள் விரும்புகின்ற நேரத்திலே மீன் கிடைக்கக்கூடிய நேரத்தை ஒதுக்கித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதையும், ஒவ்வொருவருக்கும் எந்தெந்த நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதற்கென்று ஒரு நேரம், விசைப் படகு என்றால் காலை 5 மணிக்குப் புறப்பட்டு இரவு 9 மணிக்கு வரவேண்டுமென்று ஒரு நேரம் அதற்கென்று நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இப்போதுள்ள சூழ்நிலையில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அங்கு நிலவுகின்ற சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு நேரத்தை நிர்ணயித்துக்கொள்ளலாம் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு - அவர்களுக்கென்று ஒரு ஆணையாகப் பிறப்பிக்காமல் அவர்களுக்கு ஒரு தகவலாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. டி. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**25—**

## மீனவர் குடியிருப்புகள் செப்பனிடுதல்

***44828—திரு. டி. மணி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கொல்லங்கோடு பேரூராட்சிப் பகுதியில் அரசால் கட்டிக் கொடுக்கப்பட்ட மீனவர்களின் இலவசக் குடியிருப்புகளைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?





**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மீனவர் இலவச வீடுகள் பழுதுபார்க்கும் திட்டம் எதையும் தற்போது அரசு செயல்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி, ஏற்கெனவே கொல்லங்கோடு வருவாய்க் கிராமத்தில் நீரோடி என்ற பகுதியில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் கடலில் ஏற்பட்ட சூறாவளிக் காற்றின் காரணமாக, கரை ஓரத்தில் கட்டப்பட்டிருந்த சுமார் 82 வீடுகள் உடைந்துபோய், அதற்காக இதுவரையிலும் அவர்களுக்கு மாற்று ஏற்பாடு எதுவும் நாம் செய்யவில்லை; இதுசம்பந்தமாக இந்த துறையினரை நான் கேட்டபோது, இதற்கு ஒரு காலக்கெடு வைத்திருக்கிறார்கள். எனவே, அதற்குள் புதிய வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியாது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதற்கு முன்னால் இருந்த மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்று பார்வையிடச் செய்து, அவர்கள் அந்த நேரத்தில் ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள்; உடனடியாக பழுது அடைந்திருக்கிற, உடைந்து போய் இருக்கின்ற வீடுகளைக் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று, அதுவும் இரண்டு ஆண்டுகள் தாண்டிவிட்டது. இப்போது மழையிலும், வெயிலிலும், காற்றிலும், அவர்கள் தென்னங் கீற்றுகளை மட்டும் வைத்துக்கொண்டு தங்குகின்ற ஒரு சூழ்நிலை அங்கே இருந்து கொண்டு இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலிருந்து அதைச் செய்ய வேண்டுமென்று சொன்னால், அதற்கு அனுமதியில்லை. ஆகவே, அரசினுடைய நிதியிலிருந்து, உடைந்து போய் இருக்கின்ற வீடுகளைத் திரும்பக் கட்டுவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கொல்லங்கோடு பேரூராட்சிப் பகுதியிலுள்ள நீரோடி மற்றும் வல்லவிளை மீனவக் கிராமங்களில் முறையே 82 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அவ்வீடுகளில் ஏற்பட்ட பழுதுகளை நிவர்த்திக்க, விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. மணி அவர்களால் வேண்டப்பட்டது, பழுது பார்க்கும் பணிகளுக்கு நிதி ஒதுக்க, தேவைப்படும் நிதியை பாராளுமன்ற அல்லது சட்டமன்றத் தொகுதி

[2004 பிப்ரவரி 10

மேம்பாட்டு நிதியிலிருந்து பெற்றுக்கொள்ள அரசு அறிவுரை வழங்கியது. அதனைத் தொடர்ந்து, விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. மணி அவர்களைத் தொடர்பு கொண்டதில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்னரே பரிந்துரைக்கப்பட்டுவிட்டதால், இலவச வீடுகளின் பழுதுகளை, நிவர்த்திக்க நிதி ஒதுக்க முடியாத நிலை உள்ளது என்று 8-7-2002-ல் தெரிவித்துள்ளதால், அவர் இந்தப் பழுதுகளை அரசே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்போது நாங்கள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களைக் கேட்கின்றபோது, சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தோ, இதர நிதியிலிருந்தோ மீனவர்களுக்கு, அதாவது மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு நிதியொதுக்க இயலாது என்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டுமே பழுது பார்க்கும் பணிக்கு நிதியை ஒதுக்க இயலும் என்ற விவரம் பெறப்பட்டுள்ளது. இருந்தாலும், வருகின்ற நிதியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, இந்த வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பழுதுபார்க்கக்கூடிய சமாச்சாரம் அல்ல. முழுமையாக அந்த வீடுகள் உடைந்துபோய் விட்டன. பக்கத்திலே இருக்கக்கூடிய சுவர் மட்டும்தான் இருக்கிறது. எனவே, புதிய வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற ஒரு நிலை உருவானால்தான் அவர்களை நாம் பாதுகாக்க முடியும். குடியிருப்பு என்ற முறையிலே அதைப் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையிலே இந்த 81, 82 வீடுகளையும் கட்டுவதற்கு, அரசு நிதியிலிருந்து இதைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற காலத்தில், அதாவது 2004-2005 அல்லது 2005-2006-லே இந்த வீடுகளை எடுப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 பிப்ரவரி 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீரில் மிதக்கும் மீனவர்கள் கண்ணீரோடு வாழக்கூடிய அவல நிலையே தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. இப்படி கண்ணீரோடு வாழ்ந்து கொண்டிருக்கிற மீனவர்களுக்கு, மீன் பிடிக்கச் செல்லாத காலம் என்று, நான்கு மாதங்களாக அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. அந்த நான்கு மாத காலத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. (குறுக்கீடு) மூலக் கேள்விக்குக் கொஞ்சங்கூடச் சம்பந்தம் இல்லை.

வினா எண் 26, திருமதி எஸ். ராஜம்மாள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**26—**

## சுற்றுலா அபிவிருத்தி

***8632—திருமதி எஸ். ராஜம்மாள்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தூத்துக்குடியில் சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருகிறது. சுற்றுலாத் துறைதான் சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதன்படி, சுற்றுலாத் துறை தூத்துக்குடி துறைமுகத்தை அழகுபடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர்

[2004 பிப்ரவரி 10

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.10.25 இலட்சம் ஒதுக்கியுள்ளார்கள். தூத்துக்குடி துறைமுகக் கழகமும் ரூ.5.3 இலட்சம் ஒதுக்கியுள்ளது. ஆகமொத்தம், ரூ.15.55 இலட்சத்தில் தற்போது தூத்துக்குடி துறைமுகக் கழகம் கடற்கரையை அழகுபடுத்தி, குழந்தைகள் பூங்கா, குழந்தைகளுக்கான விளையாட்டுக் கருவிகள், சுற்றுலாப் பயணிகள் அமர இருக்கைகள் கொண்ட பூங்கா ஆகியவை அமைக்கப்பட்டு வருகின்றன. தூத்துக்குடியில் உள்ள ரோஸ் பார்க்கில் ரூ.14 இலட்சத்திற்கு படகு இல்லம் அமைக்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தூத்துக்குடி தொகுதியானது மூன்று இலட்சம் வாக்காளர்களையும், பல இலட்சம் மக்களையும் கொண்ட தொகுதியாகும். அங்கு மக்கள் பொழுது போக்குவதற்கென்று முயல் தீவு உள்ளது. புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலேயே அதைச் சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, நிலுவையில் உள்ளது. தூத்துக்குடி பெரிய துறைமுகம் ஆகும். இந்தத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி அதிகமாக உள்ளதாலும், வெளி நாட்டவர்களின், சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக உள்ளதாலும், அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அதைக் கொண்டு வந்தால், என் தொகுதி மக்களும், சுற்றுலாப் பயணிகளும் மிக்க மகிழ்ச்சி அடைவார்கள். என் தொகுதி மக்கள் இந்தத் திட்டத்தை ஆவலோடு நீண்ட காலமாக எதிர்பார்க்கிறார்கள்; ஆகவே, அடுத்த ஆண்டிலாவது இந்த அரசு இத்திட்டத்தை ஆய்வு செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தின் சுற்றுலா சிறப்பியல்புகளை பயணிகளுக்கு எடுத்துரைக்க திருநெல்வேலியில் சுற்றுலா அலுவலகம் ஒன்றும், பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக் கோட்டையில் சுற்றுலா தகவல் மையம் ஒன்றும் இயங்கி வருகிறது. பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக் கோட்டையில் சுற்றுலாத் துறையின் மூலம் ஆண்டுதோறும் கட்டபொம்மன் நினைவு நாள் விழா நடத்தப்பட்டு வருகிறது. 1995-96 ஆம் நிதியாண்டில் தூத்துக்குடி மாவட்டம்



2004 பிப்ரவரி 10]

திருச்செந்தூரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதியில் குடில்கள் கட்டுவதற்கு ரூ.28.28 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன. திருச்செந்தூரில் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி செய்தல் திட்டத்திற்கு ரூ.23 இலட்சம் நிதி ஒப்பளிப்பு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துள்ளார்கள். நவீனக் கழிப்பிடம் கட்ட திருச்செந்தூர் கோவில் நிலம் ஒதுக்கியுள்ளது. பணிகள் பொதுப் பணித் துறை மூலம் துவங்க உள்ளது. தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவு கோட்டை தொடர்பாக சுற்றுலா விளம்பர மடிப்பேடும் சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக வெளியிடப்பட்டுள்ளது. நவதிருப்பதி ஆலய இடங்களில் ரூபாய் 48.75 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் திட்டம், தெய்வசெயல்புரத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ரூ.19 இலட்சத்தில் ஏற்படுத்தவும், காயல்பட்டினம் கடற்கரையில் ரூ.30 இலட்சத்திற்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதியிலுள்ள பழவேற்காடு பறவைகள் சரணாலயம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 27, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**27—**

**புதிய அலுவலகக் கட்டடம்**

***19413—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

ஈரோட்டில் உள்ள கோட்டாட்சியர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் புதிய அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு தொகுதியிலுள்ள கோட்டாட்சியர் அலுவலகம் 1881 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 123 ஆண்டுகள் ஆகிறது. அதேபோல வட்டாட்சியர் அலுவலகம் 2-5-1890-ல் கட்டப்பட்டது. 114 ஆண்டுகள் ஆகிறது. இரண்டு கட்டடங்களும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. வட்டாட்சியர் அலுவலகத்தில் மழைக் காலங்களில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கெல்லாம் புதிய அழகிய கட்டடங்களைக் கட்டிக் கொடுத்ததைப்போல, ஈரோட்டில், கோட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள சுமார் 2 ஏக்கர் நிலப்பரப்பில் வட்டாட்சியர் அலுவலகமும் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகம் ஆகிய இரண்டையும் ஒரே இடத்தில் அடுத்த நிதியாண்டிலாவது கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு முன் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள 73 வருவாய்க் கோட்ட அலுவலகங்களில் ஆத்தூர் வருவாய்க் கோட்ட அலுவலகம் தவிர, ஏனைய 72 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஆத்தூர் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. ஈரோட்டில் கோட்டாட்சியர் அலுவலகம் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு புதிதாகக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் தற்போதில்லை. ஆண்டுதோறும் பழுதுபார்ப்பதற்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து பழுதுபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2004 பிப்ரவரி 10]

வட்டாட்சியர் அலுவலகங்களைப் பொறுத்தவரையில், மாநிலத்தில் மொத்தம் உள்ள 206 வட்டாட்சியர் அலுவலகங்களில், 182 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 11-வது நிதிக் குழுவின் மானியத்திலிருந்து கீழ்க்கண்ட 6 வட்டாட்சியர் அலுவலகங்கள், வரும் மூன்று ஆண்டுகளில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் தேனி மற்றும் போடிநாயக்கனூரிலும், கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரத்திலும், பெரம்பலூர் மாவட்டத்தில் வேப்பந்தட்டையிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் பூந்தமல்லி மற்றும் பள்ளிப்பட்டிலும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், வானூர், திருக்கோயிலூர், திண்டிவனம் ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் 11-வது நிதிக் குழுவின் மானியத்திலிருந்து கட்ட உத்தேசிக்கப்பட்டு உள்ளது. மீதம் உள்ள 18 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணி வருங்காலத்தில் படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் கட்டடம் கட்டிய பின்னரே பழுதடைந்துள்ள பழைய அரசு கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடம் கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**28—**

### தடுப்புச் சுவர் அமைத்தல்

***35197—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டம், குன்னூர்-ஊட்டி நெடுஞ்சாலையில் பாய்ஸ் கம்பெனி எதிரே தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

[2004 பிப்ரவரி 10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குன்னூர்-உதகை நெடுஞ்சாலையில் பாய்ஸ் கம்பெனி பேருந்து நிறுத்தத்திற்கு எதிரே சதீஸ் ஸ்டோர்ஸ் அருகில் மண் திட்டு உள்ளது. இவ்விடத்தில் மழைக் காலங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதாலும், மேலும் இனிவரும் காலங்களிலும் மண் சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாலும், அந்த இடத்தில் ரூ.1.50 இலட்சம் செலவில் மண் வளப் பாதுகாப்புத் துறை மூலமாக 2003-2004-ல் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் தடுப்புச் சுவர் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குன்னூர்-ஊட்டி நெடுஞ்சாலையில், பாய்ஸ் கம்பெனி எதிரில் அமைச்சர் குறிப்பிட்ட இடத்தில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து தடைப்படுகிறது. இதனை உடனடியாக சரி செய்வதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்க விரும்புவதோடு, நீலகிரி மாவட்டத்தில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்பட்டு, உயிர்ச்சேதங்கள்கூட ஏற்படுகிறது. இந்த நிலச்சரிவை நிரந்தரமாகத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் ஒரு காலத்தில் தடுப்புச் சுவர் துறை என்று அழைக்கப்பட்டு வந்தது. சுமார் 90 சதவிகித நிதி இந்தத் தடுப்புச் சுவருக்காகவே, தனியாக ஒதுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது இந்த மாதிரி ஒதுக்கப்படுவது இல்லை. சில கிராமங்கள்—அட்டுபாய் போன்ற கிராமங்கள் எல்லாம், அரசு, குந்தா மின் நிலையத்திற்காக அந்தக் கிராமத்தை காலி செய்து புதிதாகக் கட்டும்பொழுது, ஒவ்வொரு வீட்டிற்கும் அருகிலே நிலச்சரிவு ஏற்படும் நிலை; பள்ளிக்கூடங்கள், அரசு நூலகங்கள், கல்வி நிலையங்களுக்கு



2004 பிப்ரவரி 10]

எல்லாம் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அதற்காக நிதி ஒதுக்குவது இல்லை. ஆகவே, அரசே இதையெல்லாம் கருத்தில்கொண்டு வரும் ஆண்டில் 25 சதவிகிதம் தடுப்புச் சுவருக்காக ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சிரமம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எந்த அளவுக்கு பரிசீலிக்கப்பட முடியுமோ அந்த அளவுக்குப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் மாநில அரசுக்கு இந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டு நிதிக்கு, எவ்வளவு ரூபாய் ஆண்டுக்காண்டு ஒதுக்கப்படுகிறது? அப்படி ஒதுக்கப்படுகின்ற பணம் தமிழ்நாட்டிலே இருக்கின்ற மலைவாழ் மக்கள் பகுதிகளுக்கு சரிசமமாகப் பகிர்ந்து கொடுக்கப்படுகிறதா? அப்படி பகிர்ந்து கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், என்னுடைய தொகுதியிலே தீபிரப்பட்டி, ஆத்திப்பாடி மற்றும் புத்தூர்செகரி என்கின்ற ஊராட்சிகள் எல்லாம் மலைவாழ் மக்கள் பகுதிகள்தான். இதுவரையில் இந்த மூன்றாண்டுக் காலத்தில் எந்த நிதியும் வரவில்லையே, அது ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மைய அரசு ஒதுக்குகின்ற நிதி. நடப்பு ஆண்டிற்கு 22 கோடியே 10 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ், கோவை, ஈரோடு, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி பகுதிகளில் உள்ள மலைவாழ் மக்களினுடைய நலன் பேணப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[2004 பிப்ரவரி 10

**29—**

## அனல் மின் நிலையம்

***19528—திரு. த. ஆறுமுகம்:**

*மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வட சென்னை அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேறும் குளோரின் சுடுநீர், ஆற்றில் கலப்பதால், மீனவர்களுக்கு நோய்களும், தொழில் பாதிப்பும் ஏற்படுவதால், அந்நீரை மீண்டும் கடலில் கலக்க வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வட சென்னை அனல் மின் நிலையத்திலிருந்து குளோரின் கலந்த சுடுநீர் வெளியேற்றப்படுவதில்லை. இம்மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுவது வெதுவெதுப்பான நீரே தவிர, சுடுநீர் அல்ல. இந்நீரானது கடலிலிருந்து எடுக்கப்பட்டு, இம்மின் நிலையத்தில் குளிரூட்டப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பிறகு வெளியேற்றப்படுவதால், எவ்வித வேதியல் மற்றும் பௌதீக குணமாற்றமோ, நச்சுத் தன்மையோ ஏற்பட வாய்ப்பு இல்லை. மேலும், வெளியேற்றப்படும் நீரின் வெப்ப உயர்வு, மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்திய அளவிற்குள்ளாகவே உள்ளது. முன்பு தற்காலிகமாக பக்கிங்காம் கால்வாயில் விடப்பட்டு வந்த இந்த வெதுவெதுப்பான நீர், மறுபடியும் கடற்கழியில் குளிரூட்டும் கால்வாயின் வாயிலாக சேர்க்கப்படுகிறது. இக்காரணங்களால் மீனவர்களுக்கு நோய்களும், தொழில் பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை.

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1995 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி



2004 பிப்ரவரி 10]

அம்மா அவர்கள் வட சென்னை அனல் மின் நிலையத்தைத் தொடங்கி வைத்தபொழுது, அதிலிருந்து வெளியேற்றப்படுகின்ற சாம்பல் கலந்த சுடுநீர் கடலில் விடப்பட்டுக்கொண்டு இருந்தது. அதன் பிறகு வட சென்னையில் துறைமுகம் ஆரம்பிக்கின்ற நேரத்தில், அவர்களுக்கு இடையூறாக இருப்பதாகச் சொல்லி அவற்றை பக்கிங்காம் கெனாலில் திருப்பி விட்டார்கள். அதனால் எண்ணூர் பகுதி மற்றும் பழவேற்காடு பகுதியில் இருக்கின்ற மீனவர்கள் பாதிக்கின்ற நிலையில் அன்றைய மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் நானும் நேரடியாகச் சென்று பார்வையிட்டபொழுது—சுமார் 50 டிகிரி செல்ஸியஸ் இருக்கின்ற ஒரு நிலையில். அந்தப் பகுதியில் இருக்கின்ற மீன்கள் அனைத்தும் இறக்கின்ற நிலைமை இருந்தது. அவற்றைக் கருத்தில் கொண்டு அந்தச் சாம்பல் நீர் முழுமையாக ஆற்றில் கலக்கின்ற சூழ்நிலையில் மீனவர்கள் தொழில் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது அவர்களுடைய உடம்புகளிலேயும் பல்வேறு புண்கள் ஏற்பட்டு, அவர்கள் தொழில் செய்ய முடியாத நிலைமை உள்ளது. அவற்றைத் தவிர்க்கின்ற வகையில், மறுபடியும் அந்தச் சுடுநீரால் பழவேற்காடு பகுதி மீனவர்களும், எண்ணூர் பகுதியைச் சேர்ந்த மீனவர்களும் பாதிக்கப்படாத வகையில் ஆற்றில் கலக்கின்ற அந்தச் சுடுநீரை, திரும்பவும் கடலில் கலப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா எழுப்பப்பட்டது 27-2-2002-இல். அன்றைக்கு அந்த நிலைமை இருந்தது. எனவே, இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், Central Water and Power Research station-ஆலோசனைப்படி, குளிரூட்டும் கால்வாய் 5 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிமுடிக்கப்பட்டதன் காரணமாக, 2.5 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய் வழியாக அந்தச் சுடுநீர் செல்லுகின்ற சூழ்நிலையில் நீரின் வெப்பம் தணிந்து, ஆறிய பின்னர் கடற்கழியில் விடப்படுகிறது. அதனால் பக்கிங்காம் கால்வாயில் வெதுவெதுப்பான நீர் விடப்படுவது முற்றிலும் நிறுத்தப்பட்டுவிட்ட நிலை ஏற்பட்டு இருக்கின்றது. மேலும் நிரந்தரத் தீர்வு ஏற்படவேண்டும்

என்கின்ற நோக்கோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் புதிய எண்ணூர் துறைமுகத்திலிருந்து நீரை எடுப்பதற்காக உட்கோள் கால்வாய் ஒன்று கட்ட மேற்கூறிய ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனையின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தால் *32* கோடியே *20* இலட்சம் ரூபாய் செலவில், ஏப்ரல் *2003*-ல் பணி தொடங்கப்பட்டு நடந்து வருகின்றது. இப்பணி ஒரு வருட காலத்திற்குள் முடிக்கப்படும். இதையெல்லாம் செய்தும்கூட, எதிர்காலத்திலே மீனவர்களுக்கு இந்த வெதுவெதுப்பான நீரினால் எந்தவித பிரச்சினையும் ஏற்படுமா என்றால், நிச்சயமாக இல்லை. அந்த வெதுவெதுப்பான நீர் குளிரான நீராக ஆக்கப்படுகின்ற காரணத்தினால், அந்தப் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு இல்லை. இருந்தாலும்கூட, எண்ணூர் கடற்கரையில் உள்ள கடல்வாழ் தவிர மற்ற உயிரினங்களுக்குக் குளிரூட்டும் நீரால் ஏதேனும் தாக்கம் ஏற்படுகிறதா என்பதைக் கண்டறிய சுமார் *1* இலட்சம் ரூபாய் செலவில் ஓர் ஆய்வு நடத்த, தூத்துக்குடியிலுள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திடம் ஆய்வுப் பணியை ஒப்படைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, மீனவர்களின் நலன் முழுமையாகப் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. ஆறுமுகம்.

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாம்பல் கலந்த சுடுநீர் அந்தப் பகுதியிலே இருக்கின்ற நீண்ட பக்கிங்காம் கால்வாயில் விடப்பட்டது. இப்போது, முகத்துவாரம் பகுதியிலே சுடுநீரை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் எண்ணூர் பகுதியிலே இருக்கின்ற மீனவர்களைப் பாதிக்கின்ற ஒரு நிலைமை இப்போது உள்ளது. யாரும் தொழில் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. *30* அடியாக இருந்த அந்தப் பகுதி ஆழம் இன்று ஒரு அடியாக மணல் மூடி காட்சியளிக்கின்ற நிலைமை உள்ளது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவற்றைச் சரி செய்கின்ற வகையில் கடலிலே அந்தத் தண்ணீர் விடப்படுமேயானால், மீனவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு, அவற்றை ஆய்வு செய்வார்களா என்பதை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முழுக்க முழுக்க technical சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதால், நாம் இதிலே ஒரு முடிவு எடுக்க முடியாது. அதனால்தான் மீண்டும் Central Water and Power Research Station-க்கு அவர்களுடைய கருத்துக்கு அனுப்பப்படும். அவர்கள் சொல்கின்ற அந்தக் கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் technical-ஆன விஷயம் என்று குறிப்பிட்டார்கள். உண்மைதான். அதிலே, அங்கே வெதுவெதுப்பான நீர்தான் விடப்படுகிறது; அதுவும் குளிரூட்டப்படுகிறது; சுடுநீர் விடப்படுவதில்லை என்று அமைச்சர் சொன்னாலும் கூட, அங்கிருக்கக்கூடிய மீனவர்கள் எல்லாம் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். மீன்கள் எல்லாம் இறந்துபோய் கருவாடாகி விடுகிற நிலை இருக்கிறது. அது, commoners-க்குத் தெரியக்கூடிய விஷயம் அவ்வளவுதான் எங்களுக்குத் தெரிகிறதேயொழிய, அதைக் கடலிலே விடாமல் வேறுவகையிலே அந்தத் தண்ணீரை நீங்கள் dispose செய்வதற்கு ஏதாவது அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். நான் ஏற்கெனவே சொன்னேன். ஆற்றிலேயிருந்து தண்ணீர் எடுக்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும் என்ற வகையிலேதான் *32* கோடியே *20* இலட்சம் ரூபாய் செலவில், எண்ணூர் துறைமுகத்திலேயிருந்து அந்தத் தண்ணீரை எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது இன்னும் ஓராண்டு காலத்திலே முடிவடையும் நிலையிலே இருக்கிறது. இந்த நிலை இருக்கிறபட்சத்தில், ஆற்றிலே தண்ணீர் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும், அதிலே இந்த வெதுவெதுப்பு இருக்கிறதா என்றால் நிச்சயமாக இப்போது இல்லை. நாம் இருவரும் வேண்டுமானால்கூட போய்ப் பார்த்துவிட்டு வரலாம். இங்கே இருக்கின்ற Pollution Control

[2004 பிப்ரவரி 10

Board கூட, அவ்வப்போது, அதிலே sample test எடுத்து, அதிலே வெதுவெதுப்பு இருக்கிறதா என்பதெல்லாம் கண்டறியப்பட்டு, pollution இருக்கிறதா என்பதெல்லாம் ஆராயப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும், ஆய்வு நடத்துவதற்கு, தூத்துக்குடியிலுள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஏதேனும் அறிக்கை தந்தாலும்கூட, அந்த அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வடசென்னை அனல் மின் நிலையமும், பழவேற்காடும் என்னுடைய தொகுதியில்தான் இருக்கின்றன. கடந்த 27-12-2003 அன்றுகூட, சுற்றுலாத் துறையும், மீன்வளத் துறையும் இணைந்து ஒரு நிகழ்ச்சியை அங்கே நடத்தியபோது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கே வந்திருந்தார். அப்போது, அங்கே இருக்கின்ற மீனவ மக்கள் மின் வாரியத்திலே இருக்கின்ற அந்தச் சுடுநீருடன் கலந்து சாம்பலும் அந்தப் பகுதியிலே போகிறது; ஆதலால், ஆற்றுநீர் கெட்டதோடு மட்டுமல்லாமல், அங்கே எந்தவித மீன்வளமும் —மீன்களும் மற்ற உணவுப் பொருள்களும்— உற்பத்தியாகவில்லை; ஆதலால், நாங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறோம் என்று மாவட்ட ஆட்சியரிடம் மீனவ மக்கள் அனைவரும் புகார் செய்கிறார்கள். அதுவும் மூன்று தொகுதிகளிலும், திருவொற்றியூர், கும்மிடிப்பூண்டி, பொன்னேரி தொகுதிகளிலுள்ள அத்தனை மீனவ மக்களும் புகார் செய்கிறார்கள். கலெக்டரும் ஒப்புக்கொண்டு, மின்வாரியத்திடமும், சம்பந்தப்பட்ட மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமும் இதுசம்பந்தமாகப் பேசி நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அமைச்சர் அவர்கள் இங்கே கூறுவது, அப்படி ஒரு நிகழ்ச்சி இல்லை என்று சொல்கிறார். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். உண்மை நிகழ்ச்சியை மறைத்து, அதிகாரிகள், அமைச்சருக்குத் தவறான தகவல்கள் சொல்கிறார்கள். நான் கடிதம் எழுதியபோதுகூட, மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் இதிலே கலந்துபேசி...



2004 பிப்ரவரி 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கண்ணன், இது மானியக் கோரிக்கையில் இல்லை; கேள்வியைக் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இதிலே தீவிரமாகத் தலையிட்டு தீர்வுகாண வேண்டுமென்று சபாநாயகரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சபாநாயகரைக் கேட்க முடியாது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாம்பல் கலந்த அந்த நீர், கடந்த காலத்திலே, அது மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அந்த ஆற்றிலும் கடலிலும் விடப்பட்டது உண்மைதான். ஆனால், இப்போது, சாம்பல் வெளியே விடப்படுவது இல்லை. சாம்பலை உபயோகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, உள்ளேயே குளம் வெட்டி, அதிலே தான் அந்த சாம்பல் அனுப்பப்படுகிறது. எனவே, இப்போதுகூட நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன்படி, ஓர் அறிக்கையை நாங்கள், தூத்துக்குடியிலே உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திடமிருந்து பெற இருக்கிறோம். அதைப் பெற்ற பிறகுகூட, என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கலாம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10-50*

**30—**

**அளவிடு பொருத்துதல்**

***35629—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுயநிதித் திட்டத்தில் மின் இணைப்புப் பெற்ற விவசாயிகளின் கிணற்று நீரிறைப்பான் இயந்திரங்களுக்கு அளவீடு பொருத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடை.

25-1-1998 அன்று மைய சட்டத்தின்படி State Electricity Regulatory Commission அமைக்கப்பட்டது. 17-3-1999 அன்று State Electricity Regulatory Commission அமைக்கப்பட்டது. 2001 மார்ச் மாதத்தில் Accelerated Power Development Programme-படி நிதியைப் பெற்றார்கள். அந்த அடிப்படையிலே அரசும், மைய அரசும் ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, அந்த அடிப்படையிலே 31-3-2003-ன்படி எல்லா விவசாய மின் நுகர்வோர்களுக்கும் மீட்டர் பொருத்துவதற்கு 31-3-2003-லிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. இந்த சுயநிதித் திட்டத்தின்கீழே பிரிந்தவர்கள் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வரை கட்டிய பின்னாலேகூட பல ஆண்டுகள் இணைப்புக்காக காத்து இருக்க வேண்டிய சூழ்நிலை இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 5 எச்.பி. மோட்டாருக்கு 1,450 ரூபாய் பணம் கொடுப்பதாக முடிவு எடுத்தபோது, 5 எச்.பி. மோட்டார் ஓர் ஆண்டுக்கு 1,000 யூனிட்தான் consume பண்ண வேண்டும் என்று ஒரு கணக்கு போடப்பட்டு இருந்தது. ஆனால், இன்றைக்கு நிலத்தடி நீர் ஆயிரம் அடிக்குக் கீழே போய்விட்டதனாலே, அந்த மோட்டாரை பயன்படுத்தும்போது, அது 1,000 யூனிட் அல்ல, 5,000 யூனிட் அல்ல, 10,000 ஆயிரம் யூனிட் வரை செலவாகின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அரசு இந்த 1,450 ரூபாய் கொடுப்பதை அதிகப்படுத்தி கொடுப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Self Finance Scheme என்று சொல்லும்போது, — 10 ஆயிரம் ரூபாய் இருக்கின்றது; 25 ஆயிரம் ரூபாய் இருக்கின்றது; 50 ஆயிரம் ரூபாய் இருக்கின்றது; 50 ஆயிரம் ரூபாய் கட்டினால், உடனடியாக மின் இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அந்த 10 ஆயிரம் ரூபாய், 25 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் எங்கெங்கே எல்லாம், எதை Priority basis-ல் கேட்கிறார்களோ, அதைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதிகமான அளவிற்கு விவசாயிகள் அந்த உபயோகிப்புத் தன்மையை உபயோகிக்கின்றார்கள்; அந்தக் கட்டணத் தொகையை உயர்த்த முடியுமா; அரசு வழங்குகின்ற கட்டணத் தொகையை உயர்த்த முடியுமா என்று கேட்கின்றார்கள். இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன்

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில வருடங்களாக கடுமையான வறட்சி இருப்பதால் ஆறுகளிலே தண்ணீர் இல்லை. விவசாயக்குடி பெருமக்களுக்கு 1991-க்கு பிறகு மின் இணைப்புகள் கொடுக்கப்படவில்லை. மின் இணைப்புகள் கொடுக்கும்பட்சத்தில் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து விவசாயத்தைப் பாதுகாக்க முடியும். இதைப் போர்க்கால நடவடிக்கையாக, அரசு உடனடியாக, மின் இணைப்புகள், டெலிபோன்கள் போல விவசாயத்திற்கும் கொடுக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் அதிகமான அளவிற்கு tap செய்யப்படுவதைத் தவிர்க்க வேண்டுமென்கின்ற வகையிலே, சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. எனவே, அந்த நிலத்தடிநீர் பாதிக்காத வகையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அமையுமானால் நிச்சயமாக அதைப் பரிசீலிக்கலாம். மேலும், விண்ணப்பித்தவுடன் மின் இணைப்பு கிடைப்பதற்கு நடவடிக்கை தற்போது மைய சட்டத்தின்படி எடுக்கப்பட்டு வருகின்றது.

[2004 பிப்ரவரி 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31. திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

31—

## கோயில் திருப்பணி

***27186—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், வல்லக்கோட்டை முருகன் திருக்கோயிலுக்கு புதிய இராஜகோபுரம் அமைக்கும் மற்றும் திருக்கோயில் திருக்குளம் செப்பனிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், வல்லக்கோட்டை அருள்மிகு முருகன் திருக்கோயிலில், தற்போது புதிய கொடிமரம் நிறுவவும் மற்றும் முன் மண்டபம் அமைக்கும் திருப்பணிகள் நடைபெற்று வருவதாலும், இத்திருப்பணிகள் முடிய சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும் என்பதாலும், இத்திருப்பணிகள், முடிந்தவுடன், இத்திருக்கோயிலில் சுமார் ரூ.50,00,000 மதிப்பீட்டில் புதிய 5 நிலை இராஜகோபுரம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை, திருமதி டி. யசோதா.



2004 பிப்ரவரி 10]

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லக்கோட்டை முருகன் கோயிலுக்கு திருக்குளம் செப்பனிடும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று கேட்கப்பட்டு இருக்கின்றது. திருக்குளங்கள், கோயில்களுக்குள்ளே இருக்கின்ற எல்லா திருக்குளங்களையும் செப்பனிட்டாலும்கூட, இன்றைக்குத் தண்ணீர் இல்லாத சூழ்நிலை குளங்களிலே இருக்கின்றது. குறிப்பாக மாங்காடு காமாட்சியம்மன் திருக்கோயிலுக்குக்கூட திருப்பணி நடந்து கொண்டிருக்கிறது. குளம் அங்கே வெட்டப்பட்டு வருகின்றது. ஆனால், தண்ணீர் கிடையாது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து தண்ணீர் வரக்கூடிய அந்த வரத்துக் கால்வாய் இன்றைக்கு பிளாட் போட்டு விற்கப்பட்டுவிட்டது. அதேமாதிரி குளம் நிரம்பினால் தண்ணீர் போகக்கூடிய அந்த வழியும்கூட இன்றைக்கு பிளாட்டுகளாக மாறிவிட்ட காரணத்தாலே குளத்திற்கு வரக்கூடிய தண்ணீருக்கு வழிவகை செய்யக்கூடிய முயற்சி அரசிடம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லக்கோட்டை அருள்மிகு முருகன் திருக்கோயில் முன்பாக உள்ள குளம் திருக்கோயிலுக்குச் சொந்தமானது அல்ல. இருப்பினும் வருவாய்த் துறையை தொடர்புகொண்டு திருக்குளத்தை திருக்கோயிலின் அதிகார வரம்பிற்குக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. அதன்பின்பு திருக்குளத்தை நன்கொடையாளர்கள் மூலம் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது தூர் வாரப்பட்டிருக்கிற குளங்களுக்கு தண்ணீர் வருவதற்கு வழி இல்லை என்று சொன்னார்கள். பல்வேறு குளங்களில் எந்தெந்த வழியாக தண்ணீர் கொண்டு செல்லப்படும் என்பதை ஆய்வு செய்து அந்தந்த குளங்களுக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, திரு வெ. ஏழுமலை, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்.

32—

### ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி

***6362—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், மொடையூர் காலனியில், புதிய ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியத்திலுள்ள மொடையூர் காலனி என்பது ineligible habitation. அதாவது பள்ளி தொடங்க தகுதியில்லாத குடியிருப்பு என்பதால் அங்கே தொடக்கப் பள்ளி தொடங்க வாய்ப்பு இல்லை. இருந்தாலும் 100 விழுக்காடு கல்வியறிவு பெற்ற மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டுமென்ற முனைப்போடு செயல்பட்டு வருகிற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இப்படிப்பட்ட பள்ளி தொடங்க தகுதியில்லாத குடியிருப்புப் பகுதிகளிலும் Education Guarantee Scheme, அதாவது கல்வி உறுதியளிப்புத் திட்டம் என்ற அந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் கிட்டத்தட்ட 349 மையங்களைத் தொடங்குவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு உத்தரவிட்டிருக்கிறார்கள். இதுவரை 240 மையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு





உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று அந்த மொடையூர் காலனியில் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் இந்த ஆண்டே இன்னும் ஒரு சில தினங்களில் அந்த மையம் அங்கு அமைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், என் தொகுதி மக்கள் சார்பிலும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்து, மொடையூர் கிராமத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த கிராமப் பொது மக்கள் அனைவரும் ஒரு இலட்சம் ரூபாய் கட்டி உள்ளார்கள். இந்த ஆண்டு அந்தப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறையான முன்மொழிவு அனுப்பப்பட்டு இருக்குமேயானால், அடுத்த கல்வியாண்டில் இது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. ஏ. பூவாராகமூர்த்தி, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்.

33—

### அரசு பல்தொழில் நுட்பப் பயிலகம்

***32863—திரு. ஏ. பூவராகமூர்த்தி:**

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சரப்பாக்கம் தொகுதி, சித்தாமூர் ஒன்றியத்தில், அரசு பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2004 பிப்ரவரி 10

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஏ. பூவராகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கி வரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முதலிடம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அச்சரப்பாக்கம் தொகுதியில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகம்பேர் வாழ்கிறார்கள். அவர்களின் பிள்ளைகளின் நலன் கருதி இந்த ஆண்டு இல்லையென்றாலும்கூட மறுபரிசீலனை செய்து அடுத்த ஆண்டாவது பல்தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றை அமைக்க நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் முன்பு Pre-University Course அதாவது, புகுமுக வகுப்பு இருந்த நேரத்தில் கிராமப்புறத்திலே இருக்கிற மாணவர்கள் கல்லூரிகளுக்குச் சென்று புகுமுக வகுப்பு படிக்க முடியாத நிலையில் பாலிடெக்னிக்கிற்குச் சென்று சேரவேண்டிய நிலைமை இருந்தது. அப்போது அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. ஆனால், இப்போது பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்ட பிறகு, பிளஸ்-2 படித்த மாணவர்கள் நேரடியாக பொறியியல் கல்லூரியில் சேருகிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிலே, இப்போது நிறைய பொறியியல் கல்லூரிகள் வந்துவிட்ட காரணத்தாலே பொறியியல் கல்லூரிகளிலே சேருவதற்கு மாணவர்கள் விரும்புகிறார்கள். பாலிடெக்னிக்குகளில் சேருவதற்கு அதிகமான மாணவர்கள் முன்வரவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய மாவட்டமான காஞ்சிபுரம் மாவட்டத்தில் 14 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அந்தப் பாலிடெக்னிக்குகளில் இந்த ஆண்டு மட்டும் 396 காலியிடங்கள் இருக்கின்றன. எனவே, காலியிடங்கள் இருக்கிறபட்சத்தில், அதே மாவட்டத்தில் மீண்டும் இதுபோன்ற பாலிடெக்னிக்குகள் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 பிப்ரவரி 10]

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### *பட்டியல் 3

1—

### சாலை செப்பனிடல்

**வினா 23709—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலைத் துறை கோட்டத்தைச் சேர்ந்த கி.மீ. 7/0 உடுமலைப்பேட்டை-சின்னார் சாலை முதல் பள்ளப்பாளையம் செல்லும் சாலை கி.மீ. 0/0 கி.மீ. 1/4 வரையுள்ள சாலை மிகப் பழுதடைந்து உள்ளதால் அதைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதும் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளப்பாளையம் சாலை (கி.மீ. 0/0-1/4) வரை உள்ள பழுதடைந்துள்ள சாலை முழுவதையும் மேம்படுத்த—தோராயமாக ரூ. 7.00 இலட்சம் தேவைப்படும். இப்பணி அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்தவொரு திட்டத்திலும் இடம் பெறவில்லை. எனினும். இச்சாலையில் ஏற்படும் சிறுசிறு பழுதுகள் தார் நொடிகள் போடப்பட்டு, வாகனப் போக்குவரத்து தடையின்றி நடைபெற ஏதுவாக பராமரிக்கப்படுகிறது.

2—

### சாலை பழுதுபார்த்தல்

**வினா 23721—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலை கோட்டத்தை சேர்ந்த பெரியபட்டி முதல் நெகமம் வரை ஆமந்தகடவு வழியாக செல்லும் சாலை கி.மீ. 0/0 முதல் கி.மீ. 2/0 வரை மேம்பாடு செய்ய பழுதடைந்த நிலை காரணமாக அரசு உடனடியாக ஆணையிடுமா?

---

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைப் பகுதியான கி.மீ. 0/0 முதல் கி.மீ. 2/0 வரை மேம்படுத்தத் தோராயமாக ரூ. 6.00 இலட்சம் தேவைப்படும். இப்பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை.

3—

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 24389—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள சோலையார் நகர் சோலையார் டேம் பகுதியில் குடியிருக்கும் ஏழை எளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்காதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடன் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள சோலையார் நகர் பகுதியிலுள்ள 135 பயனாளிகளுக்கு ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பயனாளிகளின் பட்டியல் தயாரித்து நில அளவைப் பணிகள் முடிக்கப்பட்டும் தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார்.



2004 பிப்ரவரி 10]

4—

## வீட்டுமனைப் பட்டா

**வினா 24589—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ப. காளியாபுரத்தில் உள்ள எல்.கே.ஜி. நகர் மற்றும் பொன்னுலம்மன் துறையில் உள்ள புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் ஏழை எளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள (பொள்ளாச்சி வட்டம்) ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ப. காளியாபுரம் கிராமம் புல எண் க.ச.979/19 மற்றும் 979/1 சி-யில் உள்ள பொதுப் பணித் துறை வாய்க்கால் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் பகுதியை நத்தம் என வகைப்படுத்தி 2 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கிராமத்தில் உள்ள புல எண் 1098/ஏ1-ல் உள்ள நிலம் வண்டிப்பாதை புறம்போக்கு கிராமக் கணக்குகளில் உள்ளது. இப்புறம்போக்கிலும் 19 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். இப்புறம்போக்கில் எஞ்சியுள்ள பகுதி வண்டி வாகனம் செல்ல போதுமானதாக இல்லை. எனவே, மேற்படி புலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளுக்கு ஆட்சேபணை உள்ளதால், இதில் உள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

5—

## வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல்

**வினா 25289—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட அஜ்ஜனஅள்ளி ஊராட்சியிலுள்ள சின்னப்பநல்லூர் கிராமத்தில் நீண்டகாலமாக வீடுகட்டி வாழ்ந்து வரும் இதுவரை வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படாமலிருப்பவர்களுக்கு உடன் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சியிலுள்ள சின்னப்பநல்லூர் கிராம நத்தம் புல எண் 360/2, 376 ஆகியவற்றின் விஸ்தீரணம் 2.35.0 எக்டேர் நிலப்பரப்பில் வீடு கட்டி வாழ்ந்து வருபவர்களுக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின்போது வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டது.

6—

## பட்டா வழங்குதல்

**வினா 25440—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், வாழவந்தி நாடு ஊராட்சிக்குட்பட்ட செம்மேடு கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் பட்டா இல்லாமல் பல ஆண்டுகளாக மலைவாழ் பழங்குடி சமுதாயத்தை சார்ந்த ஏழை எளிய மக்கள் வசித்து வருவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பட்டா வழங்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம் வாழவந்தி நாடு ஊராட்சிக்குட்பட்ட செம்மேடு கிராமம் ச.எண் 300/2-ல் உள்ள நிலம் தரிசு என கிராம கணக்குகளில் வகைபாடு செய்யப்பட்டுள்ளது. இப்புலங்களில் அரசு குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது. அரசு அலுவலகம் அமைக்கவும், பேருந்து நிலையம் அமைக்கவும் எதிர்கால தேவைக்கு இந்நிலம் தேவைப்படுவதால் இந்நிலத்தில் பல ஆண்டுகளாக குடியிருக்கும் மலைவாழ் பழங்குடி சமுதாயத்தை சார்ந்த ஏழை எளிய மக்களுக்கு பட்டா வழங்க இயலாது.

7—

## வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்துதல்

**வினா 29072—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி, கன்னிக்கோயில் வாய்க்கால் தூரினை எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 34 பொதுப் பணித் துறை நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க சீர்காழி தொகுதி வேட்டங்குடி ஊராட்சி கன்னிக்கோயில் வாய்க்காலும் பிசிடி வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

8—

### லாட்டரிச் சீட்டில் பரிசு

**வினா 21640—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2001-2002 ஆம் ஆண்டு வரை தமிழக அரசு நடத்திய லாட்டரிச் சீட்டில் பரிசு விழுந்தும் பணம் பெறாத தொகை எவ்வளவு?*

*(ஆ) அந்தத் தொகையை அரசு என்ன செய்தது?*

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

*(அ) 1993-94 ஆம் ஆண்டு முதல் 2001-2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் தமிழக அரசு நடத்திய லாட்டரி சீட்டில் பரிசு விழுந்தும் பணம் பெறப்படாத தொகை ரூ.22,12,18,473/- ஆகும். இவ்வினத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டிற்குரிய தொகையான ரூ.1,72,47,967/-ஐயும் சேர்த்து 2002-2003 ஆம் ஆண்டு வரையிலான மொத்தத் தொகை ரூ.23,84,66,440/- ஆகும்.*

(கோரப்படாத பரிசுத் தொகை விவரம் ஆண்டு வாரியாக இணைப்பு-1 இல் அளிக்கப்பட்டுள்ளது.)

(ஆ) கோரப்படும் பரிசுத் தொகைகள் மட்டும் அரசுக் கணக்கில் முறைப்படி கருவூலங்களிலிருந்து பெற்று வழங்கப்படுகின்றன. கோரப்படாத பரிசுத் தொகைகள் அரசின் கணக்கிலேயே இருந்து வரும்.

**இணைப்பு-1**

| வ. எண் | ஆண்டு | பரிசு கோரப்படாத தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | 1993-1994 | 66,17,495 |
| 2. | 1994-1995 | 1,16,42,615 |
| 3. | 1995-1996 | 82,36,530 |
| 4. | 1996-1997 | 3,23,75,045 |
| 5. | 1997-1998 | 2,00,14,270 |
| 6. | 1998-1999 | 3,74,61,864 |
| 7. | 1999-2000 | 4,26,48,240 |
| 8. | 2000-2001 | 3,91,07,350 |
| 9. | 2001-2002 | 2,31,15,064 |
| 10. | 2002-2003 | 1,72,47,967 |
| | மொத்தம் | 23,84,66,440 |



**இணைப்பு-2**

**விளக்கக் குறிப்பு**

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு (ஒழுங்குமுறை) விதிகள் 2002, விதி எண்16 துணை விதி 4-இன்படி, குலுக்கல், முடிந்த 60 நாட்களுக்குள் பரிசு விழுந்த சீட்டின் உரிமையாளர் பரிசு பெறுவதற்கான கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். முகவர்களுக்கு மட்டும் பரிசைப் பெற மேற்கண்ட 60 நாட்களுக்கு மேல், மேலும் 15 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்படுகிறது. அந்த கால அவகாசத்திற்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

துணை விதி (15)-ன்படி மேற்குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் கோரப்படாத பரிசுத் தொகைகள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமாகிவிடும். எனவே, விதிமுறைகளுக்குட்பட்டு கோரப்படும் பரிசுத் தொகைகள் மட்டும் அரசுக் கணக்கிலிருந்து முறைப்படி கருவூலங்களில் இருந்து பெற்று வழங்கப்படுகின்றன. கோரப்படாத தொகைகள் அரசின் கணக்கிலேயே இருந்துவிடுவதால் அந்தத் தொகையை தனியே பயன்படுத்துவது பற்றிய வினா எழவில்லை.

9—

### புதிய மின்மாற்றி அமைத்தல்

**வினா 10420—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சித்துடையார் கிராமத்திற்கு தனியாக புதிய மின்மாற்றி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 100 கே.வி.ஏ. மின்மாற்றி ஒன்று 19-3-2002 அன்று இயக்கி வைக்கப்பட்டுள்ளது.

10—

### புதிய மின்மாற்றி அமைத்தல்

**வினா 20781—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பேரணாம்பட்டு தொகுதி பேரூராட்சி உள்ளிட்ட பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதால் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பேரணாம்பட்டு 66/11 கே.வி. துணை மின் நிலையம் 7-6-2002-ல் 110/11 கே.வி. துணை மின் நிலையமாக உயர்த்தப்பட்ட பிறகு பேரணாம்பட்டு பேரூராட்சிக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் குறைந்த மின்னழுத்தம் நிவர்த்தி அடைந்துள்ளது. பேரணாம்பட்டு பேரூராட்சிக்குட்பட்ட சில பகுதிகளில் நிலவும் குறைந்த மின் அழுத்தத்தைப் போக்குவதற்காக மூன்று 100 கே.வி.ஏ. மின்மாற்றிகள் சித்திக் நகர், ரஹமத் நகர், பெரிய மசூதி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் திருவிக நகர் சாலைப்பேட்டை பகுதியில் நிலவும் குறைந்த மின் அழுத்தத்தைப் போக்க பஸ் நிலையம் அருகில் புதிய 100 கே.வி.ஏ. மின் மாற்றி நிறுவப்பட்டு 2-11-2002-ல் இயக்கி வைக்கப்பட்டது. இம் மின்மாற்றி அமைத்த பிறகு மின்னழுத்தம் 244 வோல்ட்டாக மேம்பாடு அடைந்துள்ளது.

11—

### மின்மாற்றி அமைத்தல்

**வினா 20858—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* பண்ருட்டி தொகுதி, வேகாக்கொல்லை புதூர் கிராமத்தில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதை போக்கிட மின்மாற்றி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோணப்பட்டு மதுரா சத்திரம் கிராமத்தில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க நி.க. 34/1-ல் குளம் புறம்போக்கில் தேர்வு செய்யப்பட்ட 1.17 எக்டேர் நிலத்தை தமிழ்நாடு மின் வாரியத்திற்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நில மதிப்புத் தொகை அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது. அரசுத் துறையினர், மேற்படி நிலத்தை மின் வாரியத்திற்கு உரிமை மாற்றம் செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அரசுத் துறையினரிடமிருந்து பெற்று திருச்சி பொதுக் கட்டுமான வட்டத்தினரிடம் 18-3-2003 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நிதியாண்டில் ரூ.363.04 இலட்சம் செலவில் திருச்சி பொதுக் கட்டுமான வட்டத்தால் பணிகளைத் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது

12—

### மும்முனை மின்சார விநியோகம்

**வினா 27362—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திம்மநாயக்கன்பட்டி, மத்துருட்டு மற்றும் ஈஸ்வரமூர்த்திபாளையம் ஊராட்சி பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு 24 மணி நேரம் மும்முனையில் விநியோகம் செய்யும் திட்டம் அரசு வசமுள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாரிய விதிமுறைகளின்படி, மின்னூட்டிகள், தொழிற்சாலை/நகர மின்னூட்டிகளாக பாகுபடும்பட்சத்தில் அம்மின்னூட்டியில் 24 மணி நேர மும்முனை மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது.

மின்னூட்டிகளில், 300 தொழிற்சாலை மின் இணைப்புகள் அல்லது மொத்த பளுவில் 50 சதவீதம் தொழிற்சாலை பளுத்திறன் இருக்கும்பட்சத்தில் நகர மின்னூட்டிகளாக பாகுபடுத்தப்பட்டு 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்க அம்மின்னூட்டி தகுதி பெறுகிறது. ஆனால் திம்மநாயக்கன்பட்டி, மத்துருட்டு மற்றும் ஈஸ்வரமூர்த்திபாளையம் கிராமப் பகுதிகளுக்கு மின் விநியோகம் செய்யும் மின்னூட்டிகள் மேலே கூறப்பட்ட விதிமுறையை ஈடு செய்யவில்லை. ஆகையால், 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்க முடியவில்லை.

இருப்பினும், 24 மணி நேர மும்முனை மின்சாரம் மேற்கூறப்பட்ட பகுதிகளுக்கு மின் விநியோகம் செய்யும் மின்னூட்டிகள் தொழிற்சாலை/நகர மின்னூட்டிகளாகத் தகுதி பெறும்போது மின்சாரம் வழங்கப்படும்.

13—

## பொதுக் கிணற்றிற்கு மின்சாரம் வழங்குதல்

**வினா 33164—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், தெம்மாவூர் பஞ்சாயத்து, நெய்வேலி கிராமத்திலுள்ள பொதுக் கிணற்றிற்கு மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், தெம்மாவூர் பஞ்சாயத்து, நெய்வேலி கிராமத்திலுள்ள பொதுக் கிணற்றுக்கு மின்சாரம் வழங்கக் கோரும் விண்ணப்பம் எதுவும் இந்த அலுவலகத்தில் இதுவரை பெறப்படவில்லை. அவ்வாறு விண்ணப்பம் எதுவும் பஞ்சாயத்திடமிருந்து பெறப்பட்டால் தற்பொழுது நடைமுறையில் உள்ள வாரிய விதிகளின்படி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு மின்சாரம் வழங்க ஆவன செய்யப்படும்.

14—

## மின் விளக்கு வசதி

**வினா 34086—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார்கோவில் ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சியிலுள்ள பூச்சிக்குடிவயல் கிராமத்தில் உள்ள ஏழை, எளிய மக்கள் வசிக்கும் குடிசை வீடுகளுக்கு மின் விளக்கு வசதி செய்து தந்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார்கோவில் ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சியிலுள்ள பூச்சிக்குடிவயல் கிராமத்தில் உள்ள நுகர்வோரிடமிருந்து பெறப்பட்ட குடிசை விளக்கு விண்ணப்பம் எதுவும் நிலுவையில் இல்லை.

(ஆ) விண்ணப்பம் எதுவும் பெறப்பட்டால், தகுதியான குடிசைகளுக்கு இவ்வாண்டு குறியீட்டுக்கு ஏற்ப உடனடியாக மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

[2004 பிப்ரவரி 10

15—

### மின்கம்பி மாற்றி அமைத்தல்

**வினா 36713—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, கொடிக்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக் கூடத்தின் இடையே செல்லும் மின்சாரக் கம்பி மாற்றி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமயநல்லூர் தொகுதி, கொடிக்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கூடத்தின் இடையே செல்லும் மின்சாரக் கம்பியை மாற்றி அமைக்க, அந்த ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. அவ்வாறு விண்ணப்பம் பெற்றவுடன் வாரிய நடைமுறைகளின்படி செய்யப்படும்.

16—

### மின் விநியோகம்

**வினா 37128—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நத்தம் கிராமத்தில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதைத் தடுக்க இராயர்பாளையத்திலிருந்து நேராக குறுக்கே மின் விநியோகம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள அமைப்பின்படி, மின் விநியோகம் பண்ருட்டி 110 கே.வி./22 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து 22 கி.வோ. திருவாமூர் உயர்மின் அழுத்தப் பாதை வழியாக நத்தம் கிராமத்திற்கு வழங்கப்படுகிறது. இராயர்பாளையம் கிராமமும் மேலே குறிப்பிட்ட திருவாமூர் 22 கே.வி.மின் அழுத்த பாதை வழியாகத்தான் மின்னூட்டம் அளிக்கப்படுகிறது. மேலும் இராயர்பாளையம் கிராமத்திற்கும் நத்தம் கிராமத்திற்கும் நேரிடையாக உள்ள தூரமும் தற்போதுள்ள உயர்மின் அழுத்த மின்பாதையின் நீளமும் கிட்டத்தட்ட சமமாக இருப்பதால் குறுக்கே இராயர்பாளையம் கிராமத்திலிருந்து நேராக நத்தம் கிராமத்திற்குப் புதிய இணைப்பு மின்பாதை அமைப்பதில் பயன் ஏதும் இல்லை. மேலும் நத்தம் கிராமத்திற்கு மின்தடை ஏற்பட்டால் அவை உடனுக்குடன் நீக்கப்படுகிறது. ஆகவே, இராயர்பாளையத்திலிருந்து நேராக குறுக்கே நத்தம் கிராமத்திற்கு இணைப்பு மின்னூட்டி அமைக்க அவசியம் இல்லை.

17—

### சூளா அடுப்பு அமைத்தல்

**வினா 41966—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சூளா அடுப்பு கிராமப்புற மக்களுக்கு அமைப்பதற்காக அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

(ஆ) இதனால் பயனடைந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) இதற்கு அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த எரிசக்தி திட்டத்தின்கீழ் ஏற்காடு வட்டாரத்தில் உள்ள கிராமப்புற மக்களுக்கு சூளா அடுப்பு அமைப்பதற்காக நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை. மாவட்டத்தின் வேறு பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. 2000-2001-ல் நிலுவையில் இருந்த 451 சூளா அடுப்புகள் 2001-2002-ல் விநியோகிக்கப்பட்டன.

(ஆ) இதனால் பயனடைந்தவர்கள் 451 பேர்.

(இ) இதற்கு அரசு வழங்கிய மானியத் தொகை 100 சதவீதம். அதாவது சூளா ஒன்றிற்கு ரூ.140 வீதம் 451 சூளா அமைத்ததற்கு அரசு வழங்கிய மொத்த மானியத் தொகை ரூ.63,140/- ஆகும்.

**18—**

**மின்தடங்கல் சரி செய்தல்**

**வினா 42983—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, சிறுகிராமம் ஊராட்சியில் அடிக்கடி ஏற்படும் மின்தடங்கலைக் களைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பண்ருட்டி தொகுதி, சிறுகிராமம் ஊராட்சிப் பகுதிகளுக்கு அரசூர் 110/22 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து வீரப்பெருமாநல்லூர் மின்னூட்டி மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம் பெரியசெவலை 110/22 கே.வி. துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட பழுதின் காரணமாக பெரியசெவலை துணை மின் நிலையத்திலிருந்து ஒரு பகுதி பளு அரசூர் 110/22 கே.வி. துணை மின் நிலையத்திற்கு மாற்றப்பட்டது. தற்பொழுது பெரியசெவலை துணை மின் நிலையத்தில் பழுது சரிசெய்யப்பட்டு, அரசூர் துணை மின் நிலையத்தில் இருந்த கூடுதல் பளு பெரியசெவலைக்கு மாற்றப்பட்டுவிட்டது. இடைப்பட்ட காலத்தில் அரசூர் துணை மின் நிலையத்தில் கூடுதல் பளுவின் காரணமாக வீரப்பெருமாநல்லூர் மின்னூட்டி மூலம் சிறுகிராமம் ஊராட்சிக்கு சீரான மின் விநியோகம் வழங்க இயலவில்லை. தற்பொழுது அக்குறை மேற்கண்டவாறு முற்றிலும் சரிசெய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.



**19—**

**சீரான மின் விநியோகம்**

**வினா 42984—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி கன்னுத்தோப்பு கிராமத்தில் மின்னழுத்தம் குறைவாக உள்ளதால் சீரான மின் விநியோகம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பண்ருட்டி தொகுதி கன்னுத்தோப்பு கிராமத்திற்கு மின் விநியோகம் வடக்குத்து 110/11 கி.வோ. துணைமின் நிலையத்திலிருந்து கீழூர் 11 கி.வோ.மின் பாதையில் முதலாவதாக உள்ள வடக்குத்து மின் மாற்றி எண் ஏழு (VII) மூலம் மின் விநியோகம் செய்யப்படுகிறது. அம்மின்மாற்றியின் தாழ்வழுத்த மின் பாதையின் கடைக்கோடியில் மின்னழுத்தம் சரியாக உள்ளது. ஆகவே, அக்கிராமத்திற்குத் தற்பொழுது சீரான மின் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் அப்பகுதியின் மின் இணைப்புகளில் குறைவான மின் அழுத்தம் சம்பந்தமாக புகார் பெறப்பட்டால் உடனுக்குடன் சரிசெய்யப்பட்டு வருகிறது.

[2004 பிப்ரவரி 10

**20—**

**மின்விளக்குகள் பொருத்துதல்**

**வினா 42987—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி நகரத்திலுள்ள இலுப்பைத் தோப்பு தெருக்களில் போதிய மின் கம்பங்களை விளக்குடன் பொருத்தி மின் விநியோகம் அளித்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பண்ருட்டி நகரத்திலுள்ள இலுப்பைத் தோப்பு தெருக்களில் தெருவிளக்குகள் ஆறு குழல் விளக்குகளும் (1 x 40 வாட்ஸ்), ஒரு சோடியம் விளக்கும் தற்பொழுது உள்ளன. கூடுதலாக தெருவிளக்குகள் அமைக்கக் கோரி உரிய விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை. உரிய விண்ணப்பம் பெறப்படின் வாரிய விதிகளின்படி உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

**21—**

**சீரான மின் விநியோகம்**

**வினா 42989—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்திலுள்ள 32-வது பகுதியில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதைச் சரி செய்து சீரான மின் விநியோகம் செய்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்திலுள்ள 32-வது பகுதிக்கு பண்ருட்டி 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து காடாம்புலியூர் 22 கி.வோ. மின்பாதை மூலம் சீரான மின் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் எதிர்பாராமல் ஏற்படும் மின் தடைகள் உடனடியாக சீர்செய்யப்படுகின்றது.

**22—**

**மின் இணைப்பு**

**வினா 42993—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரிலுள்ள அவுலியா தர்க்காவிற்குரிய விவசாய நிலங்களை குத்தகைக்கு விடுவதற்கு முன்பே, தர்க்கா நிர்வாகம் பெயரிலேயே மின் இணைப்பினை பெற்றிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரிலுள்ள அவுலியா தர்க்காவிற்குரிய நிலங்களுக்கான மின் இணைப்பு தர்க்கா நிர்வாகம் பெயரிலேயே வாரிய விதிமுறைகளுக்குட்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

**23—**

**மின்கம்பிகள் மாற்றுதல்**

**வினா 43000—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

பண்ருட்டி தொகுதி, ஆயிப்பேட்டை கிராமத்தின் மின் கம்பங்களில் 30 ஆண்டுகளுக்கு முன்பாக போடப்பட்ட மிகவும் பழுதடைந்து சில தெருக்களில் அறுந்து விழுந்துவிடும் மின் இணைப்பு கம்பிகளை மாற்றித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பண்ருட்டி தொகுதி, ஆயிப்பேட்டை கிராமத்தில் ஆய்வு செய்து பழுதடைந்த மின் கம்பிகள் கண்டறியப்பட்டுள்ளன. அவைகளை மாற்றுவதற்கு உரிய மதிப்பீடு தயார் செய்து 30-11-2003-க்குள் பணி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**24—**

## சீரான மின் விநியோகம்

**வினா 43001—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, விசூர் ஊராட்சியில் குறைந்த மின்னழுத்தத்தை மாற்றி சீரான மின் விநியோகம் அளித்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பண்ருட்டி தொகுதி, விசூர் ஊராட்சி பகுதிகளுக்கு பண்ருட்டி 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 22 கி.வோ. காடாம்புலியூர் மின்பாதை வழியாக மின் விநியோகம் செய்யப்படுகிறது. இம்மின்பாதை சுமார் 40 கி.மீ. நீளமுடையது. மிக அதிக நீளம் காரணமாக இம்மின்பாதையில் சிறிதளவு குறைவழுத்தம் நிலவுகிறது. இக்குறைவழுத்தத்தை விசூரில் கூடுதலாக புதிய மின் மாற்றி அமைத்தாலும் நிவர்த்தி செய்ய இயலாது. குறைவழுத்தத்தை நிவர்த்தி செய்ய மருங்கூரில் பத்தாவது ஐந்தாண்டுப் பெருந்திட்டத்தில் ஒரு



2004 பிப்ரவரி 10]

110/22 கி.வோ. துணை மின்நிலையம் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மின் நிலையம் நிறுவப்பட்டு காடாம்புலியூர் 22 கி.வோ. மின்பாதையில் உள்ள மின்பளு பிரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று மின்பாதைகளுக்கு மாற்றி மருங்கூர் துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் வழங்கப்படும். இதன்பிறகு மேற்படி ஊராட்சிப் பகுதியில் நிலவும் குறைந்த மின்னழுத்தம் சரிசெய்யப்பட்டு சீரான மின் விநியோகம் வழங்கப்படும்.

**25—**

## மின் விநியோக பாதிப்பு நீக்குதல்

**வினா 43198—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதி, ஆடூர் கிராமம், ஆடூர் கண்ணாடி பீடர், கொளக்குடி பீடர், சேராக்குப்பம் பீடர் மூன்றும் ஒரே பீடரில் அமைந்துள்ளதால் ஏற்பட்டுள்ள மின் விநியோக பாதிப்பைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குறிஞ்சிப்பாடி தொகுதி கண்ணாடி ஆடூர் குப்பம் பகுதிக்கு குறிஞ்சிப்பாடி 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. ஆர் என். புரம் மின்பாதை வழியாகவும், ஆடூர் அகரம் பகுதிக்கு 11 கி.வோ. குண்டியமல்லூர் மின்பாதை வழியாகவும் மின்விநியோகம் செய்யப்படுகிறது. குறிஞ்சிப்பாடி துணை மின் நிலையத்தில் 11 கி.வோ. ஆடூர் கண்ணாடி மின்பாதை என்றும், கொளக்குடி மின்பாதை என்றும் எதுவும் இல்லை.

கடந்த 16-2-2003 அன்று 11 கி.வோ. குண்டியமல்லூர் மின்பாதையின் மின்சாதனம் (Breaker) பழுதடைந்த காரணத்தால், அக்காலங்களில், அம்மின்பாதையின் மின்பளுவை பிரித்து ஒரு பகுதியை 11 கி.வோ. ஆர். என். புரம் மின்பாதையிலும் மீதி பகுதியை

குறிஞ்சிப்பாடி துணை மின்நிலையம் 11 கி.வோ. சேராக்குப்பம் மின்பாதையிலும் இணைத்து மின்விநியோகம் வழங்கப்பட்டது. இதைத்தவிர வேறு எந்த மின்பாதையும் இணைக்கப்படவில்லை. 25-2-2003 அன்று 11 கி.வோ. குண்டியமல்லூர் மின்பாதையின் மின்சாதனம் பழுது சரிசெய்யப்பட்டு, பழைய நிலைமையில், மூன்று மின்பாதைகளிலும், சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.

**26—**

### சீரான மின் விநியோகம்

**வினா 43221—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுகிராமம் ஊராட்சியில் சீரான மின் விநியோகம் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சிறுகிராமம் ஊராட்சி பகுதிகளுக்கு அரசூர் 110/22 கே.வி. துணை மின்நிலையத்திலிருந்து வீரப்பெருமாநல்லூர் மின்னூட்டி மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம் பெரியசெவலை 110/22 கே.வி. துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட பழுதின் காரணமாக பெரியசெவலை துணை மின் நிலையத்திலிருந்து ஒரு பகுதி பளு அரசூர் 110/22 கே.வி. துணை மின் நிலையத்திற்கு மாற்றப்பட்டது. தற்பொழுது பெரியசெவலை துணை மின் நிலையத்தில் பழுது சரிசெய்யப்பட்டு, அரசூர் துணை மின் நிலையத்தில் இருந்த கூடுதல்பளு பெரியசெவலைக்கு மாற்றப்பட்டுவிட்டது. இடைப்பட்ட காலத்தில் அரசூர் துணை மின் நிலையத்தில் கூடுதல்பளுவின் காரணமாக வீரப்பெருமாநல்லூர் மின்னூட்டி மூலம் சிறுகிராமம் ஊராட்சிக்கு சீரான மின் விநியோகம் வழங்க இயலவில்லை. தற்பொழுது அக்குறை மேற்கண்டவாறு முற்றிலும் சரிசெய்யப்பட்டு சிறுகிராமம் ஊராட்சிப் பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.



**27—**

### சீரான மின் விநியோகம்

**வினா 43222—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அழகப்பசமுத்திரம் கிராமத்தில் மின் விநியோகப் பற்றாக்குறையைக் களைய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தில் இயங்கி வந்த இரண்டு 25 எம்.வி.ஏ. திறன் மின்மாற்றிகளில் ஒன்று 24-1-2003 அன்று பழுதடைந்தது. பழுதடைந்த மின்மாற்றிக்குப் பதிலாக 16 எம்.வி.ஏ. திறன் மின்மாற்றி நிறுவி சுழற்சி முறையில் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. அதனால் பண்ருட்டி தொகுதி அழகப்பசமுத்திரம் கிராமத்தில் மின் விநியோகத்தில் குறை ஏற்பட்டது. அதன் பின்பு 29-8-2003 அன்று பண்ருட்டி நகர 110/22 கி.வோ. புதிய துணை மின் நிலையம் 10 எம்.வி.ஏ. திறன் மின்மாற்றியுடன் செயல்பட துவங்கியதும் மேற்படி கிராமத்திற்கு சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டது. மேலும், பண்ருட்டி 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தில் 1-10-2003 அன்று 16 எம்.வி.ஏ. திறன் மின்மாற்றிக்குப் பதிலாக 25 எம்.வி.ஏ. திறன் மின்மாற்றி அமைத்து 01-10-2003 முதல் செயல்படத் துவங்கியவுடன் மேலும் சீரான மின் விநியோகம் வழங்கப்படுகிறது.

**28—**

### தெப்பக்குளம் செப்பனிடல்

**வினா 32053—திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

இராஜபாளையம் தொகுதியில் தேவதானம் அருகே அருள்மிகு நட்புடை தவிர்ந்தருளிய சுவாமி மற்றும் நலம்பெற்ற நாயகி திருக்கோயிலின் முன்புறமுள்ள இடிந்த தெப்பக் குளத்தை உடனடியாக செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தொகுதி, தேவதானம் அருகே அருள்மிகு நட்புடை தவிர்ந்தருளிய சுவாமி மற்றும் நலம்பெற்ற நாயகி திருக்கோயிலின் முன்புறமுள்ள தெப்பக்குளத்தை வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் தூர்வாரி செப்பனிட விருதுநகர் மாவட்ட ஆட்சியருக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

29—

### சுற்றுச் சுவர் செப்பனிடல்

**வினா 34603—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, குன்றாண்டார்கோயில் ஊராட்சி ஒன்றியம், வெசலூர் வெசலிக்கோயில் சுற்றுச் சுவர்களைச் சீர்செய்து செப்பனிட ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், வெசலூர் அருள்மிகு மார்க்கபுரீஸ்வரர் சமேத சிவகாமசுந்தரி அம்பாள் திருக்கோயில், புதுக்கோட்டை திருக்கோயில்களுடன் இணைந்த திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் இந்திய தொல்பொருள் பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இத்திருக்கோயிலில் பல்வேறு திருப்பணி



2004 பிப்ரவரி 10]

வேலைகள் மற்றும் சுற்றுச்சுவர் மராமத்துப் பணிகள் இந்திய தொல்பொருள் பராமரிப்புத் துறையால் முடிக்கப்பட்டு கடந்த 6-7-2003 அன்று குடமுழுக்கு விழா நடைபெற்றது.

30—

### கோயிலைச் சுற்றுலாத் தலமாக்குதல்

**வினா 37555—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியிலுள்ள இராவுத்தநல்லூர் ஆஞ்சநேயர் கோயிலைச் சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், இராவுத்தநல்லூர் அருள்மிகு ஆஞ்சநேயர் என்கிற ஸ்ரீசஞ்சீவிராயர் திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழ் உள்ள பட்டியலைச் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் தினசரி ஒரு கால பூஜை மட்டுமே நடைபெறுகிறது. இத்திருக்கோயிலுக்கு வாரத்தில் ஒரு நாள் மட்டும் பக்தர்கள் வருகை தருவதாலும், இத்திருக்கோயிலுக்குக் குறைந்த வருவாயே வருவதாலும், இந்த வருவாய் திருக்கோயிலின் நிர்வாகச் செலவுக்கே போதுமானதாக இல்லாத நிலையில், மேற்படி திருக்கோயிலைச் சுற்றுலாத் தலமாக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

31—

### கோயில் கும்பாபிஷேகம்

**வினா 37558—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

(அ) சங்கராபுரம் ஒன்றியம், இராவுத்தநல்லூர் ஆஞ்சநேயர் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், இராவுத்தநல்லூர் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயில், பட்டியலைச் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் திறந்தவெளியில் அமைந்துள்ளதால், ஆகமங்களின்படி குடமுழுக்கு செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, இத்திருக்கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு செய்யும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

32—

### அறங்காவலர்கள் நியமனம்

**வினா 37964—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயிலின் வளர்ச்சிக்காக அறங்காவலர்களை நியமிக்கும்போது, தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகள் கேட்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அறங்காவலர்கள் நியமனம் செய்யக்கூடிய திருக்கோயில்களுக்கு, அறங்காவலர்கள் நியமனம் செய்யும்போது, வளர்ச்சிப் பணி குறித்து தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் ஆலோசனைகளும் அவ்வப்போது கேட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2004 பிப்ரவரி 10]

33—

### கருணை இல்லங்கள்

**வினா 38646—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் கருணை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றனவா?

(ஆ) ஆம் எனில், இதனால் பயனடைந்தோர் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில், சேலம் அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலில் 25 சிறுவர்கள் கொண்ட கருணை இல்லம் 1997 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இதனால் 2003-2004 ஆம் ஆண்டு வரையிலும் 161 சிறுவர்கள் பயனடைந்துள்ளனர்.

34—

### செயல் அலுவலர் பணியிடம்

**வினா 39360—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வருவாய் அடிப்படையில் புதியதாக செயல் அலுவலர் பணியிடம் எத்தனை தோற்றுவிக்கப்பட்டன?

(ஆ) எந்தெந்த கோயில் அதன் அடிப்படையில் நிர்வகிக்கப்படுகிறது?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வருவாய் அடிப்படையில் புதியதாக செயல் அலுவலர் பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை.

35—

## கோயில் திருப்பணி

**வினா 43051—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், ஸ்ரீஇருந்திரப்பட்டி முத்துமாரியம்மன் கோயில் திருப்பணி நடைபெற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், ஸ்ரீஇருந்திரப்பட்டி அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலைத் திருப்பணி செய்ய திருக்கோயிலில் நிதி வசதி இல்லாத காரணத்தால், திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு, உபயதாரர் மூலம் திருப்பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருப்பணி வேலைகளுக்காக ரூ.5,35,000/— மதிப்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இரண்டு உபயதாரர்கள் திருப்பணி வேலைகளை மேற்கொள்ள முன் வந்துள்ளனர். இவர்கள் மூலம் திருப்பணி வேலைகளை முடித்து குடமுழுக்கு செய்விக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

36—

## திருமண மண்டபம், நவீன தங்கும் விடுதி

**வினா 43052—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

(அ) புதுக்கோட்டை தொகுதி, பொம்பூர் அருள்மிகு வீரமாகாளியம்மன் கோயிலுக்கு திருமண மண்டபமும், நவீன தங்கும் விடுதிகளும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான பட்டா நிலங்கள் ஏதும் இல்லை. மேலும் பொதுமக்கள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதாலும், இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்கிச் செல்வதில்லை என்பதாலும், இத்திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் மற்றும் நவீன தங்கும் விடுதிகள் கட்டும் அவசியம் எழவில்லை.

37—

## கோயிலுக்கு மண்டபம் அமைத்தல்

**வினா 43055—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கோமாபுரத்திலுள்ள தூண்டிக் கருப்புக்கோயிலுக்கு முன்பு மண்டபம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், கோமாபுரம் அருள்மிகு தூண்டிக் கருப்பு திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்குட்படாத திருக்கோயில் ஆகும். எனவே, இத்திருக்கோயிலுக்கு முன்பு மண்டபம் கட்ட இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சட்ட விதிகளில் வழிவகை இல்லை.

[2004 பிப்ரவரி 10

38—

## தரம் உயர்த்துதல்

**வினா 10634—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதிக்குட்பட்ட கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சியில் உள்ள மேட்டுப்பட்டி பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மேட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் 17 மாணவர்களே பயில்வதாலும், 2½ கிலோமீட்டர் தூரத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளதாலும் மேட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

39—

## புதிய ஆரம்பப் பள்ளிகள் துவக்குதல்

**வினா 12007—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதியில் புதியதாக ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.



2004 பிப்ரவரி 10]

*(ஆ)* சேரன்மகாதேவி சட்டமன்றத் தொகுதி, சேரன்மகாதேவி சரகத்தில் தற்போது உள்ள தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 24. நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 2. இச்சரகத்தில் 2003-2004 ஆம் ஆண்டில் புதியதாக ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்க கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.

40—

## தேர்வு மையங்கள்

**வினா 21699—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் +2 / எஸ்.எஸ்.எல்.சி. தேர்வினை 100-க்கும் குறைவான மாணவ, மாணவிகள் அரசுத் தேர்வு எழுதும் மையங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் மேல்நிலை/எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வினில் 100-க்கும் குறைவான மாணவர்கள் தேர்வு எழுதிய மையங்களின் விவரம் பின்வருமாறு:—

| பருவம் | மேல்நிலைத் தேர்வு | எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு |
|---|---|---|
| மார்ச் 2002 | இல்லை | சேலம் மாவட்டம், கருமந்துறை அரசு பழங்குடி உயர்நிலைப் பள்ளியில் மட்டும் 63 மாணவர்கள் தேர்வு எழுதியுள்ளனர். |
| அக்டோபர் 2002 | இல்லை | இல்லை |
| மார்ச் 2003 | இல்லை | இல்லை |

41—

## வகுப்பறைகள் கட்டுதல்

**வினா 27445—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி அரியநாயகிபுரம் உயர்நிலைப் பள்ளிக்குப் புதியதாக இரண்டு வகுப்பறைகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தின்கீழ் மேற்படி உயர்நிலைப் பள்ளிக்குப் புதியதாக இரண்டு வகுப்பறைகள் ரூ.3,00,000/— மதிப்பீட்டில் கட்டித்தர அனுமதிக்கப்பட்டுள்ளது.

42—

**பள்ளி தரம் உயர்த்துதல்**

**வினா 34619—திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி நகராட்சி, மரப்பேட்டை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

43—

**பள்ளி தரம் உயர்த்துதல்**

**வினா 35021—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, எருக்கூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

44—

**மொழிபெயர்ப்பு நூல்கள்**

**வினா 41991—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேறு மொழிகளிலுள்ள சிறந்த நாவல்களை மொழிபெயர்த்து தமிழில் வெளியிட விரும்பும் ஆசிரியர்களுக்கு அரசு உதவிபுரியுமா?

(ஆ) நாவலாசிரியர்களைக் கொண்டு வல்லுநர் குழு அமைத்து தேர்ந்தெடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தமிழ் வளர்ச்சிக்கான நூல்களை வெளியிட நிதியுதவி திட்டத்தின்படி சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களுக்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

(ஆ) தமிழ் வளர்ச்சிக்கான நூல்களை வெளியிட நிதியுதவி திட்டத்தின்கீழ், தமிழ் அறிஞர் பெருமக்களைக் கொண்ட குழு, 25-11-2002 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசாணை (டி) எண் 206-ல் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இக்குழுவின் பதவிக் காலம் 3 ஆண்டுகள் ஆகும். இக்குழு முதல்நிலைக் குழுவாகும். நாவல் உள்பட பல பொருள்கள் தொடர்பிலும் நூல்களுக்கு

[2004 பிப்ரவரி 10

நிதியுதவி அளிக்கப்படுவதால் நாவலாசிரியர்களைக் கொண்டு மட்டும் குழு அமைக்க வாய்ப்பில்லை.

**45—**

**தனியார் மருத்துவமனைகள் விவரம்**

**வினா 29831—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் உள்ள தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை விவரம் என்ன?

(ஆ) மருத்துவக் கழிவுகளை சுகாதார முறையில் அகற்ற நகராட்சியின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை நகரில் உள்ள தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை 54.

(ஆ) மேற்படி மருத்துவமனைகளில் தனியாக சேகரிக்கப்பட்ட மருத்துவக் கழிவுகள் நகராட்சிக் கலவை உரக் கிடங்கில் தனியாக ஒரு இடத்தில் புதைக்கப்பட்டு முற்றிலும் அழிக்கப்படுகிறது.

**46—**

**ஆம்புலன்ஸ் வசதி**

**வினா 31858—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வசதி செய்து தரும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?



2004 பிப்ரவரி 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதிக்குட்பட்ட சுப்பிரமணியபுரம், அரசு மருத்துவமனை தற்பொழுது 28 படுக்கைகளுடன் இயங்கிவருகிறது. தற்பொழுது அரசு மருத்துவமனைகளில் 30 மற்றும் அதற்கு மேற்பட்ட படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைகளுக்கு மட்டுமே ஆம்புலன்ஸ் (தேவையின் அடிப்படையில்) வசதி செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, சுப்பிரமணியபுரம் அரசு மருத்துவமனை 30 மற்றும் அதற்கு மேற்பட்ட படுக்கை வசதிகளுடன் தரம் உயர்த்தப்படும்பொழுது ஆம்புலன்ஸ் வாகனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**47—**

**மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர் அமைத்தல்**

**வினா 38714—திரு. ந. கணபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியிலுள்ள தைலாபுரம் அரசு மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர் (மதில்) அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, தைலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்துக்குச் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 பிப்ரவரி 10

48—

**மருத்துவமனைக்குப் புதிய கட்டடம்**

**வினா 39432—திரு. ஜெமினி கே. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்தி, புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஆரணி அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்தி புதிய கட்டடம் கட்டித் தர, திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை.

49—

**அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

**வினா 39441—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, முசிறி பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை.



2004 பிப்ரவரி 10]

50—

**காளான் சாகுபடி பயிற்சி**

**வினா 15259—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் காளான் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் காளான் சாகுபடி குறித்த பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தோட்டக்கலைத் துறை மூலம் அனைத்து மாவட்டங்களிலும் காளான் சாகுபடி குறித்த பயிற்சி பயிரிடுவோர்களுக்கு அளிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு காளான் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2001-2002-ம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு ரூ.0.275 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 55 விவசாயிகளுக்குக் காளான் பயிற்சி கொடுக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் சேரன்மகாதேவி தொகுதிக்குட்பட்ட பத்தமடை பேரூராட்சிப் பகுதி விவசாயிகள் விருப்பம் தெரிவித்தால், முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் அப்பகுதியிலும் செயல்படுத்தப்படும்.

51—

**காளான் வளர்ப்புக்கு மானியக் கடன்**

**வினா 21213—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காளான் வளர்ப்புத் திட்டத்திற்கு விவசாயிகளுக்கு மானிய கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) காளான் வளர்ப்புத் திட்டத்திற்கு விவசாயிகளுக்கு மானியம் வழங்க மாநில அரசின் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

52—

**சத்துணவு மையக் கட்டடம்**

**வினா 36698—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் ஒன்றியம், தொட்டிக்குப்பம் கிராமத்தில் சத்துணவு மையக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் ஒன்றியம், தொட்டிக்குப்பம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி மற்றும் அங்கன்வாடி சத்துணவு மையக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதியதாக கட்டடம் கட்டவேண்டிய கேள்வி எழவில்லை.

53—

**அங்கன்வாடிக்குப் புதிய கட்டடம்**

**வினா 45202—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

அறந்தாங்கி ஒன்றியம், மாத்தூர் ஊராட்சி, பாலகிருஷ்ணாபுரம், கீழ்குடி, அம்மன் ஜாக்கி ஊராட்சி, கீழ்குடி, ஆவுடையார்கோவில் மேல இரண்டாம் வீதி மற்றும் அதவத்தூர் ஆகிய அங்கன்வாடிகளுக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தற்போது புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுவதற்கு கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

54—

**பேருந்து வசதி**

**வினா 11165—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூர் வழியாக இ.கே. புதூருக்குப் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தருமபுரியிலிருந்து நல்லம்பள்ளி, இ.கே. புதூர் வழியாக இண்டூர் வரை தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் டி.02ஏ மூலம் நாளொன்றுக்கு 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தில் பயணிகளின் அடர்வு 64% ஆகும். மேலும் தருமபுரியிலிருந்து இண்டூருக்கு ஏராளமான நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால், கோரப்பட்ட தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

[2004 பிப்ரவரி 10

55—

**கூடுதல் பேருந்து வசதி**

**வினா 11184—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பள்ளிப்பட்டி ஊராட்சி, கரியப்பனஅள்ளிக்குக் கூடுதலாகப் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் தடம் எண் டி 47 மற்றும் டி 44 மூலம் நாளொன்றுக்கு 13 நடைகள் தருமபுரியில் இருந்து பாப்பாரப்பட்டி (வழி) செக்கோடி, பள்ளிப்பட்டி தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. கரியப்பனஅள்ளி (கருப்பணம்பட்டி) செக்கோடி-பள்ளிப்பட்டி சாலையில் கருப்பணம்பட்டி பிரிவிலிருந்து 1.0 கி.மீ. தொலைவில் நடைபயண தூரத்தில் உள்ளது. மற்றும் மக்கள் தொகை சுமார் 100 மட்டுமே உள்ளது. எனவே மேற்கூறிய கிராமம், பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுகிறது. மேலும், பாப்பாரப்பட்டியிலிருந்து கரியப்பனஅள்ளி வழியாக தனியாக மினி பேருந்து மூலம் நாளொன்றுக்கு 16 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, கோரப்பட்டுள்ள தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

56—

**கூடுதல் பேருந்துகள்**

**வினா 14273—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலிருந்து சுண்ணாம்புகுட்டை வழியாக ஈரோடு செல்லும் வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகளை இவ்வாண்டில் இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடியிலிருந்து ஈரோட்டுக்கு சுண்ணாம்புகுட்டை வழியாக தற்போது 3 பேருந்துகள் மூலம் தினசரி 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வழித்தடத்தில் பகுதிவாரியாக கீழ்க்கண்டவாறு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன:—

எடப்பாடி—சங்ககிரி 22 பேருந்துகள் 130 நடைகள்

சங்ககிரி—ஈரோடு 118 பேருந்துகள் 562 நடைகள்

எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே பொதுமக்களின் போக்குவரத்துத் தேவையினை நிறைவுசெய்ய போதுமானதாக இருப்பதால் இவ்வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகளை இவ்வாண்டில் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

57—

**நகரப் பேருந்து விடுதல்**

**வினா 14315—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி பேருந்து நிலையத்திலிருந்து வெடிக்காரன்பாளையம், சித்தூர், ஆடையூர் வழியாக ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, மேச்சேரி செல்ல நகரப் பேருந்து விட திட்டம் உள்ளதா?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி பேருந்து நிலையத்திலிருந்து வெடிக்காரன்பாளையம், சித்தூர், ஆடையூர் வழியாக ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, மேச்சேரி வழித்தடத்தின் நீளம் 64.0 கி.மீ. ஆகும். இது நகரப் பேருந்து இயக்கத்துக்கு மோட்டார் வாகனச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 30 கி.மீ.க்கு மேல் அமைவதால் இவ்வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**58—**

**சிறு வணிகக் கடன்**

**வினா 10539—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000 ஆம் ஆண்டில் நகர்புற மகளிர் வளம் பெற மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தின்படி, சேலம் மாவட்டத்தில் எத்தனை மகளிருக்குச் சிறு வணிகக் கடன் வழங்கப்பட்டது?

(ஆ) கடன் வழங்கிய தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 2000 ஆம் ஆண்டில் நகர்ப்புற மகளிர் வளம் பெற மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தின்படி சேலம் மாவட்டத்தில் 9,743 மகளிருக்குச் சிறு வணிகக் கடன் வழங்கப்பட்டது.

(ஆ) வழங்கிய கடன் தொகை ரூ.177.86 இலட்சமாகும்.

**59—**

**சமையல் எரிவாயு இணைப்புகள்**

**வினா 19353—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

(அ) விளாத்திகுளம் தொகுதியில் மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் 3,000-க்கும் மேற்பட்ட 'கேஸ்' இணைப்புகள் வழங்கப்பட்டதற்கு பொது மக்களிடம் வங்கி பணம் கேட்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வங்கி பணம் கேட்காமலிருக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. விளாத்திகுளம் தொகுதியில் 'கேஸ்' இணைப்பு வழங்கப்பட்டதற்கு பொது மக்களிடமிருந்து தொகை ஏதும் வசூலிக்கப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

**60—**

**சிறு வணிகக் கடன் திட்டம்**

**வினா 23380—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர் பயனடைந்துள்ளார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம் மார்ச் 1999 முதல் செப்டம்பர் 2001 வரை செயல்படுத்தப்பட்டு வந்தது. பின்னர் இத்திட்டத்தில் சில மாறுதல்கள் செய்யப்பட்டு சீரமைக்கப்பட்ட மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம் என்ற பெயரில் அக்டோபர் 2001 முதல் செயல்பட்டு வருகிறது.

[2004 பிப்ரவரி 10

(ஆ) இத்திட்டத்தின் மூலம் 12,305 பயனாளிகள் பயனடைந்துள்ளார்கள். இவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.247.95 இலட்சமாகும்.

61—

### வீடு கட்ட கடன்

**வினா 24252—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், செங்குளம் பகுதி மக்களுக்கு அரசு கூட்டுறவு வங்கி மூலம் வீடு கட்ட கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருச்சுழி தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியானது, அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம் செங்குளம் பகுதி மக்களுக்கு அதன் விவகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கடன் பெற தகுதியுள்ளவர்களுக்கு வீடு கட்ட கடனாக ரூ.5 இலட்சமும் மற்றும் வீட்டினைப் பழுதுபார்க்க ரூ.1 இலட்சமும் வழங்கப்பட்டு வருகின்றது.

62—

### விவசாயம் சாராக் கடன்

**வினா 25701—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயம் சாராக் கடன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் வங்கிகள் வழியாக பெற்றவர் எண்ணிக்கையையும், வழங்கப்பட்ட கடன்கள் பற்றிய விவரத்தையும் அரசு அறிவிக்குமா?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயம் சாராக் கடன் 1-4-2002 முதல் 31-3-2003 வரை 3373 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு வங்கிகள் அல்லாத வணிக வங்கிகள் வழியாக 1-4-2002 முதல் 31-3-2003 வரை 18,673 நபர்களுக்கு ரூ.18,901.91 இலட்சம் விவசாயம் சாராக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

63—

### வங்கிகளில் பாதுகாப்பு அறையுடன் கூடிய கதவுகள் அமைத்தல்

**வினா 34599—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் எத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்பு அறையுடன் கூடிய பாதுகாப்பு கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அமைக்கப்படாத வங்கிகளில் உடனடியாக அமைக்க அரசு ஆணையிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படும் 164 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 133 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்பு அறையுடன்கூடிய பாதுகாப்பு கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) தற்போது இத்திட்டம் ஏதும் இல்லை.

[2004 பிப்ரவரி 10

64—

### சமையல் எரிவாயு கடன்

**வினா 35397—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மத்தியக் கூட்டுறவு வங்கி சமையல் எரிவாயு கடன் கொடுக்கப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது?

(இ) மேலும் எரிவாயு கடன் பெற்றவர்களில் ஒரு தவணைகூட செலுத்தாதவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 33,976 நபர்களுக்கு சமையல் எரிவாயு கடன் சேலம் — மத்தியக் கூட்டுறவு வங்கியில் வழங்கப்பட்டுள்ளது.

(இ) இவர்களில் 1,640 நபர்கள் எரிவாயு கடன் பெற்றதில் ஒரு தவணை கூட செலுத்தாதவர்கள் ஆவர்.

65—

### விற்பனைவரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா 37818—திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசியில் விற்பனை வரி அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால் அவற்றிற்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சிவகாசியில் விற்பனை வரி அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

66—

### ஊனமுற்ற மகளிருக்கு வட்டியில்லாக் கடனுதவி

**வினா 38385—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் பெறும் உடல் ஊனமுற்ற மகளிருக்கு வட்டி இல்லாக் கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 2002-2003 ஆம் ஆண்டில் எவ்வளவு நபர்களுக்கு வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) எழவில்லை.

67—

### மருத்துவமனைக்கு நன்கொடை

**வினா 41130—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் பொது நல நிதியிலிருந்து ஸ்டான்லி மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்ட எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் புதிய கட்டடம் கட்ட சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் பொது நல நிதியிலிருந்து நன்கொடையாக வழங்க ரூ.10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

**68—**

**துணை வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம்**

**வினா 43777—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் துணை வணிக வரி அலுவலர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி நகரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற துணை வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுகின்ற கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**69—**

**கூட்டுறவு வங்கிக் கிளை துவக்குதல்**

**வினா 44556—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவிலில் கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளை ஒன்றை புதிதாகத் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றை வைத்தீஸ்வரன்கோவிலில் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**70—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா 625—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் முழுமைக்கும் மற்றும் எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம் மற்றும் மகுடஞ்சாவடி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் பகுதி வாரியாக கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் தரப்பட்ட தொகுப்பு வீடுகள் எத்தனை?

(ஆ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் முழுவதும் 2000-2001 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின்கீழ் 1133 குடியிருப்புகளும், பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்ட ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 150 குடியிருப்புகளும் ஆக மொத்தம் 1283 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. எடப்பாடி தொகுதிக்குட்பட்ட எடப்பாடி ஒன்றியத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 70 குடியிருப்புகளும், கொங்கணாபுரம் ஒன்றியத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 35 குடியிருப்புகளும், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 48

குடியிருப்புகளும், பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்ட ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 10 குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன.

71—

**குடிநீர் வசதி**

**வினா 1198—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, தொட்டப்பநாயக்கனூர் பஞ்சாயத்து, வாசி நகரில் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தொட்டப்பநாயக்கனூர் ஊராட்சி, வாசி நகர் குடியிருப்புக்கு 2001-2002-ம் நிதியாண்டில் புதிய குடிநீர்த் திட்டம் ரூ.5.74 இலட்சங்கள் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

72—

**திறந்த வெளிக் கிணறு**

**வினா 8387—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், மேல்சித்தாமூர் காலனி பகுதியில் திறந்த வெளி கிணறு வெட்டி குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எ சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், மேல் சித்தாமூர் ஊராட்சியைச் சார்ந்த மேல்சித்தாமூர் காலனிக்கு தற்சமயம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்



மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் குடிநீர் வசதிக்கு, ஊரகக் குடிநீர்த் திட்ட கோட்பாடுகளுக்கு உட்பட்டு, தேவை, தகுதி மற்றும் நிதி ஆதார அடிப்படையில் வரும் நிதியாண்டுகளில் இக்குடியிருப்புக்குப் புதிய மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்ற பரிசீலிக்கப்படும்.

73—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 12055—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சி, முத்தம்மாள்புரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சி, முத்தம்மாள்புரம் கிராமம் பயன்பெறும் வகையில் ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பணிகள் 9/2003-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

74—

**மேல்நிலைத் தொட்டி**

**வினா 12581—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கண்டவிளை கிராமத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், வேப்பிலாங்குளம் ஊராட்சி, கண்டவிளை கிராமத்தின் மக்கள் தொகை 540 ஆகும். இங்கு ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று உள்ளது. மேற்படி தொட்டிக்கு தெற்கு வள்ளியூர் ஊராட்சி, கானாவூர் கிராமத்திலுள்ள குடிநீர் ஆதாரம் மூலம் தண்ணீர் வருகிறது. இதுபோக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஒரு சின்டெக்ஸ் (Sintex) தொட்டி மற்றும் 3 அடி பம்புகளும் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது. தற்போது போதுமான நிலையில் நீர் ஆதாரம் உள்ளது. எனவே அக்கிராமத்தில் தனியாக மேல்நிலைத் தொட்டி கட்ட அவசியம் இல்லை.

**75—**

### ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா 12643—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, காட்டுக்கூடலூர் வடக்கு தெருவிற்கு குடிநீர் வசதி பெற ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தர அரசு ஆவன செய்ய இயலுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்கீழ் மக்களின் பங்கேற்புடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த காட்டுக்கூடலூர் ஊராட்சியில் கிராமக் குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மூலமாக மக்கள் பங்களிப்புத் தொகை பெறப்பட்டு காட்டுக்கூடலூர் வடக்குப் பகுதிக்கு குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2004 பிப்ரவரி 10]

**76—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 22045—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பழனிகவுண்டன் கொட்டாயில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பழனிகவுண்டன் கொட்டாய் குடியிருப்பிற்கு ரூ.4.76 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் 12/02-ல் முடிக்கப்பட்டு ஊராட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

### மேல்நிலைத் தொட்டி

**வினா 22424—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சி, ஏரிக்காடு, நாதன்காடு, பாப்பாங்காடு, மைலேரிப்பட்டி காட்டுவளவு பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், மைலேரிப்பட்டி காளியம்மன் கோயில் முன்பாக ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி அரசு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்குமா?*

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட மைலேரிப்பட்டி காட்டுவளவு, ஏரிக்காடு, நாதன்காடு மற்றும் பாப்பாங்காடு ஆகிய பகுதிகளுக்கு, கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, திட்டங்கள் பயனில் உள்ளன. எனவே புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது பரிசீலனையில் இல்லை.

**78—**

**சிறு மின்விசைத் திட்டம்**

**வினா 25210—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கே. அக்ரகாரம் கிராமத்தில் குடிநீர் கஷ்டத்தைப் போக்க மினி தரை மேல் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கே. அக்ரகாரம் குடியிருப்பில் 5 கைப்பம்புகளும், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைப் பம்பு திட்டமும் தற்போது பயனில் இருந்து வருகிறது. நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 25 லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்புக்கு சிறு மின்விசைத் திட்டம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.



2004 பிப்ரவரி 10]

**79—**

**சிறு மின்விசைத் திட்டம்**

**வினா 25212—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, பொச்சாரம்பட்டியில் மினி தரை மேல் நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, பொச்சாரம்பட்டி குடியிருப்பில் தற்போது பயனில் உள்ள நான்கு கைப்பம்புகள் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைப் பம்பு திட்டம் மூலம் தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, சிறு மின்விசைத் திட்டம் நிறைவேற்றுதல் பரிசீலனையில் இல்லை.

**80—**

**குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 26043—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, எருமைப்பட்டி கொட்டாய் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, எருமைப்பட்டி கொட்டாய் குடியிருப்பின்

[2004 பிப்ரவரி 10

மக்கட்தொகை 45. இக்குடியிருப்பிற்கு உள்ளாட்சி அமைப்பின் மூலம் கையிறைப்பான் அமைத்து குடிநீர் வழங்க பரிசீலிக்கப்படும். எனவே, இங்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க இயலாது.

**81—**

### மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி.

**வினா 26044—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, கொப்பரை, இலட்சுமணன் கொட்டாய்க்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, கொப்பரை, இலட்சுமணன் கொட்டாய் குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 80 ஆகும். இக்குடியிருப்பில் இரண்டு கையிறைப்பான்கள் செயலில் உள்ளன. மேலும் இந்நிதியாண்டில் (2002-03) தற்போது சிறு மின் விசைப் பம்பு திட்டம் நிறைவேற்றப்பட்டு செயலில் உள்ளது. இக்குடியிருப்பிற்குத் தற்போதுள்ள திட்டமே போதுமானதாகும். எனவே, மேற்கண்ட பகுதிகளில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க இயலாது.

**82—**

### குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 26046—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, சாமிசெட்டிபட்டி வடக்கு பகுதிக்கு குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதால் இங்கு கூடுதலாக குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, சாமிசெட்டிபட்டி வடக்கு பகுதி என்பது சாமிசெட்டிபட்டி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பில் 100 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1995-ம் ஆண்டு அமைக்கப்பட்டு அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஊரக குடிநீர்த் திட்டக் கோட்பாடுகளுக்கு உட்பட்ட தேவை, தகுதி மற்றும் நிதி ஆதார அடிப்படையில், இக்குடியிருப்பிற்கு வரும் நிதியாண்டுகளில் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்ற பரிசீலிக்கப்படும்.

**83—**

### சிறு மின்விசைப்பம்பு திட்டம்

**வினா 26048—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி ஒண்டிக்கோட்டையில் குடிநீர் வசதிக்காக தரைமேல் நீர்தேக்கத் தொட்டி நடப்பாண்டில் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, ஒண்டிக்கோட்டை குடியிருப்பில் நடப்பு நிதியாண்டில் ரூபாய் 2.07 இலட்சம் மதிப்பீட்டில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய சிறு மின்விசைப் பம்பு திட்டம் 31-10-2002-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

[2004 பிப்ரவரி 10

84—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 26229—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர் மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், கரட்டுபாளையத்தில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஒன்றியம், குன்னமலை ஊராட்சியிலுள்ள கரட்டுபாளையம் குடியிருப்பின் மக்கட்தொகை 100 ஆகும். ஊரகக் குடிநீர்த் திட்ட கோட்பாட்டின்படி மக்கட் தொகை 150 மற்றும் அதற்கும் மேல் உள்ள குடியிருப்புகளுக்கு மட்டுமே தனியாக மேல்நிலைத் தொட்டிகள் அமைக்கப்படும். எனவே இங்கு குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்க இயலாது.

85—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா 26567—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பாலபட்டி ஊராட்சி, கம்பாலபட்டி மற்றும் அரசூரில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், ஆனைமலை ஒன்றியம், கம்பாலப்பட்டி ஊராட்சி, கம்பாலப்பட்டி குடியிருப்புக்கு இக்குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மூலம் கம்பாலபட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமும் மற்றும் இரண்டு கையிறைப்பான் மூலமும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 35 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

இதே கம்பாலப்பட்டி ஊராட்சியை சார்ந்த அரசூர் குடியிருப்புக்கும், இக்குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை தொட்டி மூலம், கம்பாலப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமும் மற்றும் இரண்டு கையிறைப்பான் மூலமும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் இராஜிவ் காந்தி குடிநீர்த் திட்டத்தின்கீழ் பணிகள் நடைபெற்று வருவதால் இந்த இரு குடியிருப்புகளுக்கும் மேலும் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய பொதுமக்கள் பங்களிப்பு தொகை ரூ.10/- செலுத்தும் பட்சத்தில் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

86—

## நீர்ப்பிரி முகடு (வாட்டர் ஷெட்) திட்டம்

**வினா 26982—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் 2001-2002-ல் நீர்ப்பிரி முகடு (வாட்டர் ஷெட்) திட்டத்தின் மூலம் நடைபெற்ற பணிகளின் விவரம் என்ன?

(ஆ) பயன்பெற்ற ஊராட்சிகளின் விவரம் என்ன?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதியில் 2001-2002 ஆம் ஆண்டில் நீர்ப்பிரி முகடு (வாட்டர் ஷெட்) திட்டம், குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுத்து செயல்படுத்தப்படவில்லை.

**87—**

**குடிநீர் வசதி**

**வினா 27022—திரு. பி.எச் பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி புது கிராமம் மக்களுக்குப் போதிய குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், பாப்பாக்குடி ஊராட்சி புது கிராமம் குடியிருப்பிற்கு கிராம குடிநீர்த் திட்ட விதிகளின்படி தற்போது செயலில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைப்புடன் கூடிய திட்டம் போதுமானதாகும்.

**88—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 28480—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

ஆலங்குளம் யூனியனிலுள்ள வெங்கடேஸ்வரபுரத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம் யூனியனிலுள்ள வெங்கடேஸ்வரபுரத்தில் ஏற்கெனவே அமைந்துள்ள 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியிலும், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியிலும் தாமிரபரணி தண்ணீர் ஏற்றப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 2001 ஆம் ஆண்டு புதியதாக கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்க தொட்டிக்கு ஆழ்துளைக் கிணற்றிலிருந்து தண்ணீர் ஏற்றப்பட்டு வருகிறது. இந்த நீர்த்தேக்கத் தொட்டியில் தாமிரபரணி தண்ணீர் ஏற்றுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**89—**

**புதிய குழாய் பதித்து குடிநீர் வழங்குதல்**

**வினா 29569—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குல மாணிக்கம் ஊராட்சியில் ஆண்டிப்பட்டி மேல்நிலைத் தொட்டியில் இருந்து நவாப்மேடு வரை புதிய குழாய் பதித்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம் கண்டர்குல மாணிக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட நவாப்மேடு பகுதியில் 2000-2001-ம் ஆண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை

நீர்த்தேக்கத தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய்களுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு பராமரிப்பிற்கு ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**90—**

## ஆடு ஆராய்ச்சிக்கு நிதி

**வினா 34634—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, பொட்டனேரி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்தில், மேச்சேரி செம்மறியாடுகளின் பண்புகள், மதிப்பீடு, அளவீடு மற்றும் பாதுகாத்தல் ஆராய்ச்சிக்கு அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பொட்டனேரி மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்தில் மேச்சேரி செம்மறியாடுகளின் பண்புகள், மதிப்பீடு, அளவீடு மற்றும் பாதுகாத்தல் ஆராய்ச்சிக்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத் திட்டத்தின் வாயிலாக ரூ.10,62,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஜனவரி 2001 முதல் மார்ச் 2003 வரை ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

மேலும் பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ் மாநில அரசின் நிதியுதவியுடன் மேச்சேரி ஆடுகளின் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ள தொடர் செலவினத்தின்கீழ் ரூ.11,00,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**91—**

## கால்நடைப் பண்ணை

**வினா 34648—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) 2001-2002 ஆம் ஆண்டு ஓசூர் கால்நடைப் பண்ணையில் கழிவு செய்யப்பட்ட குதிரைகள், மாடுகள், பன்றிகள் எத்தனை?

(ஆ) இதனால் அரசுக்கு வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டு ஓசூர் கால்நடைப் பண்ணையில் கழிவு செய்யப்பட்ட மாடுகள்-156, குதிரைகள்-9, ஆடுகள்-197, பன்றிகள் இல்லை.

(ஆ) கழிவு செய்யப்பட்ட கால்நடைகள் மூலம் அரசுக்கு கிடைத்த வருவாய் விவரம்:—

மாடுகள் - ரூ. 3,98,400/-

குதிரைகள் - ரூ. 74,800/-

ஆடுகள் - ரூ. 71,100/-

பன்றிகள் - இல்லை.

**92—**

## கால்நடை கிளை துணை மருந்தகம் அமைத்தல்

**வினா 37409—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, கோவிலாங்குளம் பஞ்சாயத்து நத்தம்பட்டிக்கு கால்நடைக்கான கிளை துணை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :**

புதிய கால்நடை கிளை நிலையங்களை துவக்கிட மாநில திட்டக்குழு தடை விதித்துள்ளதாலும், புதிய பதவிகள் தோற்றுவிக்க அரசு தடை விதித்துள்ளதாலும், உசிலம்பட்டி தொகுதி, கோவிலாங்குளம் ஊராட்சி, நத்தம்பட்டியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

93—

**முன்னோடித் திட்டம்**

**வினா 41841–திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ணை வீட்டு பயிர் வளர்ப்பு முறையுடன் ஆடு வளர்ப்புத் திட்டத்தையும் இணைத்து முன்னோடித் திட்டம் ஒன்றை நடப்பாண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் துவக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :**

பண்ணை வீட்டு பயிர் வளர்ப்பு முறையுடன் ஆடு வளர்ப்பு திட்டத்தையும் இணைத்து, நடப்பாண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் திட்டம் ஏதும் துவக்கப்படவில்லை. எனினும், ஆளுநர் உரையில் தெரிவித்ததற்கிணங்க, பண்ணை வீட்டு பயிர் வளர்ப்பு முறையுடன் ஆடு வளர்ப்புத் திட்டத்தை ஒரு முன்னோடி திட்டமாக, வறட்சி மாவட்டமாக கருதப்படும் தருமபுரி மாவட்டத்தில் நடப்பாண்டில் துவங்குவதற்கான கருத்துரு ஒன்று அரசின் தீவிர ஆய்வில் உள்ளது. இந்த முன்னோடித் திட்டம் தருமபுரி மாவட்டத்தில்



சிறந்த முறையில் செயல்படுத்தப்படும்பட்சத்தில், அதை மற்ற மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த பரிசீலிக்கப்படும்.

94—

**கால்நடை கிளை மருத்துவமனைகள் அமைத்தல்**

**வினா 41923—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், ஊராட்சியில் கால்நடை கிளை மருத்துவமனைகள் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :**

புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட மாநில திட்டக் குழு தடை ஆணை விதித்துள்ளதாலும், புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க அரசு தடை விதித்துள்ளதாலும், செங்கற்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

95—

**கால்நடை துணை மருத்துவமனை அமைத்தல்**

**வினா 47127–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புளியந்துறை, புதுப்பட்டினம், ஆரம்பாக்கம், வடரெங்கம் ஆகிய ஊராட்சிகளில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2004 பிப்ரவரி 10

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :**

(அ) புதிய கால்நடை கிளை நிலையம் துவக்க மாநில திட்டக் குழு தடை விதித்துள்ளதாலும், புதிய பதவிகளைத் தோற்றுவிக்க அரசு தடை விதித்துள்ளதாலும், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புளியந்துறை, புதுப்பட்டினம், ஆரம்பாக்கம், வடரெங்கம் ஆகிய ஊராட்சிகளில் கால்நடை கிளை நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழாது.

**96—**

## பால் பொருட்கள் விற்பனை

**வினா 32842—திரு. கே.எஸ். பழனிசாமி :** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் மூலம் சென்ற ஆண்டு பால் சம்பந்தப்பட்ட பொருட்கள் விற்பனை எவ்வளவு?

(ஆ) அதன் மூலம் கிடைத்த இலாபம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலம் 2001-2002 ஆம் ஆண்டு விற்பனை செய்யப்பட்ட பால் மற்றும் பால் உபபொருட்கள் பற்றிய விவரம் :



2004 பிப்ரவரி 10]

| வ. எண் | பால் பொருட்களின் பெயர். | விற்பனை அளவு. (கிலோவில்) | மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | பால்பவுடர் | 3582788 | 236187814.45 |
| 2 | வெண்ணெய் | 1286251 | 96440466.45 |
| 3 | நெய் | 1702811 | 154901899.24 |
| 4 | பால்கோவா | 57964 | 4599195.10 |
| 5 | பால் உபபொருட்கள் | 111785 கி/லிட் | 996885.45 |
| 6 | பால் விற்பனை | 35516389 லிட்டர் | 351422829.99 |
| 7 | கன்வர்ஷன் சார்ஜ் | .. | 58301000.00 |
| | மொத்தம் | .. | 902850090.68 |

(ஆ) (1) ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மூலம் 2001-2002 ஆம் ஆண்டு பால் சம்பந்தப்பட்ட பொருட்கள் விற்பனை மூலம் ரூ.90,28,50,090.68 வரப்பெற்றுள்ளது.

(2) மேற்படி விற்பனை மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.4,43,55,000-00 நட்டம் ஏற்பட்டுள்ளது.

**97—**

## மீனவர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டம்

**வினா 36666—திரு. கே. ஆறுமுகம் :** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், கொக்சிலமேடு, மீனவர் குப்பத்தில் வாழும் மீனவ குடும்பங்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*2003-2004 ஆம் ஆண்டுக்கு மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் 4,000 வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.* இதனில் ஆணைகள் வெளியிடப்பட்ட பின்னரே, கொக்கிலமேடு மீனவர் குப்பத்தில் வாழும் மீனவ குடும்பத்தினர் மீனவர் கூட்டுறவுச் சங்கம் மூலம் முறையாக விண்ணப்பித்தால், விதிமுறைப்படி, வாய்ப்புகள் இருப்பின் அவர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**98—**

**ஆடு வளர்க்க கடன் வழங்கும் திட்டம்**

**வினா 14367—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் ஆடுகள் வளர்க்க கடன் வழங்கும் திட்டம் ஏதும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவில்லை. ஆனால், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் பிற்படுத்தப்பட்ட, மிகப்



2004 பிப்ரவரி 10]

பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மக்களுக்கு பின்வரும் துணை முகவர்கள் மூலம் தனிநபர் காலக் கடன்களை வழங்கி வருகின்றது:

(1) மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

(2) நகர கூட்டுறவு வங்கி

(3) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி (தனியார் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் உட்பட)

(4) ஆவின் ஒன்றியங்கள் (உறுப்பினர்கள் பால் கறக்கும் மாடுகள் வாங்க)

ஆடு வளர்க்க விரும்பும் தனி நபர்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் தனி நபர் காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

**99—**

**பிற்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா 34727—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கோமாபுரம் ஊராட்சி, சமுத்திரப்பட்டியில் உள்ள பிற்பட்டோர் மிகவும் பிற்பட்டோர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை தாலுகா, சமுத்திரப்பட்டியில் நடப்பாண்டில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

**100—**

**தனியார் விடியோ நூலகங்களுக்கு உரிமம்**

**வினா 35667—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கு தனியாருக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தனியாருக்கு வீடியோ நூலகங்கள் நடத்த சேலம் மாவட்டத்தில் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் தற்போது ஒரே ஒரு வீடியோ நூலக உரிமம் மட்டும் 31-12-2003 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது.



2004 பிப்ரவரி 10]

*** பட்டியல் 4**

**1—**

**மனைப் பட்டா வழங்கல்**

**வினா 16158—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சியிலுள்ள நத்தம் புறம்போக்கு நிலத்தில் உள்ளவர்களுக்கு மனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் கிராமம், புல எண் 414/1 நத்தம் புறம்போக்கில் பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த கீழ்க்கண்ட 14 நபர்களுக்கு தகுதியின் அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

| வரிசை எண். | பெயர் | பட்டா வழங்கிய பரப்பு | ஆண்டு வருமானம் | தொழில் | இனம் |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 1. | சகுந்தலா, க/பெ. இளங்கோவன் | 0.01.0 | 1200 | விவசாயக் கூலி | இந்து வன்னியர் |
| 2. | வி.ஜி. ஜெயராமன், த/பெ. கோபால்சாமி | 0.00.5 | 6000 | " | " |
| 3. | உஷா, க/பெ. ரவி | 0.00.5 | 7500 | " | இந்து கம்மாளர் |
| 4. | சுகந்தி, க/பெ. பாலாஜி | 0.01.0 | 7500 | " | இந்து நாயுடு |

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2004 பிப்ரவரி 10

| வரிசை எண் | பெயர் | பட்டா வழங்கிய பரப்பு | ஆண்டு வருமானம் | தொழில் | இனம் |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 5. | சசிகலா, க/பெ. இராமகிருஷ்ணன் | 0.01.0 | 7500 | விவசாயக் கூலி | இந்து நாயுடு |
| 6. | விஜயா, க/பெ. மனோகரன் | 0.00.5 | 7200 | " | இந்து கம்மாளர் |
| 7. | மீனாட்சி, க/பெ. தங்கவேலு | 0.01.0 | 7200 | " | இந்து கம்மாளர் |
| 8. | காவேரி, க/பெ. வீராசாமி | 0.01.0 | 7200 | " | " |
| 9. | காமராஜ், த/பெ. வீராசாமி | 0.01.0 | 7200 | " | " |
| 10. | ஆச்சி, க/பெ. பெரிய கருப்பன் | 0.01.0 | 7200 | " | " |
| 11. | ராசவள்ளி, க/பெ. ராமலிங்கம் | 0.01.0 | 7200 | " | " |
| 12. | மாரியம்மாள், க/பெ. செல்லையன் | 0.01.0 | 7200 | " | " |
| 13. | ராஜேஸ்வரி, க/பெ. ராசதுரை | 0.01.0 | 9000 | " | " |
| 14. | தையல்நாயகி, க/பெ. பரமாநந்தம் | 0.01.0 | 9600 | " | " |

மேலும் மேற்கண்ட நபர்களைத் தவிர தாண்டவன்குளம் கிராமத்தில் புல எண் 708 மற்றும் 709 ஆகியவற்றில் 73 மீனவர் குடும்பங்களுக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின் மூலம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.



2004 பிப்ரவரி 10]

ஆனால் இவர்கள் தங்களுக்கு மனைப்பட்டா கிடைக்கவில்லை என்று முறையிட்டதையடுத்து அவர்களுக்கு நத்தம் பட்டா நகல் வழங்கப்பட்டுள்ளது.

2—

**பட்டா வழங்கல்**

**வினா 18509—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதியில் மல்லகுண்டா ஊராட்சியில், மேய்ச்சல் புறம்போக்கு நிலம் உள்ளதை, அரசு நிலமற்ற கூலித் தொழிலாளர்களுக்கும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையினருக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர் செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 186, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை நாள் 11-12-2001-இன்படி மேய்க்கால் புறம்போக்கில் பட்டா வழங்க நிரந்தர தடையுள்ளது. எனவே, மல்லகுண்டா ஊராட்சியில் மேய்க்கால் புறம்போக்கில் ஆக்கிரமணம் செய்து சாகுபடி செய்துவரும் 287 தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இன மக்களுக்கு இலவச பட்டா வழங்க இயலாது.

3—

**சாலை செப்பனிடல்**

**வினா 23714—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை நெடுஞ்சாலை உட்கோட்டத்தை சேர்ந்த கி.மீ. 10/2 காரத்தொழுவு - குமரலிங்கம் சாலை முதல் சர்க்கார் கண்ணாடிபுத்தூர்

[2004 பிப்ரவரி 10

செல்லும் சாலை கி.மீ.0/0 முதல் 2/2 வரை உள்ள சாலை மிகப் பழுதடைந்துள்ளதால் அதனைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இதர மாவட்ட சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின் (கட்டம் 3) கீழ் கி.மீ. 0/0 முதல் கி.மீ. 2/2 வரை உள்ள பழுதடைந்துள்ள சாலைப் பகுதியை மேம்பாடு செய்வதற்கு ரூ.8 இலட்சம் மதிப்பிலான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. எனினும், இச்சாலையில் உள்ள குழிப்பள்ளங்களுக்கு தற்போது தார் நொடிகள் போடப்பட்டு, போக்குவரத்திற்கு ஏற்றவாறு இச்சாலை பராமரிக்கப்பட்டு வருகிறது.

4—

## பாலம் அமைத்தல்

**வினா 23908—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியத்தில் உள்ள சொக்கம்பட்டி திரிகூடபுரம் சாலையின் குறுக்கே உள்ள ஓடையில் பாலம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பாலம் கட்டுதல் தொடர்பான பணியானது பத்தாவது ஐந்தாண்டு பெருந்திட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய பணிகளில் வரிசை எண் 61-ல் இடம் பெற்றுள்ளது. நபார்டு வங்கியின் நிதி ஆதாரம் மற்றும் பணியின் முக்கியத்துவம் இவற்றைப் பொறுத்து, வருங்காலங்களில் இப்பாலப் பணியினை செயல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.



2004 பிப்ரவரி 10]

5—

## பட்டா வழங்குதல்

**வினா 24661—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூக்குட்டமாத அள்ளி ஊராட்சி, முதுகம்பட்டி, சின்னூர் கிராமங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்காதவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், முதுகம்பட்டி சின்னூர் கிராமங்களில் கிராம நத்தம் புறம்போக்கில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. சின்னூர் கிராமத்தில் புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டியுள்ள இடம் கிராம கணக்குகளில் மந்தைப் புறம்போக்கு எனப் பதிவாகி உள்ளது. மந்தை புறம்போக்கு நிலத்தை வேறு எந்த பயன்பாட்டிற்கும் வழங்கக் கூடாது என்று அரசு தடை விதித்துள்ளதால் சின்னூர் கிராமத்தில் உள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

6—

## சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா 24809—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் கிராமம் எடப்பாடி முதல் மகுடஞ்சாவடி வரை செல்லும் சாலையிலிருந்து அழகனூர் பிள்ளையார் கோவிலிலிருந்து நெட்டையனூர் ஆரம்பப்பள்ளி வரைச் செல்லும் சாலை ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், எர்ணாபுரம் கிராமம், மகுடஞ்சாவடி எடப்பாடி நெடுஞ்சாலையில் உள்ள பிள்ளையார் கோயிலிலிருந்து, நெட்டையனூர் மற்றும் நெட்டையனூர் ஆரம்பப்பள்ளிக்குச் செல்லும் பாதையை ஆறு மாதங்களுக்கு முன்னர் பட்டாதாரர்கள் தடுத்து வந்தனர். தற்போது பாதைக்குண்டான நிலக்கிரையத் தொகை ஊர்ப் பொதுமக்கள் சார்பாக சம்பந்தப்பட்ட பட்டாதாரர்களுக்கு வழங்கப்பட்டு, பஞ்சாயத்தினரால் தார்ச்சாலை போடப்பட்டுள்ளது. தற்போது இந்தப் பொதுப் பாதையில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை.

**7—**

### இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 25084—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001 ஆம் ஆண்டு, முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புற மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் மூலம் எத்தனைபேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டில் மொத்தம் 1,25,628 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் மூலம் முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் 3,596 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**8—**

### பட்டாக்கள் வழங்குதல்

**வினா 25280—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட வட்டுவனஅள்ளி ஊராட்சியிலுள்ள தாசம்பட்டி கிராமப் பகுதியில் நீண்டகாலமாக புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்துவரும் ஏழை சிறு விவசாயிகளுக்கு பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம் தாசம்பட்டி கிராமம், புல எண் 285, 304, 307/1, 307/2, 301, 301/1 ஆகியவற்றிலுள்ள நிலங்கள் அனைத்தும் தீர்வை ஏற்படாத தரிசு என கிராமக் கணக்குகளில் வகைபாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புலத்தினை தீர்வை ஏற்பட்ட புஞ்சை தரிசு என நில வகைபாடு மாற்றம் செய்து இப்பகுதிகளில் விவசாயம் செய்துவரும் சிறு விவசாயிகளுக்கு அவர்களது தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்குவதற்கு தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2004 பிப்ரவரி 10

**9—**

### விட்டு மனைப் பட்டா

**வினா 25284—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகமரை ஊராட்சியிலுள்ள நாகமரை கிராமத்தில் நீண்ட காலமாக வீடுகட்டி வாழ்ந்து வரும் ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், நாகமரை கிராமம் புல எண் 958-ல் உள்ள பாட்டை புறம்போக்கு நிலத்தை புல எண் 958/2, 4 என உட்பிரிவு செய்து கிராம நத்தமாக வகை மாற்றம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கிராம, வட்ட கணக்குகளில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு உள்ளன. மேற்படி கிராமத்திற்கு புல எண் 179/1 என்பது கிராம கணக்குகளில் பொதுப் பணித் துறை, நீர்ப்பிடிப்பு பகுதி என உள்ளன. நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பு ஆட்சேபகரமானதால் பட்டா வழங்க தடையாணை உள்ளது. எனவே இந்த ஆக்கிரமிப்பு உள்ள பகுதியில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இயலாது.

**10—**

### விட்டு மனைப் பட்டாக்கள்

**வினா 25287—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட அஜ்ஜனஅள்ளி ஊராட்சியிலுள்ள வத்தலாபுரம் கிராமத்தில் நீண்டகாலமாக வீடுகட்டி வாழ்ந்து வரும், இதுவரை வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருப்பவர்களுக்கு உடன் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், அஜ்ஜனஅள்ளி தரப்பு வத்தலாபுரம் கிராமம், நத்தம் புறம்போக்கு நிலங்களில் புல எண் 638/1, விஸ்தீரணம் 1.57.5 எக்டேர் நில பாகத்தில் நத்தம் நிலவரித் திட்டத்தின்போதே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார்.

**11—**

### விட்டு மனைப் பட்டாக்கள்

**வினா 25294—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட அஜ்ஜனஅள்ளி ஊராட்சியிலுள்ள அஜ்ஜனஅள்ளி கிராமத்தில் நீண்டகாலமாக வீடுகட்டி வாழ்ந்து வரும், இதுவரை வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படாமலிருப்பவர்களுக்கு உடன் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், அஜ்ஜனஅள்ளி கிராமம், புல எண்கள் 120 மற்றும் 156 ஆகியவற்றில் வசிப்பவர்களுக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார்.

12—

### பட்டா வழங்கல்

**வினா 25338—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட வட்டுவனஅள்ளி ஊராட்சியிலுள்ள ஜெல்மாரம்பட்டி கிராமப் பகுதியில் நீண்டகாலமாக விவசாயம் செய்து வரும் (புறம்போக்கு நிலத்தில்) ஏழை சிறு விவசாயிகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், வட்டுவன அள்ளி ஊராட்சியிலுள்ள ஜெல்மாரம்பட்டி கிராமத்தில் உள்ள புல எண் 630/1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 20, 22, 23, புல எண் 631/1, 2, 3, 4, 5, 6, 7, புல எண் 611/4, 5 மற்றும் புல எண் 612/3, 4 ஆகியவற்றில் உள்ள நிலங்கள் அனைத்தும் தீர்வை ஏற்படாத தரிசு என கிராமக் கணக்குகளில் பதியப்பட்டுள்ளது. இந்நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களின்



தகுதியின் அடிப்படையில் நிலவகை மாற்றம் செய்த பின்னர் பட்டா வழங்குவதற்கு தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

13—

### இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 25436—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம், நெய்க்காரன்பட்டி கிராமத்தில் நாமக்கல் - மோகனூர் சாலையின் இருபுறமும் வாழ்ந்துவரும் மக்களுக்கு அரசு புறம்போக்கு இடத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம், அரியூர் கிராமம், நெய்க்காரன்பட்டி, சஎண் 396பி-1 விஸ்தீரணம் 3.44.0 எக்டேர் நிலம் ஊராட்சி சாலை என கிராமக் கணக்குகளில் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சாலை நாமக்கல்-மோகனூர் பிரதான சாலை அரியூர் கிராமம், நெய்க்காரன்பட்டி வழியாக செல்லும் இந்த சாலையின் வடபுறமாக சாலை ஓரத்தில் கீழ்க்கண்ட 13 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வசித்து வருகின்றனர்:

| | | |
|---|---|---|
| 1. | நா. காளியம்மாள் | கூரை (ம) அட்டைவீடு |
| 2. | காளியம்மாள் | கூரை வீடு |
| 3. | ரங்கன் | கூரை வீடு |
| 4. | பெருமாள் | கூரை வீடு |

| | | |
|---|---|---|
| 5. | சின்னான் | கூரை வீடு |
| 6. | மருத வீரன் | வில்லை வீடு |
| 7. | பொம்ம நாயக்கர் | சிமென்ட் அட்டை வீடு |
| 8. | சி. முருகேசன் | வில்லை வீடு |
| 9. | ப. முருகேசன் | கூரை வீடு |
| 10. | சி. மாரிமுத்து | கூரை வீடு |
| 11. | சி. பெருமாள் | கூரை வீடு |
| 12. | சி. முருகேசன் | கூரை வீடு |
| 13. | அ. சரஸ்வதி | கூரை வீடு |

மேற்கண்ட புலன் எதிர்காலத்தில் சாலை விஸ்தரிப்புக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படும் என்பதால் மேற்கண்ட நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**14—**

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 28121—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, சோலையார் டேமில் நீண்ட நாட்களாக குடியிருந்து வரும் பொதுமக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, சோலையார் டேம் பகுதியிலுள்ள 137 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருப்பூர்





வருகையின் போது, இலவசப் பட்டா வழங்கப்பட்டது. இதுதவிர 29-1-2003 அன்று 52 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா (மொத்தம் 189 பயனாளிகளுக்கு) வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பயனாளிகளின் பட்டியலைத் தயாரித்து நில அளவைப் பணிகள் முடிக்கப்பட்டு வீட்டுமனை ஒப்படை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறன்றன. தகுதியின் அடிப்படையில் விரைவில் பட்டா வழங்கப்படும்.

**15—**

## வாய்க்கால் ஆழப்படுத்துதல்

**வினா 28181—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும், வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சி, வாடி கிராமத்தில் கீழ்க்குமுலி தெற்கு வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டு ரூ.30 கோடி செலவில் தூர்வாரும் பணி செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. அத்திட்டத்தில் ஏற்படும் சேமிப்பு நிதியிலிருந்து வேட்டங்குடி ஊராட்சி, வாடி கிராமத்தில் கீழ்குமுலி தெற்கு வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்தும் பணியும் செய்து முடிக்கப்படும்.

[2004 பிப்ரவரி 10

16—

**வாய்க்கால் தூர்வாருதல்**

**வினா 28187—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அகர வட்டாரம் ஊராட்சியில் கோண வாய்க்கால் தூர் எடுத்து, ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 34, பொதுப் பணித் (க்யூ2) துறை, நாள் 3-2-2003-ல் ரூ.30.00 கோடிக்கு அறிவிக்கப்பட்டுள்ள கால்வாய்கள் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டு உடல் உழைப்பு மூலம் தூர்வாரும் பணித் திட்டத்தில் ஏற்படும் சேமிப்பு நிதி ஆதாரத்திலிருந்து எடுத்து இந்த ஆண்டே மேற்படி பணிகள் செய்து முடிக்கப்படும்.

17—

**வாய்க்கால் தூர் எடுத்தல்**

**வினா 28409—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பண்ணங்குடி ஊராட்சி, பெரிய கொப்பியம், மணலி கண்ணி வாய்க்கால் தூர் எடுத்தும், ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி பெரிய கொப்பியம், மணலி கண்ணி வாய்க்காலும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.

18—

**தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம்**

**வினா 28411—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பண்ணங்குடி ஊராட்சிக்குட்பட்ட பெரிய குப்பியம் நாக மரத்துக் கண்ணி வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி, பெரிய குப்பியம் நாக மரத்துக் கண்ணி வாய்க்காலும் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.

[2004 பிப்ரவரி 10

**19—**

**வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்துதல்**

**வினா 28412—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பண்ணங்குடி ஊராட்சி, பெரிய கொப்பியம், ஆச்சாள்புரத்தூர் கண்ணி வாய்க்காலை தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி, பெரிய கொப்பியம், ஆச்சாள்புரத்தூர் கண்ணி வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்தும் பணியும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.

**20—**

**வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்துதல்**

**வினா 28417—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கதிராமங்கலம் ஊராட்சி, கட்டார ஓடை வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி கட்டார ஓடை வாய்க்காலும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.

**21—**

**தூர்வாருதல்**

**வினா 28418—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கதிராமங்கலம் ஊராட்சி, செம்மண் ஓடை வாய்க்கால் தூர் வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி செம்மண் ஓடை வாய்க்காலும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.

[2004 பிப்ரவரி 10

**22—**

**வாய்க்கால் தூர் வாருதல்**

**வினா 28419—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கதிராமங்கலம் ஊராட்சி, ராஜாரோடை வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி ராஜாரோடை வாய்க்காலும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.*

**23—**

**வாய்க்கால் ஆழப்படுத்தும் திட்டம்**

**வினா 28428—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, ஆதமங்கலம் ஊராட்சி, தோப்படி வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி, தோப்படி வாய்க்காலும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.*

**24—**

**வாய்க்கால் தூர் வாருதல்**

**வினா 29077—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி, தாழந்தொண்டி வழதலைகுடி பாசன வாய்க்காலைத் தூர்வாரி சுத்தப்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி, தாழந்தொண்டி வழதலைகுடி பாசன வாய்க்காலும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.*

25—

### வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்துதல்

**வினா 29081—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி, கர்ணன் கண்ணி சிற்றோடை வாய்க்கால் தூர் வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி, கண்ணி சிற்றோடை வாய்க்காலும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

26—

### பாசன வாய்க்கால் தூர் வாருதல்

**வினா 29082—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொண்டல் ஊராட்சி வேளுவன் ஓடை பாசன வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி, வேளுவன் ஓடை பாசன வாய்க்காலும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

27—

### பாசன வாய்க்கால் ஆழப்படுத்தும் திட்டம்

**வினா 29084—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சிக்குட்பட்ட குரவளூர் கிராமத்தில் அரசமரத்தடியிலிருந்து பெருந்தோட்டம் வரையிலுள்ள பாசன வாய்க்கால் ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சிக்குட்பட்ட குரவளூர் கிராமத்தில் அரசமரத்தடியிலிருந்து பெருந்தோட்டம் வரையிலுள்ள பாசன வாய்க்காலும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

**28—**

**வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்துதல்**

**வினா 29088—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சி, ஆண்டியூர் விவசாய பாசன வாய்க்கால் தூர் எடுத்து, ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி, ஆண்டியூர் விவசாயப் பாசன வாய்க்காலும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

**29—**

**பட்டா வழங்குதல்**

**வினா 29813—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், நாரைக்கிணறு அன் சர்வே பிளாக் 1, மற்றும் பிளாக் 2-ல் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்து வரும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம். நாரைக்கிணறு அன் சர்வே பிளாக் 1 மற்றும் 2-ல் உள்ள புலங்களில் தற்போது நில அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், இப்புலங்கள் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதாலும் மறு நில அளவைப் பணி முடிவுற்று வனத் துறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்பு நில மாறுதல் செய்து அனுபவதாரர்களுக்கு நிலப் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**30—**

**இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 30825—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி, கரடிப்பள்ளம் பகுதியில் வசிக்கும் 14 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டத்தில் இயற்கை சூழ்நிலை நிலைகுலைவில் இருந்து தடுக்கும் பரந்த நோக்கத்தின் காரணமாக, நீலகிரி மாவட்டம் முழுவதிலும் வீட்டுமனை ஒப்படை வழங்குவதைத் தடை செய்து அரசாணை (நிலை) எண் 1205, வருவாய்த் துறை, நாள் 27-10-1992-ல் தடை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி, கரடிப்பள்ளம் பகுதியில் வசிக்கும் 14 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

[2004 பிப்ரவரி 10

31—

## பட்டா வழங்கும் திட்டம்

**வினா 31892—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தைச் சேர்ந்த மாரம்பட்டியிலுள்ள ஏரிப்பகுதி தரிசாக உள்ளதை சாகுபடி செய்ய பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊத்தங்கரை வட்டம், மாரம்பட்டி கிராமம், புல எண் 4/2-ல் உள்ள 24.88.0 எக்டேர் ஏரி புறம்போக்கு என கணக்குகளில் தாக்கலாகி உள்ளது. நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை ஒழுங்குப்படுத்தி பட்டா வழங்குவதற்கு அரசு தடை விதித்துள்ளதால் இப்புலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

32—

## போதைப் பொருள்கள் கடத்தல் விவரம்

**வினா 34671—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், போதைப் பொருள்கள் கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்டு, தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) கடத்தப்பட்ட பொருள்களின் மதிப்பீடு எவ்வளவு என அரசு அறிவிக்குமா?

(இ) வாகனங்கள் எத்தனை கைப்பற்றப்பட்டன?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) போதைப் பொருள்கள் கடத்தல் தொடர்பாக 2001 ஆம் ஆண்டில் 1,269 பேர் கைது செய்யப்பட்டு, 741 பேர் தண்டனை பெற்றுள்ளனர். 2002 ஆம் ஆண்டில் 1271 நபர்கள் கைது செய்யப்பட்டு, 369 பேர் தண்டனை பெற்றுள்ளனர்.

(ஆ) 2001 ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட பொருளின் மதிப்பு ரூ.20,98,77,400/- 2002 ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட பொருளின் மதிப்பு ரூ.24,98,99,425/-

(இ) 2001 ஆம் ஆண்டு 10 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

2002 ஆம் ஆண்டு 8 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

33—

## கிளைச் சிறைக்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம்

**வினா 35543—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி கிளைச் சிறைக்கு புதிய கட்டடம் கட்டித் தரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அறந்தாங்கியில் உள்ள கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு வசதி 28 ஆகும். இக்கிளைச் சிறையில் 3 அறைகள் உள்ளன. தற்போது இங்கு 9 சிறைவாசிகள் மட்டுமே அடைக்கப்பட்டுள்ளனர். இக்கிளைச் சிறையின் கடந்த ஆண்டு சராசரி அடைப்பு 11 ஆகும். இக்கிளைச் சிறையின் கட்டட வசதி போதுமானதாக உள்ளது. தேவை ஏற்படும் போது மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அறந்தாங்கி கிளைச் சிறைக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய நேர்வு தற்போது எழவில்லை.

34—

**காலிப் பணியிடங்கள் நிரப்புதல்**

**வினா 20719—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் காலியாகவுள்ள பணியிடங்கள் எத்தனை?

(ஆ) அவற்றை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் காலியாக உள்ள ஆரம்ப நிலைப் பணியிடங்கள் கீழ்வருமாறு:—

| | | |
|---|---|---|
| அலுவலர்கள் | ... | 696 |
| பணியாளர்கள் | ... | 1755 |
| கள உதவியாளர்கள் | ... | 18041 |

(ஆ) மற்றும் (இ) பலதரப்பட்ட வாரியப் பணியாளர்களின் எண்ணிக்கை தொழிற்சங்கங்களுடன் செய்யப்பட்ட வேலைப்பளு ஒப்பந்தத்தின்படி நிர்ணயிக்கப்படுகிறது. மேலே குறிப்பிட்ட காலியிடங்கள் 1994 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி ஏற்பட்டுள்ளதாகும்.

மேற்படி வேலைப் பளு ஒப்பந்தத்தை மாற்றியமைக்கும் பொருட்டு, தொழிற் சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. பேச்சு வார்த்தை முடிந்து, வேலைப்பளு மாற்றி நிர்ணயிக்கப்பட்டு ஒப்பந்தமானவுடன், காலியிடங்களைக் கணக்கிட்டு அதனை நிரப்புவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.





35—

**அன்னதானத் திட்டம்**

**வினா 36612—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கோயில்களில் நடைபெறும் அன்னதானத் திட்டத்திற்கு ஒரு நபருக்கு ஒரு வேளை சாப்பாட்டிற்கு எவ்வளவு தொகை செலவு செய்யப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கோயில்களில் நடைபெறும் அன்னதானத் திட்டத்திற்கு ஒரு நபருக்கு ஒரு வேளை சாப்பாட்டிற்கு சராசரியாக ரூ.11/- (ரூபாய் பதினொன்று மட்டும்) செலவிடப்படுகிறது.

36—

**நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்**

**வினா 16494—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சியிலுள்ள ஒன்றிய தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தாண்டவன்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு அருகில் 2 கி.மீ. தூரத்தில் அரசு உதவிபெறும் நடுநிலைப் பள்ளியும், 3 கி.மீ. தூரத்தில் அரசு உயர்நிலைப் பள்ளியும் உள்ளது. மேற்படி பள்ளிக்கு

[2004 பிப்ரவரி 10

அருகில் ஊட்டுப் பள்ளிகள் ஏதும் இல்லாததால் 6 ஆம் வகுப்பில் சேருவதற்கு போதிய மாணவர்கள் இல்லை. எனவே, இப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**37—**

**குடிநீர்க் குழாய்கள் அமைத்தல்**

**வினா 20880—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, குள்ளஞ்சாவடி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளதால், குடிநீர்க் குழாய்கள் அமைத்து குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குள்ளஞ்சாவடி அரசு உயர்நிலைப் பள்ளியில் இராஜீவ் காந்தி குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆழ்குழாய் அமைத்து தண்ணீர் தொட்டி கட்டப்பட்டு 12-12-2002 முதல் பள்ளி மாணவ/மாணவிகள் குடிநீர் வசதி பெற்று பயனடைந்து வருகின்றனர்.

**38—**

**நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்**

**வினா 44581—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, ட்டி . புதுப்பட்டி ஊராட்சி, தெற்கு நல்லியம்பட்டி, நாச்சம்பட்டி, வேங்கை ம டல ஊராட்சி கண்ணுகுளம் ஆகிய கிராம ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்த நடப்பாண்டில் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 119, நாள் 1-10-2003-ல் முசிறி தொகுதி ட்டி. புதுப்பட்டி ஊராட்சி, தெற்கு நல்லியம்பட்டி, நாச்சம்பட்டி வேங்கை மண்டல ஊராட்சி கண்ணுகுளம் ஆகிய கிராம ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**39—**

**குருதி சேமிப்பு மையம் செயல்படுத்துதல்**

**வினா 1912—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அரசு பொது மருத்துவமனையில் இரத்த வங்கிக்கு கட்டட வசதி, கருவிகள் இருந்தும் உரிமம் பெறவில்லை என்பதால் திறக்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை திறக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருத்தணி மருத்துவமனையில் குருதி சேமிப்பு மையம் (Blood Storage Centre) செயல்படுவதற்கு தேவையான அனைத்து உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது. குருதி சேமிப்பு மையம் தொடங்குவதற்கான வழிமுறைகளும், தொடர் நடவடிக்கைகள் எடுப்பதற்கு தகுந்த அறிவுரையும் மருத்துவ அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ளது. குருதி சேமிப்பு மையம் விரைவில் செயல்பட தொடங்கும்.

[2004 பிப்ரவரி 10

**40--**

**அவசர ஊர்தி**

**வினா 37798—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு ஒரு அவசர ஊர்தி வாங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் தற்பொழுது ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றும், குடும்ப நலத் துறை வாகனம் ஒன்றும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. அரசாணை எண் 293, சுகாதாரத் துறை நாள் 17-10-2000-ல் வெளியிடப்பட்ட அரசாணையில் மாநிலத்தில் 48 வாகனங்கள் கழித்தொதுக்கம் செய்யப்பட்டு அதில் 1:1 என்ற விகிதத்தில் 36 வாகனங்கள் வாங்கத் தகுதியுள்ள நிலையில் தற்பொழுது 2002-2003-ல் 20 வாகனங்கள் மிகவும் அவசியத் தேவையின் அடிப்படையில் 7 மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைகளுக்கும், 13 தாலுகா அரசு மருத்துவமனைகளுக்கும் புதியதாக வாங்கி வழங்கப்பட்டுள்ளது. மீதம் 16 வாகனங்கள் வாங்க அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று வாகனங்கள் வாங்கும்போது கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு ஒரு புதிய ஆம்புலன்ஸ் வழங்க பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.



2004 பிப்ரவரி 10]

**41—**

**சுற்றுச் சுவர் கட்டுதல்**

**வினா 42153—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, புதுப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டித் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதி, சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுவது புதுப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையம் அல்ல. புதுப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையமாகும். புதுப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தற்போது சுற்றுச் சுவர் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, தற்சமயம் சுற்றுச் சுவர் கட்டித் தரும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**42—**

**சுற்றுச் சுவர் கட்டுதல்**

**வினா 47272—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வள்ளுவக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட இந்நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே சீர்காழி தொகுதி வள்ளுவக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தற்போது சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**43—**

**பாசனம் கிடைக்க நடவடிக்கை**

**வினா 29970—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தேன் நிலையான தொப்பூரில் இருந்து மல்லிகுந்தம் ஊராட்சிக்கு செல்லும் பாசன வாய்க்காலில் பல பிரிவு வாய்க்காலாக பிரித்து அமைத்து அப்பகுதிகளுக்கு பாசனம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (2003-2004) பாசனப் பகுதி திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட உள்ளது.

**44—**

**விவசாயிகளுக்கு பயிற்சி மையம்**

**வினா 31796—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

(அ) விளாத்திகுளம் தொகுதியில் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்திட மிளகாய் வத்தல் உற்பத்தியை பெருக்க பயிற்சி மையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) விளாத்திகுளம் தொகுதியில் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்திட மிளகாய் வத்தல் உற்பத்தியைப் பெருக்க தனியாக பயிற்சி மையம் அமைக்க உத்தேசம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**45—**

**சர்க்கரை வள்ளிக் கிழங்கு உற்பத்தி**

**வினா 33918—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் சர்க்கரை வள்ளிக் கிழங்கு உற்பத்தி குறைந்து வருவது அரசின் கவனத்திற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உற்பத்தியைப் பெருக்க சிறப்புத் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் சர்க்கரை வள்ளிக் கிழங்கு 2001-2002 ஆம் ஆண்டில் 18 எக்டேரில் பயிரிடப்பட்டது. மழையளவு குறைவினாலும், வடகிழக்கு பருவமழை பொய்ப்பினாலும், பரப்பளவு அதிகமானதாலும் மகசூல் குறையும் நிலை ஏற்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதற்கும் 2002-2003 ஆம் ஆண்டிற்கான மத்திய சார்பு திட்டத்தின்கீழ் 50 எக்டேர் பரப்பளவிற்கு முள்ளங்கி, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, மரவள்ளி, பீட்ரூட் போன்ற கிழங்கு வகை பயிர்களின் உற்பத்தியை பெருக்கும் வகையில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் எக்டேருக்கு ரூ.1,500/-

[2004 பிப்ரவரி 10

மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சர்க்கரை வள்ளிக் கிழங்கு உயர் இரகங்களான கோ1, கோ2, கோ3 போன்றவைகளை பயிரிட விவசாயிகளுக்கு நடப்பு ஆண்டில் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இருந்து உரிய விதைகள் பெற்று உயர் விளைச்சல் பெற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**46—**

## காய்கறிகள் பயிரிடுதல்

**வினா 34012—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் வட்டங்களில் காய்கறி பயிரிட அரசு ஊக்கமளித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எந்த வகையில் என்று அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு தோட்டக்கலை துறை சார்பில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் வீரிய காய்கறி விதைகள் 624 எக்டேருக்கு 5.4 மெட்ரிக் டன், 50 சத மானியத்தில் சிறு/குறு மற்றும் ஆதிதிராவிட பழங்குடி விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 1,500 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் வட்டாரங்களில் வெண்டை, கத்திரி, தக்காளி, மிளகாய், கொடிவகை காய்கறிகளான பாகல், புடல், பீர்க்கன் மற்றும் கீரை வகைகள் சுமார் 250 எக்டேரில் பயிர் செய்யப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டு செங்கற்பட்டு பகுதியில் 268 எக்டேருக்கு சுமார் 2 டன் அளவு வீரிய மற்றும் உயர் விளைச்சல் ரக காய்கறி விதைகள் 50 சத மானியத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.



2004 பிப்ரவரி 10]

மேலும் மத்திய சார்பு திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த நறுமண சுவை பயிர் அபிவிருத்தி திட்டத்தில் மிளகாய் பயிருக்கு 25 சத மானியத்தில் விதை மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. வேர் மற்றும் கிழங்கு வகை உள்ளடக்கிய காய்கறி பயிர் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் வேர் மற்றும் கிழங்கு பயிர் செய்யும் விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு மருந்துகள் அளிக்கப்பட்டுள்ளது.

மானியத்தில் காய்கறி விதைகள் விநியோகம் 50 சத விழுக்காட்டில் வழங்கப்படுவதுடன் தோட்டக்கலை பயிர்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 4,500 எக்டேரில் காய்கறிகள் பயிரிடப்பட்டு 80,000 டன் காய்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

**47—**

## பழக்கன்றுகளை பாதுகாத்தல்

**வினா 38048—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறியில் தமிழக அரசின் மூலம் (தோட்டக்கலைத் துறை மூலமாக) வழங்கப்படும் பழக்கன்றுகளை பாதுகாத்து வைத்துக் கொள்ள இட வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறியில் தோட்டக்கலைத் துறை மூலமாக வழங்கப்படும் பழக்கன்றுகள் பண்ணையிலிருந்து பெறப்பட்டு நேரடியாக விவசாயிகளின் தோட்டங்களுக்கு அவர்களுடைய போக்குவரத்து செலவில் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பழக்கன்றுகளைப் பாதுகாத்து வைத்துக்கொள்ள இடவசதி தேவை என்ற வினா எழவில்லை.

[2004 பிப்ரவரி 10

48—

**பாசனப் பகுதி மேம்பாட்டுப் பணிகள்**

**வினா 39815—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய, மாநில அரசுகளின் சம நிதி உதவியுடன் 2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் முடிக்கப்பட்ட பணிகள் எத்தனை?

(ஆ) அப்பணிகளின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் மத்திய, மாநில அரசுகளின் சமநிதி உதவியுடன் பாசனப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

49—

**கசிவு நீர்க் குட்டைகள்**

**வினா 40917—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கசிவு நீர்க் குட்டைகள் எத்தனை?

(ஆ) அதற்கான மதிப்பீட்டு தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் கசிவு நீர்க் குட்டைகள் வேளாண்மை பொறியியல் துறையால் அமைக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



2004 பிப்ரவரி 10]

50—

**களர் நிலச் சீர்திருத்தச் சட்டம்**

**வினா 42517—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் களர் நிலச் சீர்திருத்தச் சட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

51—

**காளான் அபிவிருத்தித் திட்டம்**

**வினா 42562—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் காளான் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். சேலம் மாவட்டத்தில் காளான் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) "காளான் வளர்ச்சித் திட்டம்" மத்திய மாநில அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில், 20 விவசாயிகளுக்கு காளான் வளர்ச்சி குறித்து ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) செலவில் பயிற்சியளிக்கப்பட்டது. 2003-2004 நிதியாண்டில் காளான் வளர்ச்சியை சேலம் மாவட்ட விவசாயிகளிடம் ஊக்குவிக்கும் நோக்கோடு கடந்த ஆகஸ்ட் 2003 மாதத்தில் ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) செலவில் 100 விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

**52—**

### நெற்கதிரடிக்கும் இயந்திரம்

**வினா 42976—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் நிதியாண்டில் தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் சிறு விவசாயிகளுக்கு நெற்கதிரடிக்கும் இயந்திரம் எவ்வளவு பேருக்கு மானியக் கடனுடன் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் நிதியாண்டில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆதிதிராவிடர் சிறு விவசாயிகளுக்கு நெற்கதிரடிக்கும் இயந்திரம் மானியக் கடன் மூலம் வழங்கப்படவில்லை.

**53—**

### பாலர் பள்ளி அமைத்தல்

**வினா 7160—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், சிக்கம்பட்டி ஊராட்சியில் உள்ள சின்னக்காடம்பட்டியில் பாலர் பள்ளி புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், சிக்கம்பட்டி ஊராட்சியிலுள்ள சின்னக்காடம்பட்டி கிராமம் புதூர் காடம்பட்டி அங்கன்வாடி மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அக்கிராமம், புதூர் காடம்பட்டி அங்கன்வாடி மையத்திலிருந்து 1/2 கி.மீ. தொலைவில்தான் உள்ளது. இக்கிராமத்திலுள்ள சத்துணவுப் பயனாளிகளுக்கு மையத்திலிருந்து உதவியாளர் மூலமும் மற்றும் பெண்கள் குழுத் தலைவி திருமதி ராணி என்பவர் மூலமும் நாள்தோறும் இணை உணவு எடுத்துச் சென்று வழங்கப்படுகிறது. மேலும், சின்னக்காடம்பட்டி கிராமத்தில் 6-36 மாதக் குழந்தைகள் 17 பேர்கள்தான் உள்ளனர். எனவே, புதியதாக பாலர் பள்ளி அமைக்க வேண்டிய அவசியமில்லை.

**54—**

### அரிசி பெறும் ஓய்வூதிய முதியோர்கள்

**வினா 20659—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர் உதவித்தொகை பெறுபவர்களில் எத்தனை பேர் நியாய விலைக் கடைகளில் அரிசி பெறுகிறார்கள்? தாம்பரம் நகரத்தில் இத்திட்டத்தின் மூலம் அரிசி பெறும் ஓய்வூதிய முதியோர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் முதியோர் உதவித்தொகை பெறுபவர்களில் 9,72,204 பேர் நியாய விலைக் கடைகளில் அரிசி பெறுகிறார்கள். தாம்பரம் நகரத்தில் இத்திட்டத்தின் மூலம் அரிசி பெறும் ஓய்வூதிய முதியோர்களின் எண்ணிக்கை 25 பேர்.

[2004 பிப்ரவரி 10

55—

**பாலர் பள்ளி அமைத்தல்**

**வினா 20860—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வன்னியர்பாளையம் கிராமத்தில் பாலர் பள்ளி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, வன்னியர்பாளையம் கிராமத்தில் தனியே ஊட்டச்சத்து மையம் தொடங்குவதற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச மக்கள் தொகை (1000 பேர்) இல்லையென்பதால் இக்கிராமத்தில் தனியே மையம் தொடங்க இயலாது. இக்கிராமத்தில் உள்ள மொத்த மக்கள் தொகை 751 மட்டுமே.

56—

**சத்துணவுக் கூடத்திற்குப் புதிய கட்டடம்**

**வினா 22439—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் உள்ள சத்துணவுக் கூடம் பழுது அடைந்துள்ளதால், அதற்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் உள்ள சத்துணவுக் கூடம் பழுதடைந்துள்ளதை, நடப்பு நிதியாண்டில் ஒதுக்கீடு பெற்றவுடன் முன்னுரிமை அடிப்படையில் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2004 பிப்ரவரி 10]

57—

**முதியோர் நலக் காப்பகம்**

**வினா 27093—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி, தாரமங்கலம் பகுதிகளில் முதியோர் நலக் காப்பகம் அமைக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி, தாரமங்கலம் பகுதிகளில் முதியோர் நலக் காப்பகம் அமைக்கும் எண்ணம் தற்போது அரசிடம் இல்லை. ஏதாகிலும் தொண்டு நிறுவனங்கள் திறம்பட முதியோர் இல்லங்கள் நடத்திட முன் வந்தால் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி அந்நிறுவனங்களுக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

58—

**அங்கன்வாடிகள்**

**வினா 32713—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை அங்கன்வாடிகள் செயல்படுகின்றன?

(ஆ) அவற்றின் மூலம் பயன்பெறும் சிறார்களின் எண்ணிக்கை எவ்வளவு?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 30,125 அங்கன்வாடி மையங்கள் உள்ளன.

(1) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்-10,625 மையங்கள்.

(2) உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் 3-வது திட்டம்-19,500 மையங்கள்.

(ஆ) இதில் பயன்பெறும் சிறார்களின் எண்ணிக்கை 13,07,128.

**59—**

**சத்துணவுக் கூடம் கட்டும் திட்டம்**

**வினா 32857—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகரம், பகுதி-14-ல் சத்துணவுக் கூடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை நகராட்சிப் பகுதி 14-ல் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், தொடக்கப் பள்ளி ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் பயிலும் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. மேலும், நகராட்சி எல்லைக்குள் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அங்கன்வாடி மையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. எனவே, புதியதாக சத்துணவுக் கூடம் கட்டவேண்டிய கேள்வி எழவில்லை.



2004 பிப்ரவரி 10]

**60—**

**சத்துணவுக்கூட கட்டடம் கட்டுதல்**

**வினா 34839—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சத்துணவுக்கூட கட்டடம் கட்டித்தர கருத்துரு ஏதேனும் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சத்துணவுக்கூட கட்டடம் கட்டுவதற்கு அடுத்துவரும் நிதியாண்டில் ஒதுக்கீடு பெறப்படும்போது முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**61—**

**சத்துணவுக் கூடங்கள்**

**வினா 34840—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் கட்டட வசதி இல்லாத சத்துணவுக் கூடங்கள் எத்தனை?

(ஆ) சமையலறை இல்லாத மையங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

| | | |
|---|---|---|
| (அ) | புதுக்கோட்டை மாவட்டத்தில், கட்டட வசதி இல்லாத சத்துணவுக் கூடங்கள் | 224 |
| (ஆ) | சமையலறை இல்லாத மையங்கள் | 404 |

62—

**அங்கன்வாடிக் கட்டடம் கட்டுதல்**

**வினா 35195—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், முள்ளூர் ஊராட்சி, சத்திரப்பட்டி, காரைப்பட்டியில் அங்கன்வாடிக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், முள்ளூர் ஊராட்சி, சத்திரப்பட்டி, காரைப்பட்டியில் அங்கன்வாடி மையங்கள் இயங்கவில்லை. எனவே, அங்கன்வாடிக் கட்டடங்கள் கட்டவேண்டிய தேவை எழவில்லை.

63—

**பால்வாடி கட்டடம் கட்டுதல்**

**வினா 35705—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், மஞ்சபேட்டையில், பால்வாடி கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், மஞ்சபேட்டையில் உள்ள ஆதிதிராவிடர் காலனியில் இயங்கும் பால்வாடி மையத்திற்கான கட்டடம்



சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனாவின் சிறப்புக் கூறு திட்டத்தில் (எஸ்சிபி) ரூ.1,26,500/- மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

64—

**சத்துணவு மையம்**

**வினா 36626—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, திருத்தலையூர் மற்றும் குணசீலத்தில் சத்துணவு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, திருத்தலையூர் மற்றும் குணசீலத்தில் குழந்தைகள் நல மையம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

65—

**சத்துணவுத் திட்டம்**

**வினா 37436—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில், சத்துணவுத் திட்டம், குழந்தைகள் நல மையங்கள் மற்றும் பள்ளி சத்துணவு மையங்களில் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?

[2004 பிப்ரவரி 10

விடை.—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஏற்காடு தொகுதியில், சத்துணவுத் திட்டம், குழந்தைகள் நல மையங்கள் மற்றும் பாலர் பள்ளி மையங்களில் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) இத்திட்டத்தில், மொத்தம் 2,347 பயனாளிகள் பயனடைந்து வருகிறார்கள்.

66—

### சாலையோரச் சிறார்களுக்கு இரவுப் புகலிடங்கள்

**வினா 38650—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மாநில அரசின் சாலையோரச் சிறார்களுக்கான இரவுப் புகலிடங்கள் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தினால் பயனடைந்தோர் எத்தனை பேர்?

(இ) காணாமல் போன சிறார்களுக்கு தகவல் மையம் ஏற்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் டான்பாஸ்கோ அன்பு இல்லம் சமூகப் பணிகள் சங்கம், எண் 52, பிரெட்ஸ் ரோடு, மல்லவாடி கேட், சேலம்-7 என்ற முகவரியில் மாநில அரசால் நிதியுதவி பெறும் சாலையோரச் சிறார்களுக்கான இரவுப் புகலிடத்திற்கான திட்டம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) சேலம், டான்பாஸ்கோ அன்பு இல்லம் சமூகப் பணிகள் சங்கம் அரசு ஆணை (ப.வ.) எண் 80, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள்: 29-3-1993ன்படி தொடங்கப்பட்டது. இப்புகலிடத்தில் 50-க்கு மிகாமல் ஒவ்வொரு வருடமும் பயனடைந்து வருகின்றனர்.



2004 பிப்ரவரி 10]

(இ) காணாமல் போன சிறார்களுக்கு தகவல் மையம் ஏற்கெனவே சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் செயல்படுகின்றன. சேலம் சம்பந்தப்பட்ட விவரங்களை கோவை மையம் கவனிக்கிறது.

67—

### சத்துணவுக்கூட கட்டடம்

**வினா 38835—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, சாத்தனூர் ஊராட்சி, இலுப்பையூரிலுள்ள தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, சாத்தனூர் ஊராட்சி, இலுப்பையூரிலுள்ள தொடக்கப்பள்ளிக்கு எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டம்-2 (சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா) (2003-2004)-ன்கீழ் சத்துணவுக் கட்டடம் கட்டப்பட்டது.

68—

### சத்துணவுக் கூடம்

**வினா 38850—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, வெள்ளூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, வெள்ளூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு, சட்டமன்ற உறுப்பினர் நிதியில் சத்துணவுக் கூடம் கட்டப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது.

**69—**

**சமையல் கூடம் கட்டும் திட்டம்**

**வினா 40486—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, மேட்டுத்தாங்கல் தொடக்கப் பள்ளிக்கு சமையல் கூடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, மேட்டுத்தாங்கல் தொடக்கப் பள்ளிக்கு சமையல் கூடம் கட்டும் திட்டம் நடப்பு ஆண்டில் ஏதும் இல்லை என்றாலும், வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் பணி எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**70—**

**சத்துணவுக் கூடத்தை பழுதுபார்த்தல்**

**வினா 40487—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, கீழ்க்குப்பம் ஊராட்சி, பனைமரத்துப்பட்டி கிராமத்தில் சத்துணவுக் கூடத்தின் மேல் கூரையை பழுதுபார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, கீழ்க்குப்பம் ஊராட்சி, பனைமரத்துப்பட்டி கிராமத்தில் சத்துணவுக் கூடத்தின் மேல் கூரையை பழுதுபார்க்கும் பணி முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**71—**

**தொழில்நுட்பப் பயிற்சி மறுவாழ்வு மையம்**

**வினா 41950—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு வட்டம், ஆத்தூர் அரசினர் மாணவ பிற்காப்பு நிறுவனம் இணைந்த அய்யன் திருவள்ளுவர் தொழில்நுட்பப் பயிற்சி மறுவாழ்வு மையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆத்தூர் அரசினர் மாணவ பிற்காப்பு நிறுவனத்திலுள்ள அய்யன் தொழில்நுட்பப் பயிற்சி மறுவாழ்வு மையம் தற்போது இயங்கவில்லை. ஆகையால் மேற்குறித்த மையத்திற்கு தற்போது கட்டடம் கட்டும் எண்ணம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22 6035
சென்னை-600 008
நூலகம்

[2004 பிப்ரவரி 10

**72—**

**அரசு பிற்காப்பு இல்லம்**

**வினா 41953—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு வட்டம், ஆத்தூரில் உள்ள அரசு பிற்காப்பு இல்லத்தில் 2001-2002 ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் செய்த பொருட்களின் விற்பனை மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002-ல் 57 மாணவர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள தொழிற்கல்வி பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்:

1. கணினி, டிடிபி மற்றும் லாமினேஷன் பயிற்சி
2. பெஞ்ச்பிட்டர் பயிற்சி
3. ஏஸி/ரெப்ரிஜரேஷன் பயிற்சி
4. எலக்ட்ரிகல் டெக்னீஷியன் பயிற்சி
5. வீட்டு மின் இணைப்பு மற்றும் பிளம்பிங் பயிற்சி
6. கம்பியர் தானியங்கி பயிற்சி
7. திரை அச்சுக்கலை மற்றும் புத்தகம் கட்டும் பயிற்சி

(ஆ) தொழிற்கல்வி பயிற்சியின்போது மாணவர்கள் எவ்வித பொருளையும் உற்பத்தி செய்யவில்லை. மாணவர்களின் செய்முறைப் பயிற்சியாக பழுதுபார்ப்புப் பணிகள் மற்றும் திரை அச்சுப் பணிகள்



2004 பிப்ரவரி 10]

மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் அரசுக்கு ரூ.2464/- வருவாய் கிடைத்துள்ளது. ஆத்தூர் அரசினர் மாணவர் பிற்கா… நிறுவன தொழிற்கல்வி பயிற்சி மையம் இல்லவாசிகளுக்கு பயிற்… அளிப்பதற்காகவே நிறுவப்பட்டுள்ள மையம் ஆகும்.

**73—**

**பால்வாடிக்குக் கட்டடம்**

**வினா 43201—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றிய… இடையன்கொல்லைப்பட்டியில் பால்வாடிக்குக் கட்டடம் கட்டித்த… அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கல்லாக்கோட்டை ஊராட்சியைச் சார்ந்த இடையன்கொல்லைப்பட்டியில் பால்வாடி மையம் இல்லை. இக்கிராமத்தில் 3 வயது முதல் 5 வயது குழந்தைகளின் எண்ணிக்கை 20 மட்டுமே. ஒரு கிராமத்தில் பால்வாடி மையம் அமைக்க குறைந்தபட்ச… 25 குழந்தைகள் இருக்கவேண்டும். எனவே, பால்வாடிக்குக் கட்டட… கட்டித் தரும் கேள்வி எழவில்லை.

**74—**

**இலவச தையல் இயந்திரம்**

**வினா 44585—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட சமூக நல மையம் மூலமாக வழங்கப்படும் இலவச தையல் இயந்திரத்தின் எண்ணிக்கையை அதிகமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சமூக நலத் துறை மூலம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் மொத்தம் ஒவ்வொரு ஆண்டும் 5,500 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வரப்படுகின்றது. 2003-2004-ல் கடந்த 2 ஆண்டுகளில் வழங்கப்பட்டிருக்க வேண்டிய தையல் இயந்திரங்களையும் சேர்த்து 16,500 தையல் இயந்திரங்கள் வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது. 2003-2004 வரையிலும் தையல் இயந்திரங்கள் வழங்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டதால் தற்போது தையல் இயந்திரங்கள் எண்ணிக்கையை உயர்த்தும் முன்மொழிவு ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

**75—**

**ஆதிதிராவிட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை**

**வினா 42058—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாநில அரசின் கல்வி உதவித் தொகையை எத்தனை ஆதிதிராவிட மாணவர்களுக்கு அரசு வழங்கியுள்ளது?

(ஆ) மைய அரசின் உதவித் தொகை பெற்றவர்கள் எத்தனை பேர்?



விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் மாநில/மைய அரசு கல்வி உதவித் திட்டத்தின் மூலம் பயன் பெற்றோர் விவரம் கீழ்வருமாறு:

| (அ) மாநில அரசின் திட்டம் | பயனடைந்தோர் எண்ணிக்கை | வழங்கிய தொகை (இலட்சங்களில்) |
|---|---|---|
| 1. ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகை | 73120 | 33.15 |
| 2. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை | 602 | 10.46 |
| 3. இலவசக் கல்வித் திட்டம் | 313 | 4.93 |
| மொத்தம் .. | **74035** | **48.54** |
| (ஆ) மைய அரசின் திட்டம் | | |
| 1. ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகை (தூய்மையற்ற தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கானவை) | 603 | 5.08 |
| 2. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை | 9880 | 179.91 |
| மொத்தம் .. | **10483** | **184.99** |

**76—**

**வேலைவாய்ப்பு அலுவலகம்**

**வினா 34668—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரளத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் பட்டப்படிப்பு முடித்து பணி கோரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்கள் 2002 வரை எத்தனை பேர்?

(ஆ) மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கு பரிந்துரைத்தவர்கள் எத்தனை பேர்?

(இ) அதில் நியமனம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் பட்டப் படிப்பு முடித்து பணி கோரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்கள் மொத்தம் 11,158 ஆகும். 2002 ஆம் ஆண்டில் 402 நபர்கள் காஞ்சிபுரம் மற்றும் செங்கற்பட்டு ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களுக்கும் மற்றும் தனியார் நிறுவனங்களுக்குமாக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

(இ) 42 நபர்கள் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் முகவர் பதவிக்காக காஞ்சிபுரம் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்திலும், 23 நபர்கள் அதே பதவிக்காக செங்கற்பட்டு ஆயுள் காப்பீட்டு நிறுவனத்திலும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

**77—**

### தீப்பெட்டி தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்து விவரங்கள்

**வினா 40281—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தீப்பெட்டி தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்துக்கள் எத்தனை?

(ஆ) அதில் உயிரிழந்தவர்கள், படுகாயமடைந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) அரசு அவர்களுக்கு அளித்த நிவாரணம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2001 ஆம் ஆண்டில் 6 விபத்துக்களும் 2002 ஆம் ஆண்டில் 20 விபத்துக்களும் ஏற்பட்டன.





(ஆ) 2001 ஆம் ஆண்டில் உயிரிழந்தவர்கள் 1 நபர், படுகாயம் அடைந்தவர்கள் 4 நபர்கள். 2002 ஆம் ஆண்டில் உயிரிழந்தவர்கள் 7 நபர்கள், படுகாயம் அடைந்தவர்கள் 13 நபர்கள்.

(இ) தீப்பெட்டித் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான கூட்டுத்தனி நபர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் தலா ரூ.50,000/-, மரணம் அடைந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் மாநிலத் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகத்தின்கீழ் மேற்படி தொழிற்சாலைகள் வருவதால் காயமுற்ற தொழிலாளர்களுக்கு மருத்துவ சிகிச்சையும், நிவாரணத் தொகையும் இக்கழகத்தால் வழங்கப்பட்டது.

**78—**

### கல்குவாரியில் வெடி விபத்து

**வினா 40285—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கனிமவள நிறுவனத்திற்குச் சொந்தமான கல்குவாரியில் வெடிவிபத்தில் தொழிலாளர்கள் எத்தனை பேருக்கு 2001-2002 ஆம் ஆண்டில் காயம் ஏற்பட்டது?

(ஆ) இதனைத் தடுக்க எடுத்த நடவடிக்கைகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002ஆம் ஆண்டில் அரசு கனிமவள நிறுவனத்திற்குச் சொந்தமான கல்குவாரியில் வெடி விபத்துக்கள் ஏதும் ஏற்படவில்லை.

**79—**

### சர்க்கரை ஆலையிலுள்ள வடிப்பகங்கள்

**வினா 34480—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உள்ள வடிப்பகங்களின் (Distilleries) திறனளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உள்ள வடிப்பகங்களின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 55 கி.லி. எரிசாராயமும் (Rectified Spirit) 10 கி.லி. சுத்திகரிக்கப்பட்ட எரிசாராயமும் (ENA) ஆகும்.

**80—**

**நிலவள வங்கி வழங்கிய கடன்**

**வினா 27672—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லி நிலவள வங்கி கொடுத்த கடன் எவ்வளவு?

(ஆ) நிலுவையிலுள்ள தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூவிருந்தவல்லி தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி 1927 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவ்வங்கி கடந்த 1997-98 முதல் 2001-2002 வரை ஆகிய ஐந்தாண்டுகளில் மொத்தம் 1369 பயனாளிகளுக்கு ரூ.1462.72 இலட்சம் கடன் வழங்கியுள்ளது. 28-2-2003 நாளைய நிலவரப்படி பூவிருந்தவல்லி தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உறுப்பினர் கடன் நிலுவை 2542 கடன்களில் ரூ.1397.37 இலட்சம் நிலுவையாக உள்ளது.



2004 பிப்ரவரி 10]

**81—**

**திரையரங்குகளில் போலி டிக்கெட்டுகள் விற்பனை**

**வினா 28561—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திரையரங்குகளில் போலி டிக்கெட்டுகள் விற்பதைத் தடுகக அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் திரையரங்குகளில் வணிக வரித் துறை செயலாக்கப் பிரிவு அலுவலர்களால் அவ்வப்போது திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு தணிக்கை செய்யும்போது போலி டிக்கெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டால் வணிக வரித் துறையினரால் அத்திரையரங்குமீது காவல் துறை மூலம் குற்றவியல் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**82—**

**பகுதி நேர நியாய விலைக் கடை**

**வினா 31194—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் மேட்டுத் தெருவில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் எர்ணாபுரம் கடை எண் 2 என்ற முழுநேரக் கடை 895 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. எர்ணாபுரம் மேட்டுத் தெருவில் 80 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதி நேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்ற வரையறை நிறைவு பெறாததால் எர்ணாபுரம் மேட்டுத் தெருவில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

83—

### நியாய விலைக் கடை

**வினா 32161—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரிலுள்ள திருவள்ளுவர் நகரில் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடையை தனியாக பிரித்து கலிப் நகரில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகர கூட்டுறவு பண்டகசாலையால் நடத்தப்படும் திருவள்ளுவர் நகர் நியாய விலைக் கடை எண் 10-ல் உள்ள குடும்ப அட்டைகளைப் பிரித்து 650 குடும்ப அட்டைகளுடன் கலிப் நகர் அர்பன் எண் 23-ல் முழுநேர அங்காடி 13-5-2003 அன்று திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.



84—

### நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா 36913—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, ஆத்தூர்குப்பம் ஊராட்சி, அண்ணா நகர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் உருவாக்கித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தாலுகா, நாட்றாம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை வட்டத்தில், ஆத்தூர் குப்பம் ஊராட்சி எல்லையில், ஆத்தூர் கிராமத்தில் 315 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை அவ்வூர் பஞ்சாயத்து கட்டடத்தில் இலவசமாகவும், 200 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேரக் கடை ஏலரப்பட்டி கிராமத்தில் அந்தப் பகுதியில் உள்ள கோயில் கட்டடத்தில் இலவசமாகவும் செயல்பட்டு வருகிறது. சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிட்டுள்ள அண்ணாநகர் கிராமத்தில் 100 குடும்ப அட்டைகளே உள்ள நிலையில் இதனை உள்ளடக்கிய 315 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஆத்தூர் குப்ப நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் அண்ணாநகர் பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை புதியதாக ஏற்படுத்தவோ அதற்கான புதிய கட்டடம் கட்டவோ சாத்தியக்கூறுகள் இல்லை.

85—

### நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா 38763—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

உசிலம்பட்டி தொகுதி, பொட்டுலுபட்டி பஞ்சாயத்து, பொட்டுலுபட்டிக்கு நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, பொட்டுலுபட்டி பஞ்சாயத்து, பொட்டுலுபட்டி முழுநேர நியாய விலைக் கடை எஸ். போத்தம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் பொட்டுலம்பட்டி பஞ்சாயத்து கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. இக்கட்டடம் மையப்பகுதியில் பாதுகாப்புடன் உள்ளதால் பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்கு உரியதாக உள்ளது. மேலும் புதிய கட்டடம் கட்டுவதற்கு கிராமத்தின் உட்பகுதியில் காலியிடம் இல்லாததாலும், கிராமத்திற்கு வெளியில் கட்டடம் கட்டும் பட்சத்தில் பாதுகாப்பற்ற நிலை உள்ளதால் வாடகையின்றி பஞ்சாயத்து கட்டடத்தில் செயல்பட்டு வரும் பொட்டுலம்பட்டி நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் தேவையில்லை.

**86—**

## நிர்வாக ஊழியர்கள்

**வினா 39739—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பூர், வளர்மதி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் நிர்வாகம் ஊழியர்களிடம் பிடித்தம் செய்துள்ள பணத்தை பி.எப்., இ.எஸ்.ஐ., எல்.ஐ.சி. போன்ற துறைகளுக்கு கட்டாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், இதன் மீது எடுக்கப்படும் நடவடிக்கை என்ன?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

*(ஆ)* ஊழியர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டு நிலுவையாக உள்ள தொகைகளை விரைவில் அந்தந்த நிறுவனங்களில் செலுத்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிடித்தம் செய்யப்பட்ட தொகைகளை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு செலுத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

**87—**

## அரசு ரப்பர் கழகம்

**வினா 34889—திரு. டி. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழகத்திற்கு எத்தனை ஹெக்டேர் நிலம் உள்ளது?

*(ஆ)* எந்த ஆண்டு முதல் அரசுக்கு வருவாய் வர ஆரம்பித்தது?

*(இ)* இந்நிலங்களில் குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகைத் தொகையாக அரசு எவ்வளவு வசூலித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 4279.78 எக்டேர் வன நிலம் உள்ளது.

*(ஆ)* 01-10-1984 ஆம் ஆண்டு முதல் அரசுக்கு குத்தகைத் தொகை மூலம் வருமானம் வரத் தொடங்கியுள்ளது.

*(இ)* குத்தகைத் தொகையாக ரூ.16,46,67,402/- வசூல் செய்யப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

[2004 பிப்ரவரி 10

**88—**

**சாலை அமைத்தல்**

**வினா 36677—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், இருப்பு அரசிம்மன் கோயில் நண்டுகுழி வரை வனத் துறையின் இடத்தின் வழியாக சாலை அமைக்க வனத் துறை அனுமதி அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், அரசிம்மன் நண்டுகுழி வரையில் 700 மீட்டர் தூர சாலை விளாங்குளம் காப்புக் காட்டில் அமைகிறது. காப்புக் காட்டில் சாலை அமைப்பதற்கு வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன்கீழ் மைய அரசின் முன் அனுமதி பெறப்படவேண்டும். எனவே, சம்பந்தப்பட்ட துறையினரிடமிருந்து கருத்துரு வரப் பெற்றால் மைய அரசின் முன் அனுமதி பெற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**89—**

**சாலை அமைக்க வனத் துறை ஒப்புதல்**

**வினா 36678—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, தெற்இருப்பு—நெய்வேலி வட்டம் 29-க்கு சாலை அமைக்க தேவையான 700 மீட்டர் இடத்தைக் கொடுக்க வனத் துறை ஒப்புதல் அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அனுமதி அளிக்கும்?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி தெற்இருப்பு—நெய்வேலி வட்டச்சாலை, விழுப்புரம் வனக்கோட்டம், உளுந்தூர்பேட்டை சரகம், விளாங்குளம் காப்புக் காட்டில் அமைந்துள்ளது. இச்சாலை அமைப்பதற்குத் தேவையான வனநிலம் ஒதுக்குவதற்கு வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன்கீழ் மைய அரசின் முன் அனுமதி பெறவேண்டும். எனவே, சம்பந்தப்பட்ட துறையினரிடமிருந்து கருத்துரு வரப்பெற்றால் மைய அரசின் முன் அனுமதி பெற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**90—**

**வன ஆராய்ச்சி**

**வினா 42070—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூரிலுள்ள வன ஆராய்ச்சி மையத்தில் முந்திரி மரத்திற்கான ஆராய்ச்சி தொடர்பாகவும், பிற வகையிலும் 2002 ஆம் ஆண்டிற்கான செலவினம் எவ்வளவு?

(ஆ) அங்கு ஆண்டுதோறும் உற்பத்தியாகி விற்பனை செய்யப்படும் கன்றுகளின் மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) காட்டாங்கொளத்தூர் வன ஆராய்ச்சி மையத்தில் இருவகை தைல மரங்கள், இருவகை சவுக்கு மரங்கள், சிவப்பு சந்தனம், வேங்கை, உசில், டி.விடி.வி. போன்ற பயன்தரும் மற்றும் வேகமாக வளரும் மரங்கள்

பற்றி வன ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மையத்தில் முந்திரி மரங்கள் தொடர்பான ஆராய்ச்சியின் பணிகள் ஏதும் நடைபெறவில்லை. 2002-2003 ஆம் ஆண்டில் ஏற்கெனவே ஆராய்ச்சிப் பணிகளுக்காக எழுப்பப்பட்ட மரங்களைப் பாதுகாக்க பகல், இரவு நேர காவல் பணிகளுக்காக காவலர் ஊதியம் ரூ.38,340/-ம் மற்றும் ஆராய்ச்சி தோட்டப் பணிகளைப் பராமரிக்க ரூ.26,157/-ம் செலவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இந்த வன ஆராய்ச்சி மையத்தில் ஆராய்ச்சிப் பணிகளுக்காக மரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மரக்கன்றுகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படும் வேலைகள் இந்த மையத்தில் நடைபெறவில்லை. வன விரிவாக்க மையங்கள் அப்பணியினை நிறைவேற்றி வருகின்றன.

91—

**வனத் துறையின் வருமானம்**

**வினா 42073—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் ஆண்டில் செங்கற்பட்டு தொகுதியில் வனத் துறை மூலம் விற்கப்பட்ட தைல மரங்கள் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டில் இம்மண்டலத்திலுள்ள செங்கற்பட்டு தொகுதியில் தைல தோட்டங்கள் ஏதும் விற்கப்படவில்லை. ஆதலால் வருமானம் ஏதும் கிடைக்கப் பெறவில்லை.



92—

**பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா**

**வினா 31233—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஒன்றியம், வெள்ளியங்குன்றம் புதூரில் வாழும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வீடற்ற மக்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், சமயநல்லூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள வெள்ளியங்குன்றம் கிராமத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டடி மனைகள் வழங்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

93—

**பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா 31295—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் கிராமம், பாட்டப்பன் நகரில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அரசு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஆவன செய்யுமா?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் கிராமம், பாட்டப்பன் நகரில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அரசு இலவச வீட்டுமனைப் பட்டா கோரி இதுவரை மனு ஏதும் வரப்பெறவில்லை.

**94—**

### பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 31837—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, எஸ்.என்.புரம் ஊராட்சியில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரையில் சுமார் 1,50,000 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட ஏழை மக்களிடம் வீடு கட்டிக் கொள்ளப் போதிய பணவசதி இல்லாமை, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட பகுதி குடியிருப்பை விட்டு தொலைவில் அமைந்திருப்பது, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகளான சாலை/ தெருவிளக்கு/குடிநீர்/வடிகால் வசதிகள் இல்லாமை போன்ற



2004 பிப்ரவரி 10]

காரணங்களினால் அவர்களால் வீடுகள் கட்டிக்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே, புதிதாக வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டு ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட பகுதிகளில் மேலே குறிப்பிட்ட அடிப்படை வசதிகளை அமைக்கும் திட்டம் ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றது. மேலும் பண்ருட்டி வட்டம், எஸ்.என்.புரம் கிராமத்தில் சுமார் 500 குடும்பங்கள் உள்ளன. அதில் 150 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நத்தம் புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை.

எனவே, பண்ருட்டி தொகுதி எஸ்.என்.புரம் ஊராட்சியில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**95—**

### பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ஊக்கத் தொகை

**வினா 34310—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்கத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 111 மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.1,500/- வீதம் ரூ.1,66,500/- (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து ஐநூறு மட்டும்) ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

[2004 பிப்ரவரி 10

96—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா 34363—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் சாமியார் தர்க்கா பகுதியில் வாழும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகராட்சியில் சாமியார் தர்க்கா பகுதி, மஜூதி புறம்போக்கு என இருவகைப்படுத்தப் பட்டுள்ளதால் இந்த இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க வழி இல்லை.

97—

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 34700—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை தொகுதி, கொமரலிங்கம் பேரூராட்சி, குமரலிங்கத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு குடியிருப்பதற்கு பட்டா கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை தொகுதி, கொமரலிங்கம் பேரூராட்சி, குமரலிங்கத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு குடியிருப்பதற்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுத்து, 2002 ஆம் ஆண்டில் 120 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. தற்போது வீட்டுமனைப் பட்டா கோரி மனுக்கள் எதுவும் நிலுவையில் இல்லை.

98—

## இலவச விட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம்

**வினா 38408—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, எலந்தப்பட்டு ஊராட்சியில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, எலந்தம்பட்டு ஊராட்சியில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

[2004 பிப்ரவரி 10

99—

### பத்திரிகை பதிவு விவரம்

**வினா 40676—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டு வெளியாகும் மொத்த இதழ்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) மாவட்ட வாரியாக பதிவு பெற்றுள்ள எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பத்திரிகை பதிவு நடவடிக்கைகள் மத்திய அரசின் கீழ் உள்ள பத்திரிகை பதிவாளர் அலுவலகத்தைச் சார்ந்ததாகும். செய்தித் துறையின்கீழ் பத்திரிகை பதிவு நடவடிக்கை ஏதுமில்லை.

100—

### உடற்பயிற்சி மையம்

**வினா 37497—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, கொக்கூர் ஊராட்சியில் உடற்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் குத்தாலம் தொகுதி, கொக்கூர் ஊராட்சியில் உடற்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2004 பிப்ரவரி 10]

## *பட்டியல் 5

1—

### மின்சார வாரியத்தின் நிதி நிலவரம்

**வினா 19817—திரு. எச். ராஜா:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலவரம்?

(ஆ) மின் கடத்தி மற்றும் மின் விநியோகத்தின் மூலம் மின் இழப்பின் விழுக்காடு?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆம் நிதி ஆண்டில் மின் வாரியம் 30434 மில்லியன் யூனிட் மின் சக்தியை விற்பனை செய்ததின் மூலம் ரூ.6349.27 கோடியை வருவாயாக ஈட்டியது. இவ்வருவாய்க்கு எதிராக வாரியம் ரூ.7,893.62 கோடியை மின் கடத்தி கொள்முதல், நிலக்கரி மற்றும் எண்ணெய் செலவினங்கள், பணியாளர் செலவு, வட்டி செலவினம் போன்ற வருவாயின செலவினங்களுக்காக செலவிட்டுள்ளது. இதனால் ரூ.1544.35 கோடி பற்றாக்குறை ஏற்பட்டது. வாரியத்திற்கு இதர வருவாயாக ரூ.124.21 கோடியும், மாநில அரசிடமிருந்து மின் கட்டண இழப்பீட்டுத் தொகையாக ரூ.569.50 கோடியும் கிடைக்கப் பெற்றது. இதர வருவாய் மற்றும் மின் கட்டண இழப்பீட்டுத் தொகையை வாரியத்தின் வருவாய் பற்றாக்குறைக்கு எதிராக சரி செய்த பின் வாரியத்தின் நிகர வருவாயின பற்றாக்குறை 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.850.64 கோடியாகும்.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம், மின் செலுத்துகை மற்றும் பகிர்மானத்தில் மின் இழப்பை குறைக்கும் பொருட்டும், தரமான மின்சாரத்தை வழங்கும் பொருட்டும் மின் செலுத்துகை மற்றும் மின்

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

பகிர்மான கட்டமைப்பில் கடந்த நான்கு ஆண்டுகளில் பின்வருமாறு முதலீடு செய்துள்ளது:

| | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|
| | | (கணக்கில் உள்ளபடி) | | |
| மின் பாதை மற்றும் மின் பகிர்மான கட்டமைப்பில் வாரியம் செய்துள்ள முதலீடு (ரூபாய் கோடியில்) | 563.74 | 600.052 | 960.81 | 607.57 |
| மின் செலுத்துகை மற்றும் மின் பகிர்மானத்தில் மின் இழப்பு | 16.90% | 16.75% | 16.50% | 16.25% |

தேசிய சராசரி மின் பாதை இழப்பான 27.8 சதவிகிதத்திற்கு எதிராக தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் செலுத்துகை மற்றும் மின் பகிர்மான இழப்பானது நாட்டிலேயே மிகக் குறைவானதாகும்.

மேலும், மின் வாரியம் மின் செலுத்துகை மற்றும் மின் பகிர்மான கட்டமைப்பை மேம்படுத்தவும், வலிமைபடுத்தும் பொருட்டும் 10 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.5914 கோடியை முதலீடு செய்ய உத்தேசித்துள்ளது. மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்படுத்தல் மற்றும் சீரமைப்புத் திட்ட உதவியின் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியம், மின் பாதை மற்றும் மின் பகிர்மான கட்டமைப்பை மேம்படுத்தவும், அதன்மூலம் மின் இழப்பை வெகுவாகக் குறைக்கவும் உத்தேசித்துள்ளது.

**2—**

## இலவச மின்சாரம்

**வினா 33150—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்தில் இலவச மின்சாரம் கொடுத்ததில் மூப்புநிலை கோட்டத்தில் மாறுபாடாக இருப்பது அரசுக்குத் தெரியுமா?





(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் ஆணைப்படி தமிழ்நாடு மின்சார வாரியம் ஒவ்வொரு மின் பகிர்மான வட்டங்களுக்கும் ஒவ்வொரு ஆண்டிற்கும் விவசாய மின் இணைப்புகள் வழங்க அந்த வட்டங்களில் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட இலக்கு நிர்ணயம் செய்து மின் இணைப்புகள் வழங்குகிறது. இதன்படி அனுமதிக்கப்பட்ட குறியீடு அளவுக்குட்பட்டு அவ்வட்டத்தில் உள்ள மின் பகிர்மான கோட்டங்களுக்கான இலக்கினை கோட்டங்களில் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களைக் கணக்கில் கொண்டு மேற்பார்வைப் பொறியாளர் நிர்ணயம் செய்கிறார். ஆனால் கோட்டங்களுக்கு இடையே நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் மற்றும் மூப்பு நிலையிலும் உள்ள வேறுபாடு காரணமாக, நிர்ணயிக்கப்படும் இலக்கில் சிறிதளவு வேறுபாடு ஏற்படுகின்றது.

எனினும், விவசாய இணைப்புகள் வழங்க இலக்கீடு நிர்ணயம் செய்யப்படும்பொழுது அனைத்து நாள்பட்ட விண்ணப்பங்களின் நிலையினைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படுகின்றது. அவ்வகையில் புதுக்கோட்டை வட்டத்திற்குட்பட்ட புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி கோட்டங்களில் ஜனவரி 1988 வரை பெறப்பட்ட விண்ணப்பங்கள் இலக்கீடுக்குட்பட்டு மூப்பு நிலை பெற்றும், கீரனூர் கோட்டத்தில் ஏப்ரல் 1988 வரையிலான விண்ணப்பங்கள் மூப்புநிலை பெற்று மிகச் சிறிதளவே வேறுபாடு உள்ளவாறு கோட்டங்களுக்கு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு உள்ளன. இது வரும் நிதியாண்டுகளில் சரி செய்யப்பட்டுவிடும்.

**3—**

## மின் கட்டணம் செலுத்தும் வசதி

**வினா 35649—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்குத் தொகுதியில் பழைய குயவர்பாளையம் சாலையில் உள்ள அரசு மரம் மின் பிரிவு அலுவலகத்தை அப்பகுதி மக்கள் மின் கட்டணம் செலுத்தும் வகையில் விரிவுபடுத்தும் திட்டத்தை அரசு நிறைவேற்றித் தருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை கிழக்குத் தொகுதி, பழைய குயவர்பாளையம் சாலையில் அரசு மரம் மின் பிரிவு அலுவலகத்திற்கு புதிதாகக் கட்டடம் கட்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது. புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் மின் கட்டணம் செலுத்தும் வசதி மீண்டும் தொடரப்படும்.

**4—**

**சூரிய எரிசக்தி சாதனங்கள்**

**வினா 36546—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மற்றும் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் சூரிய எரிசக்தி சாதனங்கள் தொழிலில் ஈடுபடுவோருக்கு அரசு மானியம் வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சூரிய சக்தி சாதனங்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்கி வருகிறது. இந்த மானியமானது சென்னை நகருக்கு மட்டுமின்றி தமிழகத்தின் இதர





பகுதிகளிலும் சூரியசக்தி சாதனங்களை விற்பனை செய்வோருக்கு வழங்கப்படும். மேலும் சூரிய ஒளி லாந்தர் விளக்குகள் தவிர பிற சூரிய சக்தி சாதனங்கள்/அமைப்புகளான சூரிய ஒளி வீட்டு விளக்குகள், தெரு விளக்குகள், சூரிய ஒளி மின் நிலையங்கள், சூரிய ஒளி மின் பம்புகள் மற்றும் சூரிய சக்தி அடுப்புகள் முதலான சாதனங்களை வாங்கி உபயோகப்படுத்தும் பயனாளிகளுக்கு மத்திய அரசின் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) சூரிய சக்தி சாதனங்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள் மற்றும் சூரிய சக்தி சாதனங்களுக்கான தனிப் பிரிவுகள் (கௌண்டர்கள்) நிறுவ வழங்கப்படும் மானிய விவரம் பின்வருமாறு:—

(1) "ஆதித்யா சோலார் ஷாப்" என்ற பெயருடன் குறைந்தபட்சம் 200 ச.மீ. பரப்பளவில் விற்பனை நிலையங்கள் துவங்க ரூ.50,000/- நிதி உதவி வழங்கப்படும். மாவட்டம் ஒன்றிற்கு ஒரு விற்பனை நிலையம் அமைக்க இந்நிதி உதவி வழங்கப்படும். இது சென்னை நகருக்கும் பொருந்தும்.

(2) தொலைக்காட்சி, குளிர்சாதன கருவிகள் மற்றும் துணி துவைக்கும் இயந்திரம் முதலான மின்சாதனங்களை விற்பனை செய்து வரும் விற்பனை நிலையங்களில் சுமார் 50 ச.மீ. பரப்பளவில் சூரிய சக்தி சாதனங்களுக்கான விற்பனை தனிப் பிரிவு (கௌண்டர்) அமைக்க விழைவோருக்கு நிதி உதவியாக ரூ.20,000/- வழங்கப்படுகிறது.

மேற்கூறப்பட்ட நிதி உதவியானது மத்திய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்திலிருந்து 2002-2003 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டத்திற்கானதாகும். 2003-2004 ஆம் ஆண்டில் செயல்படுத்த இருக்கிற திட்டத்திற்கான தகவல்கள் இன்னும் பெறப்படவில்லை.

மேலும் மத்திய அரசு 2002-2003 ஆம் ஆண்டில் சூரிய ஒளி சாதனங்களை வாங்கிப் பயன்படுத்தும் பயனாளிகளுக்கு வழங்கிய மானியம் பின்வருமாறு:—

[2004 பிப்ரவரி 10

| கருவியின் பெயர் | அரசு மானியம் | பயனாளிகள் |
|---|---|---|
| (1) சூரிய ஒளி வீட்டு விளக்கு அமைப்புகள் | | |
| (அ) 18 வாட் குழல் விளக்கு ஒன்று | ரூ.3,000/- | ஒருவருக்கு ஒரு அமைப்பு மட்டும் |
| (ஆ) 37 வாட் குழல் விளக்கு இரண்டு/ஒரு குழல் விளக்கு மற்றும் ஒரு மின்விசிறி | ரூ.5,500/ | ஒருவருக்கு ஒரு அமைப்பு மட்டும் |
| (இ) 74 வாட் குழல் விளக்கு இரண்டு குழல் மின் விளக்குகள், ஒரு மின்விசிறி | ரூ.10,000/- | ஒருவருக்கு ஒரு அமைப்பு மட்டும். |
| **(2) சூரிய ஒளி தெருவிளக்கு** (ஒன்று) | | |
| (மானியம் பெற குறைந்தபட்சம் 5 தெருவிளக்குகள் வாங்க வேண்டும்) | ரூ.11,000/- | ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் இலாப நோக்கம் இல்லாத நிறுவனங்கள் |
| **(3) சூரிய ஒளி மின் நிலையங்கள் அமைக்க** | | |
| (1) கி.வாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்யும் மின் நிலையங்கள் | ரூ.1,80,000/- (அ) 50 சதவீதம் | ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் இலாப நோக்கம் இல்லாத நிறுவனங்கள் |
| **(4) சூரிய ஒளி மின்பம்புகள் (900 வாட் வரை)** | | |
| (விவசாயம் மற்றும் சமுதாய குடிநீர் தேவைகளுக்கு) (3 எச்.பி. மற்றும் 30 மீட்டர் ஆழத்திலிருந்து நீரிறைக்க) | ஒரு வாட்டுக்கு ரூ.110/- அதிகபட்சமாக ரூ.2.50 இலட்சம் | அனைவருக்கும். |
| **(5) சூரிய சக்தி அடுப்புகள்** | | |
| (1) டிஷ் குக்கர் (10 முதல் 15 நபர்களுக்கு சமையல் செய்ய) | மொத்த விலையில் 50% ரூ.2,500/-க்கு உட்பட்டு | அனைவருக்கும் |
| (2) சமுதாய கூடத்திற்கான சூரிய சக்திஅடுப்புகள் (40 முதல் 50 நபர்களுக்கு சமையல் செய்ய) | மொத்த விலையில் 50% ரூ.2,500/-க்கு உட்பட்டு | அனைவருக்கும் |



2004 பிப்ரவரி 10]

மேலும் மாநில அரசு 2003-2004 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட சூரிய ஒளி சாதனங்களுக்கு மானியம் வழங்க உள்ளது.

| கருவிகள் | மானியம் | பயனாளிகள் |
|---|---|---|
| **(1) சூரிய சுடுகாற்று அமைப்பு** | | |
| (தானியங்கள், நெல், பருப்புகள், பழங்கள் மற்றும் காய்கறிகளை உலரச் செய்ய) (செலவு ச. மீட்டருக்கு ரூ.4,500/- | ஒரு ச. மீட்டருக்கு ரூ.1,000/- | அனைவருக்கும் |
| **(2) சூரிய சுடுநீர் அமைப்புகள்** | | |
| (1) நாளொன்றுக்கு 1000 லிட்டர் சுடுநீர் தயாரிக்க உதவும் சுடுநீர் அமைப்புகள் | ரூ.20,000/- | அனைவருக்கும் |
| **(3) சூரிய ஒளி மின்பம்புகள்** | | |
| (விவசாயம் மற்றும் சமுதாய குடிநீர் தேவைகளுக்கு) (900 வாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின்பம்புகள்) | மொத்த விலையில் 20% அதிகபட்சமாக ரூ.65,000/- | அனைவருக்கும் |

**5—**

## மின்தட்டுப்பாட்டை நீக்குதல்

**வினா 42985–திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி, கருங்குழி கிராமத்தில் மின் தட்டுப்பாட்டை நீக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் ம்ற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி, கருங்குழி கிராமத்தில் தற்போது மின் தட்டுப்பாடு எதுவும் இல்லை. பகலில் 6

[2004 பிப்ரவரி 10

மணிநேரமும், இரவில் 8 மணிநேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. எதிர்பாராமல் ஏற்படும் மின்தடைகள் உடனடியாக சீர் செய்யப்படுகின்றன. சமீபத்தில் சென்னை மின் சுமை பகிர்ந்தளி நடுவனகத்தின் உத்தாவின் பேரில் 19-9-2003 முதல் 26-9-2003 வரை சில நாட்களில் பகலில் மூன்று மணிநேரமும், இரவில் ஆறு மணிநேரமும் மும்முனை மின்சாரம் மின் கட்டமைப்பின் நிலையைப் பொறுத்து வழங்கப்பட்டது. தற்போது தட்டுப்பாடு இல்லாமல் மின் விநியோகம் செய்யப்படுகிறது

6—

**மின்மாற்றி சரி செய்தல்**

**வினா 42995–திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மாச்சாரப்பாளையம் கிராமத்திலுள்ள மின்மாற்றி பழுதடைந்துள்ளதை சரி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மாச்சாரப்பாளையம் கிராமத்தில் தற்பொழுது மின்மாற்றி எதுவும் பழுதடைந்த நிலையில் இல்லை. இக்கிராமத்தில் 13-12-2002 அன்று பழுதான கீழூர் மின்மாற்றி எண் 4, 28-12-2002 அன்று மாற்றப்பட்டு மின்னூட்டம் அளிக்கப்பட்டது.

7—

**மின்சார விநியோகம்**

**வினா 43047–டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், மேலே காயாம்பட்டி கிராமத்தில் விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் விநியோகிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், மேலே காயாம்பட்டி கிராமத்தில் மொத்தம் 104 விவசாய மின் இணைப்புகள் உள்ளன. தற்போது 5 மின்மாற்றிகள் இந்தக் கிராமத்தில் உள்ளன. இந்த மின்மாற்றிகளின் திறன் இந்த விவசாய மின் இணைப்புகளில் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளது. இந்த மின்மாற்றிகள் மூலம் விவசாயத்திற்கு முழுவதுமாக மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது.

8—

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா 43050–டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், முதுகுளத்திலுள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், முதுகுளத்திலுள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் விளக்குகள்/ குடிசை விளக்குகள் அமைக்கக்கோரும் விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை.

விண்ணப்பம் முறையான படிவத்தில் முதுகுளம் பகுதி ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு கோரி சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் பெறப்பட்டால் வாரிய விதிகளுக்குட்பட்டு உடனடியாக மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**9—**

### பண்ணை இயந்திரமாக்கும் திட்டம்

**வினா 28950—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002—ல் புதுக்கோட்டை தொகுதி, குன்னாண்டார் கோயில் ஒன்றியத்தில் பண்ணை இயந்திரமாக்கும் திட்டத்தின்கீழ் பயன்பெற்ற விவசாயிகள் விவரம் என்ன?

(ஆ) நடப்பு நிதியாண்டில் அரசின் திட்டம் என்ன?

(இ) பயனாளிகள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பண்ணை இயந்திரமாக்கும் திட்டத்தின்கீழ் குன்னாண்டார்கோயில் ஒன்றியத்தில் ரூ.30,000/- மானியத்தில் 2 எண்கள் பவர் டில்லர்கள், தானிய உற்பத்தித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் தானிய உற்பத்தித் திட்டத்தின் (ரெகுலர்) கீழ் 20 எண்கள் (பவர் டில்லர்கள்) விசை உழுவை கருவிகள், 2 எண்கள் டிராக்டர்கள், 3 எண்கள் (பவர் திரா்ஷர்கள்) கதிரடிக்கும் இயந்திரம் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பவர் டில்லர் ஒன்றிற்கு ரூ.30,000/-மும், 35 எச்.பி. டிராக்டர் ஒன்றிற்கு ரூ.30,000/-மும் பவர் திராஷர் ஒன்றிற்கு ரூ.15,000/-மும் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

(இ) பவர் டில்லர்கள் விநியோகத்தில் 4 எண்களும், 35 எச்.பி. டிராக்டர் 1 எண்ணும் வழங்கப்பட்டு 5 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.



**10—**

### சத்துணவுக்கூடம்

**வினா 32262—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மகாராஜபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மகாராஜபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு நல்ல கட்டடம் உள்ளது. எனவே, புதியதாக கட்டடம் தேவை இல்லை.

**11—**

### சத்துணவுக் கட்டிடம் கட்டுதல்

**வினா 32265—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, செம்பியன் வேலன்குடி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சத்துணவு கட்டிடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, ஓலையாம்புத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த செம்பியன் வேலன்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவு சமையல் கூடத்திற்கு நிரந்தாக் கட்டடம் கட்டி வழங்கப்பட்டுள்ளது. எனவே, புதிய கட்டடம் தேவை இல்லை.

[2004 பிப்ரவரி 10

12—

### சத்துணவுக் கட்டடம்

**வினா 32267—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பூங்கொடி ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மாதாவேளூர் ஊராட்சி, பூங்கொடியிலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு நிரந்தர சத்துணவு மையக் கட்டடம் கட்டி பராமரித்து வரப்படுகிறது. எனவே, புதிய கட்டடம் கட்ட தேவையில்லை.

13—

### சத்துணவுக் கூடம்

**வினா 32268—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெரம்பூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, குன்னம் ஊராட்சி, பெரம்பூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு நிரந்தர சமையல் கட்டடம் கட்டி வழங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே, புதிய கட்டடம் தேவை இல்லை.



2004 பிப்ரவரி 10]

14—

### சத்துணவுக்கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம்

**வினா 32270—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மகேந்திரப்பள்ளி ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மகேந்திரப்பள்ளி ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு, ஏற்கெனவே தாட்கோ மூலம், சத்துணவுக்கூடம் கட்டி வழங்கப்பட்டுள்ளது. பழுது நீக்கம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15—

### சத்துணவுக்கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம்

**வினா 32274—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சோதியக்குடி ஊராட்சியிலுள்ள சிதம்பரநாதபுரம் உதவிபெறும் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சோதியக்குடி ஊராட்சியிலுள்ள சிதம்பரநாதபுரம் உதவிபெறும் பள்ளிக்கு சத்துணவுக்கூடம், சிறப்பு நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் வரும் நிதி ஆண்டில் கட்டித் தரப்படும்.

[2004 பிப்ரவரி 10

16—

## சத்துணவுக் கூடம்

**வினா 32276–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மாங்கனாம்பட்டு ஊராட்சி ஒன்றியம் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மாங்கனாம்பட்டு ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு நல்ல கட்டடம் கட்டி வழங்கப்பட்டுள்ளது. எனவே, புதிய கட்டடம் கட்டும் திட்டம் அவசியமில்லை.

17—

## சத்துணவுக் கூடம் அமைக்கும் திட்டம்

**வினா 32277–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கடுக்காகிராமம் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கடுக்காகிராமம் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் நிதி நிலைக்கேற்ப வரும் நிதியாண்டில்



2004 பிப்ரவரி 10]

முன்னுரிமை அடிப்படையில் கட்டிடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

18—

## சத்துணவுக்கூடம்

**வினா 32283–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் உள்ள தாடாளன்கோவில் ஊழியக்காரன்தோப்பு, மேலமடவிளாகம் நகராட்சி துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் உள்ள தாடாளன்கோவில் ஊழியக்காரன்தோப்பு, மேலமடவிளாகம் நகராட்சி துவக்கப் பள்ளிக்கு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளது.

19—

## முதியோர் உதவித்தொகை

**வினா 33966–திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு சமூக [illegible] துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், பூலாங்கால் பகுதியில் முதியோர் உதவித்தொகை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு உதவித்தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், பூலாங்கால் பகுதியில் 32 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டு பயனாளிகள்

[2004 பிப்ரவரி 10

பயனடைந்து வருகிறார்கள். மேலும் தற்போது பூலாங்கால் பகுதியில் முதியோர் உதவித்தொகை கோரி விண்ணப்பித்த 6 நபர்களில் தகுதியுடைய 2 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**20—**

**குழந்தைகள் பராமரிப்பு இல்லம்**

**வினா 35286—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டத்தில் ஆதரவற்ற/கைவிடப்பட்ட குழந்தைகள் நலத்திற்காக எத்தனை பராமரிப்பு இல்லங்களை அரசு நடத்துகிறது?

(ஆ) மொத்தம் எத்தனை குழந்தைகள் உள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்பும் மாவட்டத்தில் ஆதரவற்ற/கைவிடப்பட்ட குழந்தைகள் நலத்திற்காக அரசு பராமரிப்பு இல்லங்கள் எதுவும் நடத்தப்படவில்லை. ஆனால், அரசு மானியத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் ஆதரவற்ற குழந்தைகளுக்காக சிறுமலர் சிறார் இல்லம், ஓம் நமசிவாய சமூகநல சேவா மாதர் சங்கம் மற்றும் புனித ஆண்டோனிஸ் சிறார் இல்லம் என மூன்று இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

**21—**

**இலவசப் பாடப் புத்தகம்**

**வினா 38649—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஏழை விதவை குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?



2004 பிப்ரவரி 10]

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டு எத்தனை பேர் பயன் அடைந்துள்ளார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். சேலம் மாவட்டத்தில் ஏழை விதவை குழந்தைகளுக்கு இலவச பாடப் புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) கடந்த ஆண்டு சேலம் மாவட்டத்திற்கு குறிப்பேடுகள் வழங்கும் திட்டத்தில் 431 பேர் பயனடைந்துள்ளார்கள்.

**22—**

**கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் இளைஞர் இல்லங்கள்**

**வினா 41963—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமூகப் பாதுகாப்புத் துறையைச் சார்ந்த கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் இளைஞர் இல்லங்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டு அரசினர் சிறுவருக்கான குழந்தைகள் இல்லம் ஏற்கெனவே இயங்கி வருகிறது. அந்த இல்லத்தில் ஒரு வரவேற்பு மையமும் (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவையான குழந்தைகளுக்கு) செயல்படுகிறது. சென்னையிலுள்ள அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களைச் சேர்ந்த தவறிழைத்த சிறுவர்/சிறுமியர் அனுமதிக்கப்படுகின்றனர்.

**23—**

## அங்கன்வாடி கட்டடங்கள் கட்டும் திட்டம்

**வினா 47285—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, நாட்டுமங்கலம் ஊராட்சியில் கொள்ளக்காடு கிராமம், ஆவுடையார்கோவில் ஒன்றியம், வேட்டனூர் மற்றும் மேலப்பட்டு ஊராட்சியில் வன்னியம்பிள்ளை வயல் ஆகிய இடங்களில் அங்கன்வாடி கட்டடங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தற்போது அங்கன்வாடி கட்டடங்கள் கட்டுவதற்கு திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**24-**

## புதிய பேருந்துகள் இயக்கம்

**வினா 17829—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து திருப்பதிக்குச் செல்ல போதுமான பேருந்துகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மேலும் கூடுதலாக புதிய பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து திருப்பதிக்குப் பயணிகளின் தேவைக்கேற்ப பேருந்துகளை இயக்கி வருகின்றது. தற்போது கீழ்க்காணும் தடப் பேருந்துகள் சேலத்திலிருந்து அதன் வழியாகவும் திருப்பதிக்கு இயக்கப்பட்டு வருகின்றது.



| வரிசை எண் | தட எண் | வழித்தடம் | மொத்த பேருந்துகள் | மொத்த நடைகள் |
|---|---|---|---|---|
| 1. | 89 | சேலம்-திருப்பதி வழி குடியாத்தம் | 2 | 4 |
| 2. | 849 | சேலம்-திருப்பதி வழி வேலூர் | 6 | 12 |
| 3. | 835 | ஈரோடு-திருப்பதி வழி சேலம் | 4 | 4 |
| 4. | 962 | கோயம்புத்தூர்-திருப்பதி வழி சேலம் | 4 | 4 |
| 5. | எஸ். 981 | திருச்செந்தூர்-திருப்பதி வழி சேலம் | 2 | 2 |
| 6. | 964 | பொள்ளாச்சி-திருப்பதி வழி சேலம | 2 | 2 |
| | | மொத்த பேருந்துகள்/நடைகள் | 20 | 28 |

தற்போது சேலத்திலிருந்து திருப்பதிக்கு இயக்கப்படும் தடம் 809 மற்றும் 849-க்கே சராசரி பயணிகளின் விகிதாச்சாரம் (ஏப்ரல் 2001 முதல் மார்ச் 2002 கணக்கீட்டின்படி) 86 விழுக்காடு மட்டுமே உள்ளது. இந்நிலையில் மேற்படி தடத்தில் (சேலம்-திருப்பதி) தற்போது கூடுதல் பேருந்து இயக்க சாத்தியமில்லை. பயணிகளின் தேவை அதிகரிக்குமானால் மேலும் கூடுதலாக புதிய பேருந்துகளை இயக்குவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**25—**

## கீழ்க்குப்பம் வழியாக பேருந்து இயக்கம்

**வினா 18323—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டிக்குச் சென்று கல்வி பயின்றுவிட்டு கீழ்க்குப்பம் சேர்ந்த மாணவர்கள், மாணவியர்கள் பயன்பெற அரசு பேருந்தை மாலை 5 மணி அளவில் கீழ்க்குப்பத்திற்கு இயக்க அரசு முன்வருமா?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பண்ருட்டி-நெய்வேலி நகரம் இடையே இயக்கப்படும் தடம் எண் டி7 பண்ருட்டி-காட்டுக்கூடலூர் 12 நடைகளிலும், தடம் எண் டி25 பண்ருட்டி-காட்டுக்கூடலூர் இடையே இயக்கப்படும் நான்கு நடைகளிலும் கீழ்க்குப்பம் வழியாக இயக்கப்படுகின்றது. இவற்றில் டி7 மூலம் மாலை 5-25 மணியளவில் பண்ருட்டியில் புறப்படும் நடையில் பள்ளி மாணவ, மாணவியர்கள் செல்ல வசதியாக ஏ. மேல்மாம்பட்டு கிராமத்திற்கு இயக்கப்படுகிறது. மிகுதியான எண்ணிக்கையில் இக்கிராம பள்ளி மாணவ மாணவியர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் பண்ருட்டி-ஏ. மேல்மாம்பட்டு நடையை விடுவித்து கீழ்க்குப்பம் வழியாக இயக்க முற்பட்டால் இக்கிராமப் பள்ளி மாணவ, மாணவியர்களால் பிரச்சினை எழ வாய்ப்புள்ளது. எனவே இந்நடையை மாற்றி இயக்கிட இயலாது. எனினும், இதற்கு அடுத்தபடியாக மாலை 6-15 மணிக்கு இயக்கப்படும் நடையானது கீழ்க்குப்பம் வழியாக இயக்கப்படுகிறது.

**26—**

### வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

**வினா 27532—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை இடங்களில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது?

(ஆ) அரசுக் கட்டடத்தில் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 25 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.



2004 பிப்ரவரி 10]

(ஆ) தனியார் கட்டடத்தில் இயங்கும் 25 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் சொந்தமான கட்டடங்கள் கட்ட இடம் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்துத் துறைக்கு நிலம் மாற்றம் செய்தபின் நிதி ஒதுக்கீடு பெற்று சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**27—**

### செய்யாறு பேருந்து நிலையம்

**வினா 29418—திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதியில் உள்ள செய்யாறு பேருந்து நிலையம் புதியதாக இருந்தும் பேருந்துகள் சாலை ஓரங்களில் நிறுத்தி வைக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செய்யாறு வழியாக இயக்கப்படும் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் செய்யாறு பேருந்து நிலையத்திற்குள்தான் சென்று வருகின்றன. மேலும் செய்யாறு பேருந்து நிலையம் முழுப் பயன்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

**28—**

### தொழிலாளர் நல நீதிமன்றம்

**வினா 29949—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் தொகுதி வாரியாக ஒரு தொழிலாளர் நல நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தொழிலாளர் நீதிமன்றங்களுக்கு தீர்ப்புக்கு விடப்படும் தொழிற்தாவாக்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால், தமிழகம் முழுவதும் தொகுதிவாரியாக தொழிலாளர் நீதிமன்றம் அமைத்திட அவசியம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.

**29—**

**பணிக் குழுக்கள்**

**வினா 30077—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை தொழிற்சாலைகளில் பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன?

(ஆ) அவற்றில் விதிமுறைகளின்படி தேர்தல்கள் நடத்தப்படுகின்றனவா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தொழில் தகராறு சட்டம் 1947, பிரிவு 3(1)ன்படி, 100 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிலகங்களில் பணிக் குழுவினை அமைக்குமாறு அரசு உத்தரவிட்டால், பணிக் குழுவினை அமைக்க வேண்டும். அப்பணிக் குழுவில் பணியாளர்களின் பிரதிநிதிகள், நிர்வாகத்தினரின் பிரதிநிதிகளை விட குறையாதிருக்க வேண்டும். மேலும், தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினரிடையேயான உறவை மேம்படுத்துவதற்கான நட க்கை எடுப்பதும், கருத்து வேறுபாடுகளைக் களையவும், பொதுவான கருத்துக்களைக் கொணர பரிந்துரைப்பதும் இதன்



2004 பிப்ரவரி 10]

நோக்கமாகும். இதுகாறும் தமிழகத்தில் மொத்தம் 76 தொழிற்சாலைகளில் பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(ஆ) ஆம். மேற்சொன்ன தொழிற்சாலைகளில் பணிக் குழுக்களில் விதிமுறைகளின்படி தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

**30—**

**வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்**

**வினா 31372—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோபிச்செட்டிப்பாளையத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கோபிச்செட்டிப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட பச்சைமலை திருக்கோயிலுக்குச் சொந்தமான 3 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு, போக்குவரத்துத் துறைக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்துத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டதும் அரசின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் சொந்தக் கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**31—**

**கனரக மோட்டார்**

**வினா 33541—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, சங்ககிரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் 2001-2002 ஆம் ஆண்டு கனரக மோட்டார் ஓட்டுவதற்கான லைசென்ஸ் எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர், நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் 2,300 கனரக ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**32—**

**கருப்பு வில்லைகள் ஒட்டாத வாகனங்கள்**

**வினா 33894—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரும்பாலான வாகனங்களின் முகப்பு விளக்கின் நடுவில் கருப்பு வில்லைகள் ஒட்டாத வாகனங்களின் ஓட்டுநர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

திருத்திய மோட்டார் வாகன சட்டப்படி முகப்பு விளக்குகளில் கருப்பு வர்ணம் பூசுவது கட்டாயமாக்கப்படவில்லை. மேலும் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சரகம் நவீன வாகனங்களில் அதிக ஒளிக்கற்றை மற்றும் குறைந்த ஒளிக்கற்றை வசதி உள்ளதால் விளக்குகளில் கருப்பு வர்ணம் பூசவேண்டிய அவசியம் இல்லை என ஆலோசனை வழங்கியுள்ளது. எனவே, இது தொடர்பாக ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை.



**33—**

**தொழிலாளர்களுக்கு நிவாரணம்**

**வினா 39420—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கு நிவாரணம் தற்போது வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை தொழிலாளர்களுக்கு, எவ்வளவு தொகை, எந்த மாதம் வரை வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 31-3-1990-க்குப் பிறகும், 30-4-1998-க்கு முன்னரும் மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு 1-5-1999 முதல் மாதம் ரூ.250/- உதவித் தொகை பட்டுவாடா செய்வதற்கான ஆணை, அரசு ஆணை எண் 88, தொழிலாளர்கள் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 28-6-1999-ல் வெளியிடப்பட்டது. அதன்படி, தகுதியுள்ள தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இதுவரை இத்திட்டத்தின்கீழ் 38 நிறுவனங்களில் பணிபுரிந்த 8,975 தொழிலாளர்களுக்கு மார்ச் 2003 வரை ரூ.2,67,86,000/- உதவித் தொகையாக பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

**34—**

**தொழிற்தகராறுகள்**

**வினா 39425—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர், நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் 2,300 கனரக ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**32—**

**கருப்பு வில்லைகள் ஒட்டாத வாகனங்கள்**

**வினா 33894–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரும்பாலான வாகனங்களின் முகப்பு விளக்கின் நடுவில் கருப்பு வில்லைகள் ஒட்டாத வாகனங்களின் ஓட்டுநர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

திருத்திய மோட்டார் வாகன சட்டப்படி முகப்பு விளக்குகளில் கருப்பு வர்ணம் பூசுவது கட்டாயமாக்கப்படவில்லை. மேலும் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சரகம் நவீன வாகனங்களில் அதிக ஒளிக்கற்றை மற்றும் குறைந்த ஒளிக்கற்றை வசதி உள்ளதால் விளக்குகளில் கருப்பு வர்ணம் பூசவேண்டிய அவசியம் இல்லை என ஆலோசனை வழங்கியுள்ளது. எனவே, இது தொடர்பாக ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை.



**33—**

**தொழிலாளர்களுக்கு நிவாரணம்**

**வினா 39420–திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கு நிவாரணம் தற்போது வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை தொழிலாளர்களுக்கு, எவ்வளவு தொகை, எந்த மாதம் வரை வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 31-3-1990-க்குப் பிறகும், 30-4-1998-க்கு முன்னரும் மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு 1-5-1999 முதல் மாதம் ரூ.250/- உதவித் தொகை பட்டுவாடா செய்வதற்கான ஆணை, அரசு ஆணை எண் 88, தொழிலாளர்கள் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 28-6-1999-ல் வெளியிடப்பட்டது. அதன்படி, தகுதியுள்ள தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இதுவரை இத்திட்டத்தின்கீழ் 38 நிறுவனங்களில் பணிபுரிந்த 8,975 தொழிலாளர்களுக்கு மார்ச் 2003 வரை ரூ.2,67,86,000/- உதவித் தொகையாக பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

**34—**

**தொழிற்தகராறுகள்**

**வினா 39425–திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொழிலாளர் நலத் துறையிடம் தேங்கி நிற்கும் தொழிற்தகராறுகள் எத்தனை?

(ஆ) இவைகள் எப்போது தீர்க்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 31-7-2003 அன்றுள்ள நிலவரப்படி, கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு தொழிற்தாவாக்கள் நிலுவையில் உள்ளன:-

| | |
|---|---|
| பிரிவு 2-ஏயின்கீழ் | - 293 |
| பிரிவு 2-கேயின்கீழ் | - 115 |
| மொத்தம் | - 408 |

(ஆ) தொழிற்தகராறு சட்டப் பிரிவு 2-ஏ-ன்கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் 3 மாதங்களுக்குள் முடிக்கப்படுகின்றன. இத்தாவாக்கள் தனிநபரின் பணிநீக்கம் தொடர்பானவையாகும். இருதரப்பாரும் ஒப்புக்கொள்ளும் நேர்வுகளில் ஒப்பந்தம் ஏற்படுத்தியும், அவ்வாறு இல்லாதபட்சத்தில் சமரச முறிவறிக்கையும் அனுப்பப்படுகின்றன. சில நேர்வுகளில் மனுதாரர் அல்லது எதிர் மனுதாரர் செய்யும் காலதாமதத்தினால் தாமதம் ஏற்படுகிறது.

தொழிற் தகராறு சட்டப் பிரிவு 2-கே-ன்கீழ் எழுப்பப்படும் தாவாக்களில் தொழிற்சங்கம் மற்றும் நிர்வாகங்கள், மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்களாக உள்ளனர். இவற்றில் தனிநபர் சம்பந்தப்பட்ட பதவி உயர்வு, தண்டனை, சீனியாரிட்டி போன்ற தாவாக்கள் விரைவில் முடிக்கப்படுகின்றன. அவ்வாறு இல்லாதபட்சத்தில் சமரச முறிவறிக்கை அனுப்பப்பட்டு வருகிறது. இதர நேர்வுகளில் தாவாவின் தன்மைக்கேற்ப சமரசப் பேச்சுவார்த்தை தொடரப்படுகின்றன. எனினும், தொழிலாளர் ஆணையர் மாதாந்திரக் கூட்டங்களில், தாவாக்களை விரைவில் முடிக்க சமரச அலுவலர்களுக்கு அவ்வப்போது உரிய அறிவுரைகளை வழங்கி வருகிறார்.



2004 பிப்ரவரி 10]

35—

### பொது விநியோகக் கடை கட்டடம்

**வினா 15517–திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, பையூர் ஊராட்சி, மற்றும் வாச்சலூர் இளங்காடு, மங்கநல்லூர், புலிவாய், கொடநல்லூர் ஆகிய இடங்களில் பொது விநியோகக் கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டடம் கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் வந்தவாசி தொகுதியைச் சார்ந்த இளங்காடு நியாய விலைக் கடை வங்கியின் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பையூர், வாச்சனூர், மங்கநல்லூர், புலிவாய் மற்றும் கொடநல்லூர் ஆகிய இதர 5 நியாய விலைக் கடைகளுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சியில் திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் செயல்படுத்தப்படும் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் பொது விநியோக திட்ட நியாய விலைக் கடை கட்டடம் கட்ட சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

36—

### கூட்டுறவுக் கடை கட்டடம்

**வினா 15722–திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், போலிவாக்கச் சத்திரம் புதுகண்டிகை கிராமத்தில் வாடகை

[2004 பிப்ரவரி 10

குடியில் உள்ள கூட்டுறவுக் கடை கட்டடம் போதுமானதாக இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதிய கட்டடம் கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், போலிவாக்கச்சத்திரம் புது கண்டிகை கிராமத்தில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடை 178 குடும்ப அட்டைகளைக் கொண்டு பகுதி நேரக் கடையாக இலுப்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. பகுதி நேர நியாய விலைக் கடைக்கான கட்டடம் உள்ளூர் மக்களால் இலவசமாக அளிக்கப்பட வேண்டும். எனவே, இக்கடைக்கான வாடகை அப்பகுதி பொதுமக்களில் ஒருவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இக்கடை செயல்படும் வாடகைக் கட்டடம் போதுமானதாக உள்ள நிலையில் இந்த பகுதி நேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**37—**

### கேளிக்கை வரி

**வினா 24798—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திரையரங்குகளில் கேளிக்கை வரி ஏமாற்றியதாக 2001 ஆம் ஆண்டு எத்தனை திரையரங்குகளின்மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதுமுள்ள அனைத்து திரையரங்குகளில் நடத்திய திடீர் (சோதனையில்) தணிக்கையில் 6,804 முறை குற்றங்கள் கண்டறிப்பட்டு இணக்கத் தொகையாக ரூ.60.53 இலட்சங்கள் வசூலிக்கப்பட்டது.



2004 பிப்ரவரி 10]

**38—**

### கேளிக்கை வரி

**வினா 26548—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் நிதியாண்டில் கேபிள் டி.வி. இயக்குபவர்களிடமிருந்து தமிழக அரசுக்கு கேளிக்கை வரி எவ்வளவு வசூலானது?

(ஆ) இந்த வரி முந்தைய ஆண்டுகளை விட அதிகமாக உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் நிதியாண்டில் கேபிள் டி.வி. இயக்குபவர்களிடமிருந்து தமிழக அரசிற்கு கேளிக்கை வரி வருவாய் ரூ.2.72 இலட்சம் ஆகும்.

(ஆ) இவ்வரி முந்தைய ஆண்டு (2000-2001) வருவாயினை விட மிகவும் குறைவு.

**39—**

### நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா 28912—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், தொகுதி, வெண்ணந்தூர் ஒன்றியம், கீழூரில் நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் அரசு வசமுள்ளதா?

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 27, சுபானு-திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 பிப்ரவரி 10, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது

தூக்கங் கடிந்து செயல்."

மனக் குழப்பமின்றித் தெளிவாக முடிவு செய்யப்பட்ட ஒரு செயலைத் தளர்ச்சியும், தாமதமும் இடையே ஏற்படாமல் விரைந்து நிறைவேற்ற வேண்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 21, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**21—**

**மான்கள் வளர்த்தல்**

***5335—திரு எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மான்களை அதிகமாக வளர்க்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராசிபுரம் வட்டம், கீழூர் மற்றும் மேலூர் பகுதியிலுள்ள மலைவாழ் மக்களின் வசதிக்காக கீழூர் பகுதி மக்களுக்கு மலையடிவாரத்திலுள்ள கல்லாங்குளம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்கப்பட்டுள்ளது. மேலூர் பகுதி மக்களுக்காக மேலூர் மலையடிவாரத்திலுள்ள சேலம் கம்மாளப்பட்டி சாலையில் மலையடிவாரத்தில் குள்ளப்பநாயக்கனூர் என்ற இடத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கப்பட்டுள்ளது. கல்லாங்குளம் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள கீழூர் கிராம 199 குடும்ப அட்டைதாரர்கள் 13 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து வந்தும், குள்ளப்பநாயக்கனூர் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள மேலூர் கிராம 151 குடும்ப அட்டைதாரர்கள் 15 கிலோ மீட்டர் தூரத்தை கடந்து வந்தும் அத்தியாவசியப் பொருட்கள் பெற்றுச் செல்கின்றனர். கீழூர் மற்றும் மேலூர் ஆகிய மலைப் பகுதி கிராமங்களுக்கு அத்தியாவசிய பொருட்களைக் கொண்டு செல்ல சாலை வசதியோ, போக்குவரத்து வசதியோ இல்லையென்பதாலும், அங்குள்ள மலைவாழ் மக்கள் தங்களது விளைபொருட்களை விற்பதற்கும, குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கும், கீழே மலையடிவாரத்திற்கு வந்து செல்ல வேண்டியுள்ளதாலும், கீழூர் மற்றும் மேலூர் மலைவாழ் பொதுமக்கள் அனைவரையும் மலையடிவாரத்தில் இராசிபுரம் வட்டம், தேங்கல்பாளையத்தில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 130 மலைவாழ் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன. இன்னமும் 170 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படவுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட காரணங்களால் கீழூர் மற்றும் மேலூர் கிராமங்களில் நியாய விலைக் கடைகள் அமைக்க உடனடி தேவையில்லை.



**40—**

## நியாய விலைக் கடை

**வினா 30499—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதிரிவேளூர் ஊராட்சி, மாதிரிவேளூரில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் நியாய விலைக் கடையை பிரித்து கீழவாடியில் ஒரு நியாய விலைக் கடை செயல்படச் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதிரிவேளூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கும் நியாய விலைக் கடையில் 909 குடும்ப அட்டைகள் உள்ளன. மாதிரிவேளூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு அங்காடி கடையைப் பிரித்து பாலூராண்டுபடுகை, பட்டியமேடு, ஏத்தக்குடி, உச்சிமேடு, கீழவாடி ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் மேற்கண்ட பகுதிகளுக்கு மையப் பகுதியான பட்டிமேடு பகுதியில் அங்காடி அமைத்திடக் கோரி திரு. ராமசாமி என்பவரால் நீதிப்பேராணை எண் 10661/97 மற்றும் டபிள்யூ.எம்.பி.17048/98-ன்படி வழக்கு தொடரப்பட்டு, இவ்வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைப்பதற்கு குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை நிறைவு பெறாததாலும் கீழவாடியில் பகுதி நேரக் கடை அமைத்தால் இனக்கலவரம் மற்றும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாலும் கீழவாடியில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2004 பிப்ரவரி 10

41—

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா 31940–திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேன்கனிக்கோட்டை வட்டம், இருதாளம் கிராமத்திலிருந்து அனுசோனா கிராமத்தில் தனியாக பகுதி நேர நியாய விலைக் கடை ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தனியாக ஏற்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், இருதாளம், தாய் நியாயவிலைக் கடையில் 630 குடும்ப அட்டைகள் உள்ளன.

அனுசோனா பகுதியில் 219 குடும்ப அட்டைகள் உள்ளன. பகுதிநேரக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை நிறைவு பெறாததால் அனுசோனா பகுதியில் பகுதி நேரக் கடை திறக்க வாய்ப்பில்லை.

42—

## கூட்டுறவு துணைப் பதிவாளர் பணியிடம்

**வினா 34584–திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

(அ) செங்கற்பட்டு கூட்டுறவு துணைப் பதிவாளர் பணியிடம் பல தினங்களாக நிரப்பப்படாததன் காரணம் என்ன?

(ஆ) அது குறித்து அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டு சரகத் துணைப் பதிவாளராக பணிபுரிந்த திரு. ட்டி. இராஜகோபால், 30-5-2002 முதல் தற்காலிகப் பணிநீக்கத்தில் வைக்கப்பட்டதன் விளைவாக, செங்கற்பட்டு சரகத் துணைப் பதிவாளர் பணியிடம் 30-5-2002-ல் காலியானது. துணைப் பதிவாளர் பணி நிலையில் நபர்கள் இல்லாததாலும், துணைப் பதிவாளர் பதவி உயர்வுப் பட்டியல், துறை பதவி உயர்வுக் குழுவால் ஏற்கப்பட்டு அரசு ஆணை வெளியிடப்பட வேண்டியிருந்ததாலும், மேற்படி பணியிடம் நிரப்பப்படாமல் இருந்தது.

(ஆ) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசாணை (வாலாயம்)72 எண்ணிட்டு 14-2-2003 தேதியிட்ட அரசாணையில், நேரடியாக நியமனம் செய்யப்பட்டு செயல்முறை பயிற்சியினை முடித்த துணைப் பதிவாளர் திருமதி. பி. ரேணுகாம்பாள், என்பவரை செங்கற்பட்டு சரகத் துணைப் பதிவாளராக பணியமர்த்தி அரசு ஆணைகள் வழங்கியது. இவ்வாணையின்படி திருமதி.பி. ரேணுகாம்பாள், செங்கற்பட்டு சரகத் துணைப்பதிவாளராக 15-2-2003-ல் பணியில் சேர்ந்துள்ளார்.

43—

## ஆடம்பர வரிச் சட்டம்

**வினா 41175–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் ஆண்டில் சேலம் கோட்டத்திற்கு வணிக வரித் துறை மூலம், தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம் 1981-ன்கீழ் எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திற்கு வணிக வரித் துறை மூலம் தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம் 1981-ன்கீழ் ரூ.84.88 இலட்சங்கள் (ரூபாய் எண்பத்து நான்கு இலட்சத்து எண்பத்தெட்டாயிரம் மட்டும்) கிடைத்துள்ளது.

**44—**

**வருவாய்**

**வினா 43829—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம் 2001-ன்படி சேலம் மாவட்டத்தில் மார்ச் 2002 வரை கிடைத்த வருவாய் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரிவிதிப்புச் சட்டம் 2001-ன்படி சேலம் கோட்டத்தில் மார்ச் 2002 வரை கிடைத்த வருவாய் ரூபாய் 235.22 இலட்சங்கள் (ரூபாய் இருநூற்று முப்பத்தைந்து இலட்சத்து இருபத்திரெண்டாயிரம் மட்டும்) ஆகும்.

**45—**

**பகுதி நேர நியாய விலைக் கடை**

**வினா 44551—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், முதலைமேடு ஊராட்சி, முதலைமேடுதிட்டு கிராமத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், முதலைமேடு ஊராட்சி, முதலைமேடுதிட்டு கிராமத்தில் பகுதி நேரக் கடை 1999 முதல் 302 குடும்ப அட்டைகளுடன் அக்கிராமத்தில் பொது நல நிதி மூலம் கிராம மக்கள் கட்டிக் கொடுத்த கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

**46—**

**ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டம்**

**வினா 29532—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள டாப்சிலிப் பகுதியில் உள்ள ஆதிவாசிகள் குடியிருக்கின்ற பகுதிக்கு குடிநீர் ஆழ்குழாய் கிணறு போட்டு தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) டாப்சிலிப் பகுதியில் உள்ள மலைமக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு 2002-2003 நிதியாண்டில் ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர்க் குழாய்கள் அமைத்து குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

47—

### மரக்கன்றுகள் உற்பத்தி

**வினா 35107–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள வனத் துறை மூலம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்வதற்கும், நர்சரி தோட்டம் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வனச்சரகத்தில் நடப்பாண்டில் (2003-2004) 40 எக்டேர் பரப்பளவில் தடி மரத்திட்டம் (Project Timber) என்ற திட்டத்தின் மூலம் 10,800 கன்றுகள் நடப்பட்டு தோட்டம் எழுப்பப்பட்டு வருகிறது.

48—

### கருவேல் மரங்கள் ஏலம்

**வினா 36462–திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுசூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெ.கருங்குளம் ஊராட்சி, சங்கராபுரம் அருகில் பெரியகுளத்தில் உள்ள கருவேல் மரங்களை ஏலமிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

மேற்காண் கருவேல் தோட்டம் மேற்காண் பஞ்சாயத்திற்கு உட்பட்டது. இது வனத் துறையைச் சார்ந்தது அல்ல. தோட்டத்தினை ஏலமிட



பஞ்சாயத்துத் தலைவரால் மகசூல் மதிப்பீடு செய்ய வனத் துறை கேட்கப்பட்டு அதன் பேரில் மகசூல் மதிப்பீடு 110.00 மெட்ரிக் டன் என்றும் இதற்கான நியாயவிலையாக ரூ.59384.00 என நிர்ணயிக்கப்பட்டது. இதன் விவரம் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர், வள்ளியூருக்கு திருநெல்வேலி கோட்ட வன அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. தோட்டத்தின் ஏலம் பஞ்சாயத்துத் தலைவர் மூலம் நடத்தப்பட வேண்டும், சம்பந்தப்பட்ட வள்ளியூர் வட்டார வளர்ச்சி அலுவலரால் முடிவு செய்ய வேண்டியதாகும். இதில் வனத் துறையின் பணி ஏதுமில்லை.

49—

### சிறுவன மகசூல்

**வினா 36540–திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஐய்யன் மலைவாழ் மக்கள் சங்கத்தினருக்கு "சிறுவன மகசூல்" அனுமதி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சிறுவன மகசூல் அலகுகளை பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு (Lamp Societies) ஒதுக்கீடு செய்யும் முறையால் அவற்றின் நேரடிப் பயன், மலைவாழ் மக்களுக்கு கிடைப்பதில்லை என்ற கருத்தின் அடிப்படையில் மலைவாழ் இனத்தவருக்கு வனங்களில் விளையும் சிறுவன பொருட்களின் மகசூல் உரிமையை இலவசமாக வழங்குவதற்கு தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்தின்படி சில நெறிமுறை மாற்றங்களுடன் வனக் குழுக்கள் மூலம் செயல்பட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை நிலை எண் 79, சுற்றுச்சூழல்- வனத் துறை), நாள் 29-4-2003.)

(ஆ) வினா எழாது.

[2004 பிப்ரவரி 10

**50—**

### சிறுவன மகசூல்

**வினா 36543—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள வனப் பகுதிகளில் "சிறு வன மகசூல்" அனுமதி வேண்டி எத்தனை மலைவாழ் மக்கள் சங்கங்கள் அரசிடம் விண்ணப்பித்துள்ளன?

(ஆ) அவற்றின்மீது அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சீகூர் மற்றும் சிங்காரா வனப் பகுதியில் சிறுவனப் பொருட்கள் சேகரிக்க அனுமதி வேண்டி ஐய்யன் மலைவாழ் மக்கள் முன்னேற்றச் சங்கத்தினரால் அரசிடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சீகூர் மற்றும் சிங்காரா வனப்பகுதிகள் முதுமலை வன உயிரின உயவிடத்தைச் சுற்றி அமைந்துள்ள நிலையில் வன உயிரினங்களுக்கு இடையூறு ஏற்படுகிறது என்ற காரணத்தின் அடிப்படையில் சிறுவன மகசூல் சேகரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கம் சிறுவன மகசூல் குத்தகைப் பிரிவுப் பொருட்களை ஏலத்திற்கு கொண்டுவர உயர் நீதிமன்றத்தில் அரசுக்கு எதிராக தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண் 79, சுற்றுச்சூழல்-வனம் (வ14) துறை, நாள்:29-4-2003-ல் சிறுவன மகசூல் சேகரம் உரிமையினை இலவசமாக மலைவாழ் மக்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு (Lamp Societies) வழங்கப்பட்டு வந்த ஆணையினை இரத்து செய்து ஆணையிடப்பட்டுள்ளதால், மேற்படி சங்கங்களுக்கு அரசு அனுமதி வழங்கப்படவில்லை.



2004 பிப்ரவரி 10]

## *பட்டியல் 6

**1—**

### வீட்டுமனை வழங்குதல்

**வினா 15874—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், சரஸ்வதி நகர், கார்த்திகேயபுரம் ஊராட்சியில் உள்ள ஏழை மக்களுக்கு வீட்டுமனை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், சரஸ்வதி நகர், கார்த்திகேயபுரம் ஊராட்சியில் உள்ள ஏழை மக்கள் வீட்டுமனை ஒப்படை கேட்டு விண்ணப்பிக்கும்பட்சத்தில் ஒப்படை கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும், ஒப்படை கோரும் நிலத்தின் தகுதியின் அடிப்படையிலும் வீட்டுமனை வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**2—**

### வீட்டுமனைப் பட்டா

**வினா 27417—திரு. [illegible] ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

---

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2004 பிப்ரவரி 10

(அ) அனக்காவூர் ஒன்றியத்தில் வீரம்பாக்கம் ஊராட்சியில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செய்யார் வட்டம், வீரம்பாக்கம் கிராம மந்தைவெளி புறம்போக்கு புல எண் 234/3-ல் வீடுகட்டி ஆக்ரமணம் செய்திருந்த 12 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க ஒருமுறை வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் கிராம நத்தமாக வகை மாற்றம் செய்யப்பட்டு, 5 நபர்களுக்கு நிலக்கிரயமின்றி வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 7 நபர்கள் மனைக் கிரயம் செலுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மனைக் கிரயம் செலுத்தியவுடன் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

3—

### வீட்டுமனைப் பட்டா

**வினா 27420—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி நகரில் உள்ள ஆஞ்சநேயர் தெருவில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி வட்டம் மற்றும் நகரம், ஆஞ்சநேயர் கோயில் தெருவில் உள்ள அரசு புறம்போக்கு புல எண் 405-ல் வீட்டுமனைப் பட்டா வழங்க கோரப்பட்டுள்ள நிலம் கிராமக் கணக்குகளில் அகழிப்



2004 பிப்ரவரி 10]

புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலம் தொல்பொருள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதால், இப்புறம்போக்கில் வீடு கட்டியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

4—

### வாய்க்கால் தூர் வாருதல்

**வினா 29052—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கீழமாத்தூர் ஊராட்சி, கீழமாத்தூர் "B" கிளாஸ் வாய்க்கால், குமாரக்குடி "G" கிளாஸ் வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ல் கால்வாய்கள் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க சீர்காழி தொகுதி கீழமாத்தூர் "B" கிளாஸ் வாய்க்கால், குமாரக்குடி "G" கிளாஸ் வாய்க்காலும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

5—

### தூர்வாரி ஆழப்படுத்துதல்

**வினா 29089—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

(அ) சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி, காட்டு வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண்34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்களின் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க சீர்காழி தொகுதி, வேட்டன்குடி ஊராட்சி, காட்டு வாய்க்காலும் பி.சி.டி வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

6—

**பட்டா**

**வினா 31929—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்திர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், மனப்பாக்கம் குளக்கரை தெருவில் வசிக்கும் 15 நபர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆணையிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மனப்பாக்கம் கிராமம், புல எண் 233-ல் 15 நபர்கள் வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள். மேற்படி புலம் கிராமக் கணக்குகளில் "குளம்" எனத் தாக்கலாகியுள்ளது. நீர்நிலைப் புறம்போக்குகளில் பட்டா வழங்க தடை உள்ளதால், தடை செய்யப்பட்டுள்ள குளம் புறம்போக்கில் பட்டா வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.



2004 பிப்ரவரி 10]

7—

**மின்சார வாரிய நிறுவனங்கள்**

**வினா [illegible]—திரு. [illegible]:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் அரசு சார்பான மின்சார வாரிய நிறுவனங்கள் எத்தனை இடங்களில் உள்ளது?

(ஆ) அதில் உற்பத்தியாகும் மின்சாரம் ஒரு யூனிட்டுக்கு அடக்கவிலை எவ்வளவு என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான நிறுவனங்கள் திருநெல்வேலி, தூத்துக்குடி, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 19.355 மெகாவாட் அளவிற்கு கீழ்க்கண்ட 8 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

| எண். | இடம் | இயந்திரத்தின் எண்ணிக்கை | திறன் (மெகாவாட்) |
|---|---|---|---|
| 1. | தூத்துக்குடி | 21 | 1.155 |
| 2. | கயத்தார் I | 22 | 2.750 |
| 3. | கயத்தார் II | 37 | 7.550 |
| 4. | முப்பந்தல் | 20 | 4.000 |
| 5. | புளியங்குளம் | 7 | 1.590 |
| 6. | சுல்தான்பேட் | 1 | 0.090 |
| 7. | சாலையோர காற்றாலை (தூத்துக்குடி) | 4 | 0.220 |
| 8. | கேத்தனூர் | 8 | 2.000 |
| | மொத்தம் | 120 | 19.355 |

[2004 பிப்ரவரி 10

(ஆ) தமிழ்நாட்டில் செயல்முறை காற்றாலை மின் திட்டங்கள் அமைந்தபோது இந்திய அரசாங்கத்தின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்தின் ஊக்கத்தொகை போக தமிழ்நாடு மின்சார வாரியம் முதலீட்டையும் மற்றும் பராமரிப்புச் செலவையும் கருத்தில்கொண்டு கணக்கிட்டு பார்த்தால் ஒரு யூனிட்டிற்கு ரூ.1.20 பைசா என்கிற அளவில் உற்பத்தி செலவாகிறது.

8—

## திருமணக் கூடங்கள்

**வினா 10810—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் வருவாய் அதிகமுள்ள கோயில்களில் திருமணக் கூடங்கள் கட்டி எளியவர்களுக்கு குறைந்த வாடகைக்கு விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிராமப்புறங்களில் வருவாய் அதிகமுள்ள கோயில்களில் திருமணக் கூடங்கள் கட்டி வாடகைக்கு விடுவதற்கு இந்து சமய அறநிலையத் துறை விதிகளில் இடமில்லை.

9—

## மின்வாரியத்திற்கு நிலம் கிரயம்

**வினா 20697—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டம், நல்லூர் பேரூராட்சியில் அமைக்கப்பட உள்ள துணை மின் நிலையத்திற்கு நல்லூர் விஸ்வேஸ்வரசாமி கோயிலுக்குச்



2004 பிப்ரவரி 10]

சொந்தமான 1 ஏக்கர் நிலத்தை மின் வாரியத்திற்கு கிரயமாக அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருப்பூர் வட்டம், நல்லூர் அருள்மிகு விஸ்வேஸ்வரசாமி திருக்கோயிலுக்கு சொந்தமான 9.24 ஏக்கர் நிலத்தின் ஆவணங்களை சட்ட விரோதமாகத் திருத்தி தனியார் தவறான முறையில் அனுபவித்து வந்ததைக் கண்டறிந்து அந்நிலங்களை மீட்டு மீண்டும் திருக்கோயில் பெயருக்கு பட்டா மாற்றப்பட்டது. மேற்கூறிய தனியார் நிலங்கள் தங்களுக்கு பாத்தியப்பட்டது என திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு 295/2002-ல் தாக்கல் செய்து தற்போது நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருவதால் 1 ஏக்கர் நிலத்தை துணை மின் நிலையத்திற்கு வழங்க இயலாது.

10—

## பஞ்சாமிர்தம், தினை மாவு வழங்குதல்

**வினா 32839—திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பதி கோயிலில் வழங்குவது போல பழனி கோயிலின் பிரசாதங்களை பஞ்சாமிர்தம், தினைமாவு போன்றவற்றை இன்னும் தரம் உயர்த்தி குறைந்த விலையில் பக்தர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் பஞ்சாமிர்தம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மூலப்

[2004 பிப்ரவரி 10

பொருட்கள் தரமானவை என்பதால், தயாரிப்புச் செலவு அதிகமாக இருந்தாலும் குறைந்த விலையில்தான் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் விலைக்குறைப்பு செய்தால் திருக்கோயிலுக்கு நிதி இழப்பு ஏற்படும். எனவே, விலைக்குறைப்பு நடவடிக்கை ஏதுமில்லை. மலைக்கோயில் பிரசாதம் தயார் செய்து விற்பனை செய்யும் உரிமம் குத்தகை மூலம் விடப்பட்டு, லட்டு, முறுக்கு, அதிரசம் மற்றும் திணைமாவு ஆகியவை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பிரசாதங்களின் எடை, அளவு மற்றும் விற்பனை விலை குறித்து இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அனுமதி பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இனமும் தயாரிப்பு விலையைவிட சேவார்த்திகளின் நலனுக்கே குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. விலை நிர்ணயம் சம்பந்தமாக சேவார்த்திகளின் மத்தியிலோ, பொது ஸ்தாபனங்கள் மூலமாகவோ யாதொரு ஆட்சேபனையும் வரப் பெறவில்லை.

**11—**

### தார்ச் சாலை வசதி

**வினா 36909—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருநகரி, ரெங்கநாதப்பெருமாள் கோயிலுக்கு சுற்றுலாப் பயணிகள், யாத்திரிகர்கள் வருவதால் அங்கு குடிநீர் வசதி மற்றும் மின்சார வசதி, நான்கு சாலைகளிலும் தார்ச் சாலை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருநகரி அருள்மிகு கல்யாணரெங்கநாதசுவாமி திருக்கோயிலின் உட்புறம் தேவைக்கேற்ப மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. திருப்பணிகள் ரூ.12.23 இலட்சம் செலவில் உபயதாரர் மற்றும் அரசு மானியத் தொகை மூலம் செய்யப்பட்டும் வருகிறது. மேற்படி ஆலயத்திற்கு வெளியே மின்வசதிகள்



2004 பிப்ரவரி 10]

ஏற்படுத்துதல் மற்றும் தார்ச் சாலை வசதிகள் ஏற்படுத்துதல் போன்ற பணிகளை செய்ய நிதி வசதி இல்லாததால் திருக்கோயில் மூலம் செய்ய இயலாத நிலை உள்ளது.

**12—**

### திருக்கோயில்களின் சொத்துகள்

**வினா 37962—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோயில்களின் சொத்துகளை தனியார் குறைந்த வாடகைக்கு அனுபவித்து வருவதால் அரசுக்கு வருமானம் பாதிக்கப்படுவதை அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்**

(அ) மற்றும் (ஆ) இத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் திருக்கோயில்கள்/அறநிலையங்களுக்குச் சொந்தமாக கட்டடங்கள் மற்றும் காலிமனைகள் உள்ளன. 22,606 கட்டடங்களும், 55,359 மனைகளும் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. மேற்படி கடைகள் மற்றும் மனைகளில் பல, பல ஆண்டுகளுக்கு முன்பே வாடகைக்கு விடப்பட்டுள்ளதால் அவற்றிலிருந்து பெறப்படும் வாடகைத் தொகை மிக மிகக் குறைவாக உள்ளதை கருத்தில்கொண்டு மேற்படி இனங்களிலிருந்து பெறப்படும் வாடகையை அதிகரிக்கவும், திருக்கோயில் வருவாயினை மேம்படுத்துவதற்கும் 1-11-2001 முதல் இதற்கென அரசால் அமைக்கப்பட்ட நியாய வாடகை குழு மூலம் புதியதாக நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு, வசூலிக்கப்பட்டு வருகிறது. கட்டடங்கள் அமைந்துள்ள இடம், கட்டடத்தின் தன்மை, பயன்படுத்தப்படும் பரப்பளவு போன்றவற்றின் அடிப்படையில் நியாய வாடகைக் குழுவால் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி நியாய வாடகை நிர்ணயம் மூலம் தற்பொழுது வரை திருக்கோயிலுக்குச் சொந்தமான

[2004 பிப்ரவரி 10

கட்டடங்களின் வாடகை வசூலில் ரூ.206 கோடியும், மனைகளின் வாடகை வசூலில் ரூ.1.30 கோடியும், அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தவிர பல ஆண்டுகளாக திருக்கோயில்களுக்கு வாடகை தராமலிருப்பவர்களையும், நியாய வாடகை நிர்ணயத்தினை ஏற்றுக்கொள்ளாதவர்களையும் ஆக்கிரமிப்புதாரர்களாகவே கருதி அவர்களை வெளியேற்ற சட்டப்பிரிவு 78, 79, 79சி-யின்கீழ் 4,168 வழக்குகள் தொடர்ந்தும், சிவில் நீதிமன்றங்களில் 2,531 வழக்குகள் தொடரப்பட்டும் நடவடிக்கையில் இருந்து வருகிறது.

13—

## தேவாரம், திருவாசகப் பாடசாலை

**வினா 33357—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதபுரீஸ்வரர் கோயில் சார்பாக தேவாரப் பாடசாலை மற்றும் திருவாசகப் பாடசாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில் வருமானம் திருக்கோயில் பூஜை, திருவிழாச் செலவுகள், பணியாளர்கள் சம்பளம், மின்கட்டணம் மற்றும் இதர நிர்வாகச் செலவினங்களுக்காக மட்டுமே போதுமானதாக உள்ளதால், திருக்கோயில் நிதி மூலம் தேவாரப் பாடசாலை மற்றும் திருவாசகப் பாடசாலை அமைக்க இயலாத நிலை உள்ளது.



2004 பிப்ரவரி 10]

14—

## குடும்ப நல அறுவை சிகிச்சை

**வினா 27576—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் கருத்தடை செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் என அரசு அறிவிக்குமா?

(ஆ) கருத்தடையை அதிகப்படுத்த புதிய திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த 5 ஆண்டுகளில் அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு | குடும்ப நல அறுவைசிகிச்சை | | |
|---|---|---|---|
| | ஆண் அறுவை | பெண் அறுவை | மொத்தம் |
| 1997-98 | 1 | 3,739 | 3,740 |
| 1998-99 | 3 | 3,087 | 3,090 |
| 1999-2000 | 1 | 4,010 | 4,011 |
| 2000-2001 | 1 | 4,311 | 4,312 |
| 2001-2002 | 19 | 4,391 | 4,410 |

(ஆ) குடும்ப நல அறுவை சிகிச்சையை அதிகப்படுத்த தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் தினமும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. மேலும் சிறப்பு மருத்துவர்கள் காலியாக உள்ள அரசு மருத்துவமனைகளில் தனியார் மருத்துவர்களும்

[2004 பிப்ரவரி 10

குடும்ப நல அறுவைசிகிச்சை செய்ய வாடகை (Hired) திட்டம் மூலம் நியமிக்கப்படுகின்றனர். அரசு மருத்துவமனைகளில் தினமும் அறுவைசிகிச்சை செய்யப்படும் என்பதை மக்களுக்கு எடுத்துக்கூறி அதிகப்படியான தாய்மார்கள் கருத்தடை அறுவைசிகிச்சை செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலயங்களில் மக்கள் அணுகக்கூடிய இடத்தில் லேப்ராஸ்கோபிக் (Laproscopic) முறையில் துரிதமாகவும், மருத்துவ நிலையத்தில் தங்கி ஓய்வு பெற வேண்டிய நிலை இல்லாமலும் செய்யப்படுகிறது.

மேலும் 2—வது மற்றும் 3, 4 பிரசவத்திற்கு வரும் தாய்மார்களுக்கு குடும்ப நல அறுவைசிகிச்சை செய்து கொள்ள ஆலோசனை கூறப்பட்டு அனைத்து அதிக பிறப்புகள் கொண்ட தாய்மார்களுக்கும் அறுவைசிகிச்சை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. என்.எஸ்.வி. (N.S.V.) என்ற சீன தேசத்து அறுவைசிகிச்சை மூலம் ஆண்களுக்கு கத்தி இல்லாமல், தழும்பு ஏற்படாமல் சில நிமிடங்களில் வெளி நோயாளியாக செய்துகொண்டு வீட்டுக்குச் செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது.

15—

## உள், புற நோயாளிகள்

**வினா 31849—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்தில் உள்ள அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனையில் கடந்த ஐந்தாண்டுகளாக மருத்துவ வசதி பெற்ற உள், புற நோயாளிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரத்தில் உள்ள அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனையில் கடந்த ஐந்தாண்டுகளாக (1998/2002) மருத்துவ வசதி பெற்ற உள் நோயாளிகள் மற்றும் புற நோயாளிகள் எண்ணிக்கை பின்வருமாறு:-



2004 பிப்ரவரி 10]

| வ. எண் | விவரம் | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|---|---|---|
| 1. | உள் நோயாளிகள் | 4843 | 4990 | 4198 | 3874 | 3602 |
| 2. | புற நோயாளிகள் | 21779 | 23696 | 22195 | 18353 | 20091 |

16—

## நிதி ஒதுக்கீடு

**வினா 33384—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தாலுகா, மருத்துவமனையில் அடிப்படை வசதிகள் செய்து மருத்துவமனையை விரிவுபடுத்த நடப்பாண்டில் அரசு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனையில் நடப்பு நிதியாண்டில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்கள்கீழ் ரூபாய் 55.000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகளை மேற்கொள்ள பொதுப் பணித் துறை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

17—

## அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி

**வினா 41761—திரு. ந. கணபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதிக்கு உட்பட்ட மரக்காணம் அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2004 பிப்ரவரி 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் அரசு மருத்துவமனை 6 படுக்கைகளுடன் இயங்கி வருகிறது. அரசு மருத்துவமனைகளில் 30 மற்றும் அதற்கு மேற்பட்ட படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளில் மட்டுமே தேவையின் அடிப்படையில் ஆம்புலன்ஸ் வாகன வசதி செய்யப்பட்டு வருகிறது. எனவே, மரக்காணம் அரசு மருத்துவமனை 30 மற்றும் அதற்கு மேற்பட்ட படுக்கை வசதிகளுடன் தரம் உயர்த்தப்படும்போது அம்மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**18—**

### துணை சுகாதார மையத்திற்கு கட்டடம்

**வினா 43685—திரு. நா. சந்திரமோகன்:**—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சோதியக்குடி ஊராட்சியிலுள்ள துணை சுகாதார மையத்திற்கு கட்டடம் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குன்னம் ஆரம்ப சுகாதார நிலைய கட்டுப்பாட்டில் உள்ள சோதியக்குடி துணை சுகாதார நிலையத்திற்கு டானிடா நல வாழ்வுத் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வரால் 13-10-2003 அன்று திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.



2004 பிப்ரவரி 10]

**19—**

### சுகாதார நிலையங்களுக்கு கட்டடம்

**வினா [illegible]—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில், மேற்குப் பகுதி கிழக்குப் பகுதி துணை சுகாதார நிலையங்களுக்கு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வள்ளுவக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட வைத்தீஸ்வரன்கோயில் மேற்குப் பகுதி மற்றும் கிழக்குப் பகுதியிலுள்ள வாடகை கட்டடத்தில் இயங்குகிற துணை சுகாதார நிலையங்களுக்கு அரசு கட்டடம் கட்டுவதற்கு தேவையான இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இடம் தேர்வு ஆன பிறகு கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**20—**

### மீனவர் கிராமத்திற்கு துணை சுகாதார மையம் கட்டடம்

**வினா [illegible]—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சியில் உள்ள பழையார் மீனவர் கிராமத்திற்கு துணை சுகாதார மையக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் இயங்குவது புதுப்பட்டினம் என்கின்ற துணை சுகாதார நிலையமாகும். பழையார் மீனவர் கிராமம் புதுப்பட்டினம் ஊராட்சியில் உள்ள ஒரு சிற்றூர் ஆகும். புதுப்பட்டினம் துணை சுகாதார நிலையம் தற்போது பழுதடைந்திருப்பதால் பழுதுகளை சீர்செய்ய பொதுப் பணித் துறை உதவி செயற் பொறியாளரிடமிருந்து மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு வந்தவுடன் பழுதுகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

21—

**மருத்துவர் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள்**

**வினா 46150—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஊராட்சியில் உள்ள அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குடியிருப்பு கட்டடங்கள் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை.



2004 பிப்ரவரி 10]

எனவே, சீர்காழி தொகுதி, வள்ளுவக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர் மற்றும் ஊழியர்களுக்கு குடியிருப்பு கட்டடங்கள் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

22—

**செவிலியர்களுக்கு குடியிருப்புகள்**

**வினா 47232—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் செவிலியர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட இந்நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் செவிலியர்களுக்கு குடியிருப்புகள் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

23—

**சுற்றுச்சுவர்**

**வினா 47233—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட இந்நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனவே, நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**24—**

**சுற்றுச்சுவர்**

**வினா 47239—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் கிராமத்தில் டேனிடா திட்டம் மூலம் துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) டேனிடா திட்டப் பணிகள் 31-12-2003-வுடன் நிறைவு பெறுவதால் திட்டப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது. எனவே, சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் கிராமத்தில் டேனிடா



திட்டம் மூலம் துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்துத்தர இயலாது.

**25—**

**நகரப் பேருந்து இயக்கம்**

**வினா 9690—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தளவாய்அள்ளி, போயர் தெரு வழியாக நகரப் பேருந்து தருமபுரி பாப்பாரப்பட்டிக்கு இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகர் பேருந்து தற்சமயம் டி31-ன் மூலம் நாளொன்றுக்கு 10 நடைகள் தருமபுரி-பாப்பாரப்பட்டி (வழி) இண்டூர், சோம்பட்டி, சோளப்பாடி தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றது. பேருந்து இயக்கக் கோரும் தளவாய்அள்ளி, போயர் தெரு கிராமம் சோளப்பாடியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் நடை பயண தூரத்தில் உள்ளது. மற்றும் மக்கள் தொகை சுமார் 500 மட்டுமே உள்ளது. எனவே, மேற்படி கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுகிறது. எனவே, கோரப்பட்டுள்ள தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

**26—**

**பேருந்துகள் இயக்கம்**

**வினா 1231—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி, விருத்தாசலம், உளுந்தூர்பேட்டை ஆகிய பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் பேருந்துகளை கீழக்குப்பம், நடுக்குப்பம், பாப்பான்கொல்லை, வல்லம் ஆகிய ஊர்களின் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கீழக்குப்பம், நடுக்குப்பம், பாப்பான்கொல்லை, வல்லம் ஆகிய ஊர்களின் வழியாக பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்படும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம்-1-ஐச் சார்ந்த பேருந்துகளின் விபரங்கள் கீழ்வருமாறு:-

தடம் எண் 259 — விருத்தாசலம்-பண்ருட்டி (வழி) வல்லம், பாப்பான்கொல்லை, கீழக்குப்பம்-1 நடை

தடம் எண் 260— விருத்தாசலம்—குள்ளஞ்சாவடி (வழி) வல்லம், பாப்பான்கொல்லை, கீழக்குப்பம் - 2 நடைகள்

தடம் எண் 263 — விருத்தாசலம்-கடலூர் (வழி) வல்லம், பாப்பான்கொல்லை, கீழக்குப்பம்-2 நடைகள்

தடம் எண் டி25—பண்ருட்டி-காட்டுக்கூடலூர் (வழி) கீழக்குப்பம், பாப்பான்கொல்லை, வல்லம்-4 நடைகள் பண்ருட்டி-இலவத்தடி (வழி) நடுக்குப்பம், பாப்பான்கொல்லை-2 நடைகள்.

தடம் எண் டி12— பண்ருட்டி-மேற்கிருப்பு (வழி) கீழக்குப்பம், பாப்பான்கொல்லை, வல்லம்-1 நடை

தடம் எண் டி7 — பண்ருட்டி-நெய்வேலி டிஎன்ஸ் (வழி) நடுக்குப்பம், பாப்பான்கொல்லை, கீழக்குப்பம், குறுக்குச்சாவடி-10 நடைகள்.



பண்ருட்டி-விருத்தாசலம் தடத்தில் இயங்கும் அனைத்து பேருந்துகளையும்/நடைகளையும் பண்ருட்டி-உளுந்தூர்பேட்டை தடத்தில் இயங்கும் பேருந்து ஒன்றையும் கீழக்குப்பம், நடுக்குப்பம், பாப்பான்கொல்லை வழியாக சுற்றுப்பாதையில் இயக்கினால், தற்பொழுது நேரடிப் பயணம் மேற்கொள்ளும் பயணிகள் கூடுதல் கட்டணம் செலுத்தி பயணம் மேற்கொள்ளும் நிலை ஏற்படும். இதனால் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை எழ வழிவகுக்கும்.

27—

**பேருந்து விவரம்**

**வினா 14364—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலிருந்து பெங்களூர் செல்லும் பேருந்துகள் எத்தனை?

(ஆ) அரசுப் பேருந்துகள் எத்தனை?

(இ) தனியார் பேருந்துகள் எத்தனை?

(ஈ) இன்னும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேலத்திலிருந்து பெங்களூர் செல்லும் பேருந்துகள் 42.

(ஆ) அரசுப் பேருந்துகள் மொத்தம் 42.

(இ) தனியார் பேருந்துகள் ஏதுமில்லை.

(ஈ) தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்களுக்கிடையே கூடுதல் ஒப்பந்தம் ஏற்படும்பொழுது கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2004 பிப்ரவரி 10

28—

### அரசின் பேருந்து இயக்க திட்டம்

**வினா 14880—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் முதல் ஊத்துப்பள்ளத்தூர் செல்லும் நகரப் பேருந்தை ஆரல்குந்தி வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்திலிருந்து ஊத்துப்பள்ளத்தூர் வரை தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் 8 மற்றும் 9-ன் மூலம் நாளொன்றுக்கு 4 நடைகள் இயங்கி வருகின்றன. இத்தடத்தின் நீளம் 35 கி.மீ. ஆகும். பேருந்து இயக்கக் கோரும் ஆரல்குந்தி கிராமமானது பெண்ணாகரம்-ஊத்துப்பள்ளத்தூர் சாலையில் பூச்சூரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. அரசு ஆணைப்படி 35 கி.மீ. வரை மட்டும்தான் நகரப் பேருந்து இயக்க இயலும். பெண்ணாகரம் முதல் ஊத்துப்பள்ளத்தூர் செல்லும் நகரப் பேருந்து வழித்தடத்தின் நீளம் 35 கி.மீ.-க்கு மேல் உள்ளதால் பெண்ணாகரம்-ஊத்துப்பள்ளத்தூர் செல்லும் நகரப் பேருந்தை ஆரல்குந்தி வரை நீட்டித்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

### பேருந்து இயக்குதல்

**வினா 14881—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூரிலிருந்து சந்ததானம்பட்டி வழியாக ஆண்டிக்கரைக்கு கூடுதலாக காலை, மாலை இரண்டு வேளையும் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?



2004 பிப்ரவரி 10]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூரிலிருந்து சந்ததானம்பட்டி வழியாக ஆண்டிக்கரைக்கு தடம் எண் 13 மற்றும் 26ஏ பேருந்துகளின் மூலம் தினசரி 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவை பள்ளி மாணவர்களுக்கு வசதியாகக் காலையில் 4 நடைகளும், மாலையில் 4 நடைகளும் இயக்கப்படுகின்றன. இவ்வழித்தடத்தில் பயணிகள் அடர்வு 45% மட்டுமே உள்ளது. எனவே, தற்போதுள்ள நடைகளே போதுமானதாக உள்ளது.

30—

### சேலத்திற்கு ஆந்திர மாநிலப் பேருந்துகள்

**வினா 17820—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலிருந்து பக்கத்து மாநிலமான ஆந்திராவில் உள்ள திருப்பதிக்கு எத்தனை தமிழக அரசு பேருந்துகள் தினசரி சென்று வருகின்றன?

(ஆ) ஆந்திராவில் உள்ள திருப்பதியிலிருந்து சேலத்திற்கு ஆந்திர மாநிலப் பேருந்துகள் சேலம் வந்து செல்கிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேலத்திலிருந்து பக்கத்து மாநிலமான ஆந்திராவில் உள்ள திருப்பதிக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சேலத்திலிருந்து நாள்தோறும் 8 பேருந்துகள் 16 நடைகளாகவும், சேலம் வழியாக நாள்தோறும் 12 பேருந்துகள் 12 நடைகளாகவும் இயக்கப்பட்டு வருகின்றன.

[2004 பிப்ரவரி 10

(ஆ) ஆந்திராவில் உள்ள திருப்பதியிலிருந்து சேலத்திற்கு ஆந்திர மாநிலப் பேருந்துகள் எதுவும் தடத்தில் இயக்கப்படவில்லை. ஆனால், பயணிகளின் தேவையை கருத்தில்கொண்டு சேலம்-திருப்பதி தடத்தில் விரைவுப் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது.

31—

## அரசு பேருந்து

**வினா 18527–திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கானாஞ்சாவடி கிராமத்திற்கு காலை 8 மணி அளவில் மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல அரசு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கானாஞ்சாவடி கிராமம், கீழ்க்கண்ட பேருந்துகளின் மூலம் பேருந்து வசதி பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| டி5 பண்ருட்டி-சிலம்பிநாதன்பேட்டை வழி கானாஞ்சாவடி- | — | 2 நடைகள் |
| டி20/பி பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி வழி காடாம்புலியூர் கானாஞ்சாவடி- | — | 6 நடைகள் |
| டி23 பண்ருட்டி-குள்ளஞ்சாவடி வழி காடாம்புலியூர் அழகப்பசமுத்திரம் ஏ.புதூர் சத்திரம் | — | 6 நடைகள் |

டி5, டி20 மற்றும் டி23 ஆகிய பேருந்துகள் பல்திசை வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளில் பண்ருட்டி-குள்ளஞ்சாவடி இடையே இயக்கப்படும் நகரப் பேருந்து டி23 காலை 8-30 மணிக்கு புறப்பட்டு கானாஞ்சாவடி வழியாக குள்ளஞ்சாவடி வரை



2004 பிப்ரவரி 10]

இயக்கப்படுகிறது. காலை 8-00 மணிக்கு கானாஞ்சாவடி கிராமத்திற்குச் செல்லும் வகையில் நடைமுறையில் உள்ள கால அட்டவணையை மாற்றினால் இப்பேருந்து வசதிகளை தற்சமயம் பயன்படுத்திவரும் கிராம மக்களுக்கு இடையூறாக அமைய வாய்ப்புண்டாகும். எனவே, கானாஞ்சாவடி கிராமத்திற்கு காலை 8-00 மணியளவில் பேருந்து வசதியளித்திட சாத்தியமில்லை.

32—

## கண்ணாடி இழைகளைத் தயாரிக்கும் திட்டம்

**வினா 23764–திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மறைமலை நகரில் கண்ணாடி இழை தொலைத்தொடர்பு தொழிற்சாலையில் கண்ணாடி இழைகளைத் தயாரிக்கும் திட்டம் எப்போது துவங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

மறைமலை நகரில் உள்ள தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் கண்ணாடியிலான தகவல் தொடர்புக்கான பலதரப்பட்ட வடங்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்து வருகிறது. இந்த நிறுவனம் தகவல் தொடர்பு கண்ணாடி வடங்களை தயாரிப்பதற்கான முக்கிய மூலப்பொருளான கண்ணாடி இழைகளை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்கிறது. இந்த நிறுவனம் 90 சதவீதம் விழுக்காடு உற்பத்தித் திறன் செயல்பட்டால் ஆண்டொன்றுக்கு சுமார் 3 இலட்சம் கிலோமீட்ட நீளம் கொண்ட கண்ணாடி இழைகள் மட்டுமே மூலப்பொருளாக தேவைப்படும். ஆனால் இலாபமீட்டும் வகையிலான உற்பத்தி அலகின் திறனை கருத்தில்கொண்டால் கண்ணாடி இழைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு ஒரு மில்லியன் கிலோமீட்டர் நீளமுள்ள கண்ணாடி இழைகளைத் தயாரிக்கும் திறன் உள்ளதாக இருக்க வேண்டும். ஆகவே தற்சமயம் கண்ணாடி இழைகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதே இலாபகரமாக இருக்கும். இக்காரணங்களால் கண்ணாடி இழைகளைத் (மூலப்பொருள்) தயாரிக்கும் வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் இந்நிறுவனத்திடம் தற்சமயம் இல்லை.

[2004 பிப்ரவரி 10

33—

## அரசு எஃகு ஆலை

**வினா 24063—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணத்தில் மூடப்பட்ட அரசு எஃகு ஆலை மீண்டும் அங்கு திறக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

அரக்கோணத்தில் உள்ள எஃகு ஆலை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

34—

## மணல் குவாரிகள் மூலம் வருமானம்

**வினா 24636—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மணல் குவாரிகளின் மூலம் அரசுக்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மணல் குவாரிகள் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானத்தின் விபரங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| *2001-2002* ஆம் ஆண்டு | - ரூ.40,30,230/- |
| *2002-2003* ஆம் ஆண்டு | - ரூ.57,51,770/- |
| *1-4-2003* முதல் *30-9-2003* வரை | - ரூ.10,88,730/- |



2004 பிப்ரவரி 10]

35—

## ஆலையின் வருமானம்

**வினா 40146—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் இருந்து தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்திற்கு 2000-2001-ஆவது கணக்காண்டுகளில் அனுப்பப்பட்ட கரும்புச் சக்கையின் (பக்காஸ்) அளவு எத்தனை டன்கள்?

(ஆ) இதன் மூலம் ஆலைக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்திற்கு 2000-2001 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்ட கரும்புச் சக்கையின் அளவு சுமார் 1,21,957 டன்களாகும்.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 1,21,957 டன் கரும்புச் சக்கை தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டது. அதற்கு ஈடாக அவர்களிடமிருந்து 2,61,915 டன் நீராவி பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் பாய்லர் மூலம் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கொடுக்கப்படும் நீராவிக்கு ஈடாக கரும்புச் சக்கை கொடுக்கப்படுவதால் இதில் தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்திடமிரு... சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு இக்குறிப்பிட்ட ஆண்டி... வருமானம் ஏதுமில்லை.

36—

## கிரானைட் கற்கள்

**வினா 40227—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனம் மூலம் 2000-2002 ஆம் நிதியாண்டில் கிரானைட் கற்கள் அயல்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மதிப்பு எவ்வளவு?

(ஆ) மேலும், அன்னியச் செலவாணி ஈட்ட மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் 2001-2002 ஆம் நிதியாண்டில் கிரானைட் கற்கள் அயல்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதின் மதிப்பு ரூ.2204.78 இலட்சங்கள்.

(ஆ) (i) அன்னியச் செலவாணி ஈட்டுவதற்கு கடன் சான்று (Letter of credit) முறையில் விற்பனை பெற விரும்பும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

(ii) நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 100 விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய கிரானைட் பாறைகளை பெருகிடும் தொழிற்சாலை சென்னைக்கு அருகில் இருங்காட்டுக் கோட்டையில் அமைக்க திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(iii) வெளிநாடுகளில் நடக்கும் வர்த்தக கண்காட்சிகளில் கலந்து கொண்டு, வெளிநாட்டு வணிகர்களுக்கு தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் கிரானைட் பலகைகளை அறிமுகம் செய்து, வெளிநாட்டு சந்தையைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

37—

## கல்குவாரிகள் ஏலம்

**வினா 40287—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

(அ) 2001-2002 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் கருங்கல் குவாரிகள் எவ்வளவு ஏலம் விடப்பட்டுள்ளது?

(ஆ) அதில் நமக்கு கிடைத்த வருவாய் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டு ஐந்து கல்குவாரிகள் ஏலத்தில் கொண்டு வரப்பட்டன. இவற்றில் 2 குவாரிகளுக்கு உயர் நீதிமன்றத் தடை ஆணையின் காரணமாக ஏலம் நடைபெறவில்லை.

(ஆ) ஏலம் விடப்பட்ட 3 கல்குவாரிகளின் மூலம் அரசுக்கு ரூ.14,48,000/- வருவாய் கிடைத்துள்ளது.

38—

## கல்குவாரி

**வினா 40310—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, ரொட்டிக்கடையில் உள்ள கல்குவாரியை கடந்த இரண்டு ஆண்டுகளாக மூடிவிட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ரொட்டிக்கடை குவாரிப் பகுதியில் குவாரித் தொழிலாளர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி குடியிருந்து வரும் பகுதிகள் வரன்முறைப்படுத்தப்பட்டு தொழிலாளர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. வீட்டுமனை ஒப்படை வழங்கப்பட்டுள்ள பகுதி கல்குவாரியிலிருந்து 300 மீட்டர் சுற்றளவிற்குள் வருவதால் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதி 36 (1-A) (a)-வின்படி குவாரிப்பணி மீண்டும் துவங்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

[2004 பிப்ரவரி 10

39—

## பாலிடெக்னிக் நிர்வாகத்திற்கு செலவிடப்பட்ட தொகை

**வினா—42198 திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மூலம் பாலிடெக்னிக் நிர்வாகத்திற்கு 2000, 2001, 2002 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஆலையின் பாலிடெக்னிக் நிர்வாகத்திற்கு 2000, 2001, 2002 ஆம் ஆண்டுகளில் தொகை எதுவும் செலவு செய்யவில்லை. தற்போதும் பாலிடெக்னிக் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கல்விக் கட்டணத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலமே பாலிடெக்னிக் செலவுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து பாலிடெக்னிக்கிற்கு எந்தவிதமான நிதி உதவியும் செய்யப்படுவதில்லை.

40—

## கதரங்காடிகளின் நிலுவை தொகை

**வினா 23548—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள நகர கதரங்காடிகள் 2000-2001-க்கான கேட்பு வசூல் நிலுவை கேட்புத்தொகை வசூலிக்கப்படாமல் ரூ.1,12,27,221.71 நீண்டகாலமாக நிலுவையாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பேற்படியான தொகையை வசூல் செய்ய அரசால் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?



2004 பிப்ரவரி 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ரூ.112.27 இலட்சத்தில் தற்பொழுது ரூ.34 இலட்சம் மட்டுமே நிலுவையாக உள்ளது. இத்தொகையினை வசூல் செய்திட அனைத்து மண்டலத் துணை இயக்குநர்கள் மற்றும் சென்னை கதரங்காடி பொது மேலாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், வசூல் குழு மூலமும் விரைந்து வசூல் செய்திடவும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

41—

## மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள்

**வினா 36401—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் வணிக இயக்ககத்தால் 2002-2003 ஆம் ஆண்டில் எத்தனை மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன?

(ஆ) அவற்றின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொழில் வணிக இயக்ககத்தால் 2002-2003 ஆம் ஆண்டில் மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

42—

## கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல்

**வினா 22130—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

(அ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல் மற்றும் ஊழல் செய்தவர்கள் எத்தனை பேர் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) அதில் சங்க நிர்வாகிகள் எத்தனை பேர்? சங்கப் பணியாளர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல் மற்றும் ஊழல் சம்பந்தமாக 738 நபர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வழக்கு தொடுக்கப்பட்ட நபர்கள் விவரம்:

| | |
|---|---|
| சங்க நிர்வாகிகள் | 214 |
| சங்கப் பணியாளர்கள் | 459 |
| இதர வகையினர் | 65 |

**43—**

**மரங்கள் வளர்க்கும் பணி**

**வினா 42030—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் எத்தனை கிராமங்களில் மரங்கள் வளர்க்கப்பட்டன?

(ஆ) தொகுதி வாரியாக விவரம் என்ன?



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1997-1998 முதல் 2002-2003 வரை 76 திட்ட கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு மரங்கள் வளர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) தொகுதி வாரியாக விவரம்:

| | |
|---|---|
| (1) அச்சிறுப்பாக்கம் தொகுதி .. | 11 திட்ட கிராமங்கள் |
| (2) செங்கற்பட்டு தொகுதி .. | 18 திட்ட கிராமங்கள் |
| (3) மதுராந்தகம் தொகுதி .. | 5 திட்ட கிராமங்கள் |
| (4) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி .. | 6 திட்ட கிராமங்கள் |
| (5) தாம்பரம் தொகுதி .. | 2 திட்ட கிராமங்கள் |
| (6) திருப்போரூர் தொகுதி .. | 23 திட்ட கிராமங்கள் |
| (7) உத்திரமேரூர் தொகுதி .. | 11 திட்ட கிராமங்கள் |
| மொத்தம் | 76 திட்ட கிராமங்கள் |

**44—**

**குறைந்த வருவாயினருக்கு வீடுகள் கட்டித் தருதல்**

**வினா 37567—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் குறைந்த வருவாயினருக்கு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**45—**

**கூட்டுக் குடியிருப்புகள்**

**வினா 38953—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணல்மேல்குடி நகரத்தில் கூட்டுக் குடியிருப்புகள் (ஹவுசிங் யூனிட்) கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**46—**

**கூட்டுக் குடியிருப்புகள்**

**வினா 38954—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார் கோவில் நகரில் கூட்டுக் குடியிருப்புகள் (ஹவுசிங் யூனிட்டு) கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**47—**

**கிராம மீனவ மக்களுக்கு வீடுகள்**

**வினா 39268—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியிலுள்ள புதுக்குடி வடக்கு, புதுக்குடி தெற்கு, கோட்டைப்பட்டினம் ஆகிய கிராம மீனவ மக்களுக்கு வீடுகள் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டிற்கு வீடுகள் ஒப்பளித்திடும் கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. அறந்தாங்கி தொகுதி, புதுக்குடி வடக்கு, புதுக்குடி தெற்கு மற்றும் கோட்டைப்பட்டினம் ஆகிய கிராம மீனவ மக்களுக்கு வீடுகள் வேண்டி கருத்துரு முறையான வழியாகப் பெறப்பட்டால், அரசு விதிமுறைகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

48—

**மீன் விற்பனை மையங்கள்**

**வினா 41935—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதியில் மீன் விற்பனை மையங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதைக் கூடுதலாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டு தொகுதிக்குட்பட்ட பகுதியில் ஐந்து மீன் விற்பனை மையங்கள் உள்ளன. அவை மாமல்லபுரம், சதுரங்கப்பட்டினம், புதுப்பட்டினம், திருக்கழுக்குன்றம் மற்றும் செங்கற்பட்டு.

(ஆ) அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

49—

**திரையரங்குகளில் புகைப் பிடிப்பவர்களைத் தடுத்தல்**

**வினா 42962—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திரையரங்குகளில் புகைப் பிடிக்கக்கூடாது என அறிவிப்பு இருந்தும் புகைப் பிடிப்பவர்களைத் தடுத்து நிறுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திரையரங்குகளில் திரைப்படம் காண வரும் பார்வையாளர்கள் திரை அரங்கின் உள்ளே புகை பிடித்தால் அதனால் சுகாதாரக் கேடு ஏற்படும் என்பதினால், திரையரங்கின் உள்ளே புகைப் பிடிப்பவர்களைப் பற்றி காவல் துறைக்குத் தெரியப்படுத்தி வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. காவல் துறையினரால் திரையரங்கில் புகைப் பிடிப்பவர்கள் மீது 1888 ஆம் ஆண்டு (தமிழ்நாடு சட்டம் 2/1888) தமிழ்நாடு பொதுமக்கள் வந்து போகும் இடம் பற்றிய சட்டத்தின் (Tamil Nadu places of public Resort Act) பிரிவு 12 மற்றும் 40-ன் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

50—

**உடற்பயிற்சி மையம்**

**வினா 37498—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதியில், குத்தாலம் பேரூராட்சியில் உடற்பயிற்சி மையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில், குத்தாலம் தொகுதியில், குத்தாலம் பேரூராட்சியில் உடற்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 பிப்ரவரி 10

## *பட்டியல்-7

1—

### தனியாருக்கு நில ஒப்படை

**வினா 24509—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கிருஷ்ணன்குப்பம் கிராமத்தில் உள்ள மந்தைவெளி புறம்போக்கை தனியாருக்கு பட்டா தர உத்தேசித்துள்ளதைத் தடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம் மற்றும் வட்டம், பண்ருட்டி தொகுதி, கிருஷ்ணன்குப்பம் கிராமத்தில் மந்தைவெளிப் புறம்போக்கு மற்றும் மேய்ச்சல் தரைப் புறம்போக்கில் உள்ள நிலங்களை தனியார் எவருக்கும் நில ஒப்படை செய்யும் உத்தேசம் ஏதுமில்லை.

2—

### ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா 24810—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் கிராமம், நெட்டலூரர் சுடுகாட்டு சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு தகவல் அளிக்குமா?

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2004 பிப்ரவரி 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், எர்ணாபுரம் கிராமம், மகுடஞ்சாவடி, எடப்பாடி நெடுஞ்சாலையில் உள்ள பிள்ளையார்கோவிலில் இருந்து பிரிந்து, நெட்டலூர் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதையை பட்டாதாரர்கள் வழிவிடாமல் தடுத்து வந்தனர். தற்போது பாதைக்குண்டான நிலக்கிரயத் தொகையினை சம்பந்தப்பட்ட பட்டாதாரர்களுக்கு, ஊர் பொதுமக்கள் சார்பாகக் கொடுக்கப்பட்டு விட்டது. சுடுகாட்டுப்பாதையில் தற்போது தார்ச்சாலை போடப்பட்டுள்ளது. இப்பாதையில் தற்போது எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை.

3—

### வீட்டுமனைப் பட்டா

**வினா 27411—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெள்ளார் ஒன்றியத்தில் உள்ள கொண்டையாங்குப்பம் ஊராட்சியில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி வட்டம், கொண்டையாங்குப்பம் ஊராட்சியில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கக் கோரியுள்ள மேற்படி கிராம புல எண்.717/2ஏ என்பது, கிராமக் கணக்குகளில் தாங்கல் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்புறம்போக்கில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு தடையாணை

உள்ளதால், கொண்டையாங்குப்பம் ஊராட்சியில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

4—

### இலவச விட்டுமனைப் பட்டா

**வினா 27412—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெள்ளார் ஒன்றியத்தில் உள்ள ஜப்திகாரணி கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு அரசு வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், ஜப்திகாரணி கிராமம் ச.எண்.41/6ஏ, 6பி,7ஏ,7பி, 43/4சி,55/1பி 2,4,5,6, 56/1ஏ மற்றும் 57/1,2 ஆகியவை நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு 79 பயனாளிகளுக்கு கடந்த 2-5-2002-ல் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

5—

### விட்டுமனைப் பட்டா

**வினா 27414—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் உள்ள ஊத்துக்குளம் ஊராட்சியில் வாழும் பொதுமக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?





விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி வட்டம் மற்றும் தொகுதி, கொண்டையாங்குப்பம் மதுரா ஊத்துக்குளம் ஊராட்சியில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரியுள்ள மேற்படி கிராம புல எண்.660-1 என்பது, கிராமக் கணக்குகளில் மேய்க்கால் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்புறம்போக்கில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு தடையாணை உள்ளதால் ஊத்துக்குளம் ஊராட்சியில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

6—

### பட்டா வழங்குதல்

**வினா 30009—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் வட்டம், சதுரங்கப்பட்டினம் கிராமத்தில் ஏராளமானவர்கள் அரசு நிலத்தில் வாழ்ந்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு பட்டா வழங்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு, தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் வட்டம், நெ36 சதுரங்கப்பட்டினம் கிராமத்தில் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் நபர்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:—

[2004 பிப்ரவரி 10

| புல எண். | வகைபாடு | விஸ்தீரணம் (ஹெக்டேர்) | ஆக்கிரமிப்புதாரர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆதிதிராவிடர் | பிற்பட்டோர் | மொத்தம் |
| 2 | குளம் | 0.55.5 | 4 | 7 | 11 |
| 90 | தாங்கல் | 2.17.5 | 9 | - | 9 |
| 89 | களம் | 0.28.5 | 2 | 2 | 4 |
| 139/76 | தோப்பு | 0.54.0 | 3 | 10 | 13 |
| | | | 18 | 19 | 37 |

ஆனால் மேற்படி அரசு புறம்போக்கு நிலங்கள் அனைத்தும் ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களாக உள்ளதாலும், இவற்றில் வீட்டுமனை ஒப்படை வழங்க அரசின் தடையாணை உள்ளதாலும் ஆக்கிரமனதாரர்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

7—

## மதகு கட்டுதல்

**வினா 33562—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கன்னிக்கோயில் வடிகாலில் உள்ள மதகு இடிந்து விழுந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடன் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் ஒன்றியம், கன்னிக்கோயில் வடிகால் மதகு அரிமானம் ஏற்பட்டு இடிந்துள்ளது. இந்த வடிகால் மதகினை



2004 பிப்ரவரி 10]

புதியதாக 2004-2005-ல் வாய்க்கால்கள் பராமரிக்கும் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதன் உத்தேச மதிப்பு ரூ.50,000/- ஆகும்.

8—

## தண்ணீர் தேக்கி வைக்கும் திட்டம்

**வினா 36907—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சி, தென்னலக்குடியில் உள்ள திருநகரி வாய்க்காலில் சட்ரஸ் கட்டி விவசாயத்திற்குத் தண்ணீரை தேக்கி வைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சி, தென்னலக்குடியில் உள்ள திருநகரி வாய்க்காலில் தேக்கணை (Regulator) கட்டி விவசாயத்திற்குத் தண்ணீரை தேக்கி வைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

9—

## சேமிப்பு கிடங்கு நிறுவனம்

**வினா 39080—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான கிடங்குகள் எத்தனை உள்ளன?

(ஆ) அதற்கு வாடகை கிடங்குகள் எத்தனை உள்ளன?

(இ) அவைகளுக்குச் சொந்த கட்டிடம் கட்ட அரசுக்கு கருத்துரு உள்ளதா?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

| | | |
|---|---|---|
| (அ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான கிடங்குகள் | .. | 56 |
| (ஆ) வாடகைக் கிடங்குகள் | .. | 10 |
| மொத்தம் | .. | 66 |

(இ) ஆம். 2003-2004 ஆம் ஆண்டிற்கான திட்டத்தின்படி வாடகையில் இயங்கிவரும் கள்ளக்குறிச்சியில் சொந்த கிடங்கு கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் கொள்ளளவு 3,400 மெட்ரிக் டன்களாகும். தவிர, சொந்த கிடங்கு இயங்கிவரும் தர்மபுரியில் கூடுதலாக 3,400 மெட்ரிக் டன் கொண்ட கிடங்கு கட்டவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

10—

## உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா 10209—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட கோணம்மேடு நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

இல்லை.

11—

## பட்டப் படிப்பு பயிற்சி நிலையங்கள்

**வினா 25106—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

தமிழ்நாட்டில் பஞ்சலோக சிலைகள், வெண்கல வார்ப்புச் சிலைகள் செய்ய பட்டப் படிப்பு பயிற்சி நிலையங்கள் எத்தனை உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் பஞ்சலோக சிலைகள், வெண்கல வார்ப்புச் சிலைகள் செய்ய கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் மாமல்லபுரம், அரசு கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் பட்டப் படிப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

12—

## ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

**வினா 26715—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தேவையின் அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப அந்தந்த பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளைத் துவக்கும், தற்போதுள்ள நிதி நெருக்கடியில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களால் துவக்க இயலாது. எனவே, தருமபுரியில், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை அரசால் அமைக்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**13—**

## ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்

**வினா 30108—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இயங்கும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் எத்தனை?

(ஆ) அவற்றில் சிறுபான்மை மதத்தினர் நடத்தும் கல்லூரிகள் எத்தனை?

(இ) அங்கு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) 22 கல்லூரிகள்.

(ஆ) 6 கல்லூரிகள் (கிருத்துவ மதத்தினர்).

(இ) 879 மாணவ மாணவியர்கள் கல்வி பயிலுகின்றனர்.

**14—**

## கல்லூரிகளில் இடம்

**வினா 33026—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரில் அனைத்து கல்லூரிகளிலும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு விகிதாச்சாரப்படி இடம் கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கல்லூரிகளில் சேர விண்ணப்பித்த மாணவ/மாணவியர் சேர்க்கைக்கு வராததாலும், போதிய விண்ணப்பங்கள்



பெறப்படாததாலும் விகிதாச்சாரப்படி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடம் நிறைவு செய்ய இயலவில்லை.

**15—**

## உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம்

**வினா 33035—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள இரமணமுதலிபுதூர் ஊராட்சி, நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**16—**

## தமிழ்நாடு கவர்ன்மெண்ட்

**வினா 34872—திரு என். நன்மாறன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆங்கிலத்தில் தமிழ்நாடு கவர்ன்மெண்ட் (Tamil Nadu Government) என்றிருப்பதை தமிழ்நாடு கவர்ன்மெண்ட் (Tamizh Nadu Government) என்று மாற்ற முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு என்ற பெயர் மொழியின் அடிப்படையில் அமைந்தது. தமிழ் என்பதற்குப் பன்னெடுங்காலமாக "Tamil" என்ற எழுத்துக் கூட்டலே ஆங்கிலத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. டாக்டர் ஜி.யு. போப் போன்ற மேல்நாட்டு அறிஞர்களும் Tamil என்ற எழுத்துக் கூட்டலையே பயன்படுத்தியுள்ளனர். அரசு ஆவணங்களிலும் இவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது. மேலும், English என்பது ஆங்கிலம் என்றுதான் எழுதப்படுகிறதே தவிர 'இங்கிலீசு' என எழுதப்படுவதில்லை என்பதையும், சில சொற்கள் வேற்று மொழியில் உச்சரிக்கப்படும்போது ஒரே முறையில் உச்சரிக்கப்படுவதில்லை என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

17—

**உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம்**

**வினா 35026—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், ஆச்சாள்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.



2004 பிப்ரவரி 10]

18—

**தையற் பயிற்சி பாடம்**

**வினா 39287—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட்டத் தலைநகரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் தையல் பயிற்சிப் பிரிவு பாடத்தை சேர்க்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

தற்போது கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், வட்டத் தலைநகரங்களிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் தையற் பயிற்சிப் பாடத்தை அறிமுகப்படுத்த, அப்பகுதி மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு விருப்பமுள்ள மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து கருத்துரு பெறப்பட்டால் அதற்கான இடவசதி, தையல் இயந்திரம், பயிற்சி பெற விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைப் பரிசீலித்து அனுமதி வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்கும்.

19—

**இலவச நோட்டுப் புத்தகங்கள்**

**வினா 47346—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சோலையார் டேம் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவ/மாணவிகளுக்கு அரசு வழங்கும் இலவச நோட்டுப் புத்தகங்கள் இன்னும் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சோலையார் டேம் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் (9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும்) ஆதிதிராவிடர் வகுப்பு, (பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவிகளுக்கு ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக 17-9-2003 அன்றே இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டு விட்டன.

**20—**

## காசநோய்த் தடுப்பு முகாம்கள்

**வினா 28315—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போலியோ தடுப்பு முகாம்கள் நடத்துவது போல காசநோய்த் தடுப்பு முகாம்கள் நடத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

காச நோயைக் கட்டுப்படுத்தும் (பி.சி.ஜி.) ஊசி மருந்து குழந்தைகளுக்கு மட்டுமே பயன்படும் என்பதால், எல்லா குழந்தைகளுக்கும் தடுப்பூசி திட்டத்தின்கீழ் பி.சி.ஜி. தடுப்பூசி போடப்படுகிறது. மேலும் தேசிய காசநோய் திருத்தியமைக்கப்பட்ட தடுப்புத் திட்டத்தில் 3 வாரங்களுக்குமேல் சளியுடன் கூடிய இருமல் உள்ளவர்களுக்கு 3 முறை சளி பரிசோதனை செய்யப்படுகிறது. அதற்காக 614 நுண்ணோக்கி மையங்கள் உள்ளன. தேவைப்பட்டால் சளி பரிசோதனையுடன் மார்பு எக்ஸ்ரேயும் எடுக்கப்படுகிறது. இவ்வாறாக நோய் கண்டறியப்பட்டு 6 முதல் 8 மாதங்களுக்கு நேரடி குறுகிய கால சிகிச்சை மூலம் மருந்துகள் வாரத்திற்கு 3 நாள் கொடுக்கப்படுகின்றன. இவ்வாறான சிகிச்சை நோயாளிகள் வீட்டிற்கு அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள் காசநோய் மருத்துவமனைகள், நகராட்சி மையங்கள் தனியார் மருத்துவமனைகள் ஆகிய 10,000 இடங்களில் (சிகிச்சை மையங்களில்) தரமான மருந்துகள்



2004 பிப்ரவரி 10]

கொடுக்கப்படுகின்றன. நோயாளிகள் குணமடைந்து வருகின்றனர். இந்நிலையில் போலியோ தடுப்பு முகாம்கள் நடத்துவது போல் காசநோய்த் தடுப்பு முகாம்கள் நடத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**21—**

## ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி

**வினா 7424—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலைத் தொகுதி, ஜேடர்பாளையம் உயர்நிலைப் பள்ளியின் ஆதிதிராவிட மாணவர்கள் தங்கி படிக்க விடுதி வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாக மாணவ/மாணவியர் விடுதிகள் திறக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**22—**

## மலைவாழ் மாவட்டம்

**வினா 32079—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தை தனி மலைவாழ் மாவட்டமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

[2004 பிப்ரவரி 10

23—

### ஆதிதிராவிட மாணவர்க்கு வசதி

**வினா 35421—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் அரசு மேல்நிலைப் பள்ளி ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் விடுதி ஏதும் துவங்கப்படாத நிலையில் விடுதி கட்டுவது குறித்தான வினாவிற்கு இடமில்லை. மேலும், புதிய விடுதிகளைத் திறக்கும் கருத்துருவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

24—

### ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி

**வினா 40481—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரூர் தொகுதி, கல்லாவி ஊராட்சி, கல்லாவியில் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி கட்டும் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, கல்லாவியில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி ஏதும் துவங்கப்படாத நிலையில் விடுதி கட்டிக் கொடுக்கும் தேவை ஏற்படவில்லை. மேலும் புதிய விடுதிகள் துவங்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



25—

### மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா 42061—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2001-2002-ல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையில் எத்தனை நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

எதுவும் இல்லை.

26—

### பேருந்து இயக்கம்

**வினா 13846—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், பொச்சாரம்பட்டிக்கு டீ கடை வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், பெண்ணாகரம் முதல் பொச்சாரம்பட்டி வரையுள்ள வழித்தடத்தில்

பெண்ணாகரம் முதல் டீ கடை வரை போதுமான அளவு நகர் மற்றும் புறநகர் பேருந்து வசதியுள்ளது. மீதமுள்ள டீ கடை முதல் பொச்சாரம்பட்டி வரை 43 கி.மீ. தூரத்திற்கு யாதொரு பேருந்து வசதியும் இல்லை. இதில் மந்தைமேடு முதல் பொச்சாரம்பட்டி வரை 3 கி.மீ. தூரத்திற்கு சாலை சரியில்லாததால், பேருந்துப் போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே, கோரியுள்ள வழித்தடத்தில் நகர் பேருந்து வசதி செய்திட இயலாத நிலையுள்ளது.

**27—**

### பேருந்துகளை மாற்றி இயக்குதல்

**வினா 14895—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து ஓகேனக்கல் செல்லும் பேருந்துகளில் ஏதாவது இரண்டு பேருந்துகள் தருமபுரி, இண்டூர், பி. அக்ரஹாரம், மாங்கரை, பருவதன அள்ளி, பெண்ணாகரம் வழியாக செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஓகேனக்கல் ஓர் சுற்றுலா தளம் ஆகும். தற்சமயம், தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தருமபுரியிலிருந்து ஓகேனக்கல் தடத்தில் நாளொன்றுக்கு 8 பேருந்துகள் மூலம் 30 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தருமபுரி, இண்டூர், பி. அக்ரஹாரம், மாங்கரை, பருவதன அள்ளி, பெண்ணாகரம் சுற்றுத் தடத்தில் பேருந்துகளை மாற்றி இயக்குவதால், இதுவரை பயனடைந்த பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். மேற்கூறிய வழித்தடத்தில் தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தருமபுரியிலிருந்து மாங்கரை வரை நாளொன்றுக்கு ஒரு நகர் பேருந்து மூலம் 8 நடைகளும், பெண்ணாகரத்திலிருந்து மாங்கரை வழியாக தனியார் மினி பேருந்துகள் மூலம் பேருந்து வசதியும் உள்ளன. எனவே மேற்கூறிய வழித்தடத்தில் புறநகர்ப் பேருந்துகளை மாற்றி இயக்கிட இயலாத நிலை உள்ளது.




**28—**

### பேருந்துகள் இயக்கும்திட்டம்

**வினா 16724—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி-வால்பாறை பேருந்து மதியம் வால்பாறையிலிருந்து புறப்படவும், மாலை கோவை பொள்ளாச்சி வழியாக வால்பாறை செல்லவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தமட்டில், வால்பாறை பொள்ளாச்சி வழித்தடத்தில் 22 கழகப் பேருந்துகள் தினசரி 78 நடைகளும், வால்பாறை-கோவை (வழி) பொள்ளாச்சி வழித்தடத்தில் 3 கழகப் பேருந்துகள் தினசரி 8 நடைகளும் தற்போதைய பயணிகளது அடர்விற்கேற்ப இயக்கப்பட்டு வருகிறது. எனவே கோவை-வால்பாறை (வழி) பொள்ளாச்சி வழித்தடத்தில் மேலும் கூடுதலாகப் பேருந்துகள் இயக்கிடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**29—**

### இரவு நேரங்களில் அதிக பேருந்து

**வினா 17821—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து சேலம் இரயில்வே சந்திப்பு பழைய பஸ் நிலையம் செல்ல இரவு நேரங்களில் அதிகப்படியாகப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து சேலம் புதிய பேருந்து நிலையம் வழியாக தற்போது சேலம் இரயில்வே சந்திப்பு வரை இரவு 23.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை 4 இரவு நேரப் பேருந்துகள் மூலம் 58 நடைகள் இயக்கப்படுகின்றன. மேற்கண்ட வசதியே பொதுமக்களின் போக்குவரத்துத் தேவையினை முழுமையாக நிறைவு செய்வதால் அதிகப்படியான பேருந்துகளை இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

30—

## அரசுப் பேருந்து இயக்குதல்

**வினா—17827—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெங்களூரிலிருந்து எத்தனை கர்நாடக மாநில அரசுப் பேருந்து சேலம் சென்று வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஷிமோகாவிலிருந்து பெங்களூர் வழியாக சேலத்திற்கு 2 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், பெங்களூரிலிருந்து சேலம் வழியாக 12 கர்நாடக மாநில அரசுப் பேருந்துகள் பிற இடங்களுக்கு இயக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பெங்களூரிலிருந்து சேலத்திற்கு கர்நாடக மாநில அரசுப் பேருந்துகள் நேரிடையாக எதுவும் இயக்கப்படவில்லை.

31—

## கானாங்குப்பம் வழியாக பேருந்து

**வினா 18525—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டியிலிருந்து குறிஞ்சிப்பாடி செல்லும் பேருந்தை காலை 8-00 மணிக்கு கானாங்குப்பம் வழியாக செல்ல அரசு நடவடிக்கை எடுக்க இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி-கானாஞ்சாவடி சந்திப்புச் சாலை வடக்கே 200 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கானாங்குப்பம் கிராமத்திற்குச் செல்ல கானாங்குப்பம் சந்திப்புச் சாலை வழியாக கீழ்க்கண்ட நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன:—

பண்ருட்டி-சிலம்பிநாதன்பேட்டை (வழி) கானாஞ்சாவடி, கானாங்குப்பம்- 2 நடைகள்

டி 20/பி பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி (வழி) காடம்புலியூர், கானாஞ்சாவடி- 6 நடைகள்

மேலும் பண்ருட்டி-குள்ளஞ்சாவடி இடையே இயக்கப்படும் நகரப் பேருந்து டி23 காலை 08.30 மணிக்கு பண்ருட்டியில் புறப்பட்டு கானாங்குப்பம் சந்திப்புச் சாலை வழியாக காலை 09.45 மணிக்கு குள்ளஞ்சாவடி சென்றடைகிறது. எனினும், மேற்கண்ட பேருந்துகள் பல்திசை வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளில் ஏதேனும் ஒன்றை காலை 8.00 மணிக்கு கானாங்குப்பம் கிராமத்தினர் பயன்பெறுவதற்காக கானாஞ்சாவடி கிராமத்திற்குச் செல்லும் வகையில் மாற்றியமைத்தால், நடைமுறையில் உள்ள கால அட்டவணைப்படி இப்பேருந்து வசதிகளை பயன்படுத்திவரும் பிற கிராம மக்களுக்கு இடையூறாக அமைய வாய்ப்புண்டாகும். எனவே, காலை 8.00 மணிக்கு கானாங்குப்பம் வழியாக போக்குவரத்து வசதி அளித்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

## கரும்பு ஒப்படை செய்த தினம்

**வினா 26457—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

(அ) கரும்பு பயிர் செய்ய கடன் பெற்றவர்கள் சர்க்கரை ஆலைகளில் கரும்பு ஒப்படைத்தவுடனே பணப்பட்டுவாடா செய்யப்படாததால், கடனுக்கான வட்டியை கரும்பு ஒப்படை செய்த தினம் வரை மட்டுமே வசூலிக்கும் முறையைக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சர்க்கரை விற்பனை விலையைக் கருத்தில் கொள்ளாமல், மைய அரசு அறிவித்த சட்டபூர்வ விலையைவிட, மிக திகமாக மாநில அரசின் பரிந்துரை விலை அறிவிக்கப்பட்டதாலும், ர்க்கரை உற்பத்திச் செலவு அதிகரித்ததாலும், சர்க்கரை விற்பனை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டதாலும், சர்க்கரை விற்பனையில் தேக்கம் ஏற்பட்டு அதிக அளவில் வட்டி செலுத்தப்பட்டதாலும், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் பெருத்த நட்டம் அடைந்துள்ளன. அதனால் குறித்த காலத்தில் கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு பணத்தைக் கொடுக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, கரும்புக்குரிய பண்ப்பட்டுவாடா செய்வதில் தாமதம் ஏற்படுவது தவிர்க்க இயலாததாகும்.

கரும்பு விளைவிப்போர் கரும்பு பயிரிட வங்கிகளிடமிருந்து கடன் பெறுகிறார்கள்; கரும்பை சர்க்கரை ஆலைகளுக்கு வழங்குகிறார்கள். இந்நிலையில் சர்க்கரை ஆலைகளிடம் கரும்பை ஒப்படைத்த விவசாயிகளிடமிருந்து கடனுக்கான வட்டியை வசூலிக்கக் கூடாது என வங்கிகளிடம் கூற இயலாது. எனவே, கடனுக்கான வட்டியை கரும்பு ஒப்படைப்பு செய்த நாள் வரை மட்டுமே வசூலிக்கும் முறையை கொண்டு வர இயலாது.

33—

**காகிதத் தொழிற்சாலை**

**வினா 30803—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் தனியார் காகிதத் தொழிற்சாலை எத்தனை உள்ளது?



2004 பிப்ரவரி 10]

(ஆ) அவைகளுள் எத்தனை நல்லமுறையில் இயங்கி வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்தில் 31 தனியார் காகிதத் தொழில் நிறுவனங்கள் உள்ளன. அவை அனைத்தும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. அந்நிறுவனங்களின் மொத்த முதலீடு ரூ.1524.11 இலட்சம் ஆகும். மொத்தம் 795 தொழிலாளிகள் பணிபுரிகின்றனர். அந்நிறுவனங்களின் மொத்த உற்பத்தித்திறன் 19,000 மெட்ரிக் டன், உற்பத்தியின் மதிப்பு ரூ.27,970 இலட்சம் ஆகும்.

34—

**மணல் திருட்டைத் தடுத்தல்**

**வினா 31904—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட பாவக்கல் ஊராட்சிக்கு அருகில் பாம்பாற்றில் மணல் திருட்டைத் தடுக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் அனுமதியின்றி மணல் எடுப்பதைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து வருவாய்க் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் மற்றும கிராம நிர்வாக அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அனுமதியின்றி மணல் எடுக்கக் கூடாதென நாளிதழ்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனுமதியின்றி மணல் எடுத்து வாகனங்கள் மூலம் கடத்தப்படுவதைத் தடுக்க 24 மணி நேரமும் இயங்கக்கூடிய 44 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் மணல் எடுக்கப்படுவதையும், எடுத்துச் செல்வதையும் கண்காணிக்க ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. பாவக்கல் பஞ்சாயத்து அமைந்துள்ள ஊத்தங்கரை

[2004 பிப்ரவரி 10

வட்டத்தில் பாவக்கல் மற்றும் அதன் அருகில் உள்ள பகுதிகளில் 4 சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இப்பகுதியில் மணல் எடுப்பதைத் தடுக்க தொடர்ந்து தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

35—

### தேயிலையின் தரம் உயர்த்துதல்

**வினா 29603—டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நுகர்பொருள் விநியோகம் மூலம் தற்பொழுது வழங்கிவரும் தேயிலை தரம் குறைந்து இருப்பதை, உயர்ந்த தேயிலையாக முன்போல் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

இன்ட்கோர்வ் நிறுவனத்தின் வாயிலாகத் தயாரிக்கப்படும் 'ஊட்டி டீ'—யின் தரம் குறைந்துள்ளது என்பது சரியல்ல. 'ஊட்டி டீ' தயாரிப்பதற்காக தேயிலையை கொள்முதல் செய்வதற்குமுன் அதன் மாதிரியை (Sample) வைத்து எல்லாவிதத்திலும் தாமுள்ள நிலைப்பாடுகளுடன் நிறம், மணம் மற்றும் சுவை உள்ளனவா என்று சோதனையிடும் வல்லுநர்களை கொண்டு தாம் சோதனை செய்யப்பட்ட பின்னர் கொள்முதல் செய்யப்படுகிறது. கடுமையான தரக்கட்டுப்பாட்டு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பிறகு, 'ஊட்டி டீ' விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. ஊட்டி டீ விற்பனைக்குமுன் தேயிலைத்தூளின் முன்மாதிரிகள் குன்னூர் தென்னிந்திய தேயிலை பயிரிடுவோர் சங்கத்தின் சோதனைக் கூடங்களில் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே விற்பனை செய்யப்படுகிறது.



2004 பிப்ரவரி 10]

36—

### தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கடன் வசதி

**வினா 21257—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி களர்வள்ளிப்பட்டிப்புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி பூ, காய்கறி, பழங்கள், விற்கும் மகளிர் எவ்வளவு பேருக்கு கடன் வழங்கியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் உள்ள ஆவணிப்பேரூர் மேல்முகம், களர்வள்ளிப்பட்டிப்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் காய்கறி, துணி, பழம், பெட்டிக்கடை மற்றும் இட்லிக் கடை வியாபாரம் செய்ய 71 மகளிருக்கு கடன் வழங்கி உள்ளது. இந்த 71 மகளிரில் 2001-2002 ஆம் ஆண்டில் காய்கறி மற்றும் பூ வியாபாரம் செய்யும் 11 மகளிருக்கு- ரூ.16,500/-ம், 1-4-2002 முதல் 2002 ஆகஸ்ட் வரை 10 மகளிருக்கு ரூ.14,500/-ம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

37—

### நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா 21489—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை தொகுதி, ஆவூர்-பன்னியூர் ஊராட்சியில் நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை தொகுதியில் ஆவூர் ஊராட்சியில் ஆவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் ஆவூர் கூட்டுறவு நியாய விலைக் கடை ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் கடந்த இரண்டு வருடங்களாக செயல்பட்டு வருகிறது. இக்கடை 996 குடும்ப அட்டைகளுடன் முழு நேரக் கடையாக செயல்பட்டு வருகிறது.

இசுக்கழிகாட்டேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் பன்னியூர் ஊராட்சியில் உள்ள பன்னியூர் கூட்டுறவு முழுநேர நியாய விலைக் கடை 301 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த பன்னியூர் முழுநேர நியாய விலைக் கடைக்கு கட்டிடம் கட்ட இந்த நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் நிதி ஏதும் ஒதுக்கப்படாததால் பன்னியூர் நியாய விலைக் கடைக்கு இந்த நிதியாண்டில் கட்டடம் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

**38—**

## நியாய விலைக் கடைக்குச் சொந்த கட்டடம்

**வினா 26461—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒன்றியம், அரக்கப்பாடி பஞ்சாயத்து சின்னகாம்பட்டியில் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒன்றியம், அரக்கப்பாடி பஞ்சாயத்து, சின்னகாம்பட்டி நியாய விலைக் கடை 261 குடும்ப



அட்டைகளைக் கொண்டு ஏ.செக்காரபட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளூர் மக்களால் அளிக்கப்பட்ட இலவச கட்டடத்தில் பகுதிநேரக் கடையாக செயல்பட்டு வருகிறது. எனவே, அரசு திட்டங்களின்கீழ் இக்கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வழிவகை இல்லை.

**39—**

## சிறுவணிகக் கடன்

**வினா 31274—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியிலுள்ள க. புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 2001-2002 ஆம் ஆண்டு எவ்வளவு மகளிருக்கு சிறுவணிகக் கடன் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியிலுள்ள க. புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் 30 மகளிருக்கு ரூ.99,500/- சிறுவணிகக் கடன் வழங்கப்பட்டது.

**40—**

## மானியத் தொகை

**வினா 33535—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய 2001-2002 ஆம் ஆண்டுக்கான பழைய பாக்கி தள்ளுபடி மானியமாக சேலம் மாவட்டத்திற்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழக அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய 2001-2002 ஆம் ஆண்டுக்கான பழைய பாக்கி தள்ளுபடி மானியமாக விவசாயிகளின் வட்டி மற்றும் அபராத வட்டி நிவாரணத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்திற்கு ரூ.975.16 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

41—

### நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா 34038—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், அரியாணிப்பட்டி ஊராட்சியிலுள்ள கொத்தம்பட்டி கிராமத்திற்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், அரியாணிப்பட்டி ஊராட்சியிலுள்ள கொத்தம்பட்டி பகுதி 133 குடும்ப அட்டைகளுடன் தெத்துவாசல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் 488 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் தெத்துவாசல்பட்டி தாய் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. பகுதி நேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும்; மற்றும் பகுதி நேரக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்னர் தாய் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால் கொத்தம்பட்டி கிராமத்தில் 133 குடும்ப அட்டைகளைக் கொண்டு பகுதி நேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



42—

### தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா 39744—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வையம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் முறைகேடுகள் நடந்துள்ளதும், சுமார் 80 இலட்சம் ரூபாய் டெபாசிட்தாரர் களுக்கு திருப்பி கொடுக்காமல் உள்ளதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இவைமீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். வையம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் காணப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 81ன்கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணை முடிவுகளின்படி சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வங்கியில் வைப்புதாரர்களிடம் பெற்ற வைப்புத்தொகை ரூ.83 இலட்சம் கீழ்க்கண்டவாறு முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| (1) | வைப்புத் தொகை மீது போலியாக கடன் வழங்கியதில் முறைகேடுகள் | 40.42 |
| (2) | வைப்புத் தொகையில் பயிர்க்கடன் வழங்கியதாக முறைகேடுகள் | 4.07 |
| (3) | வைப்புத் தொகையில் உறுப்பினர்களுக்கு வழங்கிய பல்வேறு கடன்கள் | 29.73 |
| (4) | வங்கியில் வைப்புத் தொகையில் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் மற்றும் இதர செலவு | 3.64 |
| (5) | வைப்புத் தொகையில் மத்திய வங்கியில் செலுத்திய கடன் | 5.14 |
| | மொத்தம் | 83.00 |

(அ) **குற்றவியல் நடவடிக்கை:** முறைகேடுகள் தொடர்பாக வங்கிச் செயலாளர் எழுத்தர், அட்டெண்டர் மற்றும் தலைவர்மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையில் இருக்கிறது.

(ஆ) **தண்டத்தீர்வை நடவடிக்கை:** வங்கிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு, தண்டத்தீர்வை ஆணை எண் 6/2000-ன்படி 31-8-2000-ல் ரூ.40,42,105/-க்கு பொறுப்பாக்கப்பட்ட மேற்கண்ட நபர்கள் மீது பிறப்பிக்கப்பட்டது. இத்தண்டத்தீர்வை ஆணையை எதிர்த்து கோவை மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.

மேலும் சம்பந்தப்பட்ட நபர்களின் சொத்துக்கள் ரூ.20.00 இலட்சம் தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது வங்கி கலைக்கப்பட்ட நிலையில் மேற்கண்ட சொத்துக்களை ஏலம் விடுவதன் மூலம் கிடைக்கக்கூடிய தொகை மற்றும் வங்கி உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகையை வசூலித்து, அரசு மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி கடன் நிலுவைகளை (அரசு பங்கு மற்றும் கடன் ரூ.3.55 இலட்சம் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி கடன் நிலுவை 17.00 இலட்சம்) செலுத்திய பின்னர் வைப்புதாரர்களுக்கு சேர வேண்டிய தொகைகளை சட்ட விதிகளுக்குட்பட்டு வழங்க இயலும்.

43—

## கிராமந்தோறும் தீவன விதை

**வினா 13695—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக் குட்பட்ட பகுதியில் கிராமந்தோறும் தீவன விதை தடையின்றி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) உலக வங்கித் திட்டம் வழி, தீவன அபிவிருத்தித் திட்டம் 1998 ஆம் ஆண்டுடன் நிறுத்தப்பட்டமையால், சேரன்மகாதேவி, பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கிராமந்தோறும் தீவன விதை தடையின்றி கிடைக்க வழிவகை ஏதுமில்லை.

(ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தீவன மினிகிட் பொட்டலங்கள் வழங்கப்படும்போது மட்டுமே, அம்பாசமுத்திரம் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் வழி குறிப்பிட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

44—

## கால்நடை மருந்தகம்

**வினா 47161—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மாதானத்திலுள்ள கிளை கால்நடை மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாக மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, மாதானம் கிராமத்தில் ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகின்றது. எனவே, கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த வேண்டிய நிலை எழவில்லை.

(ஆ) எழாது.

[2004 பிப்ரவரி 10

45—

## வன விலங்குகள்

**வினா 35859—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த நிதியாண்டில் திருட்டுத்தனமாக கொல்லப்பட்ட வன விலங்குகள் எத்தனை?

(ஆ) தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் நிதியாண்டில் 129 பறவைகள் உட்பட 227 வன உயிரினங்கள் கொல்லப்பட்டுள்ளன.

(ஆ) தொடரப்பட்ட வழக்குகள் 97.

46—

## மானியம் வழங்குதல்

**வினா 36545—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் மாசுக்கட்டுப்பாட்டு சாதனங்கள் தயாரிப்பு தொழிலில் ஈடுபடுவோருக்கு அரசு மானியம் வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்கள் தயாரிப்புத் தொழிலில் ஈடுபடுவோருக்கு



2004 பிப்ரவரி 10]

மானியம் வழங்குவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

47—

## வீடு கட்டும் திட்டம்

**வினா 40540—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு பேரூராட்சியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

48—

## வீடுகள் கட்டும் திட்டம்

**வினா 44777—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 2003-2004 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் நலிவுற்ற, குறைந்த வருவாய், நடுத்தர வருவாய், உயர் வருவாய் ஆகிய பிரிவினருக்கான வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2004 பிப்ரவரி 10

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**49—**

**இளைஞர் மன்றங்கள் உருவாக்க அரசின் திட்டம்**

**வினா 38289—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் இளைஞர் மன்றங்கள் உருவாக்க அரசிடம் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகரில் இளைஞர் மன்றங்கள் உருவாக்க திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**50—**

**உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்**

**வினா 43174—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 10]

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுவத்தூர் கிராமத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுவத்தூர் கிராமத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத்தர திட்டங்கள் ஏதும் அரசிடம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்தச் சட்டமுன்வடிவு, இன்று காலையிலேதான் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இதைப் படிப்பதற்கு கூட அவகாசம் கிடைக்கவில்லை. இதை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஏற்கெனவே சொல்லப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே வந்து, இங்கே சட்டமுன்வடிவை நான் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன் என்று கூறுவதும், உடனடியாக அறிமுகம் செய்கிறேன் என்று சொல்வதும் சரியான முறையல்ல. அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலுரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*(தி.மு.க.வைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் அவையை விட்டு வெளியேறினர்.)*

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் அவையை விட்டு வெளியேறினர்.)*

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் (திருமதி வி. சிவகாமி அவர்களைத் தவிர) அனைவரும் அவையை விட்டு வெளியேறினர்.)*

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அனைவரும் அவையை விட்டு வெளியேறினர்.)*

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் அவையை விட்டு வெளியேறினர்.)*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், நான் பதிலுரை வழங்கும்போது இப்படி வெளிநடப்பு செய்வார்கள் என்பது நான் எதிர்பார்த்ததுதான். ஆனால், சொல்லிவிட்டுப் போவார்கள் என்று எதிர்பார்த்தேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) சொல்லாமலேயே, சொல்லிக்கொள்ளாமலேயே, இப்படி ஓடிப்போவதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கிராமப்புறத்திலே ஒரு பழமொழி உண்டு. நல்ல பிள்ளைக்கு அடையாளம் சொல்லாமல் கொள்ளாமல் போவது. (சிரிப்பு) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நேற்றைய தினம்கூட இந்த அவையில் பேசிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள், இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, எதிர்க்கட்சித்

தலைவர்கள் பேசும்போது, இன்றைக்காவது முதலமைச்சர் அவையில் இருந்து எங்கள் கருத்துகளை எல்லாம் கேட்க வேண்டாமா? இன்று கூட வரவில்லையே என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார். ஒன்றை இந்த நேரத்தில் அவருக்கும், அனைவருக்கும் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். 2001-ல் இந்த ஆட்சி அமைந்த பிறகு இந்தச் சட்டப் பேரவை கூடும்போதெல்லாம் ஒரு நாள்கூட தவறாமல் இந்த அவை நிகழ்ச்சிகள் தொடங்கும் நேரத்தில் இருந்து அவை கலையும் வரை நான் தவறாமல் இந்த அவையில் இருந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவையின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று, பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன கேள்விகள் கேட்டாலும் உடனடியாக பதில் அளித்து, என்ன பிரச்சினைகள் எழுப்பினாலும் உடனடியாக அவற்றிற்கு உரிக்க விளக்கங்களை அளித்து, நான் மிகுந்த ஆர்வத்துடனும், இதய சுத்தியுடனும் இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்துகொண்டு இருக்கிறேன். இந்த முறை ஆளுநர் உரை வழங்கிய பிறகு நடைபெற்ற— கடந்த சில நாட்களாக நடைபெற்ற இந்தக் கூட்டத் தொடரில் ஏற்கெனவே ஒப்புதல் அளித்த மிக முக்கியமான அரசு நிகழ்ச்சிகள் இருந்ததால், என்னால் இந்த அவைக்கு தினந்தோறும் வர முடியவில்லை. புதிய மாவட்டத் துவக்க விழா என்பது மிகவும் முக்கியமான ஒரு அரசு நிகழ்ச்சி. மக்களுக்கு நன்மை பயக்கின்ற ஒரு நிகழ்ச்சி என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். ஆகவேதான் இது ஏற்கெனவே ஒப்புதல் அளித்து ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டதால், நான் இந்த அவைக்கு வர முடியவில்லை. ஆனால், இப்படியெல்லாம் ஆதங்கப்பட்டுக்கொள்ளும், குறைபட்டுக் கொள்ளும் எதிர்க்கட்சித் தலைவர்கள், நான் இந்த அவைக்கு வந்து பதில் அளிக்கின்ற நேரத்தில் சொல்லிக்கொள்ளாமலேயே ஓடிப் போகின்றார்கள். மக்கள் இதை கவனிக்க வேண்டும். நிச்சயமாக மக்கள் கவனித்துக் கொண்டிருப்பார்கள் என்பது எனக்குத் தெரியும்.

*முற்பகல் 11–05*

2001–ல் இந்த ஆட்சி அமைந்த பிறகு, இந்தப் புதிய சட்டப் பேரவை அமைந்த பிறகு, எந்த ஒரு முக்கிய நிகழ்வின் போதும் எதிர்க்கட்சித் தலைவர்களோ, உறுப்பினர்களோ இந்த அவையில் இருந்ததே கிடையாது. அது ஆளுநர் உரையாக இருந்தாலும் சரி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெறுகின்ற விவாதத்திற்கு முதலமைச்சர் பதில் அளிக்கும்போதும் சரி, நிதியமைச்சர் அவர்கள் இந்த அரசின் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கும்போதும் சரி, எந்த





ஒரு முக்கிய நிகழ்வின்போதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த அவையில் இருந்து தாங்கள் ஆற்றவேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்றவில்லை. மக்கள் எதற்காக அவர்களைத் தேர்ந்தெடுத்து இந்த அவைக்கு அனுப்பினார்களோ அந்தக் கடமையை அவர்கள் புறக்கணித்துவிட்டு, மறந்துவிட்டு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும், நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும். இப்போது விரைவில் சந்தர்ப்பம் கிடைக்கப்போகிறது. இதற்கெல்லாம் மக்கள் அவர்களுக்கு த்க்க பாடம் புகட்ட வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கடந்த 5–2–2004 முதல் நடைபெற்ற விவாதத்திற்கு தற்போது எனது பதிலுரையை அளிக்க விழைகின்றேன்.

“நாம் பிறர்க்கு நல்லவர் ஆகும்போது நமக்கும் நல்லவர் ஆகிறோம்” என்பது மிகச் சிறந்த வாழ்வியல் உண்மை ஆகும். ஆனால் தங்களுக்குத் தாங்களே நல்லவர் ஆகாதவர்கள் தமிழகத்தில் உண்டு. ஏனென்றால், அவர்கள் மற்றவர்களுக்கு நல்லவர்கள் இல்லை. தங்களுக்கு வாக்களித்த மக்களின் நலனைப் பற்றிக் கொஞ்சமும் எண்ணிப் பாராமல், அந்த மக்களால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற சில தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள், அவர்களுக்கும் நல்லவர்கள் இல்லை: அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மக்களுக்கும் அவர்கள் நல்லவர்கள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் இந்தச் சட்டப் பேரவையைப் பொறுத்தவரையில், இதுவரை நிரூபணமாகியிருக்கின்ற உண்மை.

இவர்களுடைய அர்த்தமற்ற கூச்சல்களும், நியாயமற்ற வெளி நடப்புகளும் நாட்டு மக்களுக்கு சலிப்பையும், வெறுப்பையும் உண்டாக்கி இருக்கின்றன. இவர்களுக்கு ஒரே ஒரு நோக்கம் இருக்கிறது. எனக்கும் ஒரே ஒரு நோக்கம் இருக்கிறது. என்னுடைய ஒரே நோக்கம் எவ்வாறெல்லாம் தமிழக மக்களுக்கு நன்மை செய்யலாம் என்பது. அவர்களுடைய ஒரே நோக்கம் எனக்கு எந்த வகையிலும் நல்ல பெயர் வந்துவிடக் கூடாது என்பது. அதற்கு இவர்கள் என்ன வேண்டுமென்றாலும் செய்வார்கள். மக்களிடத்தில் தங்கள் செல்வாக்கு

குறைவது பற்றி இவர்களுக்குக் கவலை இல்லை. மக்கள் தங்களை கேவலமாக நினைப்பார்களே என்பது பற்றிக்கூட இவர்களுக்குக் கவலை இல்லை. நமது குறிக்கோள் முதலமைச்சரை எதிர்ப்பதே என்ற ஒரே முடிவோடு செயல்படுகிறவர்கள் இவர்கள். தி.மு.க. உறுப்பினர்கள் இந்த அவையில் இருந்தாலும் அந்த நோக்கத்தோடு தான் செயல்படுகிறார்கள். அவர்கள் டெல்லியில் இருந்தாலும் இதே நோக்கத்தோடுதான் செயல்படுகிறார்கள். டெல்லியிலே மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த தி.மு.க. மந்திரிமார்கள் ஒவ்வொரு வேளையும் தொல்லை, ஒவ்வொரு நாளும் ஒரு முட்டுக்கட்டை என்று திட்டமிட்டுச் செயல்பட்டு வந்தார்கள் என்பதை இந்த நாடே நன்கு அறியும்.

இராணி மேரி கல்லூரி வளாகத்தில் தலைமைச் செயலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று ஜெயலலிதா திட்டமிடுகிறாரா? அதை எப்படித் தடுப்பது? கோட்டூர்புரத்தில் தலைமைச் செயலகத்தை அமைக்க ஜெயலலிதா விரும்புகிறாரா? கூடாது, கூடாது! எப்படியும் அதைத் தடுத்தே ஆக வேண்டும் என்று அவசர அவசரமாகச் சட்டம் தீட்டுவதே இவர்களது சிந்தனையாக இருந்தது! ஏனென்றால், எனக்கு அதனால் நல்ல பெயர் எதுவும் வந்துவிடக் கூடாதாம்.

தமிழகத்தில் மின்சார உற்பத்தியைப் பெருக்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் முன்மொழியப்பட்ட பைக்காரா இறுதிநிலை புனல் மின் திட்டத்தை செயல்படுத்த தேவையான சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறையின் தடை நீக்கச் சான்றிதழை வழங்கிட வேண்டும் என்று மைய அரசிற்கு கோரிக்கை மேல் கோரிக்கை விடுத்தும் அது ஏற்கப்படாமல் தாமதிக்கப்பட்டு வந்தது. இது குறித்து நான் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றேன். இதனைத் தொடர்ந்து தி.மு.க. மத்திய அமைச்சரவையை விட்டு விலகிய பின், 30-1-2004 அன்று கருத்தளவில் இதற்கான தடையில்லாச் சான்றிதழை மைய அரசு வழங்கியுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் (மேசையைத் தட்டும் ஒலி) மிகுந்த மகிழ்ச்சியுடன் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி வைத்துக்கொண்டு மைய அரசில் அங்கம் வகித்து மத்திய அமைச்சர்களாக பதவி வகித்த தி.மு.க.வினர் தமிழகத்திற்கும், தமிழக் மக்களுக்கும் எத்தகைய துரோகம் இழைத்து வந்திருக்கிறார்கள் என்பதை இந்த ஒரு நிகழ்வே தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டும்.



முற்பகல் 11–10

மத்திய அரசில் தி.மு.க. அங்கம் வகித்த காலம் வரை தமிழ்நாட்டிற்கு நன்மை பயக்கும் இது போன்ற திட்டங்களை நிறைவேற்றிட அவர்கள் உதவிடவில்லை என்பது மட்டுமல்ல; முட்டுக்கட்டைகளாக இருந்து, அந்தத் திட்டங்களை நிறைவேற்றாமல் தடுக்க என்னென்ன செய்ய முடியுமோ அத்தனையும் செய்தார்கள். தமிழகத்தின் நலனுக்கு கரும்புப் புள்ளிகளாக விளங்கிய இவர்கள், மத்திய அரசிலிருந்து விலகிய அடுத்த நொடியிலிருந்து தமிழகத்திற்கு நல்லது நடக்கிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழக மக்களுக்கு நன்மை விளைகிறது. என்னுடைய முயற்சியால் இவை யாவும் நிறைவேறுகின்றன என்ற நிதர்சனமான உண்மையை இந்த அவை மூலமாக தமிழக மக்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

காவிரித் தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைத்துவிடக் கூடாது என்பதில் கர்நாடகத்தைவிட இவர்கள் தீவிரமாக இருந்தார்கள். எனக்கும், எனது கட்சிக்கும், நான் தலைமை ஏற்றிருக்கின்ற இந்த அரசுக்கும் எதிராக என்னென்ன செய்யலாம் என்பதைத்தவிர, தங்களைத் தேர்ந்தெடுத்த தமிழக மக்களுக்கு என்ன செய்யலாம் என்பதை அவர்கள் நினைத்துப் பார்த்ததே இல்லை. அதற்கு நேரமும் இல்லை. ஏனென்றால், உள்ள பொழுதெல்லாம் எனக்கு உபத்திரவம் தருவதற்காகவே என்ற உன்னத இலட்சியத்தோடு அவர்கள் செயல்பட்டார்கள்.

இன்னொரு கட்சி; அந்தக் கூடாரத்தில் குழப்பத்தைத்தவிர வேறு ஒன்றும் இல்லை. 'யாரோடு கூட்டு என்பது படைத்தவனைத்தவிர யாருக்குத் தெரியும்? யாம் அறியோம் பராபரமே!' என்ற தத்துவ விசாரத்தில் மூழ்கி இருக்கும் கட்சி அது. தனக்கு என்ன நிலைப்பாடு என்று தனக்கே தெரியாத ஒரு தடுமாற்றத்தில் அது எப்போதும் இருக்கும். 'தேர்தலுக்கு முன் ஓடிப் போகலாமா; இல்லை, தேர்தல் முடிந்த பின்பு ஓடிப் போகலாமா' என்பதே (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) 'தேர்தலுக்கு முன் ஓடிப் போகலாமா; இல்லை தேர்தல் முடிந்த பின்பு ஓடிப் போகலாமா' என்பதே அதன் கொள்கை கீதமாக இருந்தது. மொத்தத்தில் ஓடிப் போவது என்பதில் மட்டும் அது உறுதியாக இருந்தது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அந்த விஷயத்தில் மட்டும் அது மிகவும் தெளிவாக இருந்தது. நாள் ஒன்றுக்கு 24 மணி நேரமும் குழப்பத்தில் இருக்கும் இவர்களுக்கு அந்தளைக் குழப்பத்திலும் ஓடிப் போவது என்பதில் மட்டும் ஓர் உறுதிப்பாடு இருக்கிறது.

இன்னொரு சாரார் இருக்கிறார்கள். இவர்களுடைய நிலைப்பாடும் செயல்பாடும் ஆச்சரியப்படத்தக்கவை. இவர்களது அரசியல் பல்லவியே இதுதான்! 'எவரோடும் கூட்டு! எங்களுக்குள் வேட்டு!' (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதுதான் இவர்களது அரசியல் பால பாடம்!

'கொஞ்சமோ பிரிவினைகள்; ஒரு கோடி என்றால் அது குறைவாமோ' என்று பாரதி பாடியது இவர்களைப்பற்றித்தான்.

அந்த நாள் முதல் இந்த நாள் வரை உள்ளூர்த் தலைமை இவர்களுக்கு ஒத்துக்கொள்ளாது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு காலத்தில் அந்நியரை விரட்டத்தான் இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கோ அந்நியரில்லாமல் புண்ணியம் இல்லை என்பதே (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கோ அந்நியரில்லாமல் புண்ணியம் இல்லை என்பதே இவர்களுக்கு வேத போதமாகவும், நாத கீதமாகவும் ஆகி இருக்கிறது.

இவர்கள் சட்டப் பேரவைக்குள் நுழையும்போதே எப்போது வெளியே போவது என்ற ஒரே சிந்தனையில் இருப்பார்கள். இருக்கும் காலத்தில் என்னை இழித்துப் பேசுவதும், பழித்துப் பேசுவதும் மட்டுமே இவர்களது தேசியப் பணியாக இருக்கும்.

இவர்களுக்கு இன்னும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. இவர்கள் கூட்டணி, கொள்கைக் கூட்டணியாகவே இருக்கும். அதாவது, தங்களது தலைவரைக் கொன்றவர்களின் கூட்டாளிகளோடு மட்டும்தான் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தங்களது தலைவரைக் கொன்றவர்களின் கூட்டாளிகளோடு மட்டும்தான் இவர்கள் கூட்டு வைத்துக்கொள்வார்கள். இவர்களை இவர்களது தலைவரின் ஆன்மா தான் மன்னிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொரு பிரிவினர் இருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால், ஒரு பிரிவுக்குள்ளேயே இரு பிரிவாக இருப்பவர்கள் இவர்கள். வலதுக்குள் இடது; இடதுக்குள் வலது. (மேசையைத் தட்டும் ஒலி) வலதுக்குள் இடது; இடதுக்குள் வலது; இவற்றில் எது சிறந்தது என்ற பட்டிமன்றம் உலக அளவில் நிறுத்தப்பட்டு விட்டாலும், உள்ளூரில் அதை நடத்திக்கொண்டு இருப்பவர்கள் இவர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் ஆளுகின்ற மாநிலங்களைப் பொறுத்தவரை ஒரு நிலைப்பாடும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு நிலைப்பாடும் என்ற இரண்டு நிலையில் இருப்பவர்கள் இவர்கள்.



எதிர்ப்பு என்பது எதிர்ப்புக்காகவே என்ற சித்தாந்தச் செம்மல்களாகிய இவர்கள், எதற்காக எதிர்க்கிறோம் என்பதைப் பற்றி எப்போதும் கவலைப்பட்டது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) துருவங்களோடு கை கோர்த்துக்கொண்டு, தங்களது குதர்க்கங்களுக்கு கொள்கை முலாம் பூசிக்கொண்டிருக்கிற கோமான்கள் இவர்கள்!

இவர்கள் எல்லாம் எதில் ஒன்றுபட்டு நிற்காவிட்டாலும், ஒரே ஒரு விஷயத்தைப் பொறுத்தவரை ஒன்றுபட்டு நிற்பார்கள். அதாவது வெளிநடப்பு செய்வது என்ற விஷயத்தில் மட்டும் இவர்களிடத்தில் அபாரமான ஒற்றுமை உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

'நீ முன்னாலே போ; நான் பின்னாலே வருகிறேன்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று பேசி வைத்துக்கொண்டே பேரவைக்குள் நுழைகின்ற பெருமக்கள் இவர்கள். சட்டசபைக்குள் உட்கார்ந்திருந்து ஆக்கப்பூர்வமான முறையில் விவாதித்தால், முதலமைச்சர் முறையான பதிலைச் சொல்லும்போது நாம் முகத்தை எங்கே வைத்துக்கொள்வது? மேலும் முதலமைச்சர் சரியான பதிலைச் சொல்லி, அது பதிவாகி, வெளியே இருக்கிற மக்களும் அதைத் தெரிந்துகொள்வார்களேயானால் ஒட்டுமொத்தத் தமிழகமும் முதலமைச்சருக்கு அல்லவா ஆதரவாகப் போகும் என்று பயந்து எந்த வாதமும் செய்யாமல், பிடிவாதமாக வெளிநடப்பு செய்வதே இவர்களுக்குப் பிழைப்பாகப் போய்விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எந்த வாதமும் செய்யாமல், பிடிவாதமாக வெளிநடப்பு செய்வதே இவர்களுக்குப் பிழைப்பாகப் போய்விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளுநர் தமது உரையை வாசிப்பதற்கு முன்னாலேயே, எழுதி வைத்துக்கொண்டு வந்ததை அரைகுறையாகப் படித்துவிட்டு, வெளிநடப்புச் செய்து விட்ட வீராதி வீரர்கள் இவர்கள். பொது மக்களைப் பற்றி, அவர்களது நலனைப் பற்றி சற்றேனும் கவலை இல்லாத சுயநலப் புலிகள் இவர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

இவர்கள் இழைத்திருக்கும் இன்னல்களையும், இடர்களையும் தாண்டி, நான் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை துறைவாரியாக நிகழ்த்தப்பட்ட முக்கிய சாதனைகளை இப்போது நான் தொகுத்துரைக்க விரும்புகிறேன்.

அரசு ஊழியர்கள் பிரச்சினையைப் பற்றி இபபோது சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன். 2001 ஆம் ஆண்டு மே மாதம் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இந்த அரசின் நிதிநிலை மிகவும் அதள பாதாளத்தில் இருந்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். முந்தைய தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேட்டால் ஏழை எளியவர்களைப் பாதிக்கும் வகையில் அரசின் செலவினங்கள், குறிப்பாக திட்டம் சாராத மற்றும் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் செலவினங்கள் மிகவும் அதிகரித்து இருந்தன. இதன் விளைவாக ஏழை எளிய மக்களுக்கு பயன் தரும் சில திட்டங்களை நிறுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு நாங்கள் ஆளாக்கப்பட்டோம்.

2001–2002 ஆம் ஆண்டில், முந்தைய அரசு கொடுக்காமல் விட்டுச் சென்ற பணப் பாக்கிப் பட்டியல்கள் நான்காயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இருந்தன. தமிழ்நாடு மின்சார வாரியம், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது 2001–2002ஆம் ஆண்டில் ஐந்தாயிரம் கோடி ரூபாய் அளவிற்குப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட இயலாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. கடந்த கால தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேட்டால் போக்குவரத்துக் கழகங்கள் பெரும் நட்டத்தில் முடங்கிக் கிடந்தன. மேலும், அரசு அலுவலர்களுக்கும், ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கும், ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை சுமார் 1800 கோடி ரூபாயைக் கொடுக்காமல், 31–3–2003 வரை முந்தைய தி.மு.க. அரசு தள்ளி வைத்தது. இது மட்டுமின்றி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி மீதான உரிமத் தொகை சுமார் 250 கோடி ரூபாய் அளவிற்கு மார்ச் 2001–லேயே முந்தைய தி.மு.க. அரசு முன்பணமாக பெற்றுவிட்டது. அகில இந்திய அளவில், தமிழ்நாட்டில், மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் அளவு ஏற்கெனவே மிக அதிகமான அளவை எட்டி இருந்தது. கூடுதல் வரி வருவாய் ஏற்படுத்துவதற்கு வாய்ப்புகள் அதிகம் இல்லாத நிலை இருந்தது. செலவினங்களைக் கட்டுப்படுத்துவதைத் தவிர வேறு வழி இல்லாத ஓர் இக்கட்டான நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டது.

இந்நிலையில், வேறு வழியின்றி மிகவும் மன வேதனையுடன், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியில் 10 கிலோவிற்கான விலையை அதிகப்படுத்துவதற்கும், இலவச வேட்டி சேலை திட்டத்தை நிறுத்தி வைப்பதற்கும், முடிவெடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை கடந்த கால தி.மு.க. ஆட்சியால் உருவாக்கப்பட்டது.





முற்பகல் 11–20

இத்தகைய முந்தைய தி.மு.க. ஆட்சியால் உருவாக்கப்பட்ட ஒரு நிதி இடர்ப்பாட்டை பொதுமக்களே பகிர்ந்துகொள்ள வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கும்போது, அரசு அலுவலர்களும் இதில் பங்கேற்க வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தை நான் வலியுறுத்தினேன். பல்வேறு மட்டங்களில் நடந்த பேச்சுவார்த்தைகளுக்குப் பின், இறுதியாக அரசு அலுவலர் சங்கப் பிரதிநிதிகளை நான் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி 552 கோடி ரூபாய் அளவிற்குச் சலுகைகள் வழங்கினேன். இதற்கு மேல் அரசால் வழங்க இயலாத சூழ்நிலையையும் தெளிவாக எடுத்துக் கூறினேன். இதில் உள்ள நியாயத்தை பிடிவாதமாக உணர மறுத்த அரசு அலுவலர் சங்கத் தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்களின் தூண்டுதலின் பேரில், 2003 ஜூலை 2 ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அரசு எதிர்கொள்ளும் இத்தகைய நிதி இடர்ப்பாட்டில் பொதுமக்களுடன், அரசு ஊழியர்களும் பங்கேற்க வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தினை வலியுறுத்தி இந்த அரசு இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை எதிர்கொண்டது. எனினும், சில அரசியல் தலைவர்களின் தூண்டுதலின்பேரில், அவர்களின் அரசியல்ரீதியான ஆதரவைப் பெற்ற சில அமைப்புகள் நீதி மன்றங்களை அணுகின.

இறுதியில் உச்ச நீதிமன்றத்தின் ஆணையின் அடிப்படையில், அரசு ஊழியர்களின் பணி நீக்கம் சம்பந்தமாக ஓய்வு பெற்ற 3 நீதிபதிகளின் தீர்ப்பு அளிக்கப்பட்டது. பல்வேறு அரசு அலுவலர்கள் தாங்கள் திசைமாறி அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும், எனவே தங்கள் மீது கருணை காட்ட வேண்டும் என்றும், என்னிடம் பல முறை கோரிக்கைகள் விடுத்துள்ளனர். எனக்கு எப்பொழுதும் எவர்மீதும் எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியோ, பகைமையோ இருந்தது இல்லை. எதிர்க்கட்சித் தலைவர்களின் தூண்டுதலாலேயே இவ்வாறு திசைமாறிப் போய், பாதிப்புக்குள்ளான, ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களையும் மன்னித்து அவர்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க வேண்டும் என்று நான் கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அந்த அடிப்படையிலே

(1) பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்து அரசு அலுவலர்களும் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்து அரசு அலுவலர்களின் தண்டனை நான்கு வருட திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையாகக் குறைக்கப்படும்.

(2) பதவி இறக்கம் செய்யப்பட்ட அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பதவி இறக்கம் எனும் தண்டனை இரத்து செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)அவர்கள் அனைவரும் தாங்கள் ஏற்கெனவே வகித்திருந்த பதவியை மீண்டும் பெறுவார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பதவி இறக்கம் எனும் தண்டனை இரத்து செய்யப்பட்டு அது இரண்டு வருட திரண்ட பயனுடன்கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையாகக், குறைக்கப்படும்.

(3) மூன்று வருடங்களுக்குத் திரண்ட பயனுடன்கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனை வழங்கப்பட்ட அரசு அலுவலர்களுக்கு அத்தண்டனை ஒரு வருடம் திரண்ட பயனுடன்கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையாகக் குறைக்கப்படும்.

பெரும்பான்மையான மாநிலங்கள் மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையான அகவிலைப்படியை தங்கள் மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்க இயலாத நிலையில் உள்ளன. 1-7-2003 முதல் இந்த அரசு, அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் 52 சதவீதம் அகவிலைப்படி வழங்கி வருகிறது. பெரும்பான்மையான மாநிலங்கள் இதைவிடக் குறைவான அகவிலைப்படியையே தங்கள் அலுவலர்களுக்கு வழங்கி வருகின்றன. ஆசிரியர்கள் மற்றும் அனைத்து அரசு அலுவலர்கள் உட்பட சமுதாயத்தின் அனைத்து மக்களின் நலனிலும் அக்கறை கொண்ட தாயுள்ளம் கொண்ட நான், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 1-2-2004 முதல் 3 சதவீதம் கூடுதல் அகவிலைப்படி வழங்க (மேசையைத் தட்டும் ஒலி) முடிவு செய்துள்ளேன் என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களுக்கும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

முற்பகல் 11–25

மேலும், தொகுப்பு ஊதியத்திலுள்ள அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் தற்போது பின்பற்றி வரும் முறைப்படி கூடுதல்



அகவிலைப்படி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படக்கூடிய கூடுதல் செலவு சுமார் 201 கோடி ரூபாயாகும். அனைத்து அரசு அலுவலர்களும் பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்டு தங்கள் பணியை மேலும் திறம்பட செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது வருவாய்த் துறை சம்பந்தமான சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளாக பருவமழை தொடர்ந்து பொய்த்து வந்துள்ளது. 2002 ஆம் ஆண்டில் பெய்த மழை அளவு 745.7 மி.மீ. ஆகும். இது இயல்பான மழை அளவை விட 24 சதவீதம் குறைவானதாகும். கடந்த 30 ஆண்டுகளில் இதுவே மிகக் குறைவான மழை அளவாகும். இதன்காரணமாக வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். வரலாறு காணாத இந்த வறட்சியின் கொடுமையைக் குறைக்க இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதை உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். சென்னையைத் தவிர மற்ற 28 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என அரசு அறிவித்தது. தமிழ்நாடு முழுவதும் சென்ற பசலி வருடத்திற்கான நில வரி, உள்ளூர் தல வரி, உள்ளூர் தல மேல் வரி ஆகியவற்றை இந்த அரசு முழுமையாகத் தள்ளுபடி செய்து அதற்குண்டான 50 கோடி ரூபாய் இழப்பை அரசே ஏற்றுக்கொண்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

24-6-2002 அன்று தஞ்சாவூருக்கு நானே நேரடியாகச் சென்று, வறட்சி நிலையை ஆய்வு செய்து, 164 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவிலான வறட்சி நிவாரணத் திட்டங்களை அறிவித்தேன். அவை சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டன.

வறட்சி நிவாரணப் பணிகளுக்காக தேசிய பேரிடர் நிவாரண நிதி அதாவது National Calamity Contingency Fund–லிருந்து 332 கோடியே 9 இலட்சம் ரூபாயை மாநில அரசு பெற்றது. இந்த அளவிற்கு மத்திய அரசு நிவாரணம் வழங்கியது இதுவே முதன் முறை. இந்த 332 கோடியே 9 இலட்சம் ரூபாய்க்கு மேலாக மாநில அரசு மேலும் 335 கோடியே 45 இலட்சம் ரூபாயை அதாவது மொத்தம் 667 கோடியே 54 இலட்சம் ரூபாயை துயர் துடைப்புப் பணிகளுக்காக 1-4-2002 முதல் 31-12-2003 வரை செலவிட்டுள்ளது.

மேலும், குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க 2002–2003 ஆம் ஆண்டில் 168 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் 30,372 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2003–2004 ஆம் ஆண்டில் இதுவரை 111 கோடியே 8 இலட்சம் ரூபாய் குடிநீர்ப் பணிகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களில் எதிர்பார்க்கப்படும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க, மாவட்டங்களுக்கு 50 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை கொண்டாட 0 இலட்சம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 21 கோடி ரூபாய் செலவில் பரிசுப் பைகள் வழங்கப்பட்டதையும்; முதலில் இலவச மதிய உணவும், பின்னர் மாதம் ஒன்றுக்கு 30 கிலோ வீதம் 7 மாதங்களுக்கு இலவச அரிசி வழங்கப்பட்டதையும்; விவசாயிகளுக்கு 323 கோடியே 56 இலட்சம் ரூபாய் பயிர் இழப்பீட்டுத் தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டதையும் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

விவசாயிகள் வாங்கிய கூட்டுறவுக் கடன் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி 310 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிற்குத் தள்ளுபடி செய்ய நான் ஜூன் 2001–ல் உத்தரவிட்டேன்,

2003 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவமழை ஓரளவு இயல்பாகப் பெய்தாலும், தமிழ்நாட்டின் முக்கிய மழைப் பருவமாகிய வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் 11 மாவட்டங்களில் குறைவான அளவே மழை பெய்துள்ளது. அதிலும், சென்னை மாநகரில் 54 விழுக்காடு அளவுக்கு மழை குறைவாகப் பெய்துள்ளது. எனவே, சென்னை மாநகரம் இதுவரை காணாத கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ளது. ஏனைய 10 மாவட்டங்களில் 20 விழுக்காடு முதல் 44 விழுக்காடு வரை குறைவான மழை பெய்துள்ளது. இந்த ஆண்டிலும் காவிரியில் கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிடாத காரணத்தால் காவிரி பாசனப் பகுதிகளில் வேளாண் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களிலும் வரும் கோடைக்காலத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.



முற்பகல் 11–30

சென்னையை எதிர்நோக்கியுள்ள மிகக் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டை எடுத்துக் கூறி இந்த நிலைமையைச் சமாளித்திட மத்திய அரசு National Calamity Contingency Fund என்னும் தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 700 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கிட வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களுக்கும், மாண்புமிகு துணைப் பிரதமர் திரு. எல்.கே. அத்வானி அவர்களுக்கும், 11-1-2004 அன்று கடிதங்கள் எழுதி கோரிக்கை விடுத்தேன். இந்தக் கோரிக்கையினைப் பரிசீலனை செய்த மாண்புமிகு துணைப் பிரதமர் அவர்கள், சென்னை மாநகரத்தின் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க உடனடியாக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார். மேலும், நிலைமையை ஆய்வு செய்ய மத்தியக் குழு ஒன்றை அனுப்புவதாகவும், அந்தக் குழு நேரில் பார்வையிட்ட பின் மீதி நிதியை வழங்குவதாகவும், துணைப் பிரதமர் உறுதி அளித்துள்ளார் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட வேண்டும் என்று முழு முனைப்புடன் நான் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாகவே இது சாத்தியமாகி உள்ளது என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமையைத் திறம்படச் சமாளிப்பதற்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 1,584 கோடி ரூபாயும், வேலைக்கு உணவுத் திட்டத்தை மேற்கொள்வதற்கு 10.8 இலட்சம் டன் அரிசியும் தேவைப்படும் என்று கணக்கிட்டு, இதற்கான விரிவான அறிக்கையை 1-2-2004 ஆம் நாளன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கும், துணைப் பிரதமர் அவர்களுக்கும் அனுப்பி உள்ளேன். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 267 கோடியே 92 இலட்சம் ரூபாயும்; பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு இழப்பீடாக வழங்க 32 கோடியே 4 இலட்சம் ரூபாயும், மழை குறைவினால் நீர் மின் உற்பத்தி பாதிக்கப்பட்ட தமிழ்நாடு மின் வாரியத்திற்கு இழப்பீடாக 336 கோடி ரூபாயும், கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து விவசாயிகள் வாங்கிய கடனை இரத்து செய்ய 300 கோடி ரூபாயும், கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய வட்டித் தொகையை இரத்து செய்வதற்கு 132 கோடியே 71 இலட்சம் ரூபாயும், பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைக்கு உணவுத் திட்டத்தை நிறைவேற்ற 210 கோடி ரூபாயும், சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்கு 265

கோடியே 82 இலட்சம் ரூபாயும், கால்நடைத் துறையினருக்கு 13 கோடியே 34 இலட்சம் ரூபாயும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நலனுக்காக 25 கோடியே 90 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 1,584 கோடி ரூபாயும், 10.8 இலட்சம் டன் அரிசியும் வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் நான் கோரிக்கை விடுத்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலையை விளக்கமாக எடுத்துக்காட்டி, இதனைச் சமாளித்திட 1,584 கோடி ரூபாய் நிதி உதவியினையும், 10 இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன் உணவு தானியமும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 1-2-2004 அன்று கடிதம் அனுப்பினேன். அன்றே சென்னைக்கு வருகை தந்திருந்த துணைப் பிரதமர் திரு. அத்வானி அவர்களிடம் நேரில் அதே கடிதம் வழங்கி தமிழகத்தின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டேன். இதன்மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்ட மத்திய அரசு, தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட மத்தியக் குழு ஒன்றை நியமித்துள்ளது. இந்தக் குழு, மிக விரைவில் தமிழகத்திற்கு வருகை தந்து, வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்டபின் தமிழகத்தின் சார்பில் கோரப்பட்டுள்ள நிதி உதவியை மத்திய அரசு வழங்கும் என்று உறுதியுடன் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இயற்கை பொய்த்துவிட்டதாலும், காவிரி நீரைக் கர்நாடகம் தராததாலும் ஏற்பட்ட வறட்சியின் கொடுமை விவசாயப் பெருமக்களைத் தாக்காதவண்ணம் இந்த அரசு கேடயமாக இருந்து வருகிறது. அதற்கு நான் இதுவரை தந்துள்ள விவரங்களே சான்று. இந்த ஆண்டிலும் உரிய வறட்சி நிவாரணம் விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்படும். விவசாயிகளின் நலனைக் காப்பதில் இந்த அரசு எப்போதும், எவரைக் காட்டிலும் முன்னிற்கும் என்பதை இந்த வேளையில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகளின் நலனில் எப்பொழுதும் அக்கறை கொண்ட எனது அரசு, விதிமுறைகளின்படி நிலவரியைத் தள்ளுபடி செய்ய முடியாது என்றாலும், தொடர்ந்து பருவமழை பாதிக்கப்பட்டுள்ளதால் நிலவரி தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, ஜூலை 2003 முதல் ஜூன் 2004 வரை உள்ள நடப்பு பசலி ஆண்டுக்கு அனைத்து மாவட்டங்களிலும் நில வரி முழுவதையும் தள்ளுபடி செய்ய (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஆணையிடுகின்றேன்.





முற்பகல் 11–35

உள்ளூர் தல வரி (Local Cess) மற்றும் உள்ளூர் தலமேல் வரி (Local Cess Surcharge) ஆகியவைகளும் தள்ளுபடி செய்யப்படும். இதனால் அரசுக்கு 60 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என்றாலும், விவசாயிகளின் நலன் கருதி அதனை ஏற்றுக்கொள்வதில் இந்த அரசு மன நிறைவு அடைகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

காவிரி நீரில் தமிழ்நாட்டுக்கு உரிய பங்கைப் பெறுவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்படவில்லை என்று கீறல் விழுந்த பழைய கிராமஃபோன் ரெக்கார்டு போல எதிர்க்கட்சிக்காரர்கள் ஒரே பல்லவியைத் திரும்பத் திரும்பப் பாடி வருகின்றனர். ஆனால், உண்மை நிலை என்ன என்று இந்த அவையில் நான் பலமுறை எடுத்துக் கூறி இருக்கிறேன்.

காவிரி நீரில் தமிழ்நாட்டுக்கு உரிய பங்கைப் பெறுவதில், காவிரி நீரில் தமிழ்நாட்டுக்கு உள்ள சட்டபூர்வ உரிமையை நிலைநாட்டுவதில் என்னுடைய தலைமையிலான அரசு 100 சதவிகிதம் முழுமையான பங்காற்றி இருக்கிறது என்பதை யாரும் மறுத்திடவோ, மறைத்து விடவோ முடியாது.

காவிரிப் படுகை மாவட்டங்களை வளப்படுத்தி, விவசாயிகளுக்கு வாழ்வளித்து, தமிழக மக்களுக்கு வளமும் நலமும் வழங்கும் காவிரி நதியைக் கர்நாடக அரசு தன்னுடைய வசதிக்காக நியாயமற்ற முறையில் கட்டுப்படுத்தி வருகிறது. இதனைத் தடுத்து தமிழகத்திற்கு உரிய நியாயமான பங்கை வழங்குவதற்காக 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் தேதி காவிரி நடுவர் மன்றம் வழங்கிய இடைக்கால ஆணையை நிறைவேற்றிட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளில் 11-8-1998 அன்று காவிரி ஆணையம்—(Cauvery River Authority) உருவாக்கப்பட்டது.

காவிரி ஆணையத்தின் கூட்டங்கள் இதுவரை 6 முறைகள் நடைபெற்றுள்ளன. எங்களுடைய அரசு 2001—ல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, நான்குமுறை ஆணையத்தின் கூட்டங்கள் நடந்துள்ளன. இந்த நான்குமுறைகளில் நான் நேரடியாக இரண்டுமுறை பங்கேற்றுள்ளேன். 10-10-2001 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பங்கேற்றுள்ளார். அதற்கு அடுத்து 27-8-2002 அன்று நடைபெற்ற

கூட்டத்தில் நான் நேரடியாகப் பங்கேற்றேன். இதற்கு அடுத்த கூட்டம் 7-9-2002 அன்று நடைபெற்ற காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து 23 மணி நேர அவகாசம்கூடத் தரப்படாமல் கர்நாடகத்தின் நெருக்குதலின் காரணமாக, திடீரென அதற்கு அடுத்த நாளே, அதாவது 8-9-2002 அன்றே கூட்டப்பட்டதால் நான் அதில் கலந்துகொள்ள முடியவில்லை. ஆனால், இவ்வாறு காவிரி ஆணையக் கூட்டம் திடீரென கூட்டப்படுகின்ற தகவல் எனக்குக் கிடைக்கப் பெற்றதும் வேறொரு கூட்டம் தொடர்பாக அன்றையதினம் புதுடெல்லி சென்றிருந்த நிதியமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களை உடனடியாகத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அந்தக் கூட்டத்தில் என் சார்பாகக் கலந்துகொள்ளுமாறு தெரிவித்தேன். மேலும், காவிரி நீரில் தமிழகத்திற்கு உள்ள உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் எடுத்துச் சொல்லப்பட வேண்டிய கருத்துகளையும், மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையையும் தெளிவாக அவருக்கு எடுத்துக் கூறி, அதைக் காவிரி ஆணையத்தின் முன் வைக்குமாறு தெரிவித்தேன். இதன் பிறகு 10-2-2003 அன்று கடைசியாக நடைபெற்ற காவிரி ஆணையக் கூட்டத்தில் நான் கலந்துகொண்டேன்.

இந்த அனைத்துக் கூட்டங்களிலும் தமிழ்நாட்டிற்கு நியாயம் வழங்குங்கள் என்றுதான் கேட்டோம். கடைசிவரை இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட எந்த ஒரு முடிவையும் கர்நாடக அரசு ஏற்கவில்லை. கர்நாடக அரசு தன் கையிருப்பில் தமிழகத்திற்கு கொடுக்கக்கூடிய அளவிற்குத் தண்ணீரை இருப்பு வைத்திருந்த நேரத்திலும், காவிரி ஆணையத்தின் முடிவுகளை நிறைவேற்ற மறுத்து விட்டது.

தமிழ்நாடு அரசு தனது நியாயமான கோரிக்கைகளை சட்டபூர்வமான உரிமைகளை காவிரி ஆணையத்தின் முன்னர் எடுத்து வைத்த போதிலும், கர்நாடக அரசின் இணக்கமற்ற போக்காலும், சுயநலமிக்க தன்மையாலும், நியாயத்தை ஏற்க மறுக்கும் இயல்பாலும், காவிரி நீரில் தமிழகத்திற்குரிய பங்கு நமக்குக் கிடைக்கவில்லை.

காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி 2003 ஜூன் மாதம் முதல் 2004 ஜனவரி மாத இறுதிவரை தர வேண்டிய 196.10 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவையோ; அல்லது காவிரி கண்காணிப்புக் குழுவின் பற்றாக்குறைக் காலப் பங்கீட்டு அளவின்படியாக 90 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவையோ ஒப்பிடுகையில், 2004 ஜனவரி வரை





மேட்டூர் அணைக்கு வந்த தண்ணீரின் அளவு 60.45 டி.எம்.சி. அடி மட்டுமே ஆகும் என்பதை நான் இங்கு நினைவுகூர விரும்புகிறேன்.

அரசியலமைப்பு நெறிப்படியும், சட்டப்படியும் அதிகாரமளிக்கப்பட்டு, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அமைப்புகளான உச்ச நீதிமன்றம், காவிரி நதிநீர் ஆணையம், காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றம் போன்ற அனைத்து அமைப்புகளின் ஆணைகளை ஏற்றுச் செயல்படுவதற்கு கர்நாடக அரசு திரும்பத் திரும்ப மறுத்து வருவது வேதனைக்குரியது.

முற்பகல் 11–40

அதுமட்டுமின்றி, இந்திய அரசியல் சட்டப்படி அமைக்கப்பட்ட உச்ச நீதிமன்றம், காவிரி நடுவர் மன்றம், காவிரி நதிநீர் ஆணையம் ஆகிய அதிகார அமைப்புகளின், அதிகார மையங்களின் ஆணைகளுக்கு, கட்டுப்பட மறுத்து, தனி நாடு போல கர்நாடகம் தன்னிச்சையாக நடந்துகொள்வது கண்டனத்திற்கு உரியதும் ஆகும். இதை நான் பலமுறை சுட்டிக்காட்டியும் பயனில்லை. காவிரி ஆற்றிலிருந்து தனக்குரிய நியாயமான பங்கினை தமிழ்நாடு பெற்றே தீரும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் முயற்சியில் எனது அரசு ஒரு போதும் தளராது, ஓயாது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவைக்கு மீண்டும் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி டெல்டா விவசாயிகளின் துயரைத் துடைக்கின்ற வகையில், காவிரி நீரில் நமக்குள்ள உரிமையை நிலை நாட்டுகின்ற வகையில், நான் எத்தனை முயற்சிகள் எடுத்திருக்கிறேன் என்பதை ஏற்கெனவே பலமுறை இந்த அவையில் சொல்லியாயிற்று. காவிரி நதிநீர் ஆணையத்தின் நான்கு கூட்டங்களிலும் நாங்கள் பங்கு பெற்றிருக்கிறோம். அதேசமயத்தில் டில்லியில் மத்திய அரசில் நாற்காலி போட்டு அமர்ந்து மந்திரிகளாக இருந்தார்களே அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கையில் அதிகாரம் இருந்தது. அவர்கள் நினைத்து இருந்தால் காவிரி நீரைத் தமிழகத்திற்கு வழங்க மத்திய அரசை வற்புறுத்தி இருக்க முடியும். ஆனால், காவிரி நீர் தமிழகத்திற்குக் கிடைக்க ஏற்பாடு செய்தார்களா? மத்திய அரசை வற்புறுத்தினார்களா? குறைந்தபட்சம் குரலாவது கொடுத்தார்களா? இல்லை! அவர்களது தலைவரோ, இதற்கு [illegible] சென்றார். 'ஆட்சி செய்வது நீங்கள், காவிரிக்குப் போராட...

வேண்டியது நாங்களா?' என்று கேட்டார். அதாவது தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தால்தான் காவிரிக்கு குரல் கொடுப்பாராம். ஆட்சிப் பொறுப்பில் அவரை மக்கள் அமர்த்தாவிட்டால் விஷமத்தனத்தோடு வேடிக்கை பார்ப்பாராம்! (மேசையைத் தட்டும் ஒலி) அவரது வாதத்தின்படி வைத்துக்கொண்டால்கூட, மத்திய அரசில் இவரது கட்சிக்காரர்கள் மந்திரிகளாக இருந்தார்களே அப்போது அவர்கள் என்ன செய்தார்கள்? போராட வேண்டாம். குறைந்தபட்சம் குரலாவது கொடுத்திருக்கலாம் அல்லவா? அவர்கள் இன்றைக்குச் சொல்கிறார்கள், எனது அரசு முனைப்புடன் செயல்படவில்லையாம்! எப்படி இருக்கிறது நியாயம்?

இன்றைக்குக் காங்கிரஸ்காரர்களும் மனசாட்சி இல்லாமல் இதே குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள். கர்நாடகத்தை நேற்று ஆண்டதும், இன்றைக்கு ஆண்டுகொண்டிருப்பதும் காங்கிரஸ் கட்சிதானே? அந்த காங்கிரஸ் ஆட்சியை காவிரி நீரை வழங்குமாறு வற்புறுத்தியிருக்கலாம் இல்லையா? டில்லியிலிருக்கும் அவர்கள் கட்சித் தலைமை தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கலாம் இல்லையா? ஏன் செய்யவில்லை? என்றைக்காவது இந்தக் கேள்விகளுக்கு தமிழ்நாடு காங்கிரசார் பதில் சொன்னது உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி) போகட்டும்! இப்போதாவது கர்நாடக காங்கிரஸ் அரசை அல்லது டில்லித் தலைமையைக் கேட்கின்ற துணிச்சல் இவர்களுக்கு உண்டா? துணிச்சலும் கிடையாது, தமிழக நலனைக் காக்கும் உணர்வும் கிடையாது! (மேசையைத் தட்டும் ஒலி)

நெஞ்சி லுரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ— கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடீ!

(மேசையைத் தட்டும் ஒலி) என்று பாரதியார் பாடினாரே, அது இவர்களைப் பற்றிதானா?

'நடிப்புச் சுதேசிகள்' என்று பாரதியார் அழைத்தது இவர்களை தானா? (மேசையைத் தட்டும் ஒலி)

சிலரைப் பல நாள் ஏமாற்றலாம். பலரைச் சில நாள் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்ற முடியாது. தமிழக மக்கள் ஏமாளிகள் அல்ல. காவிரிப் பிரச்சினையில் தங்களை ஏமாற்றிய





இவர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நாங்கள் தி.மு.க.—காரர்களைப் போல வாய்ச்சொல் வீரர்கள் அல்ல! காங்கிரஸ்காரர்களைப் போல் நடிப்புச் சுதேசிகள் அல்ல! (மேசையைத் தட்டும் ஒலி) யார் குரல் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் நாங்கள் குரல் கொடுப்போம். யார் போராடினாலும், போராடாவிட்டாலும் நாங்கள் போராடுவோம்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) காவிரிப் பிரச்சினையில் விரைவில் வெற்றி பெற்றே தீருவோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நாடாளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் நாங்கள் அமர்வோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதுவரை ஏற்படாத மாறுதலை நாங்கள் கொண்டு வந்தே தீருவோம்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) கர்நாடகத்தின் கதவுகளைத் திறந்துகொண்டு காவிரி தமிழகத்திற்குள் காலெடுத்து வைப்பதை எவராலும் தடுக்க இயலாது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இறுதி வெற்றி பெறும்வரை நாங்கள் ஓயமாட்டோம் என்பதை அறுதியிட்டு, உறுதியுடன் இந்தப் பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—45

எனது தலைமையிலான அரசு, வேளாண்மைத் துறையில் பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறைவாக பெறப்பட்ட பருவமழை, நீர்தேக்கங்கள் மற்றும் ஏரிகளில் குறைவான நீர் இருப்பு, அண்டை மாநிலத்திலிருந்து நீர் திறந்து விடப்படாத நிலை மற்றும் குறைந்து விட்ட நிலத்தடி நீரின் அளவு, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கடந்த குறுவைப் பட்டத்தில் நெல் பயிரிட முடியாத விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாற்றுப் பயிர் சாகுபடி திட்டத்தினை கடந்த ஆண்டில் நான் அறிவித்தேன். கடந்த ஆண்டில், 2003 குறுவையில் 75,165 ஏக்கரில் குறைந்த நீர் தேவைப்படும் சிறுதானியங்கள், பயறு வகைகள் எண்ணெய் வித்துக்கள் மற்றும் காய்கறிப் பயிர்கள் ஆகியவற்றை மாற்றுப் பயிராக விவசாயிகள் சாகுபடி செய்தனர்.

தோட்டக்கலைப் பிரிவில், பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு, விலை மதிப்புள்ள காய்கறிப் பயிர்களின் சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு, புதிய கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் தருமபுரி மாவட்டத்திலும் 7 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் "தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம்" –

அதாவது – Precision Farming – என்ற சிறப்புத் திட்டத்தை செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன். இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் 1000 ஏக்கர் நிலங்களில் அவர்களின் தீவிர பங்கேற்புடன் மரவள்ளி, சீமை வெள்ளரி, பேபி கார்ன் போன்ற பயிர்களின் சாகுபடி உயர் தொழில்நுட்ப அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தினை தோட்டக்கலைத் துறையின் மேற்பார்வையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் செயல்படுத்தும்.

தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன், 'தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்'-Tamil Nadu Horticulture Development ission – கடந்த ஆண்டு என்னால் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பான ணிகளை 11-2-2004 அன்று சென்னையில் நான் துவக்கி வைக்க உள்ளேன்.

13 கோடி ரூபாய் செலவில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் நிலக்கோட்டையில் உள்ள தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனமான SIPCOT வளாகத்தில், ஒரு உணவுப் பூங்கா – Food Park – அமைப்பதற்கான ஆணையை நான் பிறப்பித்துள்ளேன். இதற்காகவே ஏற்படுத்தப்படவுள்ள ஒரு சிறப்பு முகமை – Special Purpose Vehicle-மூலம் இது அமல்படுத்தப்படவுள்ளது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதில் தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனமும், SIPCOT–ம் பங்கேற்கும்.

ஈரோடு அருகில் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள இடத்தில் மொத்தம் 36 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளாகத்தில் நவீன உள் கட்டமைப்பு வசதிகளான ஏல மையம், தகவல் தொடர்பு மையம், பரிவர்த்தனைக் கூடங்கள், வங்கி தரக் கட்டுப்பாடு ஆய்வகம், விவசாயிகள் ஓய்வு எடுக்க வசதி போன்றவை இடம் பெறும்.

தமிழ்நாட்டிலுள்ள வளமற்ற தரிசு நிலங்களைச் சீர்திருத்துவதன் மூலம் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதுடன், வேளாண் மற்றும் வேளாண்மையைச் சார்ந்த துறைகளில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும்,



தரிசு நில விவசாயிகளின் வருவாய் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் முடியும். விவசாயிகளின் ஒட்டுமொத்த நலனை இலக்காகக் கொண்டு, தரிசு நிலங்களை 5 ஆண்டு காலத்தில் சீர்திருத்தி பயிர் செய்வதற்கு ஏற்றவாறு செய்வதற்காக, விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை 2001 ஆம் ஆண்டில் நான் அறிவித்தேன். மண் மற்றும் ஈரப் பதத்தைப் பாதுகாப்பதை முன்னிலைப்படுத்தி, மிகச் சிறிய நீர்வடிப் பகுதிகளை மேம்படுத்தும் அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு, மக்கள் பங்கேற்பு அணுகுமுறையில் இதற்கென ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இரண்டு ஆண்டு காலமாக கடும் வறட்சி நிலவிய போதிலும், இதுவரை 70 இலட்சம் மரக் கன்றுகள் 1.19 இலட்சம் ஏக்கர்களில் நடப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் நல்ல பருவ மழையை எதிர்பார்த்து, 1,50,000 ஏக்கர் நிலத்தில் மரக் கன்றுகள் மற்றும் தீவனப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–50

உலக வங்கி உதவியுடன் திருநெல்வேலி மாவட்டம் ஹனுமான் நதி ஆற்றுப் பாசன பகுதிகளில் சுமார், 7,413 ஏக்கர் பரப்பில் நவீன நீர்ப்பாசன வசதிகளான தெளிப்பு நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப் பாசனம், குழாய் மூலம் பாசனம் போன்ற முறைகளைக் கையாண்டு வேளாண்மைத் துறையால் 22 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய திட்டத்தினை செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) (செல்ஃபோன் ஒலித்தது)

செல்ஃபோன் வைத்திருப்பவர்கள் அன்புகூர்ந்து அதை ஆஃப் செய்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது அரசு தமிழகத்தில் 1-10-2002 முதல் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

நடப்பு சம்பா 2004 பருவத்தில் 15-12-2003 முதல் மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்படி, மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையான சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு

580 ரூபாய்க்கும்; பொது ரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு 550 ரூபாய்க்கும் கொள்முதல் செய்ய நான் ஆணையிட்டேன்.

தற்போது மொத்தம் 501 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன. தற்போது, நாள்தோறும் சுமார் 2,500 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. 9-2-2004 வரை, அதாவது நேற்று வரை, மொத்தம் 17,246 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நெல் வரத்தைக் கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின்பேரில், தேவையான அளவு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கூடுதலாகத் திறக்க என்னுடைய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சில பகுதிகளில் சாகுபடி செய்யத் தேவையான நீர்வரத்து இல்லாத காரணத்தால் தானியங்கள் முதிராத நிலையைக் கருத்தில் கொண்டு, தர நிர்ணயங்களில் சலுகைகள் வேண்டுமென விவசாயப் பெருமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை, உடனடியாக ஏற்று, தர நிர்ணய திரிபுகளில் குறிப்பாக முதிராதது, சுருங்கியது மற்றும் குறுகியது ஆகியவற்றை 3 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்த்தும்படி மைய அரசுக்கு என்னுடைய அரசு பரிந்துரை செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அக்கோரிக்கை மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. மைய அரசின் உத்தரவு கிடைத்தவுடன் விவசாயப் பெருமக்கள் விரும்பியவாறு தர நிர்ணயங்களில் சலுகைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்கு, எந்தெந்த வழிகளில் எல்லாம் இயலுமோ அந்தந்த வழிகளில் எல்லாம் முயன்று வருகிறது எனது அரசு. சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கக் கூடிய நீர் நிலைகளான பூண்டி, சோழவரம் மற்றும் புழல் ஏரிகளின் மொத்தக் கொள்ளளவு 7,412 மில்லியன் கன அடி. அவற்றில் தற்போதைய நீர் இருப்பு 213 மில்லியன் கன அடி ஆகும். இது ஏரிகளின் மொத்தக் கொள்ளளவில் 2 விழுக்காடே ஆகும். தற்போது உள்ள நீர் இருப்பு கடந்த 51 ஆண்டுகளில் இதே நாளில் இருந்த நீர் இருப்பைவிட மிகக் குறைவானதாகும்.



2003 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவமழை குறைந்த அளவே பெய்தது. ஆகவே, நவம்பர் 2003–ல் நான் சென்னை நகரத்திற்குப் போர்க்கால அடிப்படையில் கூடுதலான குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்தி, சென்னை நகர மக்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் திட்டங்கள் தீட்டுமாறு சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு ஆணையிட்டேன்.

எனது ஆணையின் அடிப்படையில் சென்னைக் குடிநீர் வாரியம் இந்த ஆண்டு நிலவி வரும் வரலாறு காணாத குடிநீர்த் தட்டுப்பாட்டினை சமாளிக்கவும்; சென்னை நகரில் வாழும் 55 இலட்சம் மக்களின் குடிநீர்த் தேவையைச் சமாளிக்கவும்; பல திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது.

பல்வேறு கிணற்றுத் தளங்களில் இருந்து தற்போது நாள் ஒன்றுக்கு 103 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு, குழாய்கள் மூலம் நகரத்திலுள்ள குடிநீர் பகிர்மான நிலையங்களுக்குக் கொண்டு வரப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் தனியார் விவசாயக் கிணறுகளில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 50 மில்லியன் லிட்டர் வரை குடிநீர் லாரிகளில் சென்னைக்குக் கொண்டு வரப்படுகிறது.

சென்னை நகரில் நாள்தோறும் 8,500 லாரி நடைகள் இயக்கப்பட்டு, 10,350 குடிநீர்த் தொட்டிகள் மூலமும், 4,700 தெருக்களில் நேரடியாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

எதிர்வரும் கோடைக் காலத்தைக் கணக்கில் கொண்டு, மேலும் 2,000 நீர்த் தொட்டிகளை நிறுவவும்; தேவையான அளவு டாங்கர் லாரிகளின் எண்ணிக்கையையும், லாரி நடைகளின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தி நகரில் குடிநீர் விநியோகத்தைச் சீராகத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் விநியோகம் செய்திடவும் நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகளினால், சென்னை நகருக்குத் தற்போது நாள் ஒன்றுக்கு 125 மில்லியன் லிட்டர் குடிநீர் பெரும்பாலும் நிலத்தடி நீரைக்கொண்டே விநியோகிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, தொழிற்சாலைகளுக்குத் தொடர்ந்து நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் நீர் வழங்கப்பட்டு வருகிறது.

இதர நீர்த் தேவைகளுக்காக, சென்னை நகரில் 5,730 இந்தியா மார்க்–2 ஆழ்துளைப் பம்புகள் அமைக்கப்பட்டு, அவற்றை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மேலும், 800 இந்தியா மார்க்–2 ஆழ்துளைப் பம்புகள் கடந்த இரண்டு மாதங்களில் நிறுவப்பட்டுள்ளன. வரும் கோடைக் காலத்திற்கு முன்பு மேலும் 1,000 ஆழ்துளைப் பம்புகள் நிறுவிட தற்போது ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது கிணற்றுத் தளங்களிலிருந்து எடுக்கப்படும் தினசரி 103 மில்லியன் லிட்டர் என்ற அளவு, எதிர்வரும் கோடைக் காலத்திலும் தொடர்ந்து கிடைத்திட ஏதுவாக சுமார் 110 விவசாயக் கிணறுகளிலிருந்து நாளொன்றிற்கு 32 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும் வகையில் ஒரு திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் அனைத்திற்கும் சுமார் 28 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவாகும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

பூண்டி கிணற்றுத் தளம் மற்றும் அதைச் சுற்றியுள்ள சுமார் 125 கிணறுகளை வாடகைக்கு அமர்த்தி, அதன்மூலம் பெறப்படும் நீரை செங்குன்றத்திலுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்ப ஏதுவாக, பூண்டியிலிருந்து புழல் ஏரிக்கு இணைப்புக் கால்வாயினை ஒட்டி 1,000 மி.மீ. விட்டமுடைய இரும்புக் குழாய் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் 116 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படவுள்ள இத்திட்டத்தின் மூலம், நாளொன்றுக்கு சுமார் 30 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது செயலாக்கப்பட்டு மே 2004-லிருந்து பயன்பாட்டிற்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது 4,900 லாரி நடைகளில் கொண்டு வரப்படும் நீரின் அளவான 49 மில்லியன் லிட்டர் அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டு, 7,500 நடைகள் மூலம் 75 மில்லியன் லிட்டர் எனக் குடிநீரை (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை நகருக்குக் கொண்டு வரும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இவ்வாறான ஏற்பாடுகளை அடுத்த வடகிழக்குப் பருவ மழை பெய்யத் தொடங்கும் காலமான 2004 செப்டம்பர் மாதம் முடிய நடைமுறைப்படுத்திட ஆணையிட்டுள்ளேன். இப்பணிகளுக்கான மொத்தச் செலவு 306 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)



1991-96-ல் எனது தலைமையிலான அரசு, புதிய வீராணம் திட்டத்தைத் தீட்டி, அதனை உலக வங்கி நிதி உதவியுடன் 1,638 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றிட ஒப்புதல் அளித்து, திட்டம் தொடங்கப்படவிருந்த சூழ்நிலையில் ஆட்சி மாறியதையும், பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற தி.மு.க. அரசு சென்னை மாநகரின் குடிநீர் தேவையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் அத்திட்டத்தை இரத்து செய்துவிட்டதையும், மாண்புமிகு உறுப்பினர்களும், சென்னை மாநகர் வாழ் பொதுமக்களும் நன்கறிவர். என்னால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் தற்போதைய குடிநீர்த் தட்டுப்பாடு சென்னைக்கு ஏற்பட்டிருக்காது. எனினும், எதிர்காலத்தில் இதுபோன்ற குடிநீர்த் தட்டுப்பாடுகள் ஏற்படாதவாறு தடுக்க, 2001 ஆம் ஆண்டு மே மாதத்தில் இரண்டாம் முறையாகத் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை நான் ஏற்ற உடனேயே எனது தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்தது.

தி.மு.க. அரசால் கைவிடப்பட்ட புதிய வீராணம் திட்டத்திற்குப் புத்துயிர் அளித்து, 720 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த நான் ஆணையிட்டேன். இத்திட்டத்திற்கான அனைத்துப் பணிகளும் இந்த ஆண்டு மே மாதம் இறுதிக்குள் முடிக்கப்படும்.

புதிய வீராணம் திட்டம் நிறைவேற்றப்படுவதால், ஏரியின் பாசனம் பாதிக்கப்படும் என்ற தவறான அச்சத்தை ஏற்படுத்தச் சிலர் முயன்று வருகின்றனர். இந்த அச்சம் தேவையற்றது, தவறானது என்பதை இந்த அவையில் ஏற்கெனவே விளக்கமாகவும், தெளிவாகவும் கூறியுள்ளேன்.

நண்பகல் 12–00

வீராணம் ஏரியின் பாசனப் பகுதிகளில் பாசனம் பாதிக்கப்படாதவாறு, சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டு செல்லும் வண்ணம் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இந்தத் திட்டம் பிரபல கலந்தாலோசனை நிறுவனமான M/s Tata Consulting Engineers—ஆல் நன்கு ஆய்வு செய்யப்பட்ட பின்பே செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதை நான் இந்த அவைக்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய ஆலோசனையின்படி வீராணம் ஏரியின் கரை 0.6 மீட்டர் உயர்த்தப்பட்டதன் மூலம் வீராணம் ஏரியின் கொள்ளளவு 930 மில்லியன் கன அடியிலிருந்து 1,485 மில்லியன் கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. கொள்ளிடம் நதியின் குறுக்கே உள்ள கீழ் அணையிலிருந்து வீராணம் ஏரிக்கு நீர் கொண்டு வரும் வடவாறு

கால்வாயின் கொள்ளும் திறனும் வினாடிக்கு 1,400 கன அடியிலிருந்து வினாடிக்கு 2,300 கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவேற்றப்பட்டதால், இயல்பான ஆண்டில் முன்னர் கிடைத்த மொத்த நீரின் அளவான 11.06 டி.எம்.சி அடி என்பது தற்போது 14.45 டி.எம்.சி அடி ஆக உயர்ந்துள்ளது. அதாவது கூடுதலாக ஆண்டிற்கு 3.39 டி.எம்.சி அடி நீர் கிடைக்கும். புதிய வீராணம் திட்டத்தில் 2.45 டி.எம்.சி அடி நீர்தான் ஆண்டு முழுவதும் எடுக்கப்படவுள்ளது. இத்திட்டம் நிறைவேறுவதால், இயல்பான ஆண்டில் விவசாயத்திற்கு 1 டி.எம்.சி. அடி அளவில் கூடுதலாக நீர் கிடைக்கிறது என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகளின் நலனில் என்னுடைய தலைமையிலான இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. அவர்கள் நலன் எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக 110.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீராணம் ஏரி, வடவாறு கால்வாய் மற்றும் பாசனக் கால்வாய்கள் மேம்பாட்டிற்காகத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதையும் இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை நகரில் தற்போது நிலவி வரும் மிகக் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டினைச் சமாளிக்கும்வண்ணம், கடலூர் மாவட்டம், நெய்வேலிப் பகுதியில், கெடிலம் ஆற்றிற்கும், வெள்ளாற்றிற்கும் இடையிலான 40 கிலோ மீட்டர் நீளமுள்ள நிலநீர்ப் படுகையில் 45 ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து, அவற்றிலிருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 60 மில்லியன் லிட்டர் நீரை எடுத்து நடப்பாண்டில் மே மாதம் முதல் அடுத்த பருவமழை காலம் வரை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு 49 கோடி ரூபாய் ஆகும். இத்திட்டத்தினை மே 2004-ல் முடிக்கும் வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் வேல்முருகன், ஜி.கே. மணி, புகழேந்தி மற்றும் ஞானசேகரன் ஆகியோர் சென்னை நகரில் தற்போது நிலவி வரும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க அரசு திட்டமிட்டுள்ள நெய்வேலிப் பகுதியில் இருந்து 45 ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிநீர் எடுக்கும் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இது தொடர்பாக விளக்கமாகக் கூற விரும்புகிறேன்.



கடலூர் மாவட்டம், நெய்வேலிப் பகுதியில், வெள்ளாற்றிற்கும், கெடிலம் ஆற்றிற்கும் இடையே உள்ள 40 கி.மீ தொலைவில் 45 ஆழ் துளைக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொன்றிலுமிருந்து நாளொன்றிற்கு சுமார் 2 மில்லியன் லிட்டர் அளவு மட்டும் நீர் எடுக்கப்படவுள்ளது. ஒரே நேரத்தில், 30 ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து மட்டுமே கிணற்றிற்கு 2 மில்லியன் லிட்டர் வீதத்தில் மொத்தம் 60 மில்லியன் லிட்டர் நீர் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 கிணறுகள் தேவையானால் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக –standby– ஆக இருக்கும். மேலும் வறட்சி ஏற்படும் காலங்களில் மட்டுமே இவ்வாறு ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து நீர் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது.

புதிய வீராணம் திட்டத்திற்கு மேலும் வலுவூட்டவும், வீராணம் ஏரியில் தேங்கி நிற்கும் நீரினை மட்டுமே நம்பி இல்லாமல், ஆண்டு முழுவதும் இத்திட்டத்தின் மூலம் 180 மில்லியன் லிட்டர் நீர் கொண்டு வர ஏதுவாக மாற்றுத் திட்டம் ஒன்றினையும் ஆய்வு செய்திட ஆணையிட்டேன். இதற்கென அமைக்கப்பட்ட வல்லுனர்கள் குழு, கொள்ளிடம் ஆற்றில், கீழ் அணைக்கட்டுப் பகுதியிலிருந்து நாள் ஒன்றிற்கு சுமார் 150 மில்லியன் லிட்டர் நீரை தொடர்ந்து ஆண்டு முழுவதும் எடுக்க முடியும் என்றும், இதனால் ஏற்கெனவே உள்ள குடிநீர்த் திட்டங்கள் பாதிக்கப்படாது என்றும் விளக்கித் தனது அறிக்கையினை அளித்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றிட சுமார் 200 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை, மேலும் ஆராய்ந்து நிறைவேற்றிட இவ்வரசு பரிசீலித்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புதிய வீராணம் திட்டத்தைச் சார்ந்து நிறைவேற்றப்படவுள்ள கூடுதல் பணிகளுக்கான திட்ட மதிப்பு 249 கோடி ரூபாய் ஆகும்.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு, சென்னை நகரில் தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையை உடனடியாகச் சமாளிக்கும் வகையிலும், ஆனால் அதேசமயம் இதன்மூலம் நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள் எதிர்வரும் காலத்திலும் குடிநீர் தொடர்ந்து வழங்குவதற்கு வழி வகை செய்யக்கூடிய வகையிலும் தீட்டப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு 700 கோடி ரூபாய் ஆகும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2004 பிப்ரவரி 10

*பிற்பகல் 12–05*

மேலும், இம்மாதம் 4 ஆம் தேதி நாடாளுமன்றத்தில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்தபோது, மாண்புமிகு நிதி அமைச்சர் ஜஸ்வந்த் சிங் அவர்கள், தமது உரையில் 'சென்னை உட்பட்ட பெருநகரங்களில் துரிதப்படுத்தப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டத்தினை நிறைவேற்றிடவும், அதற்குத் தேவையான நிதி ஆதாரத்தை தரும்வண்ணம் மத்திய அரசில் தற்போதுள்ள பெருநகரக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கான நிதியினைக் கூடுதலாக்கவும் பாரதப் பிரதமர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்' என்று குறிப்பிட்டுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் இந்தத் திட்டம் மார்ச் 1 ஆம் தேதி முதலே நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய அளவிலான இந்தப் பெருநகரங்களுக்கான விரைவுபடுத்தப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு எனது முயற்சியே காரணமாகும் என்று சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்கூறிய திட்டங்கள் அனைத்தும் பருவமழை பெய்வதையும். நீர்த்தேக்கங்களில் நீர் பெறுவதையும், நிலத்தடி நீரையும் பொறுத்தே அமைந்துள்ளன. ஆனால். பருவமழை பொய்த்து விட்டால் இத்திட்டங்களால் நிரந்தரத் தீர்வு இல்லை என்பதை நாம் உணர்ந்துள்ளோம். ஆகவே சென்னை மாநகருக்குக் கடல் நீரினைக் குடிநீராக மாற்றும் திட்டமே ஒரு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். கடல் நீரிலிருந்து குடிநீர் பெறுவதற்கான அனைத்து வசதிகளும் சென்னைப் பெருநகரில் அமைந்துள்ளன. கடல் நீரிலிருந்து நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறும் திட்டத்திற்கு 1,500 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டு இதனை 2-2-2004 அன்று நடந்த சந்திப்பில் மத்திய அரசின் 12–ஆம் நிதிக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு நான் எடுத்துக் கூறி, இந்தச் செலவு முழுவதையும் மத்திய அரசு மானியமாக அளித்திட வேண்டும் என வலியுறுத்திக் கூறி அதற்கான அறிக்கையையும் அளித்துள்ளேன். எனது கோரிக்கையை மத்திய அரசு கனிவுடன் பரிசீலித்து ஆவன செய்யும் எனப் பெரிதும் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. துரைமுருகன் பேசும்போது, கொள்ளிடம் ஆற்றில் கிணறுகள் அமைத்து அவற்றில் இருந்து நீர் எடுத்து வடவாறு வாய்க்கால் மூலம்



2004 பிப்ரவரி 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கொண்டு வந்தால் விவசாயிகள் பாசனத்திற்கு நீர் கேட்கக்கூடிய சூழ்நிலை எழும் என்று சட்டமன்றத்தில் குறிப்பிட்டார். கொள்ளிடம் ஆற்றில் கீழ் அணைப் பகுதியில், நீர் சேர்க்கும் கிணறுகள் அமைத்து எடுக்கப்படும் நீரை வடவாறு கால்வாய் மூலமாக, எடுத்துச் செல்லும் திட்டம் இல்லை. இந்த நீரானது வீராணம் ஏரிக்குள்ளும் செல்லாது. குழாய்கள் மூலம் நேரிடையாக, சேத்தியாதோப்பில், வீராணம் ஏரியின் வடக்கு முனையில் அமைக்கப்பட்டு வரும் நீர் ஏற்று நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டு; பின்னர் அங்கிருந்து புதிய வீராணம் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் குழாய்கள் மற்றும் கட்டமைப்பு வாயிலாக சென்னை நகருக்குக் கொண்டு வரும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை நகர குடிநீர்த் தேவைக்கு முன்னுரிமை அளிப்பதைப் போன்றே, கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கும் குடிநீர் வழங்க முனைப்புடன் பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகளை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் நிலையை அறிய, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தமிழகத்தில் மொத்தம் உள்ள 81,787 ஊரகக் குடியிருப்புகளில், 11,790 குடியிருப்புகளில் போதிய அளவிற்கு குடிநீர் வசதி இல்லாத நிலை கண்டறியப்பட்டது. கடந்த ஆண்டில் மட்டும் 6,000 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் வழங்கும் மானியத் தொகைக்கு ஈடாக மாநில அரசு மானியத் தொகை ஒதுக்குவது வழக்கமாகும். ஆனால், எனது தலைமையிலான அரசு, மத்திய அரசு அளிக்கும் மானியத்தைவிட 7 மடங்கு அதிகமாகவே (மேசையைத் தட்டும் ஒலி) எனது தலைமையிலான அரசு, மத்திய அரசு அளிக்கும் மானியத்தைவிட 7 மடங்கு அதிகமாகவே நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–10*

ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு 70 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 1,258 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் சுமார் 80 லட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் செயலாக்கத்தில் உள்ளன.

கையிறைப்பான்கள் மூலம் நீர் இறைப்பதில் கிராமப்புற மகளிர்க்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்கும் வகையில் இந்த அரசு 2001–2002 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய சிறு மின் இறைப்பான் திட்டம் ஊரகப் பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பையும், பேராதரவையும் பெற்றுள்ளது. 2001-2003 ஆம் ஆண்டுகளில், 14,661 மின் இறைப்பான் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயலாக்கும் வகையில் நடப்பு நிதியாண்டில் 10,000 சிறு மின் இறைப்பான் திட்டங்கள் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஊரகப் பகுதிவாழ் மக்கள் பயன்பெறுவதற்கெனச் செயல்படுத்தப்பட உள்ளன. இவற்றில் 4,000 சிறு மின்விசை இறைப்பான்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நிறுவப்படவுள்ளன என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசின் பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் மக்கள் பங்கேற்புடன் கோயம்புத்தூர், வேலூர், பெரம்பலூர், கடலூர், காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மார்ச் 2003 முடிய 6,005 திட்டங்கள், 94 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டன. நடப்பு நிதியாண்டில் 53 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில், 2,872 குடிநீர்த் திட்டங்கள் ஊரகப் பகுதிகளில் எடுக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன. மேலும் மத்திய அரசின் 'ஸ்வஜல் தாரா' ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மக்கள் பங்கேற்புடன் 22 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 835 குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்தில் சென்னை மாநகராட்சி நீங்கலாக மொத்தமுள்ள 718 நகரங்களில் 311 நகரங்கள் முழுமையான அளவு குடிநீர் வசதி பெற்றவைகளாகவும், எஞ்சிய 407 நகரங்கள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றவைகளாகவும் உள்ளன. 2003-2004 ஆம் ஆண்டில் 60 நகரங்களில் 26 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 260 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு முதலீடு செய்வதற்கு உன்னத மற்றும் விரும்பத்தக்க இலக்காகத் தொடர்ந்து விளங்கி வருகிறது. அக்டோபர் 2003 நிலவரப்படி, அந்நிய நேரடி முதலீட்டு ஒப்புதல்களில் நாட்டிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்திலும், மொத்த முதலீட்டில் இரண்டாவது இடத்திலும்,



உற்பத்தித் துறை முதலீட்டில் முதல் இடத்திலும் திகழ்ந்து வருகின்றது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேருவுவகை அடைவீர்கள். பொருளாதார அபிவிருத்தியில் காணப்படும் புத்தாக்கத்தின் விளைவாக உற்பத்தித் துறையில் புதிய முதலீடுகளுக்கான ஆர்வத்தில் ஒரு மறுமலர்ச்சி கடந்த சில மாதங்களாகக் காணப்படுகிறது.

பிரான்சு நாட்டைச் சார்ந்த கட்டுமான மற்றும் கண்ணாடி உற்பத்தி செய்வதில் முன்னோடி நிறுவனமான திருவாளர்கள் Saint Gobain என்ற பன்னாட்டு நிறுவனம் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அவர்களது செயல்பாடுகளை மேலும் விரிவாக்கம் செய்வது குறித்து ஏற்கெனவே எடுத்த முடிவு பற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்த நிறுவனம் ஸ்ரீபெரும்புதூரில் 450 கோடி ரூபாய் அளவில் கூடுதல் முதலீடு செய்வதன்மூலம், இவ்வளாகம் உலகத்திலேயே மிகப் பெரிய ஒருங்கிணைந்த கண்ணாடி உற்பத்தி வளாகங்களில் ஒன்றாக வளர்ச்சி பெறும் என்பது கண்கூடு. (மேசையைத் தட்டும் ஒலி)

தென்கொரிய நிறுவனமான திருவாளர்கள் Hyundai Motors தமிழ்நாட்டிலுள்ள தங்களது தொழிற்சாலையைப் பெருமளவில் விரிவாக்கம் செய்து, அதை ஓர் உலக ஏற்றுமதி மையமாக்கிட, Global Export Hub ஆக்கிடத் திட்டமிட்டுள்ளனர்.

பிரிட்டனின் மென்பொருள் பன்னாட்டு நிறுவனமான-Xansa-என்ற நிறுவனமும் தனது மிகப் பெரிய மென்பொருள் மேம்பாட்டு மையத்தை 24-7-2003 முதல் சிறுசேரியில் செயல்படுத்தி வருகிறது.

திருவாளர்கள் Asian Paints மற்றும் Indo-Asahi Glass ஆகியோர் சென்னைக்கு அருகில் தங்களது உற்பத்தி மையங்களைப் பெரும் முதலீட்டுடன் விரைவில் உருவாக்க உள்ளனர்.

Tata Consultancy Services மற்றும் Infosys நிறுவனத்தார்கள் தங்களது பெரிய மென்பொருள் மேம்பாட்டு மையங்களை சென்னை நகரத்தின் அருகில் நிறுவ ஏற்கெனவே முடிவு எடுத்துள்ளார்கள்.

1992 ஆம் ஆண்டு நான் முதல்வராக இருந்தபொழுது தமிழ்நாட்டின் முந்தைய தொழில் வளர்ச்சிக் கொள்கை வடிவமைக்கப்பட்டது என்பதை உறுப்பினர்கள் அறிந்திருக்கலாம். கடந்த 10 ஆண்டுகளில், இந்தியப்

பொருளாதாரத்தில் ஏற்பட்ட விரிவான மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, புதிய தொழில் வளர்ச்சிக் கொள்கையை இந்த அரசு 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அறிவித்தது.

*பிற்பகல் 12-15*

இந்தப் புதிய கொள்கை, தற்போதுள்ள வலிமைகளை ஒருங்கிணைத்துப் போட்டியிடும் திறன் வளர்ச்சியை மேம்படுத்த உதவுவதைத் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. முதலீடுகளை ஊக்கப்படுத்துவதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வலுவூட்டுவதற்கான திட்டங்கள், பொதுத் துறை நிறுவனங்களைச் சீரமைத்தல் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட ஊக்குவிப்புகள் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே செய்து கொள்ளப்பட்ட ஒத்திசைவு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, இரண்டாவது தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைப்பதற்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் -TIDCO- சிங்கப்பூரைச் சார்ந்த திருவாளர்கள் ASCENDAS நிறுவனத்துடன் ஜூன் 2003-ல் கூட்டு முயற்சி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அடுத்த மூன்று மாதங்களில் இப்பூங்காவிற்கான பணிகள் தொடங்குமென இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். 450 கோடி ரூபாய் முதலீட்டில் மூன்று கட்டங்களாக இந்த உட்கட்டமைப்பு நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓர் இரப்பர் தொழில் பூங்கா அமைக்கவும், ஈரோட்டில் முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நெசவாலை அமைக்கவும், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு கண்ணாடி இழைத் தொழிற்சாலை அமைக்கவும், தொழில் முனைவோர்களுடன் டிட்கோ கடந்த ஆறு மாதங்களில் கூட்டு முயற்சி ஒப்பந்தங்கள் செய்து கொண்டுள்ளது. 22.4.2003 ஆம் நாளன்று அடிக்கல் நாட்டப்பட்ட TICEL Bio-Park-ன் கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

சிறுசேரி தகவல் மற்றும் தொழில்நுட்பப் பூங்காவில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்குப் போதிய வீடு மற்றும் சமுதாய வசதிகளை அளிக்கும் வகையில் தனியார் துறையில் அந்நிய முதலீட்டு மேம்பாட்டுக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட முதல் தொழில் நகரியம் ஒன்றை





அமைப்பதற்கு சிங்கப்பூரைச் சார்ந்த திருவாளர்கள் Lee Kim Tah Holdings என்ற நிறுவனத்துடன் ஓர் ஒத்திசைவு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்தப் பணிகளும் அடுத்த நான்கு மாதங்களில் தொடங்கப்பட்டுவிடும். (மேசையைத் தட்டும் ஒலி)

இம்மாநிலத்தில் சர்க்கரை ஆலைத் துறை சந்தித்து வரும் சிக்கல்களை உறுப்பினர்கள் அறிவீர்கள். பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகளால் விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் 15-7-2003 அன்று நிலுவையாயிருந்த 123 கோடியே 74 இலட்சம் ரூபாய் கரும்பு தொகை நிலுவை முழுவதும் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சர்க்கரை ஆலைகளுக்கு கூடுதல் கடன் உத்தரவாதமும், இணைப்புக் கடன் வசதியும் வழங்கப்பட்டன. இவை எல்லாம் இந்த அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகள் காரணமாகத்தான் நடைபெற்றுள்ளன என்பதை மன நிறைவோடு குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் நடைபெற்ற "வியத்தகு இந்தியா 2003"– Incredible India 2003 என்ற கண்காட்சியில் ஒரு பங்குதாரர் மாநிலமாக இம்மாநில அரசு கலந்து கொண்டது என்பதை அறிவதில் உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். மாநிலத்தின் இந்தப் பங்கேற்பு, மலேசியாவில் நல்ல விளம்பரத்தைப் பெற்றதோடு, சிறந்த பாராட்டையும் பெற்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2000–2001 ஆம் ஆண்டு 3,116 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி, 2002-2003 ஆம் ஆண்டில் 7,000 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உலகப் புகழ் பெற்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைத் தமிழ்நாட்டிற்கு வரவழைப்பதற்காக எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நாட்டின் தலை சிறந்த மூன்று தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களான Tata Consultancy Services, Infosys மற்றும் Wipro ஆகியவை சென்னையிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் வளாகங்களை அமைத்துள்ளன. இதன் மூலம் கூடுதலாக 25,000 வேலைவாய்ப்புகள் உருவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

சோழிங்கநல்லூரில் அறிவுசார் நகரியம் – Knowledge Industrial Township–ற்கான முதல் கட்டப் பணி எல்காட் நிறுவனத்தால் தொடங்கப்பட்டுள்ளது. இந்த அறிவுசார் நகரியம், தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள், பன்னாட்டு வணிகப் பள்ளிகள், வீட்டு வசதி மற்றும் பொழுதுபோக்கு போன்றவற்றிற்கு இட வசதிகளை அளிக்கும்.

தமிழகத்தில் சென்னைக்கு அடுத்தபடியாக இரண்டாம் நிலை நகரங்களை முன்னேற்றும் பொருட்டு எல்காட் நிறுவனம் கோயம்புத்தூர் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பணி தொடங்கியுள்ளது.

*பிற்பகல் 12–20*

தகவல் தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு கோயம்புத்தூரிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் பாரதியார் பல்கலைக்கழக – எல்காட் நகரம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்ப வளாகங்களுக்காக தமிழ்நாட்டில் மூன்றாம் நிலை நகரமான ஓசூரின் உள்ளாற்றலை அதாவது potential-ஐ மதிப்பீடு செய்ய ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தால் சாத்தியப்பட்ட சேவைகளுக்கான I.T. Enabled Services–க்கான வரைவு கொள்கையினை வலையில் இடம் பெறச் செய்த ஒரே அரசு, தமிழ்நாடு அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

உலகத் தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களான 'ஆரக்கிள்' – 'Oracle' போன்ற நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசு ஒப்பந்தங்கள் செய்துள்ளது. இது மின்–ஆளுமைக்கு - e–Governance–க்கு ஓர் உந்துகையை அளிக்கும். ஆங்கிலம் தெரியாத மக்களும் மின்–ஆளுமையின் பயன்பெறும் வகையில் அனைத்து அரசு இணைய தளங்களும் எல்காட் மற்றும் தமிழ் இணைய பல்கலைக்கழகத்தால் இரு மொழியாக் தமிழிலும், ஆங்கிலத்திலும் Bilingual-ஆக ஆக்கப்பட உள்ளன.

நான் பதவியேற்ற பிறகு தமிழக காவல் துறையை அகில இந்திய அளவில் அதிநவீனமான, முதன்மையான காவல் துறையாகவும், இந்த நாட்டிலேயே மிக அதிகமான அளவில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் பங்கேற்கும் ஒரு காவல் படையாகவும் அமைத்திட நான் முயற்சிகள்



எடுத்தேன். இந்த முயற்சிகளே தமிழகத்தில் தற்போது நிலவும் செம்மையான சட்டம் ஒழுங்கு நிலைமைக்கு அடித்தளமாக விளங்குகின்றன.

2001-2003 ஆம் ஆண்டுகளில் 272 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவுக்குக் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. நடப்பு 2003-2004 ஆம் ஆண்டில் காவல் துறை நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ், 134 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவிடப்படவுள்ளது. அகில இந்திய அளவிலேயே, காவல் துறையினை மேம்படுத்தும் செலவினங்களைச் செம்மையாக மேற்கொள்ளும் ஒருசில மாநில அரசுகளில் தமிழக அரசும் ஒன்று என்பதைப் பெருமிதத்துடன் நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையை நவீனப்படுத்த, நவீன ரக ஆயுதங்கள், ஜீப்புகள், அதி வேக நுண்ணலைத் தகவல் தொடர்பு சாதனங்கள், வீடியோ காமிராக்கள், LAP–TOP கம்ப்யூட்டர்கள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

காவல் துறையில் பெண்களுக்கு உரிய இடத்தை அளிக்க வேண்டும் என்ற குறிக்கோளுக்குத் தக்கதொரு செயல்வடிவம் என்னால் கொடுக்கப்பட்டுள்ளது. இனியும் அது தொடர்ந்து நிலை நிறுத்தப்படும். ஏற்கெனவே தொடங்கிச் செயல்பட்டு வரும் 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுடன் இந்த ஆண்டு மேலும் 40 மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, இந்த நிதி ஆண்டின் இறுதியில் தமிழ்நாட்டின் அனைத்து காவல் துறை உட்கோட்டங்களிலும் அனைத்து மகளிர் காவல் நிலையம் செயல்படும் திட்டம் நிறைவுப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே இந்த அளவிற்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயக்கப்படுவது தமிழ்நாட்டில் மட்டுமே என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

துன்பத்திற்கு ஆளாகும் பெண்களுக்கு உடனடியாக உதவிக்கரம் நீட்டும் "பெண்கள் உதவி தொலைத் தொடர்பு வசதி" Women Help Line-121 அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும், குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிப்பதைத் தடுக்க விரைந்து உதவிடும் "குழந்தைகள் உதவித் தொலைத் தொடர்பு வசதி - Child Help Line-104 அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு காவல் துறையின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக தமிழ்நாடு மகளிர் சிறப்பு காவல் அணி **Women Police Battalion** *30-1-2004* அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டது.

கடுமையான பயிற்சிகளுடன் ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் துப்பாக்கி சுடுதல் போன்ற திறன்களிலும் சிறப்பான தேர்ச்சி பெற்ற "பெண்கள் கமாண்டோ படை" *2003* ஆம் ஆண்டு ஜூன் மாதம் என்னால் துவக்கி வைக்கப்பட்டது. இந்தியாவிலேயே, தனியே மகளிர் சிறப்புக் காவல் அணி மற்றும் பெண் கமாண்டோக்கள் அணி ஆகியவற்றைக்கொண்ட ஒரே மாநிலக் காவல் துறை தமிழ்நாடு காவல் துறைதான் என்பது பெருமைக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிப்பதற்கென, தனியே ஆறு மகளிர் நீதிமன்றங்கள் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு அவை வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன.

தேசிய நெடுஞ்சாலைகளில் தீவிர ரோந்துப் பணியை மேற்கொள்வதற்காக, நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட *80* டோயோடா குவாலிஸ் வாகனங்களை வழங்கி, "நெடுஞ்சாலை ரோந்துத் திட்டம்" *23-8-2003* அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டது. *80* முக்கியமான தெரிவு செய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகளில் *24* மணி நேரமும் ரோந்துப் பணிகள் மேற்கொள்வதற்காக *160* காவலர் குழுக்கள் அமைக்கப்பட்டன. விபத்திற்கான அவசர சிகிச்சை மையங்களுடன், ஒருங்கிணைக்கப்பட்ட இந்த ரோந்துப் பணியின் செயல்பாடுகள் மிகவும் திருப்திகரமாக அமைந்துள்ளன என்பதை மன நிறைவுடன் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *12–25*

அமர்வு நீதிமன்றங்களில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வழக்குகளை முடிப்பதற்காக, எனது அரசு *49* விரைவு நீதிமன்றங்களை Fast Track Court–களை அமைத்துள்ளது. இந்த நீதிமன்றங்களுக்கு இதுகாறும் மாறுதல் செய்யப்பட்ட *95,129* வழக்குகளில் *30-11-2003* வரையில் *65,451* வழக்குகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அகில இந்திய அளவில் இந்த விரைவு நீதிமன்றங்களின் செயல்பாடு பாராட்டப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும்





ஒலி) ஏழை மக்கள் நீதியைத் தேடி நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதில்லை என்பது தற்போது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் தனியாக மாவட்ட அமர்வு நீதிமன்றம், கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்க தொடர் செலவாக *85.07* இலட்சம் ரூபாயும், தொடரா இனச் செலவாக *38.66* இலட்சம் ரூபாயும் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்காக *9* கோடியே *82* இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளை மதுரையில் அமைப்பதற்காக தேவைப்படும் கட்டுமானப் பணிகளுக்கு *55* கோடியே *59* இலட்சம் ரூபாய் செலவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் *13* ஆம் நாளன்று திறக்கப்பட உள்ள இந்த உயர் நீதிமன்றத்தின் கிளை தென் மாவட்ட மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பை நிறைவேற்றும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சாலை மேம்பாடு மற்றும் பராமரித்தலுக்கு தொலைநோக்குத் திட்டம் வகுக்கப்படாமல், உற்பத்தித் திறனற்ற செலவினங்கள் அதிகரிக்கப்பட்டு, சாலைப் பராமரிப்பு பின்னுக்குத் தள்ளப்பட்டது. இதனால் சாலைகள் பழுதடைந்து, பேருந்துப் போக்குவரத்திற்குத் தடை ஏற்படும் நிலை ஏற்பட்டது. கிராமப்புற மக்கள் இடர்ப்பாடுகளுக்கு உள்ளாயினர்.

*2001* ஆம் ஆண்டு என்னுடைய தலைமையிலான இந்த ஆட்சி பதவி ஏற்ற பின், தமிழகத்தை முதல் நிலை மாநிலமாக ஆக்கிட வேண்டுமென்ற குறிக்கோளுடன் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்த ஆணையிட்டேன். இதில் முக்கியமானது சாலை மேம்பாடு ஆகும். *1995* ஆம் ஆண்டு எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், தமிழகச் சாலைகளை உலக வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்த திட்டமிட்டு செயல்பட்டேன். அதன்பின் வந்த தி.மு.க. ஆட்சி இதனைச் செயல்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், தற்போது என்னுடைய

அரசின் சீரிய அணுகுமுறையால் 2,160 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டத்திற்கு அண்மையில் உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு உள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தில் 750 கி.மீ. நீளமுள்ள சாலைகளை இருவழித் தடமாக மேம்படுத்தவும், 2,000 கி.மீ. நீளமுள்ள மாநில மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளைப் பராமரிப்பதற்கும், நகரங்களின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 14 புறவழிச் சாலைகள் அமைக்கவும்; வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்க 12-2-2004 ஆம் நாளன்று உலக வங்கி குழுவுடன் இணைந்து திட்டச் செயலாக்கக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இதன் பின்னர் பணிகள் உடனடியாக துவங்கப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய கைலாஷ் முதல் மாமல்லபுரம் வரையிலான 47 கி.மீ. நீள சாலைப் பகுதியை, தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலை – I.T. Express Way–ஆக மேம்படுத்த நான் ஆணைகள் வழங்கியுள்ளேன். இந்த விரைவுப் பாதை 6 வழித் தடங்களைக் கொண்டதாகவும், 2 மீட்டர் அகலம் கொண்ட மத்திய பகுதியுடன் வடிநீர்க் கால்வாய்கள், மழைநீர் சேகரிப்பு அமைப்பு, சேவை நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் சேவைக் குழாய்கள் மற்றும் உறுதியான புருவங்கள் கொண்டதாகவும் இருக்கும். உலகத் தரம் வாய்ந்த இந்த விரைவுச் சாலை பல கணினி மற்றும் மென்பொருள் நிறுவனங்கள் இம்மாநிலத்தில் தொடங்கப்படுவதை ஊக்குவிக்கும். சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த 50 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 55 பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

வரும் மார்ச் திங்களில், கும்பகோணத்தில் நடைபெற உள்ள மகாமகம் திருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் நகருக்கு 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று பாலங்கள் உள்ளிட்ட 8.7 கி.மீ. நீளமுள்ள புறவழிச் சாலை அமைக்கும் பணியும், கும்பகோணம் நகரைச் சுற்றியுள்ள 120 கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகளை, 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணியும், போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுபெறும் நிலையில் உள்ளன.



பிற்பகல் 12–30

எண்ணூர்–மணலி சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 161 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எண்ணூர் துறைமுகம் மற்றும் சென்னைத் துறைமுகத்திற்கு வாகனங்கள் நெரிசல் இன்றி சென்று வரும் வகையில் உள் வட்டச் சாலை, மணலி எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை, திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலை மற்றும் எண்ணூர் சாலை ஆகியவற்றை அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பாண்டில் கிராமச் சாலை இணைப்புத் திட்டத்தின்கீழ், 716 கிலோ மீட்டர் நீளச் சாலை மேம்படுத்தும் பணிகளும், 20 பாலங்கள் கட்டும் பணிகளும், நபார்டு நிதி உதவியுடன் 121 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பில் எடுத்துக்கொள்ள ஆணைகள் வழங்கப்பட்டுச் செயலாக்கத்தில் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சரின் சிறப்பு சாலைப் பழுதுபார்ப்புத் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 275 கோடி ரூபாய் மதிப்பில் 5,549 கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பாண்டில் பேருந்துப் போக்குவரத்திற்கு தகுதியற்ற நிலையிலுள்ள 3,000 கிலோ மீட்டர் நீள மாவட்ட இதர சாலைகளை 150 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்தும் பணிகள் ஹட்கோ நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் பழுதடைந்த 3,492 கிலோ மீட்டர் மாவட்ட இதர சாலைகளை 186 கோடி ரூபாய் மதிப்பிலும், மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளை மேம்படுத்திட 121 கோடி ரூபாய் மதிப்பில் முதலமைச்சரின் சிறப்பு சாலை பழுது பார்ப்புத் திட்டத்தின்கீழ் ஆணைகள் வழங்கப்பட்டுப் பணிகள் துவங்கப்படவுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

நாட்டின் நான்கு பெருநகரங்களையும் இணைக்கும் தங்க நாற்கரத் திட்டம் மற்றும் வடக்கு – தெற்கு இணைக்கும் திட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் மொத்தம் 1,699 கிலோ மீட்டர் நீள தேசிய நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

நாகப்பட்டினம் துறைமுகத்தை 5 கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாடு செய்ய முடிவெடுக்கப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

தமிழக மக்களின் நீண்ட நாள் கனவான சேது சமுத்திரத் திட்டத்தை விரைந்து செயல்படுத்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பாரதப் பிரதமரிடம் 2-2-2004 அன்று கோரிக்கை வைத்தேன். இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டதாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

1996 முதல் 2001 வரை ஆன கடந்த தி.மு.க. ஆட்சியில், சாலைகள் மற்றும் பாலங்களுக்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகை 3,192 கோடி ரூபாய்தான். ஆனால் கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் எனது அரசு செலவிட்ட தொகை 2,518 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் 2,160 கோடி ரூபாய் மதிப்புள்ள தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

சாலை மேம்பாடு மற்றும் பராமரிப்பில் சிறப்புடன் செயல்பட்டு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் தொழில் முனைவோரும், முதலீட்டாளர்களும் தமிழகத்தை முதன்மை இடமாகத் தெரிவு செய்து பெருமளவில் முதலீடு செய்யத் தொடங்கியுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் 561 மெகாவாட் அளவிற்குத் தான் மின்சார நிறுவு திறன் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது. மேலும் எதிர்காலத்திற்குத் தேவையான உருப்படியான கூடுதல் மின் உற்பத்தித் திட்டங்கள் எதுவும் தி.மு.க. அரசால் நிறைவேற்றப்படவில்லை. 2001 மே மாதம் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, இது நாள் வரை 902 மெகாவாட் அளவிற்கு மின்சார நிறுவு திறன் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோல் கடந்த தி.மு.க. ஆட்சியில் 256 மெகாவாட் திறனுள்ள காற்றாலைகள் மட்டுமே இயக்கி வைக்கப்பட்டன. எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின் இதுவரை 353 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





போதுமான அளவில், தரமான மின் உற்பத்தித் திறன் ஏற்பட இந்த அரசு வழிவகை செய்துள்ளதால் மின் வெட்டே இல்லாத மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தொழில் முனைவோர் விரும்பி வரும் மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1,000 மெகாவாட் திறனுள்ள அனல் மின் நிலையம் ஒன்றை வட சென்னையில் நிறுவ தேசிய அனல் மின் கழகத்துடன்– N.T.P.C. உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் உள்ள அனல் மின் நிலையம் ஏற்படுத்த நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்துடன் –N.L.C.– உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும், கூடங்குளத்தில் 2,000 மெகாவாட் திறன் உள்ள அணு மின் நிலையம் நிறுவ அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 12–35

மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத 154 குக்கிராமங்களில் மொத்தம் 10 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் சூரிய ஒளி சாதனங்கள் மூலம் சுமார் 7,100 குடியிருப்புகளுக்கு மின் விளக்கு வசதி விரைவில் செய்து முடிக்கப்படும். மேலும், மொத்தம் 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 250 குக்கிராமங்களில் உள்ள 10,000 குடியிருப்புகளுக்கு மின் விளக்கு வசதி செய்து தரும் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது நான் சொல்வதை கவனமாகக் கேட்க வேண்டும். இதன் மூலம் 2012–ல் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி என்ற தேசிய இலக்கினை தமிழ்நாடு 2005 ஆம் ஆண்டிலேயே (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது அடுத்த ஆண்டிற்குள்ளாகவே எய்திவிடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம், கடந்த இரண்டரை ஆண்டுகளில், 11 இலட்சத்து 93 ஆயிரத்து 135 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இது ஒரு புதிய சாதனை ஆகும். ஊரக வளர்ச்சித் துறையின் மிகச் சிறப்பான செயல்பாட்டின் காரணமாக மத்திய அரசின் நிதி உதவிகளைப் பயன்படுத்துவதில் 2002–2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத்

திட்டத்தின்கீழ், மத்திய அரசிடமிருந்து 71 கோடியே 47 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி பெறப்பட்டுள்ளது. இது வழக்கமான ஒதுக்கீட்டினைவிட 13.40 சதவீதம் கூடுதலாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், 12 கோடியே 61 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதியாகப் பெறப்பட்டுள்ளது. இது வழக்கமான ஒதுக்கீட்டினைவிட 6.64 சதவீதம் கூடுதலாகும்.

ஸ்வர்ண ஜயந்தி கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் பாராட்டத்தக்க செயல்பாடுகள் காரணமாக 5 கோடியே 92 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி மைய அரசிடமிருந்து பெறப்பட்டது. இது வழக்கமான ஒதுக்கீட்டினைவிட 16 சதவீதம் கூடுதலாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது நான் சொல்வதை நன்றாகக் கவனியுங்கள். பிரதம மந்திரி சாலைகள் திட்டத்தின்கீழ், 119 கோடியே 78 இலட்சம் ரூபாய் கூடுதல் ஒதுக்கீடாகப் பெறப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது வழக்கமான ஒதுக்கீட்டினைவிட 75 சதவீதம் கூடுதலாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இவை அனைத்தும் எனது அரசின் விரைந்த செயல்பாட்டுக்கும், சிறந்த செயல்பாட்டுக்கும் நிதர்சனமான நிரூபணமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 2001 ஆம் ஆண்டில் நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நேரத்தில், தமிழ் நாட்டில் மொத்தம் இருந்த 1,076 ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதிகளில், பாதிக்கும் மேலான விடுதிகள், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால் 574 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்பதை அறிந்தேன். சிறிய வாடகைக் கட்டடங்களில் செயல்படுவதால், தண்ணீர் வசதியின்றி, கழிப்பறை வசதியின்றி, மின்சார வசதியின்றி ஏற்படும் இன்னல்களைத் தீர்ப்பதற்காக கடந்த மூன்று ஆண்டுகளில் 316 மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் சொந்தக் கட்டடங்கள் உருவாக்க 99 கோடியே 54 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றில் 140 விடுதிகளுக்குப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள விடுதிகளுக்கான சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணியை விரைவில் முடித்திட வேண்டும் என்று ஆணைகள் பிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர் படிப்பைப் பாதியில் நிறுத்திவிடும் நிலையைத் தவிர்க்கவும், அவர்கள் பள்ளிக்கு உரிய நேரத்தில் சென்றடைய ஏதுவாகவும், மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவியர்களுக்கு இலவசமாக சைக்கிள்கள் வழங்கும் உன்னதமான திட்டத்தைக் கொண்டு வந்தேன். கடந்த 3 ஆண்டுகளில், இத்திட்டத்தின்கீழ், 22 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பில் 1,52,698 மிதி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பெண்கள் சமத்துவம் பெற வேண்டும் என்ற நோக்குடன் மானியம் மற்றும் கடன் உதவியுடன் 70 கோடி ரூபாய் செலவில் நிலம் வாங்கும் ஒரு புரட்சிகரமான திட்டத்தினை எனது அரசு அறிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ், 6,000 ஆதிதிராவிடர் மகளிரும், 1,000 பழங்குடியின மகளிரும், ஆக மொத்தம் 7,000 மகளிர் பயனடைவார்கள்.

பிற்பகல் 12–40

இதனால் ஒவ்வொரு பயனாளிக்கும் 5 ஏக்கர் வரை புன்செய் நிலம் அல்லது 2.5 ஏக்கர் வரை நன்செய் நிலம் வாங்க அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயும், நிலத்தினை மேம்படுத்துதல், நீர் ஆதாரம் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற விவசாயம் சார்ந்த பிற தொழில்களுக்காக அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 2 இலட்சம் ரூபாயில் பாதி மானியமாகவும், பாதி கடனாகவும் வழங்கப்படும்.

மேலும் நிலம் வாங்கும் பயனாளிகள் நிலத்தினைப் பத்திரப் பதிவு செய்யும்பொழுது முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணத்தில் 75 விழுக்காடு விலக்கு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டப் பயனாளிகளுக்கு, தமிழ்நாடு மின்சார வாரியம், முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கும். அவ்வாறு வழங்கும் ஒவ்வொரு மின் இணைப்பிற்கும், தாட்கோ 10,000 ரூபாய் மானியமாக

மின்சார வாரியத்திற்கு வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் மூலம் ஆதிதிராவிட, பழங்குடியின மகளிர் பொருளாதார மேம்பாடு அடைவதால், அவர்தம் வாழ்க்கைத் தரம் உயரும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

13–12–2003 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் பேருந்தில் மன்னார்குடியிலிருந்து திருவாரூருக்குப் பயணம் செய்துகொண்டிருந்த மூன்று வயதுச் சிறுமி செல்வி கௌசல்யா மரணம் அடைந்த துயரச் சம்பவம் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதை முற்றிலும் தடுக்கும் வகையில், உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று நான் ஆணையிட்டேன். அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான ஒவ்வொரு வாகனமும் 100 சதவிகிதம் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும், கண்டறியப்படும் பழுதுகள் உயர் அதிகாரிகளின் கண்காணிப்பில் பழுதுபார்க்கப்பட வேண்டுமென்றும், குறைபாடுள்ள அனைத்துப் பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை உடனடியாக வாங்க வேண்டுமென்றும் ஆணையிட்டேன். பயணம் செய்யும் பொதுமக்களின் பாதுகாப்பு எந்தச் சூழ்நிலையிலும் விட்டுக் கொடுக்கப்படக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவையும் நான் வழங்கியுள்ளேன்.

அதன் அடிப்படையில் பயணம் செய்யும் பொது மக்களின் பாதுகாப்பினைக் கருதி, ஒவ்வொரு பேருந்தின் முழுத் தகுதிப்பாட்டை உறுதி செய்யும் பொருட்டு 6,000 பேருந்துகளின் இயந்திரப் பழுது மற்றும் கூண்டுப் பழுது பார்க்கும் பணிகளுக்காக போக்குவரத்துக் கழகங்களுக்கு 30 கோடி ரூபாய் என்னால் ஒதுக்கீடு செய்யப்பட்டு உடனடியாக அத்தொகை விடுவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பழைய பேருந்துகளே இல்லை என்ற நிலையை ஏற்படுத்த பழுதுபட்ட பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்குவதற்கான உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு நான் உத்தாவிட்டுள்ளேன். அதன்படி, 2005 மார்ச் மாதத்திற்குள் 2 கட்டங்களில் 2,500 புதிய பேருந்துகள் வாங்கப்படும். இவற்றில் முதல் கட்டமாக 1,050 பேருந்துகள் விரைவில் வாங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



வலிமைமிக்க தமிழகத்தை, அறிவாற்றல்மிக்க தமிழகத்தை உருவாக்கிட தமிழகத்தின் இளைஞர்கள் விளையாட்டுகளிலும், உடல் திறன் பயிற்சிகளிலும் சிறந்து விளங்கும் வகையில் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்குத் தனி அக்கறை காட்டி ஊக்கம் அளித்து வருகிறேன்.

விருதுநகரில் ஹாக்கி அகாடமி, திண்டுக்கல்லில் வாலிபால் அகாடமி, சென்னையில் ஸ்குவாஷ் விளையாட்டு அரங்கம் மற்றும் ஸ்குவாஷ் அகாடமி, சென்னை பேசின் பிரிட்ஜில் நலிந்த பிரிவு சமுதாயத்தினரிடையே மேஜைப் பந்து – Table Tennis விளையாட்டை மேம்படுத்த மேஜைப் பந்து அகாடமி, செய்லிங் அகாடமி, சென்னை புதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கிரிக்கெட் அகாடமி ஆகிய திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

கிராமப் பகுதிகளில் இளைய தலைமுறையினரின் நேரத்தையும், சக்தியையும் ஒருமுகப்படுத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இளைஞர் மன்றங்கள் ஏற்படுத்தப்படும் என்று நான் அறிவித்து ஆணையிட்டிருந்தபடி, இதுவரை 300 இளைஞர் மன்றங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில அளவிலான பள்ளிகளிடையே – Inter–School விளையாட்டுப் போட்டிகளில் இதுவரை இருந்து வந்த 9 வகையான விளையாட்டுகளுடன் இந்த ஆண்டில் புதியதாக ஸ்குவாஷ், குத்து சண்டை, வாள் சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் நீச்சல் முதலான ஐந்து விளையாட்டுகளை அறிமுகப்படுத்தி, போட்டிகள் நடத்தப்பட்டன. இது தொடரும்.

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், ஒலிம்பிக்ஸ், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்கள் பெற்றால் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்க என்னுடைய அரசு ஆணையிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் அடிப்படையில் 123 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு, இன்று வரை என்னுடைய அரசு 2 கோடியே 10 லட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2004 பிப்ரவரி 10

*பிற்பகல் 12–45*

பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில், இதுவரை 28 தங்கப் பதக்கங்களையும், 14 வெள்ளிப் பதக்கங்களையும், 4 வெண்கலப் பதக்கங்களையும், தமிழ் நாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் வென்றுள்ளனர். தேசிய அளவிலான போட்டிகளில், 134 தங்கப் பதக்கங்களையும், 98 வெள்ளிப் பதக்கங்களையும், 70 வெண்கலப் பதக்கங்களையும், தமிழ் நாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் வென்றுள்ளனர் என்பதை மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சாதனைக்கு முக்கிய காரணம் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு எனது அரசு அளித்து வரும் ஆக்கமும் ஊக்கமுமே ஆகும்.

விளையாட்டு வீரர்களை, வீராங்கனைகளை அங்கீகரிக்கும் வகையில் சீருடைப் பணித் துறைகளான காவல் துறை, சிறைத் துறை, வனத் துறை ஆகிய துறைகளின் பணிகளுக்கான தேர்வில் 10 சதவீத ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சேம்பியன்களை உருவாக்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 53 விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் பயனடைந்து வருகின்றனர். அவர்களுக்கு இதுநாள் வரை 21 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

சர்வதேச ATP டென்னிஸ் போட்டிகள் சென்னையைவிட்டு வேறு மாநிலத்திற்கு செல்லக்கூடிய அபாயம் உருவானதை அடுத்து, இந்தப் போட்டிகளைச் சென்னையிலேயே தொடர்ந்து நடத்த உரிய வசதிகளையும், வாய்ப்புகளையும் நான் உருவாக்கித் தந்துள்ளேன். இதற்கென ஆதரவாளர் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கவும், தமிழ் நாடு அரசு இதில் இணை ஆதரவாளராக இருந்து ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் உதவி வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன். இனிமேல் 'சென்னை ஓப்பன்' என்ற பெயரில் இந்த சர்வதேச டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் தொடர்ந்து நடைபெறும். (மேசையைத் தட்டும் ஒலி)

உலகத் தரத்துடன்கூடிய, விளையாட்டுக் கட்டமைப்புகளை நான் உருவாக்கியதன் விளைவாக, 'சாம்பியன்ஸ் கோப்பை' சர்வதேச ஹாக்கி



2004 பிப்ரவரி 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

போட்டி அடுத்த ஆண்டு, அதாவது 2005–ல் சென்னையில் நடைபெற உள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் தமிழ்நாட்டில் உடற்பயிற்சிக் கல்வியையும், விளையாட்டுகளையும் வளர்ப்பதற்கென்று இந்தியாவிலேயே முதன்முதலாகத் தனித்தொரு புதிய பல்கலைக்கழகம் உருவாக்க ஆணையிட்டுள்ளேன் என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

15–8–2003 அன்று நடைபெற்ற 57–வது சுதந்திர தின விழாவின் போது, நிதி நெருக்கடியின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலவச வேட்டி சேலைத் திட்டம் நிதி நிலை ஓரளவு முன்னேற்றம் அடைந்துள்ள நிலையில் 2004 ஆம் ஆண்டு முதல் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று நான் அறிவித்தேன்.

இத்திட்டத்தின் மூலம் முதலில் 81 இலட்சம் பாலிகாட் சேலைகளையும், 74 இலட்சம் பாலிகாட் வேட்டிகளையும், 120 கோடி ரூபாய் செலவில் இலவசமாக வழங்குவதற்கு நான் ஆணையிட்டிருந்தேன். ஆனால், ஆங்காங்கே வாழுகின்ற மேலும் சில ஏழை எளிய மக்களும் இந்த இலவச வேட்டி சேலைப் பெறுவோர் பட்டியலில் தாங்களும் சேர்க்கப்பட வேண்டும் என்று விடுத்த நியாயமான கோரிக்கை எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, தமிழகத்தில் உள்ள அனைத்து ஏழை எளிய மக்களும் இந்த இலவச வேட்டி சேலைத் திட்டத்தின்கீழ் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடனும், ஏழை எளிய மக்கள் எவரும் இலவச வேட்டி சேலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்துவிடக் கூடாது என்பதற்காகவும்; இத்திட்டத்தை மேலும் விரிவாக்க நான் முடிவு செய்தேன். இந்த அடிப்படையில், பொது விநியோகத் திட்டத்தில் அரிசி பெறும் கூப்பன் பெற்றுள்ள அனைவருக்கும் இலவச வேட்டி சேலைகளை வழங்குமாறு நான் உத்தரவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தின்கீழ், 1 கோடியே 11 இலட்சம் பாலிகாட் சேலைகளையும், 1 கோடியே 11 இலட்சம் பாலிகாட் வேட்டிகளையும் விநியோகம் செய்ய ஆணையிட்டுள்ளேன். இதன் மூலம் 2 கோடியே 22 இலட்சம் ஏழை மக்கள் பயன் அடைவார்கள். இத்திட்டத்திற்கான நிதி

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2004 பிப்ரவரி 10

*ஒதுக்கீட்டை, 173 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தி வழங்கியுள்ளேன். இத்திட்டத்திற்கு தேவையான பாலிகாட் சேலைகள், கைத்தறித் துறையின்கீழ் இயங்கும் 350 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 85 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இது நாள் வரை 76 இலட்சம் வேட்டிகளும், 74 இலட்சம் சேலைகளும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள வேட்டி சேலைகளை 10–3–2004–க்குள் உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–50*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதங்களில் பங்கு பெற்று ஆக்கபூர்வமான கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கி இருக்கிறார்கள். சிலர் குறை கூறியிருக்கிறார்கள். நான் இதுவரைக்கும் அளித்துள்ள விளக்கங்கள் எனது அரசின் நிலைப்பாட்டைத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்ற சான்றுகளாகும். தமிழகம் வளர்ச்சிப் பாதையில் முதலிடம் நோக்கி விரைந்து செல்வதற்கு ஏற்ற நிரூபணங்கள் ஆகும். மாண்புமிகு உறுப்பினர்கள் சிலருக்கு இந்த உண்மைகளை ஒத்துக்கொள்ள மனம் இல்லாவிட்டாலும், மக்கள் மன்றம் இவற்றை ஏற்றுக்கொண்டிருக்கிறது; எனது தலைமையிலான அரசின்மீது மகத்தான நம்பிக்கை வைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நம்பிக்கையை முழுக்க முழுக்க நிறைவேற்றுவதே எனது குறிக்கோள்! இந்த அரசின் குறிக்கோள்! நாங்கள் என்றும் மக்கள் பக்கம்! அதனால் மக்கள் என்றும் எங்கள் பக்கம்! (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, வெற்றி என்றென்றும் எங்கள் பக்கம்! (மேசையைத் தட்டும் ஒலி) என்று தெரிவித்துக்கொண்டு எனது உரையை நிறைவு செய்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம்.



2004 பிப்ரவரி 10]

•**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு காலையில் பத்திரிகைகள் எல்லாம் இந்த அரசு தாயுள்ளம் கொண்ட அரசுதானா என்று அரசு ஊழியர்கள் பற்றி குறிப்பிடுகின்றபோது குறிப்பிட்டு இருந்தது. அதிலும் இந்து நாளேடு முதல் பக்கத்திலேயே ஒரு நம்பிக்கையைத் தெரிவித்திருந்தது. நிச்சயமாக இந்த அரசு ஊழியர்களுக்கு ஒரு விடிவுகாலம் ஏற்படும் இன்றைக்கு என்கிற செய்தியைச் சொல்லி இருந்தது. அந்த தித்திக்கின்ற செய்தியை, இந்த அரசு என்றைக்கும் தாயுள்ளம் கொண்ட அரசுதான் என்பதை நிரூபிக்கின்ற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு அறிவித்திருக்கிறார்கள்.

அதோடுகூட, இன்றைக்கு இருக்கிற வறட்சி நிலையை கருத்திற்கொண்டு விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் இன்புறுகின்ற அளவிலே அவர்கள் செலுத்த வேண்டிய நில வரியை இரத்து செய்து இருக்கிறார்கள். வறட்சி நிவாரணப் பணிகளும் சென்ற ஆண்டுபோல தொடரும் என்கிற மகிழ்ச்சியான செய்தியினை இங்கு அறிவித்திருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் எதிர்க்கட்சிகள் இங்கு இல்லையே என்று ஆதங்கப்படுகின்ற முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். சிலப்பதிகாரத்திலே, சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு சிலை எடுக்கச் செல்லுகின்ற நேரத்தில், அங்கு இருக்கின்ற வடபுலத்து மன்னர்கள் எல்லாம் எதிர்க்கின்ற நிலையை குறிப்பிடுகின்றபோது இளங்கோவடிகள்

"ஆரிய மன்னர் ஈரைஞ்ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கண் கூற்றம்"

என்று சொல்வார். ஆயிரம் மன்னர்கள் சூழ்ந்து போராடுகின்ற நேரத்தில், ஒருவராக நின்று செங்குட்டுவன் செய்த அந்த வீர சண்டையினை எமன்கூட வியந்து பார்த்தான் என்று சொல்வார். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). அதுபோல இன்றைக்கு எண்ணிக்கையில் பலபேராக இருந்தாலும், உங்களுடைய ஆற்றல்மிக்க திறமையைக் கண்டு தென் பகுதிக்கு வருவதற்கே அஞ்சுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம், நீதி நம் பக்கம் இருக்கிறது. நேர்மை நம் பக்கம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டிற்கு உழைத்த

[திரு லா. சந்தானம்] [2004 பிப்ரவரி 10

நல்ல தலைவர்கள் நம் பக்கம் இருக்கிறார்கள். இன்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே காட்சியளிக்கின்ற அத்தனை தலைவர்களுடைய வீரத்தையும், விவேகத்தையும் பெற்று இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). குறிப்பாக, நான் ஏற்றுக்கொண்டிருக்கின்ற நேதாஜி தேவர் அவர்கள் வீரத்தையும், விவேகத்தையும், நிரம்பப் பெற்று இருக்கின்ற உங்களுக்கு வெற்றிக்கனி என்பது மிக விரைவிலே (மேசையைத் தட்டும் ஒலி) கிடைக்க இருக்கிறது; கிடைக்கும் என்கின்ற நம்பிக்கையோடு, அந்தச் சிலப்பதிகார வரிகளை சொல்லி, நிச்சயமாக வெற்றி பெறுவது நீங்கள்தான் என்கின்ற அளவிலே (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆளுநர் உரையிலே என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். நான் எப்போதும் என்னைப் பற்றிச் சொல்லிக்கொள்வது இதுதான். 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை' என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா.

*பிற்பகல் 12-55*

**திரு. எச். ராஜா:** அரசு ஊழியர்கள் தொடர்பாக, அவர்கள் அனைவரையும் பணியில் சேர்த்துக் கொள்வதற்கும், ஏற்கெனவே அறிவித்திருக்கின்ற தண்டனைகளைத் தளர்த்தியும், குறைத்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்து இருப்பதை பாரதிய ஜனதா கட்சி வரவேற்று அவருக்கு நன்றி பாராட்டுகிறது.

அதேபோல நில வரியையும் இரத்து செய்து விவசாயிகள் பக்கம் எப்போதும் நாம் இருப்போம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதையும் வரவேற்கிறேன். வெற்றி நிச்சயமாக—எண்ணிக்கையைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். கௌரவர்கள் நூறுபேர்; பாண்டவர்கள் ஐந்து பேர்தான். ஆகவே, கட்சிகளின் எண்ணிக்கையைப்பற்றிக் கவலைப்படாமல் (மேசையைத் தட்டும் ஒலி) முழு வெற்றியை நாம் அடைவோம் என்கின்ற நம்பிக்கையைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2004 பிப்ரவரி 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு இருக்கையில் இல்லை. திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம் இருக்கையில் இல்லை. திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி இருக்கையில் இல்லை. திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன் இருக்கையில் இல்லை. திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

*"2004 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"*

என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. இராசேந்திரன் அவர்களால் 5-2-2004 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 4. அரசினர் தீர்மானம்

### விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2004)-ஐ இன்றே ஆய்வு செய்து நிறைவேற்றப் பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு ஆய்வு செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2004), மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@10-02-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2004 பிப்ரவரி 10

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-2-2004) மாலை 2-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

33. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (அங்காடிகள் மற்றும் மது அருந்தகங்கள்) விதிகள் இயற்றியது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 3-11-2003 ஆம் நாளிட்ட 292 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

34. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நெடுஞ்சாலைத் துறையின் 29-9-2003 ஆம் நாளிட்ட 207 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 34/2002) 66 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

35. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 2002-2003 ஆம் ஆண்டின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை (1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

36. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் ஆறாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

37. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

38. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

[2004 பிப்ரவரி 10

39. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

40. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

16. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

17. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

18. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

19. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

20. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

D
V2 11,31'P04
104.56.2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226053
சென்னை-600 008
நூலகம்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.